# இந்திய
# அரசியல் அமைப்பு
## (INDIAN CONSTITUTION)

வி. கன்னையா, எம்.ஏ.,
பேராசிரியர்,
அரசியல்துறை,
அரசினர் கலைக் கல்லூரி,
கோவை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழக அரசு

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—13

# இந்திய
# அரசியல் அமைப்பு
## (INDIAN CONSTITUTION)

வீ. கண்ணையா, எம்.ஏ.,
பேராசிரியர்,
அரசியல்துறை,
அரசினர் கலைக் கல்லூரி,
கோவை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழக அரசு

First edition—March 1963
Second edition—February 1968

B.T.P. No. 13

© Bureau of Tamil Publications

**Indian Constitution**

V. KANNIAH

**Price Rs. 5-00**

Printed by
Guru Printers
9, Karuppannan St.,
Madras-1.

# அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறை களிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்திய அரசியல் அமைப்பு' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 13ஆவது வெளியீடாகும். தமிழ் மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட மாணவர்களின் நல்லூக்கத்தினாலும் இதன் முதற் பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின், இப்பொழுது இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

# முன்னுரை

குடியரசு நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் தத்தம் அரசியலமைப்பினை அறிந்திருப்பது அழகாகும். இக் கருத்தினை உளத்திற் கொண்டே அனைவர்க்கும் பயன்படும் வகையில் இந் நூல் எழுதப் பட்டிருப்பினும், தமிழ்மொழிவழிப் பாடம் கற்றுக்கொள்ளும் மூவாண்டுப் பட்டப்படிப்பு மாணவர்க்கு என்றே, பாடத் திட்டத்தையொட்டி எழுதப்பட்டுள்ளது.

இந் நூலின் இறுதியில் காணும் 'ஏழாவது ஷெட்யூல்' செய்திகள், தமிழ்நாடு அரசினர் வெளியிட்டுள்ள 'இந்திய அரசியல் அமைப்பு' என்னும் நூலின் துணைகொண்டு தரப்பட்டுள்ளன.

இந் நூலினை எழுதுமாறு என்னைப் பணித்த கல்லூரித் தமிழ்க் குழுவினர்க்கும், தொடர்ந்து ஆக்கமும் ஊக்கமும் காட்டிய தமிழ் வெளியீட்டுக் கழகத்தார்க்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியறிதலை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

ஆசிரியர்

# உள்ளுறை

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஆங்கிலேயர் வருகையும், இந்திய அரசியல் அமைப்பு வரலாறும் | ... | 1 |
| 2. | 1935ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் | ... | 14 |
| 3. | இரண்டாவது உலகப்போரும் இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியும் | ... | 26 |
| 4. | அரசியல் நிர்ணய சபை | ... | 37 |
| 5. | இந்திய அரசியலமைப்பு | ... | 41 |
| 6. | அரசியலமைப்பின் முகப்பு | ... | 49 |
| 7. | யூனியனும் ஆட்சிப் பரப்பும் | ... | 52 |
| 8. | குடிமை | ... | 64 |
| 9. | அடிப்படையான உரிமைகள் | ... | 68 |
| 10. | அரசியலமைப்புத் தரும் பரிகார உரிமை | ... | 79 |
| 11. | அரசுகளின் நெறிமுறைக் கோட்பாடுகள் | ... | 83 |
| 12. | யூனியன் நிர்வாகம் | ... | 87 |
| 13. | அமைச்சவை | ... | 98 |
| 14. | உபஜனாதிபதியும் அட்டார்னிஜெனரலும் | ... | 106 |
| 15. | யூனியன் சட்டசபை | ... | 109 |
| 16. | ராஜ்ய சபை | ... | 116 |
| 17. | அலுவல் நடைமுறை | ... | 121 |
| 18. | பாராளுமன்றத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்குமுள்ள சிறப்பு உரிமைகள் | ... | 129 |
| 19. | யூனியன் நீதிமன்ற அமைப்பு—தலைமை நீதிமன்றம் | | 135 |
| 20. | இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் | ... | 143 |
| 21. | அரசின் நிர்வாக அமைப்பு | ... | 146 |
| 22. | அமைச்சரவை | ... | 150 |
| 23. | அரசின் சட்டசபை | ... | 153 |
| 24. | அரசுகளிலுள்ள உயர் நீதிமன்றங்கள் | ... | 160 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 25. | யூனியன் ஆட்சிப் பரப்புகள் | ... | 167 |
| 26. | யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையேயுள்ள நிதியுறவுகள் | ... | 171 |
| 27. | இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள் வியாபாரமும் வாணிபமும் | ... | 184 |
| 28. | யூனியன், அரசுகள் இவற்றின் கீழ்ச் சேவை வர்க்கங்கள் | ... | 187 |
| 29. | பப்ளிக் சர்வீஸ் கமிஷன்கள்-பொதுப் பணியாளர் பொறுக்குக் குழு | ... | 190 |
| 30. | தேர்தல்கள் | ... | 196 |
| 31. | சில குறிப்பிட்ட வகுப்பினர்பற்றிய சிறப்பு ஏற்பாடுகள் | ... | 201 |
| 32. | யூனியன் ஆட்சி மொழி | ... | 207 |
| 33. | நெருக்கடி நிலைக்கான ஏற்பாடுகள் | ... | 213 |
| 34. | அரசியலமைப்பின் திருத்தங்கள் | ... | 217 |
| | அதிகாரப் பங்கீடு : ஏழாவது ஷெட்யூல் | ... | 224 |
| | பல்கலைக்கழக வினாத்தாள்கள் | ... | 245 |
| | கலைச்சொல் அகராதி | ... | 248 |

# இந்திய அரசியல் அமைப்பு
(INDIAN CONSTITUTION)

# 1. ஆங்கிலேயர் வருகையும் இந்திய அரசியல் அமைப்பு வரலாறும்

கிழக்கிந்தியத் தீவுகளுடனும், இந்தியாவுடனும் வாணிகம் செய்து பொருளீட்டும் நோக்கத்துடன் 1600-ல் கிழக்கிந்தியக் கம்பெனியை பிரிட்டனின் அரசி முதலாம் எலிசபெத் துவக்கி வைத்தார். கம்பெனிக்குச் சில வாணிக உரிமைகளை அரசியின் சாசனம் (Queen's Charter) வழங்கிற்று. இக் கம்பெனி 18ஆம் நூற்றுண்டின் பிற்பகுதிவரை வாணிகத் துறையில் ஈடுபட்டுப் பெரும் பொருள் திரட்டியது. பின்னர், மண்ணாசை வயப்பட்டுச் சிறு நிலப்பகுதிகளைக் கவர்ந்து தொழிற்கிடங்குகளை அமைத்துக் கொண்டது. பாதுகாப்பிற்காகக் கோட்டைகளைக் கட்டி அவற்றில் படை வீரர்களை அமர்த்தியது.

இந்நிலையில் பரந்து கிடந்த முகலாயப் பேரரசும் வீழ்ச்சி யுறவே, சிற்றரசர்கள் தன்னுதிக்க வெறியால் தனியரசுகளைத் தோற்றுவிக்கப் பெரும் போராட்டத்தில் இறங்கினர். இதன் பயனாக உருவாகிய அரசியற் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட கம்பெனியார், இந்திய அரசியலில் தலையிட்டனர். அவர்களின் தலையீட்டின் முதல் வெற்றியாகப் பிளாசிப் போர் (1757) அமைந்தது. இவ் வெற்றியால் வங்காளம், பீகார், ஒரிசா முதலிய பகுதிகளில் தங்களின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிய தோடு, பக்ஸார் (1765) போருக்குப்பின் 'திவானி' என்னும் நிலவரியை வசூலிக்கும் உரிமையையும் பெற்றனர்.

வங்காளத்தின் நவாபைக் கைப்பாவையாக்கி இந்திய அதிகாரிகள் சிலரின் உதவியுடன் ஆங்கிலேயர் வங்காளத்தை ஆளத்தொடங்கினர். வாணிகக் குழுவினர் ஆட்சியாளர்களாய் மாறியபொழுது பெரும் நிலப்பரப்பைப் பொறுப்புடன் ஆளும்

தகுதியும் திறனுமிலாது தவித்தனர். அவர்களின் திறனில்லா ஆட்சியின் பயனாக வங்காளம் சொல்லொணுத் துயரில் ஆழ்ந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின் போக்கைச் சில பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்தனர். எனவே, கம்பெனிக்குட்பட்ட இந்தியப் பகுதிகளை நல்ல முறையில் ஆட்சி செய்ய உதவும் வகையில் ஒழுங்குமுறைச் சட்டத்தை (Regulating Act, *1773*) *1773*-ல் பாராளுமன்றம் இயற்றியது.

இவ்வொழுங்குமுறைச் சட்டத்தின் பயனாகக் கம்பெனியின் இந்திய ஆட்சி ஆங்கிலப் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு வந்தது. கம்பெனி தனது வரவுசெலவுபற்றியும் கடிதப் போக்கு வரத்துபற்றியும் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கவேண்டும். வங்காளத்திற்கு நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கவுன்சிலும், ஒரு கவர்னர் ஜெனரலும் அமர்த்தப்பட்டார்கள். சென்னை (மதராஸ்), பம்பாய் மாகாணங்களின் வெளியுறவுகளைத் தரப்படுத்துவது இவர்களின் பொறுப்பாகும். வங்காளத்தில் ஒரு தலைமை நீதிமன்றம் (Supreme Court) அமையவும் இச் சட்டம் வகை செய்தது. முதல் கவர்னர் ஜெனரலாக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமனம் பெற்றார். இவர் தமது பதவிக்காலத்தில் கம்பெனி ஆட்சிமுறையில் சில நல்ல சீர்திருத்தங்களைச் செய்தார்.

இச் சட்டத்தின்படி வங்காள அரசாங்கத்தின் சிவில், இராணுவப் பொறுப்புகள் கவர்னர் ஜெனரலிடமும் அவரது கவுன்சிலிடமும் விடப்பட்டன. இவர்கள் ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பார்கள். கம்பெனி இயக்குநர்களின் வேண்டுகோளின் பேரில் அரசர் இவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம். கவுன்சிலின் எல்லா முடிவுகளும் பெரும்பான்மையினரின் ஆதரவு பெற்றிருக்க வேண்டும்.

*1773*-க்கு முன் வங்காளம், பம்பாய், மதராஸ் ராஜதானிகள் (மாநிலங்கள்) தனித்தனியே சுயேச்சையுள்ளனவாக இருந்தன. இவைகள் தனித்தனியே இங்கிலாந்திலிருந்த இயக்குநர்களின் அவைக்குப் பொறுப்புடையன. இதன் பயனாக இவைகளுக் கிடையே நல்ல தொடர்பு கிடையாது. ஒருமையுடன் செயல்பட முடியவில்லை. இக் குறைபாடுகளை ஒழுங்குமுறைச் சட்டம் தவிர்க்க உதவியது. வங்காளத்தின் தலைமையை மற்ற இரண்டு மாநிலங் களும் ஏற்கச் சட்டம் வகைசெய்தது.

கம்பெனி ஊழியர்கள் இலஞ்சம் வாங்குவதும், இனும் பெறுவதும், சொந்த முறையில் வாணிகம் செய்து பொருளீட்டு வதும் விலக்கப்பட்டன. உயர்நிலையிலிருந்த கம்பெனி ஊழியர் களுக்குத் தாராளமாக ஊதியம் வழங்கச் சட்டம் வழி செய்தது. இச்சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலும் கவுன்சிலும், மக்கள் நலன் கருதிச் சட்டமியற்றி ஆட்சி செய்யும் அதிகாரம் பெற்றனர். எனினும், எதிர்பார்த்த அளவிற்கு இச் சட்டத்தால் இந்திய மக்களுக்கு நன்மை ஏற்படவில்லை.

இச் சட்டத்தின் சில குறைபாடுகளைப் பிட்ஸ் இந்தியச் சட்டம் 1784 (Pitt's India Act, 1784) நீக்கிற்றெனலாம். கிழக்கிந்தியக் கம்பெனியின் செயற்பாடுகளைக் கண்காணிக்க ஒரு தணிக்கைக் குழு (Board of Control) இச் சட்டத்தால் ஏற்பட்டது. இந்தியக் கம்பெனி ஆட்சியில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் அக்கறை காட்டத் தொடங்கிற்று. துணைப்படை முறையின் (Subsidiary System) விளை வாக பிரிட்டிஷார் மேற்கொண்ட மேலதிகாரத்தைப் பேணி வளர்க்கவேண்டியதாயிற்று. 1857வரை கம்பெனி பெற்ற வெற்றிகளாலும் நாடு சேர்க்கைகளாலும், பிரிட்டனின் ஆதிக்கம் பெருகிற்று.

திப்பு சுல்தான் வீழ்ச்சியும் (1800), மராட்டியரின் தோல்வியும் (1818) ஆங்கிலேயருக்கு இந்தியப் பேராதிபத்திய உரிமையை வழங்கினவெனலாம். சீக்கியரின் தோல்விக்குப் பின் (1849), ஆங்கிலேயரின் ஆதிக்கம் இந்தியாவின் இயற்கை எல்லைகளை எட்டி யது. இந்திய அரசர்களில் சிலர் அழிந்தபின் எஞ்சியோர், துணைப் படை முறை உடன்பாட்டில் சிக்கி ஆங்கிலேயரின் மேலாதிக் கத்தை ஏற்கவேண்டியவராயினர். வியக்கத்தக்க முறையில் இந்தியா வெளியார் வசமாயிற்று. இவ் வெளியார் ஆதிக்கம், இந்தியாவின் தலைவிதியை இரண்டு நூற்றாண்டுகள் நிர்ணயித்தது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட இந்திய அரசியல் சிதைவு, ஒரு சிறு வாணிகக் கூட்டத்தாருக்கு இந் நாட்டின் அரசியல் ஆதிக்க வாய்ப்பினைத் தந்தது.

சிதைந்துகொண்டிருந்த ஓர் அரசியலமைப்பை ஆங்கிலேயர் தங்கள் ஆட்சிமுறையாகக் கொண்டனர். முகலாயரின் ஆட்சி முறையையொட்டியே தங்களின் ஆட்சியை அமைக்கவேண்டி யிருந்தது. நாட்டை சுபாக்களாகவும், சர்க்கார்களாகவும் பிரித்துக்கொண்டவிதமும், வரி வசூலிப்பு முறையும், நீதிவழங்கிய தன்மையும் முகலாயர்களைப் பின்பற்றியனவாய் இருந்தன.

வாரன் ஹேஸ்டிங்ஸ் காலம்முதல் வில்லியம் பெண்டிங் கால இறுதிவரை வளர்ச்சியுற்ற ஆட்சிமுறையை பிரிட்டிஷ் ஆட்சி முறையெனக் கருதலாம். 1772 வரை பிரிட்டிஷார், கம்பெனியின் இந்திய அரசாங்கப் பொறுப்பை ஏற்கவில்லை. அதன் பிறகுதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். கம்பெனியின் இந்திய உடைமை களின் ஆட்சிப் பொறுப்பை ஒழுங்கு செய்ய ஒழுங்குமுறைச் சட்டத்தை பிரிட்டனின் பாராளுமன்றம் இயற்றியது.

'சிப்பாய்க் கலகம்' என வழங்கும் இந்திய முதல் விடுதலைப் போரின் போக்கும், விளைவும், பிரிட்டிஷாரின் கண்களைத் திறந்தன. கம்பெனியின் ஆட்சிப் பிடியிலிருந்து இந்திய மக்களைக் காக்கும் நோக்குடன் விக்டோரியா அரசியார் ஆட்சிப் பொறுப்பை நேரடியாக ஏற்று நடத்தினார்.

இந்திய அரசாங்கப் பொறுப்பை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்று நடத்தத் தொடங்கியதன் விளைவாக, இந்திய விவகாரங்களைக் கவனிக்க ஒரு செகரெட்ரி (Secretary of State) நியமனமானார். இவருக்கு உதவ, பதினைந்து உறுப்பினர்களைக்கொண்ட இந்தியக் கவுன்சில் ஒன்றையமைக்கச் சட்டம் இயற்றினர்.

இந்தியக் கவுன்சில்கள்பற்றிய சட்டம் (Indian Councils Act, 1861), ஒழுங்குமுறைச் சட்டத்தால் அதிகாரம் ஒருமுனைப்படுத்தப் பட்டதை நாம் பார்த்தோம். இக் கவுன்சில்கள்பற்றிய சட்டம், அதிகாரத்தைப் பன்முனைப்படுத்தத் தோன்றியது. இந்தியச் சட்டசபைகளின் வளர்ச்சிக்கு இச் சட்டம் அடிப்படையாகும். மதராஸ், பம்பாய் மாகாணங்களின் சட்டசபைகளுக்குச் சட்ட மியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது. மற்ற மாகாணங்களிலும் சட்டமியற்றும் அதிகாரமுடைய சட்டசபைகள் நிறுவ வகை செய்தது. இருப்பினும் மாகாணச் சட்டசபைகள் சில தடை களுடன் தம் பணிகளைச் செய்தன. 1861-க்குப் பிறகு மாகாணச் சட்டங்கள், கவர்னரின் இசைவைப் பெறுதலுடன், கவர்னர் ஜெனரலின் ஒப்புதலையும் பெற்றால்தான் சட்டமாகலாம். இதன் விளைவாக, கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் இந்தியாவின் சட்ட மியற்றும் தலைமை அதிகாரத்தைப் பெற்றார்.

மாகாணக் கவுன்சில்கள், நிர்வாகத்தில் தலையிடுவதை இச் சட்டம் தவிர்த்தது. கவுன்சில்கள் சட்டமியற்றுவதில்மட்டும் தம் கவனத்தைச் செலுத்தின.

சிப்பாய்க் கலகப் பயங்கர நிகழ்ச்சிகள் மறுபடியும் ஏற்படா திருக்க பிரிட்டிஷ் அரசாங்கம், இந்தியர்களும் சட்டமியற்றுவதில் பங்குபெற வகைசெய்தது. மத்தியக் கவுன்சிலில் (Central Council) இந்தியர்கள் சிலர் முதன்முறையாக நியமனம் பெற்றனர். அவ்வாறு நியமனம் பெறுவோர் ஆறு பேருக்குக் குறையாமலும் பன்னிரண்டு பேருக்கு மிகாமலும் இருக்க வேண்டும். இவர்கள் இரண்டு ஆண்டுகள் உறுப்பினராக இருப்பர். இவர்களில் பாதி பேர் உத்தியோகப் பற்றற்றவர்களாக இருப்பர். இச் சட்டத்தின் பயனாக இந்தியர்களில் சிலர் கவர்னர் ஜெனரலின் கவுன்சிலில் இடம் பெற்றனர்.

அதே ஆண்டில் (1861), இந்திய உயர்நீதிமன்றச் சட்டத்தை இயற்றிக் கல்கத்தா, பம்பாய், மதராஸ் உயர் நீதிமன்றங்களை உருவாக்கினர். முன்னாள் கம்பெனியின் தலைமை நீதிமன்றம் பெற்றிருந்த அதிகாரங்கள் இவ்வுயர் நீதிமன்றங்களுக்கு மாற்றலாயின.

இந்திய அரசியலமைப்பு வரலாறு பல சாசனச் சட்டங்களால் வளர்ச்சியுற்றது. குறிப்பாக 1892-ல் இயற்றப்பட்ட இந்தியக் கவுன்சில் சட்டம், மத்தியச் சட்டசபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் மாகாணச் சட்டசபைகளைப் பெருக்கவும் உதவிற்று.

1909-ல் மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் (Minto-Morley Reforms) வெளியாயின. அதன்படி கவர்னர் ஜெனரலின் கவுன்சில் உறுப்பினர்களின் தொகை பதினாறிலிருந்து அறு பதுக்கு உயர்ந்தது. வங்காளம், பம்பாய், மதராஸ் மாகாணங் களின் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் இருபதிலிருந்து ஐம்பதுக்கு உயர்ந்தது. சிறிய மாகாணங்களின் கவுன்சில் உறுப் பினர் தொகை முப்பதுக்கு உயர்ந்தது.

அரசாங்கச் சார்புடையவர்களின் (Officials) பெரும்பான்மை, கவர்னர் ஜெனரலின் சட்டசபையில் நிலைபெற்றதெனினும், மாகாணச் சட்டசபைகளில் அரசாங்கச் சார்பற்றவர்கள் பெரும்பான்மையினராக இருந்ததோடு, பொதுமக்களின் நலம் கருதித் தீர்மானங்களை நிறைவேற்றவும் உரிமை பெற்றனர். இருப்பினும், மத்திய அரசாங்கத்தின் மிகையான அதிகாரங்களை மீறி இப் பெரும்பான்மையினரால் எதுவும் செய்வதற்கில்லை.

நியமன முறைதான் 1909 வரை நிலவி வந்தது. முதன்முறையாக மறைமுகத் தேர்தலை மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் ஏற்றுக்கொண்டன. எனவே, வகுப்பு, சாதி, சமய அடிப்படையில் பிரதிநிதிகளைத் தேர்வு செய்ய இச் சட்டம் (The Act of 1909) வகை செய்தது. இம் முறையின் தீயசக்தி அக்காலத்தில் வெளித் தோன்றவில்லை என்றாலும், பிற்காலத்தில் தேசீய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் ஒரு தீய சக்தியாக மாறிற்று.

இக் கவுன்சில்கள், ஆண்டு வரவு செலவுக் கணக்கை (Budget) ஏற்குமுன் நன்றாக ஆராயவும், அதுபற்றிய தீர்மானங்களைக் கொண்டுவரவும், அத் தீர்மானங்களை வாக்கெடுப்பிற்கு விடவும் உரிமை பெற்றன. அத் தீர்மானங்கள் அரசாங்கத்தைக் கட்டுப் படுத்தாவிட்டாலும், கவுன்சிலின் சிபாரிசுள் என்ற முறையிலாவது ஏற்கப்படலாம்.

கவுன்சிலில் உறுப்பினர்கள் அரசாங்கத்தைக் கேள்விகள் கேட்கவும் துணைக்கேள்விகள் கேட்கவும் உரிமை பெற்றனர்.

இச் சீர்திருத்தங்கள் முற்போக்குடையனவாகத் தோன்றினும் இந்திய மக்கள் மன அமைதி பெறவில்லை. மறைமுகத் தேர்தலும் குறுகிய வாக்குரிமையும் மக்கள் விருப்பைப் பெறவில்லை. கவுன்சிலர்களும் பொறுப்பை உணரமுடியவில்லை. கவுன்சிலுக்குச் சட்டத்துறையிலும் அதிகாரமில்லை. மாறுபட்ட கருத்துகளை ஆய்ந்து, சொற்போர் நிகழ்த்தும் ஒரு பேரவையாகத்தான் அது இருந்தது.

தனி வல்லாட்சி செலுத்தி வந்த இந்திய அரசாங்கத்தை இச் சீர்திருத்தங்கள் நல்லாட்சி வல்லரசாக்கின எனக் கூறின் தவறாகாது.

## இந்திய அரசாங்கச் சட்டம், 1919

### (Government of India Act, 1919)

1909ஆம் ஆண்டுச் சட்டத்தால் இந்திய அரசியல் நிலை தெளிவடையவில்லை; மக்களின் 'சுய ஆட்சி' வேட்கை குறையவில்லை. மாகாணச் சுய ஆட்சித் தீர்மானங்கள் நிறைவேறின. கல்கத்தாவிலிருந்து தலைநகர் டில்லிக்கு மாற்றமாயிற்று. 1914-ல் உலகப் பெரும்போர் மூண்டது. மக்களின் சுதந்திரவேட்கை கனலாய்ப் பரவியது. அரசியல் வல்லுநர்கள் திட்டங்கள் பல

திட்டினர். அவைகளில் ஒன்று இரட்டை ஆட்சி (Diarchy) முறை யாகும். அதாவது, அரசியல் அதிகாரங்களை பிரிட்டனின் பிரதி நிதிகளும், இந்தியப் பிரதிநிதிகளும் பகிர்ந்துகொண்டு ஆட்சி நடத்தும் முறைக்கு இரட்டை ஆட்சி எனப் பெயர். இதைப் போல இன்னும் பல திட்டங்களை ஆய்கின்ற வேளையில் பிரிட்டனின் ராஜாங்கச் செயலாளர் (Secretary of State for India) மான்டேகு, பொதுமக்கள் சபையில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதன் நோக்கம் இந்தியர்களைச் சிறிதுசிறிதாக அரசாங்கத்துடன் ஈடுபடுத்திச் சுயஆட்சி நிறுவனங்களை வளர்த்துப் பொறுப்புடைய அரசாங்கத்தைத் தோற்றுவித்து, பிரிட்டிஷ் பேரரசின் ஒரு பகுதி யாக இந்தியாவை இணைப்பதேயாகும்.

பின்னர், மான்டேகு இந்தியா வந்து, வைசிராய் செம்ஸ் ஃபோர்டுடன் நாடு முழுவதும் சுற்றி, இந்திய அரசியல் நிலையை அறிந்து, இருவரும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர். அவ்வறிக்கையை யொட்டி உருவாகிய சட்டம், இந்திய அர சாங்கச் சட்டம் (1919) என்று வழங்குகிறது. இச் சட்டம் நான்கு கருத்துகளை வலியுறுத்தியது.

(1) தல ஆட்சியை மக்கள் மேற்பார்வையில் விட்டுவிடுதல்.

(2) மாகாண அரசாங்கங்கள் இந்திய அரசாங்கத்தினின்று சுயேச்சையுடையனவாகவும், பொது மக்களின் பிரதி நிதிகளுக்குப் பொறுப்புடையனவாகவும் இருக்க வேண்டும்.

(3) இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாக இருக்கவேண்டும். இந்தியச் சட்ட சபை (Indian Legislature) விரிவடைவதோடு மக்கள் பிரதிநிதிகளின் செல்வாக்கு உயர வேண்டும்.

(4) இந்திய அரசாங்கத்தின் பேரிலும், மாகாண அரசாங் கத்தின் பேரிலும் பாராளுமன்றமும் ராஜாங்கச் செய லாளரும் செயல்படுத்தும் கட்டுப்பாடுகள், மேலே காணப்படும் மாற்றங்களுக்கேற்றவாறு தளர்த்தப் படும்.

மாகாணங்களுக்கு அதிகார மாற்றம் செய்யுமுன் அவற்றைத் தரப்படுத்தவேண்டியதாயிற்று. கவர்னர்களின் மாகாணங்களென வும் லெப்டினண்டு கவர்னர் மாகாணங்கள் எனவும், பிரதம

கமிஷனர் மாகாணங்களெனவும் முத்திறத்தனவாக இருந்தன. இவற்றை மாற்றி ஒரே தரத்தனவாக (கவர்னர் மாகாணங்களாக) அமைத்தனர்.

அனைத்திந்தியச் சிறப்புடைய அதிகாரங்களைப் பிரித்து மத்திய அதிகாரங்களெனவும், தலச் சிறப்புடைய அதிகாரங்களை மாகாணங்களுக்குரியனவெனவும் பங்கிடு செய்தார்கள். இருப்பினும் மத்தியச் சட்டசபை, மாகாணங்களின் அதிகாரங்களை யொட்டிச் சட்டமியற்றலாம்.

மத்தியச் சட்டசபை, சட்டம் இயற்றுவதற்குரிய இனங்களையும், மாகாணச் சட்டசபை, சட்டம் இயற்றுவதற்குரிய இனங்களையும் தனித்துப் பிரித்து எழுதினர். மாகாணங்களுக் குரிய இனங்களில் சட்டமியற்றவேண்டுமெனின் கவர்னர் ஜெனரலின் இசைவு பெறவேண்டியதில்லை. மேலும் மாகாணங் களின் சட்டசபைகள் தல அமைதி குறித்துச் சட்டங்கள் இயற்றலாம்.

மாகாணங்களுக்கு ஆட்சித் துறையில் தக்க அதிகாரங்களை வழங்கப் பல விதி முறைகளை மத்திய அரசாங்கம் செய்து கொடுத்தது.

**மாகாண நிர்வாகம்**

இரட்டை ஆட்சி : மாகாணங்களின் அதிகாரங்களை (Provincial Subjects) இரண்டாகப் பிரித்து அவற்றினைத் தனித்தனியே நிர்வகிக்கும் முறைக்கு இரட்டை ஆட்சி எனப் பெயர். பிரித்து வழங்கிய அதிகாரங்களை 'மாற்றப்பட்ட அதிகாரங்க' ளெனவும், எஞ்சிய அதிகாரங்களை 'இருப்பு அதிகாரங்கள்' (Reserved Subjects) எனவும் வழங்கினர்.

இருப்பு அதிகாரங்கள்பற்றிய நிர்வாகப் பொறுப்பு, கவர்னரிடமும் அவரது கவுன்சிலிடமும் இருக்கும். கவர்னரையும் கவுன்சிலர்களையும் பிரிட்டிஷ் அரசர் நியமிக்கிறார். இவர்கள் ஐந்து ஆண்டுக் காலம் பதவியிலிருப்பர். இவர்களுக்கான குறிப்பிட்ட ஊதியத்தை பிரிட்டன் வழங்கும்.

மாற்றப்பட்ட அதிகாரங்களின் நிர்வாகப் பொறுப்பு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, கவர்னரால் அமர்த்தப்படுகின்ற அமைச்சர்களிடம் இருக்கும். இவ்வமைச்சர்கள் சட்டசபைக்குப்

பொறுப்புடையவர்கள். ஆனால், கவர்னரும் அவரது கவுன்சிலர்களும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கே பொறுப்புடையவர்கள்.

வங்காளம், பம்பாய், மதராஸ் மாகாணங்களில் கவர்னரின் நிர்வாகக் குழுவில் (Executive Council) நான்கு கவுன்சிலர்களும், மூன்று அமைச்சர்களும் இருப்பர். பீகாரிலும் ஒரிசாவிலும், மூன்று கவுன்சிலர்களும் இரண்டு அமைச்சர்களுமிருந்தனர். மற்ற மாகாணங்களில் இரண்டு கவுன்சிலர்களும் இரண்டு அமைச்சர்களுமிருந்தனர்.

இம்முறை நிர்வாகக் குழு அமைப்பில் ஒற்றுமை காண்பதரிது. அமைச்சர்களேயும் கவுன்சிலர்களேயும் இணைத்து நிர்வாகத்தை நடத்திச் செல்வது கவர்னரின் கடமையாகும்.

**மாகாணச் சட்டசபை :** சட்டசபையானது கவுன்சில் என வழங்கிற்று 1919ஆம் ஆண்டு, அரசாங்கச் சட்டம், கவுன்சிலில் இருக்கவேண்டிய உறுப்பினர்களின் குறைந்த அளவு எண்ணிக்கையை வரையறை செய்தது. இக் குறைந்த அளவு எண்ணிக்கை முன் இருந்ததைவிட அதிகமானதே. எடுத்துக்காட்டாக, வங்காளம், பம்பாய், மதராஸ் ஆகிய மாகாணங்களில் உள்ள கவுன்சில்கள் ஒவ்வொன்றிலும் முன் ஐம்பது உறுப்பினர்களே இருந்தனர். ஆனால், பின்னர் இம் மாகாணங்களில் நூற்றுக்கும் அதிகமான உறுப்பினர்கள் இருந்தனர். சட்டத்தால் குறிக்கப்பட்ட குறைந்த அளவு எண்ணிக்கையைவிட எல்லா மாகாணங்களிலும் அதிகமான உறுப்பினர்களே இருந்தனர்.

புதிதாக அமைக்கப்பட்ட கவுன்சில்களில் நூற்றுக்கு எழுபது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், இருபது பேர் அரசாங்கச் சார்புடையவர்களும், பத்துப் பேர் கவர்னரால் நியமனமானவர்களும் இருந்தனர்.

ஒரே தரமான நிலம் சார்ந்த தொகுதிகள்மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சமூகம், வகுப்பு, சாதி, சமயம் அடிப்படையிலும், பல்கலைக்கழகங்கள், நிலவுடைமையாளர் வணிகக் கழகங்கள்மூலமாகவும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

வாக்குரிமை, சில தகுதிகள் அடிப்படையில் ஒரு சிலருக்கே வழங்கப்பட்டது.

இச் சட்டம், சட்டசபையின் பதவிக்காலத்தை மூன்றாண்டுக ளாக்கியது. கவர்னர், சட்டசபையை முன்னதாகக் கலைக்கலாம். கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாத காலத்திற்குள்ளாகப் புதிய சபை அமையவேண்டும்.

கவுன்சில் உறுப்பினர்கள் சபையில், நிர்வாகத் துறையினரிடம் கேள்விகளையும் துணைக்கேள்விகளையும் கேட்டு நிலை உணரலாம்.

பொதுமக்களின் குறைபாடுகள்பற்றித் தீர்மானங்கள் இயற்ற லாம். சில அவசரப் பொது நலன்பற்றிய நிகழ்ச்சிகளைப்பற்றி விவாதிக்கச் சபை நடவடிக்கைகளைத் தள்ளிவைக்கத் தீர்மானங்களை நிறைவேற்றலாம்.

சில குறைபாடுகளுக்கு இடையேயும் சபை, பல பொருள் பற்றி மசோதாக்களை உருவாக்க அதிகாரமிருந்தது.

சபையின் நிதிபற்றிய அதிகாரங்கள் குறைவானாலும், 1909ஆம் ஆண்டுச் சட்டம் வழங்கியிருந்ததைவிடச் சற்று அதிக மென்றே கொள்ளவேண்டும். நன்றாக விவாதித்து மானியம் வழங்கியதெனினும், அவ்வினங்கள் மிகக் குறைவேயாம்.

சபைக்குள்ள அதிகாரங்களை, கவர்னர், தமக்குள்ள மிகை யான அதிகாரங்களால் குறைத்துவிடலாம்.

சாதாரணச் சட்டங்களை நிறைவேறாது தடை செய்வதோடு நிதிபற்றிய சட்டங்களைச் சபையின் விருப்புப் பெறாமலே சட்ட மாக்க கவர்னருக்கு அதிகாரமிருந்தது. மாகாண நிர்வாகப் பொறுப்புகளைத் தடையின்றி நிறைவேற்ற அவருக்கு இவ்வதி காரத்தை வழங்கினர். பொறுப்புடைய அரசாங்கத்தை நிறுவ முற்பட்ட பிரிட்டிஷார் அதை நடைமுறையில் செயல்படுத்த விரும்பவில்லை.

**மத்திய அரசாங்க அமைப்பு**

இச் சட்டத்தால் மத்திய அரசாங்க அமைப்பில் பெரும் மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. இந்திய அரசாங்கம் என்றும் போல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கே பொறுப்புடையதாய் இருந்தது.

கவர்னர் ஜெனரலின் நிர்வாகக் குழுவின் உறுப்பினர் தொகை, ஒரு சிறப்பு உறுப்பினரைச் சேர்த்து ஏழாக இருந்தது. இவர்களில் இந்திய உறுப்பினர்கள் இரண்டிலிருந்து மூன்றாக உயர்ந்தனர். மத்திய அரசாங்கத் துறைகளை ஒன்பதாகப் பிரித்தனர். அவைகளாவன: (1) வெளிநாடும் அரசியலும், (2) இரயில் பாதையும்வாணிகமும், (3) தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும், (4) கல்வி, (5) சுகாதாரமும் நிலங்களும், (6) இராணுவம், (7) உள் துறை, (8) சட்டம், (9) நிதியும் சமயமும். இவற்றில் வெளிநாடு, அரசியல்துறை இவையிரண்டும் கவர்னர் ஜெனரலின் நேரடிப் பொறுப்பில் இருந்தன. சமயம்பற்றிய துறையும், இரயில், வாணிகம்பற்றிய துறைகளும் மற்றோர் உறுப்பினர் பொறுப்பில் இருந்தன. எஞ்சிய ஆறு துறைகளும் மற்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்தன. எனவே, வைசிராய் நீங்கலாக, நிர்வாகக் குழுவினில் ஏழு உறுப்பினர்களிருந்தனர்.

### மத்தியச் சட்டசபை

இச் சட்டத்தின்படி மத்தியச் சட்டசபை ஈரங்கச் சட்டசபையாக மாறியது. இந்தியச் சட்டசபை, அசெம்பிளி (Legislative Assembly) என்றும், ராஜ்ய சபை (Council of State) என்றும் இரு சட்டசபைகளாகச் செயல்படத் தொடங்கியது.

ராஜ்ய சபையில் அறுபதிற்கு மிகாத உறுப்பினர்கள் இருப்பர். இவர்களில் முப்பதிற்குக் குறையாத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும், இருபதிற்கு மிகாத உறுப்பினர்கள் அரசாங்கச் சார்புடையவர்களாகவும், எஞ்சியுள்ளவர்கள் நியமன உறுப்பினர்களாகவும் இருக்கவேண்டும்.

கீழ்ச் சபையில் (சட்டசபையில்) குறைந்தது 140 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் நூறு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும், மீதமுள்ள நியமன உறுப்பினர்களில் மூன்றிலொரு பங்காவது அரசாங்கப் பற்றற்றவர்களாகவும் இருந்தனர்.

சட்டசபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இன அடிப்படையில் தேர்தல் நடந்தது. மேலும் ஆலைத்தொழில், வாணிகம், நிலவுடைமையாளர் போன்ற துறைகளுக்குச் சிறப்புப் பிரதிநிதித்துவம் கிடைத்தது.

ராஜ்ய சபையின் அமைப்புச் சிக்கலானது. வழிவழிச் செல்வர்களுக்கும், பெரும் வணிகர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும்

வகையில் வாக்குரிமை ஒரு சிலருக்கே இருந்தது. சிறப்புத் தகுதியுடைய சிலருக்கும் முன்னாள் சட்டசபை ஸ்தல ஸ்தாபன உறுப்பினர்களுக்கும் வாக்குரிமை இருந்தது.

இவ்விரு சபைகள் கேள்விகள் கேட்கவும், சட்டங்களியற்றவும், நிதிபற்றி விவாதிக்கவும் உரிமைபெற்றிருந்தன. சட்டமியற்றுவதில் இரு சபைகளும் சம அதிகாரம் பெற்றிருந்தன. இருப்பினும், நாட்டின் வரவு செலவுபற்றிய நிதி இனங்கள் மானியம் பெறாத இனங்களாக இருந்தன. இவைபற்றி விவாதிக்க இரு சபைகளுக்கும் உரிமை கிடையாது. எஞ்சிய சில இனங்கள்பற்றிச் சட்டசபைகள் விவாதிக்கலாம் என்றாலும் ராஜ்ய சபையின் அரசாங்கப் பற்றுடைய உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகளின் விருப்பினை மதியாது நடந்துகொள்வர்.

இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், கவர்னர் ஜெனரலுக்குச் சட்ட ஆக்கம்பற்றிச் சில சிறப்பதிகாரங்கள் இருந்தன. சட்டசபைக்கும் அவருக்கும் கருத்துவேறுபாடு இருக்குமானால், சில சட்டங்களை இயற்றத் தமது இசைவினைத் தர மறுப்பார். கவர்னர் ஜெனரல் சிபாரிசு செய்யும் ஒரு மசோதாவைச் சட்டசபை ஏற்க மறுத்தால், பிரிட்டிஷ் இந்திய மக்களின் அமைதி, நலன் கருதி கவர்னர் ஜெனரல் அதைச் சட்டமாக்கிச் செயல் படுத்தலாம். பிரிட்டிஷ் பாராளுமன்றம் விரும்பினால் கவர்னர் ஜெனரலின் இவ்வதிகாரத்தைத் தடை செய்யலாம். சட்டசபைகளால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களைக் கவர்னர் ஜெனரல் ஏற்க மறுக்கலாம்.

சட்டசபையால் மறுக்கப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட மானியங்களை கவர்னர் ஜெனரல் நிறைவு செய்யலாம். மிகையான தம் அதிகாரங்களைப் பயன்படுத்தி, கவர்னர் ஜெனரல் சட்ட சபையின் எதிர்ப்பைக் குலைத்தார்.

**இரட்டை ஆட்சியின் தோல்வி:** மாகாண அரசாங்கம் இரு பகுதியாய்ப் பிரிந்து செயல்படும்போது எல்லைமீறிப் பிற பகுதிக்குத் தொல்லை கொடுத்தது. இவ்விரு பகுதிகளும் கலந்தாலோசிக்கும் பொறுப்பை வளர்க்கவில்லை. மேலும் அமைச்சர்களிடையே கூட்டுப்பொறுப்பென்பது கிடையாது. அமைச்சர்களுக்கதிகாரமின்மையும், அதே சமயத்தில் அவர்களின் வேலைகளில் கவர்னரும், இந்திய அரசாங்கமும், ராஜாங்கச் செயலாளரும் தலையிட்ட வண்ணமாய் இருந்ததும், இம்முறை ஆட்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தது. இருப்பு அதிகாரங்களின் ஒரு துறையாக இருந்த

நிதித்துறை, அத்துமீறி மாற்றப்பட்ட துறைக்குத் தொல்லை கொடுத்துவந்தது. அதனுடன் இந்திய சிவில் பணியைச் சேர்ந்த வர்கள் அமைச்சர்களுடன் ஒத்துழைக்கவில்லை. அமைச்சர்களை வெறுத்துப் பேசியும், அவர்கட்கு அடங்காமலும் வேலை செய்து வந்தனர்.

இந்தியாவின் மிகப் பெரிய அரசியற் கட்சியாக இருந்த இந்தியத் தேசீய காங்கிரசு இவ்வரசியல் சீர்திருத்த இயக்கத்தில் முழுமனத்துடன் பங்கு பெறவில்லை. சட்டசபைக்குச் சென்றவர் களும், இம்முறை இரட்டை ஆட்சியை ஒழிக்கவேயன்றி, வளர்க்கச் செல்லவில்லை என்று கூறினார்கள்.

இம்முறை தோல்வியுற்றாலும், இதனால் சில நன்மைகள் பிறந்தன. நம் நாட்டவர்கள் அரசியலில் பங்கு பெறவும், மக்களாட்சி முறையை இயக்கவும் முற்பட்டனர். தேர்தலின் நுட்பத்தை உணராவிட்டாலும் அதில் ஈடுபாடு காட்ட ஆரம் பித்தனர். சட்டசபை நிகழ்ச்சிகளில் சிலர் நல்ல தேர்ச்சி பெற்றனர். அரசாங்கம், ஆட்சிபற்றிய சிக்கலை உணர்ந்தறிந்து கொள்ளும் அனுபவமும் பெற்றனர்.

# 2. 1935ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம்

1919ஆம் ஆண்டுச் சட்டத்தால் மனநிறைவு பெருத இந்தியத் தேசீயவாதிகள் பெரும் அரசியற் போராட்டத்தில் இறங்கினர். இப் போராட்டத்தை முறிக்க விரும்பிய பிரிட்டிஷ் அரசாங்கம், 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் செயல்முறை பற்றியும், பொறுப்புடைய அரசாங்கம் நிறுவுவதுபற்றியும் ஆராய்ந்து கருத்துகளை வெளியிடுமாறு ஒரு கமிஷனை அமர்த்தியது. அக் கமிஷனின் தலைவராக ஸர் ஜான் சைமன் என்பவர் நியமனம் பெற்ருர். இக் கமிஷனில் இந்தியர்கள் இடம் பெறவில்லை. எனவே, அரசியற் கட்சிகள் இக் கமிஷனை பகிஷ்கரித்தன. இக் கமிஷனின் அறிக்கை வெளியானதும் (1930-ல்) அதைத் தேசீயவாதிகள் பிற்போக்கானதென எதிர்த்தனர். கூட்டாட்சி முறையை வலியுறுத்தாமல் பலம் பொருந்திய, பொறுப்பில்லா ஒரு மத்திய அரசாங்கம் அமைக்குமாறு கமிஷன் வற்புறுத்தியது.

பிரிட்டிஷாரின் கருத்துகளையும் அமைப்பு முறையையும் விரும்பா இந்தியர்கள் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து இந்திய அரசியலமைப்பை வரையுமாறு பணித்தனர். அக் கமிட்டிக்கு மோதிலால் நேரு தலைமை தாங்கியதால் அதற்கு நேரு கமிட்டியெனப் பெயராயிற்று. இக் கமிட்டி மிக அருமையானதோர் அறிக்கையை வெளியிட்டது. அதில் கூட்டாட்சி முறை வலியுறுத்தப்பட்டதுடன் அதற்கு பிரிட்டன் முழு அதிகாரத்தையும் மாற்றம் செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியத் தேசியவாதிகளின் மனத்திடத்தையும் போக்கையும் பழைய அரசியல் சட்டத்தால் மாற்றமுடியாதென்பதை உணர்ந்து பிரிட்டன் புதியதோர் அரசியலமைப்பை உருவாக்க முனைந்தது. அனைத்திந்தியக் கூட்டாட்சியில் இந்திய அரசர்களும், சமயவாதிகளும், பிற்போக்குச் சக்திகளும் புகலிடம் பெறலாம் என்ற நம்பிக்கையில் பிரிட்டன் இம் முறையை ஏற்றது. அப்பொழுது வைசிராயாக இருந்த இர்வின் பிரபுவும், பிரிட்டனின் நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டி அரசியலமைப்பைப் படைக்க வருமாறு இந்திய அரசியல் கட்சிகளுக்கு அழைப்புத் தந்தார்.

பிரிட்டனின் மேலாதிக்க அதிகாரத்தால் அவதியுற்ற இந்திய அரசர்கள் விடுதலை பெறக் காலம்கருதி இருந்தனர். கூட்டாட்சி அமைப்பில் தங்களையும் தொடர்புபடுத்திக்கொள்ள விரும்பிய இந்திய அரசர்கள் பிரிட்டிஷ் இந்தியாவுடன் ஒத்துழைத்துக் கூட்டாட்சியை அமைக்க விழைவதாகக் கூறினர். இந்தியத் தேசிய காங்கிரசும் அனைத்திந்தியக் கூட்டாட்சியை வரவேற்று, இந்தியர்களுக்கு அதிகாரம் முழுமையாக மாற்றப்படவேண்டுமென்று வற்புறுத்தியது.

ஒரு சிலர் கூட்டாட்சி அமைப்பு இந்தியாவுக்கு ஒவ்வாதென வாதித்தனர். அச் சூழ்நிலையில், முதல் வட்டமேசை மாநாடு கூடப் போவதாக பிரிட்டன் அறிவித்தது. அதில் பங்கு பெற இருந்தோர் நாட்டின் நலன் கருதித் தம்மாலானதைச் செய்யலாமென நினைத்தனர். அதே சமயத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின்போது கன்சர்வேட்டிவ் கட்சியினரும், லிபரல் கட்சியினரும், இந்தியாவின் டொமினியன் அந்தஸ்துக் கோரிக்கையை வன்மையாக எதிர்த்தனர். அதனுடன் வைசிராயின் அறிக்கையில் காணப்பட்ட தாராளப்போக்கையும் கண்டித்தனர். ஏனவே, பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தில் நம்பிக்கையிழந்த காங்கிரசு, 1930-ல் நடந்த கராச்சி மாநாட்டில் முழுச் சுதந்திரத் தீர்மானத்தை நிறைவேற்றி வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்தது. இருப்பினும், மற்ற அரசியல் கட்சிகளும், லிபரல் கட்சியினரும், அரசர்களும் மாநாட்டில் பங்கு பெற்று உழைக்க முன்வந்தனர்.

இந்தியாவில் சட்ட மறுப்பு இயக்கம் நடந்துகொண்டிருக்கும் போது இம் மாநாடு லண்டனில் கூடிற்று. பிக்கனிர் அரசர் மாநாட்டின் முதற்கூட்டத்தில் இந்திய அரசர்கள் கூட்டாட்சியில் சேர்ந்துகொள்ள விரும்புவதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து பாட்டியாலாவின் அரசர் மற்றவர்களின் சார்பாகக்

கூட்டாட்சி முறையை வரவேற்பதாக அறிவித்தார். பிரிட்டிஷாரின் சார்பாகப் பிரதம அமைச்சர் மாக்டனால்டும் (MacDonald) இந்தியக் கூட்டாட்சியே தமது குறிக்கோள் எனவும், சட்டசபைக்குப் பொறுப்புடையதாகக் கூட்டாட்சி நிர்வாகக்குழு இருக்கவேண்டுமென்பதற்கு இசைந்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். இவ்வறிக்கையில் இருந்த கருத்துகளை பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது.

ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் தான் சொல்லியவற்றைச் செயல்படுத்த உடனடியாகச் சட்டமியற்றாமல் காலந் தாழ்த்தி இந்தியர்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டது.

இந்திய அரசியல் வாழ்க்கையில் நல்லுறவு காணவும், மனக் கசப்பைப் போக்கவும், வைசிராய் இர்வின் சிறையில் இருந்த காங்கிரசுத் தலைவர்களை விடுதலை செய்தார். விடுதலையானவர்களில் ஒருவரான மகாத்மா காந்தியும் சட்டமறுப்பியக்கத்தை நிறுத்தி வைசிராயுடன் பேச்சு வார்த்தை நடத்தி, இறுதியில் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசின் ஒரே பிரதிநிதியாகக் கலந்துகொள்வதாக அறிவித்தார். மாநாட்டுடன் காங்கிரசு ஒத்துழைக்க முன்வந்ததை மக்கள் மகிழ்வுடன் வரவேற்றனர்.

இதற்கிடையில் இந்திய மன்னர்கள் தங்களது கருத்தை மாற்றி ஓர் இணைப்பு நாட்டையே (Confederation) தாம் விரும்புவதாகக் கூறினர். காங்கிரசு மாநாட்டில் கலந்துகொள்கிறது என்பதை அறிந்த மன்னர்கள் சிலர் அச்சமுற்றனர். இருப்பினும், இந்திய மன்னர்களில் பலர் பழைய வாக்குறுதியைத் தொடர்ந்து வலியுறுத்தினர். அப்பொழுது இங்கிலாந்தில் பதவியிலிருந்த கலப்பு அமைச்சரவையில் பெருமளவு கன்சர்வேட்டிவ் கட்சியினர் இருந்தமையால் இந்தியச் சுதந்திரம்பற்றிய பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணவில்லை.

மாநாடு கூடியவுடன், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக ஸர் சாமுவேல் ஹோர் (Sir Samuel Hoare) என்பவர் நிகழ்த்திய உரையில், 'இம் மாநாடு ஓர் அரசியல் நிர்ணய சபையாகாது' எனக் கூறினர், மாநாட்டிற்கு வந்திருந்தோர் தம் கருத்துகளைக் கூறினர். இவர்களிடையே மகாத்மா காந்தியின் கருத்துகளும் வாதங்களும் மூழ்கின. காந்தி தோல்வியுடன் திரும்பினர்.

இந்தியச் சிக்கல்கள்பற்றி ஆய்ந்து கருத்துகளைத் தெரிவிக்க அமைத்த ஆலோசனைக் குழு எந்தவிதமான உடன்பாட்டையும் காணவில்லை. எனவே, பிரிட்டிஷார் ஒரு புதிய அரசியலமைப்பைப்

புகுத்த நினைத்து மூன்றாவது வட்டமேசை மாநாட்டைக் கூட்டினர். இம் மாநாட்டில் இந்திய தேசீயக் காங்கிரசும், பிரிட்டனின் தொழில் கட்சியும் பங்கு பெறவில்லை. மாநாடு கூடிக் கருத்துகளை ஆயுமுன் சமயம், வகுப்பு (சாதி) அடிப்படையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஒரு திட்டத்தை ராம்சே மாக்டொனல்டு அறிவித்தார். இத் திட்டத்தை எதிர்த்து மகாத்மா காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டார். சமரசப் பேச்சுகளின் பயனாகப் பூனா உடன்பாடு ஏற்படவே, காந்தி உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

மூன்றாவது மாநாட்டின் இறுதியில் இந்தியாவிற்கான ராஜாங்கச் செயலாளர் மூன்று கருத்துகளை வெளியிட்டார்.

(1) இந்தியக் கூட்டாட்சியில், இந்திய அரசுகளில் (சமஸ்தானங்கள்) நூற்றுக்கு ஐம்பதாவது சேரவேண்டும். மக்கள் தொகையால் கணக்கிட்டாலும், பாதிக்கு மேல் இருக்கவேண்டும்.

(2) இந்திய முஸ்லீம்களுக்கு மத்திய சட்டசபையில் $33\frac{1}{2}\%$ இடங்கள் ஒதுக்கித் தரவேண்டும்.

(3) சிந்து, ஒரிசா மாகாணங்கள் தனித்த புதிய மாகாணங்களாக அமையவேண்டும்.

மாநாட்டில் தொடர்ந்து நடந்த விவாதங்களில் பல்வேறு கருத்துகளும் திட்டங்களும் ஆராயப்பட்டனவெனினும், உயிர்க் கருத்தாகிய இந்திய சுதந்திரம் மறைவிடமெய்தியது.

அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்ட ஒரு முடிவான அறிக்கையை 1933-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்டது. அதில் இந்தியக் கூட்டாட்சிபற்றியும், மாகாணத் தன்னாட்சி பற்றியும், மத்திய, மாகாண நிர்வாகத் துறைகளின் சிறப்புப் பொறுப்புகள்பற்றியும் விரிவானதொரு கருத்து விளக்கம் இருந்தது. இக் கருத்துகளை யொட்டி எழுந்த ஐயப்பாடுகளுக்கு விளக்கம் காணவும் மாற்றுக் கருத்துகளைப் பெறவும் விரும்பிய அரசாங்கம் அதை ஒரு கூட்டுப் பொறுக்குக் குழுவிற்கு (Joint Select Committee) விட்டது. இக் குழுவின் ஆய்வறிக்கையைப் பாராளுமன்றம் ஏற்று 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமாக இயற்றியது.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய அரசியல் அமைப்புச் சட்டங்களில் இதுவே மிகப் பெரியதாகும். இச் சட்டத்தை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பலர் எதிர்த்தனர். இந்திய

அரசியல் நிலைக்கு இச் சட்டம் மிகையானதென்றும், ஆங்கிலேயர் கருதினர். உண்மையான அரசியல் அதிகாரம் இந்தியர்களுக்கு வழங்கப்படவில்லை என்று இந்தியர் கருதினர். இச் சட்டம் மாபெரும் அரசியலமைப்பு மாளிகையாக அமைந்ததென்றாலும் அதனுள் ஒன்றும் இருக்கவில்லை.

## 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் சிறப்பியல்புகள்

இச் சட்டம் நிறுவ விரும்பிய கூட்டாட்சி முறை சிக்கல் நிறைந்து காணப்பட்டது. இருப்பினும், இந்திய அரசியல் சிக்கலைத் தவிர்க்க இம் முறையை அனைவரும் நாடினர்.

பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களைத் தன்னாட்சி மாகாணங் களாக மாற்றி, பின் அவைகளை அனைத்திந்தியக் கூட்டாட்சியில் இணைக்க இச் சட்டம் வகை செய்தது. இவ்வமைப்பில் இந்திய அரசுகளும் (சமஸ்தானங்களும்) (Native States) சேரும் என எதிர் பார்த்தனர். சில அரசுகள் தம் விருப்பில் சேர்ந்தன.

இணைப்புப்பற்றிய உடன்படிக்கை எல்லா இந்திய அரசு களுக்கும் ஒரேபடித்தாய் இருக்கவில்லை. அரசுக்கரசு மாறிமாறிச் செயல்பட்டது; இதனால் மத்திய அரசாங்கத்திற்கும் இந்திய அரசுகளுக்குமிடையே உறவு ஒரே மாதிரியாக அமையவில்லை. ஆனால், சட்டமியற்றல், நிர்வாகம்போன்ற அதிகாரங்களை மத்திய அரசாங்கம் ஒரே சீராக மாகாணங்களில் செயல்படுத்தியது.

மத்திய அரசாங்கம் பொறுப்புடையதாக அமையவில்லை. 1919-ல் மாகாணங்களில் செயல்பட்டு வந்த இரட்டை ஆட்சி முறை இச் சட்டத்தால் மத்திய அரசாங்கத்திற்கு வந்தது. நிர்வாகத் தலைவராகிய கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் பாராளு மன்றத்திற்கே பொறுப்புடையவர். இந்தியாவில் அவர் யாருக்கும் பொறுப்புடையரல்லர்.

பாதுகாப்பு, வெளிவிவகாரங்கள் போன்ற துறைகள் கவர்னர் ஜெனரலின் சொந்தப் பொறுப்பில் இருந்தன. மத்திய சட்ட சபைக்குப் பொறுப்புடைய அமைச்சர்கள் கூட, இவைபற்றி ஒன்றும் கேட்க முடியாது. மக்கள் நலன் மறந்து வல்லாட்சி முறையை மேற்கொண்டாலும் மத்திய சட்டசபையால் அவரைக் கண்டிக்க முடியாது.

மத்திய சட்டசபைக்கு மாகாணங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பின. ஆனால், இந்திய அரசுகளோ உறுப்பினர்களை நியமனம் செய்தன. மேலும் இந்திய அரசுகள் சட்டசபையில் மாகாணங்களைவிட மிகையான இடங்களைப் பெற்றிருந்தன.

இச் சட்டத்தால் விளையவிருந்த கூட்டாட்சிப் பண்புகள், கவர்னர் ஜெனரலின் மிகையான சிறப்பு அதிகாரங்களால் ஒருவித்மான ஒருமுக ஆட்சி உருவாக வகை செய்தன.

சட்டமியற்றும் அதிகாரங்களை 1935ஆம் ஆண்டுச் சட்டம் மத்திய, மாகாண, பொதுப் பட்டியலென மூவகைப் பட்டியலில் அடக்கிற்று. இப் பங்கீடு சிறப்பாகவும், விளக்கமாகவும், சரி நுட்பமாகவும் காணப்படுவதை இச் சட்டத்தின் மிகச் சிறந்த இயல்பாகக் கொள்ளலாம்.

பங்கீடு செய்யப்பட்டது போக எஞ்சிய அதிகாரத்தை (Residuary Powers) மத்திய அரசாங்கத்திற்கோ, மாகாணங்களுக்கோ வழங்காது அதனை கவர்னர் ஜெனரலிடமே விட்டு வைத்தது. அவர் தம் சொந்த விருப்பில் எஞ்சிய அதிகாரத்தையொட்டிச் சட்டம் இயற்றும்படி மத்திய அரசாங்கத்தையோ அன்றி மாகாண அரசாங்கத்தையோ கேட்கலாம். இந்திய அரசுகளைப் பொறுத்த வரையில் எஞ்சிய அதிகாரம் அரசரையே சாரும்.

இச் சட்டத்தின்படி மத்திய அரசாங்கத்திற்கு மாகாணங்களில் அதிகமான ஆட்சி அதிகாரங்கள் இருந்தன. கூட்டாட்சிச் சட்டங்களைத் தவறாமல் மாகாணங்களில் செயல்படுத்த முடியும். ஆனால், கூட்டாட்சிச் சட்டங்களை இந்திய அரசுகளின் மன்னர்களே செயல்படுத்த முடியும்.

இச் சட்டத்தின்படி கூட்டாட்சி அமைய அறுநூற்றுக்கு அதிகமான இந்திய அரசுகளில் முந்நூறாயினும் உறுப்பரசுகளாய்ச் சேர வேண்டும். இவ் வுறுப்பரசுகள், பரப்பாலும், மக்கள் தொகையாலும், செல்வ மூலங்களாலும், அரசாங்க அமைப்பாலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருந்தன. இதுபோன்றதொரு கூட்டாட்சி அமைப்பு, வரலாறு காணாததாகும்.

இவ்வியல்புகளைக் கொண்ட கூட்டாட்சி வெறும் கானல் நீராகத் தெரிந்தாலும், 1937-ல் செயல்படத் தொடங்கிய போது மத்திய, மாகாண அரசாங்கங்களின் தொடர்பினையும் உறவினையும் கூட்டாட்சிக் கோட்பாடுகள் தெளிவுபடுத்தினவெனக் கூறலாம்.

**கூட்டாட்சி நிர்வாகத் துறை;** கவர்னர் ஜெனரல், அவரது கவுன்சிலர்கள், அமைச்சர் குழு இவர்களைக் கொண்டியங்குவது நிர்வாகத் துறையாகும். கவர்னர் ஜெனரலின் சொந்தப் பொறுப்பில் இருந்த அதிகாரங்கள்பற்றி அறிவுரை கூற கவுன்சிலர்களுக்கு உரிமை இருந்தது. மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்த மற்ற அதிகாரங்கள்பற்றி அறிவுரை கூற அமைச்சரவைக்கு உரிமையுண்டு. கவர்னர் ஜெனரல், அமைச்சர்களைப் பதவியில் அமர்த்துகிறார். அவ்வமைச்சர்கள் மத்திய சட்டசபைக்குப் பொறுப்புடையவர்களாய் இருக்கவேண்டும்.

இந்திய அமைதியைக் காப்பதும், நிதிநிலையைப் பேணுவதும், சிறுபான்மையினரின் நலன் காத்தலும், அகில இந்தியப் பணிகளின் (All India Services) உரிமைகளைப் பாதுகாத்தலும், பிரிட்டன், பர்மா நாடுகளின் வாணிகப் பொருள் தடையின்றி இந்தியா வந்தடைவதைப் பார்வையிடலும், இந்திய மன்னர்களின் உரிமைகளைக் காத்தலும் கவர்னர் ஜெனரலின் சிறப்பான பொறுப்புகளாகும்.

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களும், பொறுப்புகளும் கவர்னர் ஜெனரலிடம் விடப்பட்டிருத்தலைக் காணலாம். இவற்றைச் செயல்படுத்துவதில் கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கே பொறுப்புடையவர்; இந்திய சட்டசபைக்கு இவர் பொறுப்புடையரல்லர்.

**கூட்டாட்சி சட்டசபை:** ராஜ்ய சபையும் (Council of State) அசெம்பிளியும் (House of Assembly) சேர்ந்ததே மத்திய சட்டசபையாகும். இவைகளை முறையே மேல்சபை என்றும் கீழ்ச்சபையென்றும் வழங்குவர். மேல் சபையில் 260 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் 156 பேர் பிரிட்டிஷ் இந்தியாவிற்கெனவும், 104 பேர் இந்திய அரசுகளுக்கு எனவும் பிரித்துக் கொண்டார்கள். பிரிட்டிஷ் இந்தியாவிற்கு எனப் பிரிக்கப்பட்ட 156 இடங்களில் ஐரோப்பியர்களுக்கு ஏழு இடங்களும் ஆங்கிலோ இந்தியர்களுக்கென ஓர் இடமும், இந்திய கிறித்துவர்களுக்கு இரண்டு இடங்களும், கவர்னர் ஜெனரலின் நியமனத்திற்கு ஆறு இடங்களும் ஒதுக்கப்பட்டன. எஞ்சிய 140 இடங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்து வழங்கினர். இச் சபை நிரந்தரமானது. இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாண்டுகளுக்குப் பின் விலகிக்கொள்வர்.

பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளை மாகாணச் சட்டசபைகள் தேர்ந்தெடுத்தனுப்பின. இந்திய அரசுகளின் பிரதிநிதிகளை மன்னர்கள் நியமித்தனர்.

கீழ்ச்சபையில் 375 உறுப்பினர்களிருந்தனர். இவர்களில் 250 பேர் பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகளாக இருப்பர். இவ்விருநூற்றைம்பது பேர்களில் நால்வரை வாணிகம், ஆலைத் தொழில், தொழிலாளர் நலனுக்கென ஒதுக்கினர். எனவே, மீதமுள்ள 246 பேர்களையும் மக்கள் தொகை அடிப்படையில் நிலம் சார்ந்த தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுத்தனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள். இவ்வகை ஈரங்க சட்டசபை, கருத்துகளின் கலப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. பிரிட்டிஷ் இந்தியர், உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், இந்திய அரசுகளின் உறுப்பினர்களை இந்திய மன்னர்கள் நியமித்தனர். இந்திய அரசுகளுக்கு மிகையாகப் பிரதிநிதித்துவம் வழங்கினர். பல்வேறு இனங்களுக்கும் இனவழிப் பிரதிநிதித்துவம் கொடுத்து அம் முறையை நிலைப்படுத்தினர். இவற்றிற்கெல்லாம் மேலாக கவர்னர் ஜெனரலிடம் நியமன உரிமையும் இருந்தது.

இரு சபைகளும் சமமான அதிகாரங்களைப் பெற்றிருந்தன வெனினும் நிதிபற்றிய மசோதாக்களை எழுப்பக் கீழ்ச்சபை உரிமை பெற்றிருந்தது. கீழ்ச்சபையின் நிதி அதிகாரம் மிகக் குறைவேயாம்.

மத்திய, பொதுப்பட்டியலை யொட்டிச் சட்டசபை சட்டங்கள் இயற்றலாம். கவர்னர் ஜெனரலின் இசைவு பெற்றுச் சில மசோதாக்களை நிறைவேற்றவேண்டுமென்றிருந்தமையால் சட்ட சபையின் அதிகாரமும் குறிப்பிட்ட அளவிற்குக் குறைந்திருந்தது. மேலும் சபையின் நடைமுறை விதிகளை கவர்னர் ஜெனரல் தணிக்கை செய்வதாலும், சபை நடைமுறைகளில் தலையிட்டுத் தடை செய்வதாலும் சட்டசபை, உரிய அதிகாரங்களைத் தக்க முறையில் செயலாற்ற முடியவில்லை.

**மாகாண சுய ஆட்சி:** 1935ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின்படி உருவாகிய மாகாண ஆட்சி முறைக்கு மாகாண சுய ஆட்சி எனப் பெயர். இச் சட்டத்தில் இதுபற்றிக் காணப் படும் பிரிவுகளே நம் நாட்டினரைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்புடையனவாம். மேலிருந்து எந்தவிதமான தலையீடும் இல்லாமல் மாகாண ஆட்சியை சுயேச்சையுடன் நடத்திச் செல்ல இம்முறை வழிவகுத்தது. ஒவ்வொரு கவர்னர் மாகாணத்திலும் ஒரு நிர்வாகத்துறையும் சட்டசபையும் இருக்கும். இவைகளுக் கான அதிகாரங்கள் நன்முக வரையறுக்கப்பட்டிருந்தன. மத்திய அரசாங்கத்தின் தணிக்கையோ, கட்டுப்பாடோ இன்றி சுயேச்சை யுடன் தம் கொள்கைகளைச் செயல்படுத்தலாம். மாகாண

அதிகாரங்களைச் சட்டம், திட்டவட்டமாகக் கூறி இருப்பதால் அவைபற்றிய சட்டங்களைச் செயல்படுத்த மாகாண அரசாங்கம் முன்வந்தது.

**மாகாண நிர்வாகத் துறை:** இச் சட்டத்தின்படி மாகாண நிர்வாகப் பொறுப்பு ஒரு கவர்னரிடமிருந்தது. இந்தியாவிற்கான ராஜாங்கச் செயலாளரின் மதியுரையின்பேரில் பிரிட்டிஷ் மன்னர் கவர்னரை நியமிக்கிறார். இவர் ஐந்தாண்டுகள் பதவியில் இருப்பார். இவர் பதவிக்கேற்றவாறு தக்க ஊதியம் பெறுவார். கவர்னர் நிர்வாகத் தலைவர் என்ற முறையில் அமைச்சர்களைக் கலந்து கொண்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். தம் சொந்தப் பொறுப்பில் செய்தால் அதுபற்றி அமைச்சர்களின் கருத்தை அறிய விரும்பலாம். ஆனால், அமைச்சர்களின் கருத்தை ஏற்று நடக்கவேண்டுமென்பது கிடையாது. அமைச்சர்களைக் கலந்து கொள்ளாமல் தம் போக்கில் கவர்னர் சில செய்யலாம். இச் சிறப்புரிமைகளைச் சட்டம் அவருக்கு வழங்கிற்று.

கவர்னரின் பொறுப்புகளைச் செயல்படுத்தவும், அவருக்கு உதவவும், ஓர் அமைச்சரவை இருந்தது. அமைச்சர்களை, கவர்னரே நியமித்தார். சட்டசபை பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடைய ஒருவருடன் கலந்து ஆலோசித்து அமைச்சர்களை கவர்னர் நியமிப்பார். அமைச்சர்களிடையே கூட்டுப் பொறுப் புணர்வை வளர்க்க கவர்னர் ஆவன செய்யவேண்டும். தக்க அதிகாரங்களுடன் மாகாண அரசாங்கம் நடந்ததென்றாலும் எச்சரிக்கையாக கவர்னருக்குச் சில சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அமைதிக்குத் தீங்கு வராமல் காப்பதும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதும், பிரிட்டிஷ் குடிமக்களைப் பேணுதலும், இந்திய மன்னர்களின் உரிமைகளையும் அவர்களின் பெருமைகளையும் காப்பதும், கவர்னரின் தலையாய கடமைகளாம்.

பொறுப்புடைய அரசாங்கத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மிகையான சிறப்பு அதிகாரங்களைப் பார்க்கும்போது அது மாகாண சுய ஆட்சியா அல்லது கவர்னரின் சுய ஆட்சியா என்ற ஐயப்பாடு எழுகின்றது. ஏனெனில், கவர்னர் தம் சிறப்பு அதிகாரங்களைச் செயல்படுத்தும்பொழுது அவர் கவர்னர் ஜெனரலுக்கு மட்டுமே பொறுப்புடையவராகிறார். இருப்பினும் பொறுப்புடைய ஓர் அரசாங்கத்தை மாகாணங்களில் உருவாக்க உண்மையாகவே கவர்னர் விரும்பினால் அதைத் தடையின்றிச் செய்யலாம்.

**மாகாணச் சட்டசபை:** ஆறு மாகாணச் சட்டசபைகள் ஈரங்கச் சட்டசபைகளாகவும், ஐந்து மாகாணங்களில் சட்டசபைகள் ஓரங்கச் சட்டசபைகளாகவும் இருந்தன. ஈரங்கச் சட்ட சபையாயின் கீழ்ச்சபை அசம்பிளியெனவும், மேல்சபை கவுன்சிலெனவும் பெயர் பெற்றன. ஒரு சபை மட்டுமிருந்தால் அசம்பிளி என்ற பெயருடன் விளங்கிற்று.

சட்டசபையின் உறுப்பினர்கள் பொதுத்தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறவில்லை. தொகுதிகள், சாதி, சமயம், இனம், பால் (sex) என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு அவைகளிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனுடன் ஆலைத் தொழில், வாணிகம், நிலவுடைமை, பல்கலைக்கழகம், தொழிலாளர் பற்றிய துறைகளுக்கும் பிரதிநிதித்துவம் இருந்தது. பெண்களுக்கென ஒரு சில இடங்களைத் தனித்து வழங்கினர். உறுப்பினர்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நிலவரி செலுத்தியவர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. கல்வித்தரத்தாலும் இராணுவ சேவையாலும் இன்னும் சிலர் வாக்குரிமை பெற்றனர். அதாவது நூறு பேர்களில் பதினைன்கு பேர்களுக்கு வாக்குரிமை இருந்தது. 1919ஆம் ஆண்டுச் சட்டப்படி வாக்குரிமை நூற்றுக்கு மூன்று பேர்களுக்குத்தான் கிடைத்தது. வாக்குரிமை பற்றிய விதிகள் மாகாணத்திற்கு மாகாணம் மாறியிருந்தன. உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும்.

கவுன்சில் (மேல்சபை) ஒரு நிரந்தரமான சபையாகும். இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒருவர் மூன்ருண்டு முடிவில் விலகிக் கொள்வார். சபை உறுப்பினர்களின் பெரும்பான்மையோர் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். சிலரை நேர்முகமாகவும், சிலரை மறைமுகமாகவும் தேர்ந்தெடுப்பர்.

இரு சபைகளுக்கும் சமமான அதிகாரம் இருந்தாலும், நிதிபற்றிய மசோதாக்களை எழுப்பக் கீழ்ச்சபைக்கே அதிகாரமிருந்தது. இரு சபைகளுக்கும் தொடர்ந்து ஓர் ஆண்டு பூசல் இருந்தால் கவர்னர் இரு சபைகளையும் ஓர் இடத்தில் கூட்டிப் பூசலைத் தீர்ப்பார்.

மாகாணப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள இனங்கள்பற்றிச் சட்டமியற்ற இரு சபைகளுக்கும் அதிகாரமுண்டு. இருப்பினும் இரண்டு மூன்று மாகாணங்கள் சேர்ந்து ஒரு தீர்மானத்தின் மூலம், தங்கள் பட்டியலில் காணும் ஓர் இனம்பற்றிச் சட்டமியற்றித்தர மத்தியச் சட்டசபையைக் கேட்கலாம். கவர்னர் ஜெனரலின் இடர்க்காலப் பேரறிக்கையையொட்டி, மாகாணப் பட்டியலுக்குரிய ஒரு பொருள்பற்றி மத்தியச் சட்டசபை சட்டமியற்றலாம்.

மத்தியச் சட்டத்துடன் முரணுகாவகையில் மாகாணச் சட்ட சபைகள் பொதுப்பட்டியலில் உள்ள இனங்கள்பற்றிச் சட்டமியற்றிச் செயல்படுத்தலாம். முரணுகவுள்ள மாகாணச் சட்டங்கூட கவர்னர் ஜெனரலின் இசைவினைப் பெற்றுவிட்டால் சட்டமாக நிலவும்.

**கவர்னரின் சட்டமியற்றும் அதிகாரங்கள் :** மாகாண அரசாங்கத்தின் அதிகாரங்களனைத்தும் கவர்னரிடமிருந்து பெறப்படுவன. சட்டைசபைகளின் அதிகாரக் குறைவிற்கு ஒரு காரணமாக கவர்னரிடம் குவிந்திருந்த அதிகாரங்களைச் சிலர் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

சட்டசபையைக் கூட்டவும், சபையின் தொடர்க் கூட்டங்களைத் தள்ளிவைக்கவும், சபையைக் கலைக்கவும் கவர்னர் அதிகாரம் பெற்றிருந்தார். தேவையானபோது, இரு சபைகளையும் ஓர் இடத்தில் கூட்டவும், பேருரை நிகழ்த்தவும், செய்திகள் அனுப்பவும் கவர்னருக்கு அதிகாரமுண்டு.

சட்டசபைகளில் நிறைவேறிய மசோதாக்களுக்கு இசைவு தரவும், மறுக்கவும், மசோதாக்களை மறு ஆய்விற்கு அனுப்பவும், மசோதாக்களை 'கவர்னர்ஜெனரலின் பார்வைக்காக முடக்கி வைக்கவும் கவர்னர் அதிகாரம் பெற்றிருந்தார்.

சபைகளின் நடைமுறைபற்றிய விதிகளை நிர்ணயிக்கும் உரிமை கவர்னரிடமிருந்தது.

கவர்னரின் சட்டங்களையோ அல்லது அவசரச் சட்டங்களையோ மாற்றும் நோக்கமுடைய மசோதாக்களைச் சபைமுன் கொண்டு வர கவர்னரின் ஒப்புதல் வேண்டும். அதேபோன்று காவல்படைகள்பற்றிய மசோதா சபைக்கு வருமுன் கவர்னரின் ஏற்பினைப் பெறவேண்டும்.

சட்டசபையின் நிதிபற்றிய அதிகாரம் மிகக் குறைவானதே. சட்டசபை தலையிடமுடியாத சாட்டப்பட்ட இனம் (Charged item) கவர்னர் பொறுப்பில் இருந்தது. இவ்வினம்பற்றி சபை விவாதிக்க முடியாது. சபை விவாதிக்கக்கூடிய இனங்களிலும் கவர்னர் தலையிடலாம். எனவே, நிதித்துறையில் சட்டசபை ஒன்றும் செய்யமுடியாத அளவிற்குப் பலமற்றிருந்தது.

மாகாண அரசாங்கம் செயல்பட முடியாததொரு நிலை உருவாகிறதென்று கவர்னர் கருதினால் இச் சட்டத்து 93ஆவது

பிரிவுப்படி ஒரு பேரறிக்கை மூலமாகத் தானே அரசாங்கத்தை ஏற்று நடத்தலாம். பாராளுமன்ற முறையில் மாகாண அரசாங்கம் இயங்கி வந்தாலும் அதை இயக்கும் சக்தி கவர்னரிடமே இருந்து வந்தது. 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின் மாகாண சுய ஆட்சி பற்றிய பிரிவுகளே செயற்பாட்டிற்கு வந்தன. கூட்டாட்சி பற்றிய பிரிவுகள் செயல்படவில்லை. இருப்பினும், மாகாண அமைச்சரவைகளும் கவர்னர்களும் அநேக இடர்ப்பாடுகளுக் கிடையில் தம் கடமை அறிந்து ஒத்துழைத்தனர்.

1937-ல் மாகாணச் சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடந்தன. தேர்தல்களில் காங்கிரசுக் கட்சி கலந்துகொண்டு ஐந்து மாகாணங்களில் பெரும்பான்மை பெற்றது. மூன்று மாகாணங்களில் காங்கிரசு, சட்டசபையில் தனிப்பெருங் கட்சி யாக இருந்தது. மூன்று மாகாணங்களில் காங்கிரசு சிறுபான்மைக் கட்சியாக இருந்தது.

பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்களைக் கலந்துகொண்டு கவர்னர்கள் அமைச்சரவைகளை உருவாக்கினார்கள்.

இவ்வமைச்சரவைகள் இரண்டாண்டுகள் நற்பணியாற்றின. இச் சட்டத்தின் பயனாக இந்தியர்கள் அமைச்சரவையை உரு வாக்கும் வாய்ப்பினைப் பெற்றனர். பெற்ற வாய்ப்புகளை நன் முறையில் செயல்படுத்தி மக்களின் செல்வாக்கையும் பெற்றனர்.

சிறுபான்மையினருக்குத் தக்க வாய்ப்புகளை அமைச்சரவையில் வழங்கி அவர்களின் நலனைக் காத்தன. அமைச்சரவைகளைப் பதவி நீக்கம் செய்யவோ அவைகளின் அலுவல்களில் தலையிடவோ கவர்னருக்கு வாய்ப்பிருக்கவில்லை.

பொதுவாகப் பார்க்கும்பொழுது, மாகாண அமைச்சரவைகள் சில முற்போக்குச் சட்டங்களைத் தடையின்றி இயற்றின. கவர்னர் களும் நிலையறிந்து, பொறுப்புடைய அரசாங்கம் உருவாகிச் செயல்பட்டு நிலவ வழிவகுத்துக் கொடுத்தனர். முதன் முறை யாக மாகாணச் சட்டசபைகள் உண்மையிலேயே சட்டசபை களாகச் செயல்படத் தொடங்கின.

# 3. இரண்டாவது உலகப்போரும் இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியும்

உலகப் பெரும் போர் இந்தியாவில் சில அரசியல் சிக்கல்களை உண்டாக்கிற்று. ஜெர்மனியை எதிர்த்து பிரிட்டன் போரில் இறங்கியது. இந்திய மக்களின் கருத்துகளை அறியாமல் பிரிட்டன் இந்தியாவையும் போரில் ஈடுபடச் செய்தது. இந்திய அரசாங்கத்தை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் பாராளுமன்றம், 1935ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தைத் தன் விருப்பில் திருத்தியது. இச் செயல் இந்தியர்களின் சுதந்திர உணர்வுகளைப் புண்படுத்தியது.

போரில் இந்தியர்களின் ஒத்துழைப்பைப் பெறக் காங்கிரசுடனும், முஸ்லீம் லீக்குடனும், இந்திய மன்னர்களுடனும் வைசராய் கலந்து பேசினர். ஜனநாயக உரிமைகளுக்காக நடக்கும் போரில் அவ்வித உரிமைகள் அற்ற இந்தியா சுயேச்சையுடன் பங்குபெற முடியாதெனக் காங்கிரசுக் கட்சி கூறிவிட்டது. முஸ்லீம் லீக் இந்திய அரசாங்கத்தின் போக்கை விரும்பவில்லை என்றாலும், தடையாக இருக்க விரும்பவில்லை. போருக்குப்பின், இந்தியா பற்றிய கொள்கையை இங்கிலாந்து திட்டவட்டமாய்க் கூற வேண்டுமென்று காங்கிரசு விரும்பிற்று. முஸ்லீம் லீகும் அதன் ஒப்புதல் இல்லாமல் வருங்கால இந்திய அரசியலமைப்பைப் படைக்கக்கூடாதென வாதித்தது. இவ்விரு கட்சிகளின் கருத்துகளை பிரிட்டன் ஏற்கவில்லை. எனவே, போருக்கான ஒத்துழைப்பைப் பெறவும் இல்லை. இந்திய மன்னர்கள்மட்டும் போரில் பிரிட்டனை ஆதரித்தனர்.

வைசராயுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் தோல்வி கண்ட காங்கிரசு, தன்னிடமிருந்த மாகாண ஆட்சிப் பொறுப்புகளைத்தி லிருந்தும் விலகிக்கொண்டது (1939), முஸ்லீம் லீக் பொறுத்

திருந்து பார்க்க விரும்பியது. இதன் விளைவாக, மாகாண சுய ஆட்சி கானல் நீராயிற்று. இந்திய ஆட்சி கவர்னர்களின் இடர்க் கால அதிகாரங்களால் ஒருமுக ஆட்சியாக மாறியது.

இந்திய அரசியல் சிக்கலுக்கு எவ்விதத் தீர்வும் காணமுடியாமல் காங்கிரசு வருந்தியபோது, முஸ்லீம் லீகின் தலைவர் ஜின்னு, வைசராயுடன் இடையருது பேச்சுவார்த்தைகள் நடத்தித் தம் கட்சியையும் அதன் கொள்கையையும் நிலைப்படுத்திக்கொண்டார். முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மாகாணங்களைக் கொண்ட ஒரு தனித்த, முழு இறைமையுள்ள பாகிஸ்தானத்தை உருவாக்க, 1940ஆம் ஆண்டின் லாகூர் கூட்டத் தீர்மானம் வலியுறுத்திற்று.

வைசராய், தமது நிர்வாகக் கவுன்சிலை விரிவாக்கி, அதில் இந்திய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்வ தாகக் கூறிய வாக்குறுதியைக் காங்கிரசு ஏற்காது, தனி மனிதச் சட்ட மறுப்பு இயக்கத்தில் இறங்கிற்று. இதன் விளைவாகப் பெருந்தலைவர்கள் சிறைப்பட்டனர்.

## கிரிப்ஸ் தூது

போரின் தொடக்கத்தில் இங்கிலாந்து பல இடங்களில் தோல்வியுற்றது. 1941-ல் ஜப்பான் போரில் இறங்கி விரைவில் பெரும் வெற்றிகளைப் பெற்றது. ஜப்பான், பிரிட்டனின் கீழைக் குடியேற்ற நாடுகளை வென்று இந்திய எல்லையை நெருங்கிற்று. அதே சமயத்தில் அமெரிக்காவும் போரில் இறங்கி பிரிட்டனுக்கு ஆதரவாகப் போரிட்டு வந்தது.

இச் சூழ்நிலையில் பிரிட்டன் இந்தியாபற்றி ஒரு புதிய கொள்கையை வகுக்க, தனது கேபினெட் அமைச்சர் கிரிப்ஸ் என்பாரை இந்தியாவிற்கு அனுப்பியது. அவர் இந்திய அரசியல் கட்சித் தலைவர்களையும், மற்றவர்களையும் கண்டு பேசி ஒரு முடிவினைக் காண முற்பட்டார்.

இந்தியா வந்தடைந்தவுடன் கிரிப்ஸ் தமது திட்டத்தை அரசியல் கட்சிகளின் முன் வைத்துக் கருத்துகளை அறிய விரும்பினர். அவர் திட்டத்தில் ஒரு புதிய இந்திய யூனியனை அமைக்கும் நோக்கமும் அதற்கான அரசியலமைப்பை ஆக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையை அமைக்கும் எண்ணமும், அச் சபையில் இந்திய மன்னர்களும் பங்கு பெறலாமென்ற கருத்தும் வெளியாயின.

அரசியலமைப்பை உருவாக்கிய பின் அதை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுச் செயல்படுத்தும் எனவும் உறுதி கூறினர்.

ஆனால், இவ்வரசியலமைப்பை ஏற்க விருப்பமில்லா மாகாணங்களும், அரசுகளும், யூனியனில் சேராமல் தனித்திருக்கலாமெனத் திட்டத்தில் கண்டிருந்தது. அப்படிப்பட்ட மாகாணங்களும் அரசுகளும் அவற்றிற்கெனத் தனியாக அரசியலமைப்பை உருவாக்கிக்கொள்ளலாம். அவற்றிற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய யூனியனை ஒத்த அந்தஸ்தை வழங்கும்.

அரசியலமைப்பை உருவாக்கும் சபை, பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் அதிகார மாற்றம் பற்றிய எல்லாப் பொறுப்புகள் பற்றியும், சிறுபான்மையினர் உரிமைகள்பற்றியும் ஓர் உடன்பாடு செய்துகொள்ள வேண்டும்.

விரிவாக்கப்படும் நிர்வாகக் கவுன்சிலில் பெரும் பகுதி இந்தியர்களின் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொண்டு அவர்களிடம் எல்லா அதிகாரங்களையும் விட்டுவிடுவதாக பிரிட்டிஷார் வாக்களித்தனர். இதில் இந்தியப் பாதுகாப்புபற்றிய அதிகாரம் மட்டும் அடங்காதென விளக்கினர்.

இத் திட்டம் எல்லோரையும் திருப்திப்படுத்துவதாகத் தோன்றினாலும்,. யாரும் இதை ஏற்கவில்லை. யூனியனில் சேர விரும்பாத மாகாணங்களும் இந்திய அரசுகளும் தனித்திருக்கலாம் என்ற கருத்தினை காங்கிரசு ஏற்கவில்லை. கிரிப்ஸின் இத் திட்டம் பாகிஸ்தானக் கோரிக்கையை வலுப்படுத்தியது. அரசியலமைப்புச் சபைக்கு இந்தியா செல்வதைக் காங்கிரசு விரும்பவில்லை. போருக்குப் பின் இந்தியா பிரிவினைக்குள்ளாகும் முறைகளில் முஸ்லீம்களுக்குத் தக்க பாதுகாப்பு வழங்கப்படவில்லையென முஸ்லீம் லீகும் கருதியது.

இந்திய அரசாங்கப் பொறுப்புகளனைத்தையும் ஏற்று நடத்த அதிகாரம் வழங்கப்படாமையால் காங்கிரசு, கவர்னர் ஜெனரலின் நிர்வாகக் கவுன்சிலில் சேர மறுத்தது. தொடர்ந்து நடந்த சமரசப் பேச்சுக்களும் தோல்வியடைந்தன. 'முறிந்துகொண்டிருக்கும் பாங்கிற்குப் பின்தேதியிட்டு வழங்கப்பட்ட செக்' என கிரிப்ஸ் திட்டத்தைக் காந்தி விளக்கினர். கிரிப்ஸ் தூதின் பயனாக இந்திய அரசாங்கத்திற்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் மேலும் மிகுந்தன.

கிரிப்ஸ் திட்டம் தோல்வியுற்றதும் காங்கிரசுக் கமிட்டி, 1942ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பம்பாயில் கூடி இந்திய அரசியல் நிலைபற்றி ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டாலன்றி வெள்ளையரை வெளியேற்ற முடியாதெனக் கருதிற்று. இதையொட்டி உருவான தீர்மானத்திற்கு 'இந்தியாவை விட்டு வெளியேறு தீர்மான' (Quit India Resolution) மெனப் பெயர். உடனே பிரிட்டிஷ் அரசாங்கம் காங்கிரசுத் தலைவர்களைச் சிறையிலிட்டுக் காங்கிரசுக் கட்சிக்குத் தடை விதித்தது. இதனால் கிளர்ந்தெழுந்த மக்கள் புரட்சியை 'ஆகஸ்டு புரட்சி' என்பர். அரசாங்கம் ஆயிரக்கணக்கான இந்தியரைச் சிறையிட்டு அப் புரட்சியைச் சிதைத்தது.

போர் முடியும்வரை இந்திய அரசியலில் எவ்வித மாறுதலும் இல்லை. 1939முதல் 1945 வரை கவர்னர் ஜெனரலின் கவுன்சிலில் இந்திய உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதால் ஏற்பட்ட அரசியல் மாற்றம் தவிர சிறப்பாக ஒன்றும் நடந்துவிடவில்லை.

1943-ல் வேவல்பிரபு வைசராயாக நியமனமானபின் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திச் சிக்கல் தவிர்க்க முயன்றார். அதன்படி தமது நிர்வாகக் கவுன்சிலை விரிவாக்கி, அதில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சமமான இடமளிக்க அவர் விரும்புவதாகக் கூறினார். இந்திய அரசியல் கட்சிகள் (1945 ஜூன்) சிம்லாவில் கூடி இத் திட்டத்தை ஆராய்ந்தன. இம் மாநாட்டில் கலந்துகொண்ட திரு. ஜின்னா, வைசராயின் கவுன்சில் உறுப்பினர்களில் சரிபாதிப்பேர் முஸ்லிம்கள் இருக்கவேண்டுமென்றும், அவர்களை முஸ்லீம் லீக் நியமிக்க உரிமை வேண்டுமென்றும் கூறினார். இதற்குக் காங்கிரசு இணங்கவில்லை. மாநாடும் தோல்வியுற்றது.

மாநாடு தோல்வியுற்ற சமயம் பிரிட்டனில் தொழில் கட்சியினர் அரசாங்கப் பொறுப்பேற்றனர். போரும் ஓய்ந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாபற்றிய கொள்கையை விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், மாகாணச் சட்டசபைகளுக்கான தேர்தல்களை நடத்தவும், மாகாண சுய ஆட்சி ஏற்படுத்தவும், இந்தியத் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து அரசியலமைப்பை உருவாக்கும் வழிமுறைகளைக் காணவும், வைசராயின் நிர்வாகக் கவுன்சிலில் இந்தியர்களைச் சேர்த்துக் கொள்ளவும் திட்டங்கள் இருந்தன. வேவல் பிரபு இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தித் தோல்வியுற்றதை அறிந்த பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு கேபினெட் குழுவினை இந்தியாவிற்கு அனுப்பியது. இக் குழுவில் பெத்திக் லாரென்ஸ் பிரபுவும்,

ஸர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸும், எ. வி. அலெக்சாந்தருமிருந்தனர். இந்தியா, 'விரைவில் முழுமையாகச் சுதந்திரம் பெற உதவுவதே' அவர்களின் வேலையாக இருக்குமென்று கூறினர். இந்தியாவில் உள்ள சிறுபான்மையினர் அஞ்சாது வாழ வகை செய்வதாகப் பிரதம அமைச்சர் அட்லி (Attlee, C. R.) அறிவித்தார். அதனுடன் அவர், 'பெரும்பான்மையினரின் முன்னேற்றத்திற்குச் சிறுபான்மையினர் தடை விதிப்பதை நாம் ஏற்கக்கூடா' தெனக் கூறினர். இந்தியப் பிரச்சினையில் எப்படியும் தீர்வு காணவேண்டுமென்பதை பிரிட்டன் முதன்முறையாக வலியுறுத்திற்று.

மாகாணச் சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நாடெங்கும் நடந்தன. காங்கிரசும், லீகும் பெரும் வெற்றிபெற்றுக் காங்கிரசு எட்டு மாகாணங்களிலும், லீக் இரண்டு மாகாணங்களிலும் அமைச்சரவைகளை அமைத்தன. ஒரு மாகாணத்தில் (பஞ்சாபில்) கலப்பு அமைச்சரவை பதவியேற்றது.

கேபினெட் தூதுக் குழுவினர் இந்தியா வந்தவுடன் காங்கிரசிற்கும் லீகிற்கும் இடையே உடன்பாடு ஏற்படப் பெரிதும் முயன்றனர். இரு கட்சிகளும் தமது கொள்கைகளை வலியுறுத்தின. முஸ்லீம் லீக், உடனடியாகப் பாகிஸ்தான் வேண்டுமென்றும், காங்கிரசு அனைத்திந்தியக் கூட்டாட்சி அமையவேண்டுமென்றும் வாதாடின.

கேபினெட் குழுவினர், பாகிஸ்தானுக்கான சாத்தியக் கூறுகளை நன்றாக ஆய்ந்தபின் அதை ஏற்க மறுத்தனர். லீக் கோரிய பாகிஸ்தானில் அஸ்ஸாம், வங்காளம், பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லை மாகாணம், பலுஸிஸ்தானம் என்ற ஆறு மாகாணங்கள் இருக்கும். அவைகளில் வங்காளத்திலும் பஞ்சாபிலும், பெருமளவு இந்துக்கள் இருந்தமையால், சிறுபான்மையினர் நலன் பாதிக்கப்படலாம் என்றும், இம் மாகாணங்களைப் பிரிவினை செய்தால் பெரும் தீங்கு விளையலாம் என்றும் கருதினர்.

இரு கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வெற்றி பெறாத கேபினெட் தூதுக்குழுவினர் தமது நீண்ட கால ஏற்பாட்டினை அறிவித்தனர். அதனைப் பின்வருமாறு வகைப் படுத்திக் கூறலாம்.

(1) இந்திய மாகாணங்களையும் அரசுகளையும் கொண்ட ஓர் இந்திய யூனியன் இருக்கவேண்டும். பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரங்கள், செய்திப்போக்குவரத்துப் போன்ற அதிகாரங்கள் யூனியனிடமிருக்கும்.

(2) பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளையும், அரசுகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு நிர்வாகத் துறையும், சட்டமியற்றும் துறையும் இருக்கவேண்டும். சட்டசபையில் ஓர் இனம்பற்றிய பிரச்சினை எழுந்தால் அதைத் தீர்க்க இரு இனங்களும் தனித்தனியாகப் பெரும்பான்மை வாக்களிப்பதோடு, அன்று சபைக்கு வந்திருக்கும் இரு இனத்தாரின் பெரும்பான்மை வாக்குகளை அளிக்கவேண்டும்.

(3) யூனியன் அதிகாரங்கள் நீங்கலாக உள்ள அதிகாரங்களும், எஞ்சிய அதிகாரங்களும் மாகாணங்களுடன் இருக்கும்.

(4) யூனியனுக்கு வழங்கியது போக மற்றெல்லா அதிகாரங்களையும் அரசுகள் பெற்றிருக்கும்.

(5) நிர்வாகத் துறைகளையும் சட்டசபைகளையும் உடைய தொகுதிகளை அமைத்துக்கொள்ள மாகாணங்களுக்குரிமையுண்டு. பொதுவான மாகாண அதிகாரங்களை ஒவ்வொரு தொகுதியும் நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும்.

(6) மாகாணச் சட்டசபையின் பெரும்பான்மை வாக்குகளால் அரசியலமைப்பை முதல் பத்து ஆண்டுகளுக்குப் பிறகும் அதன்பின் ஒவ்வொரு பத்து ஆண்டிற்குப் பின்னரும், புனராய்வு செய்யலாம் என்ற பிரிவு யூனியன் அரசியலமைப்பிலும் தொகுதிகளின் அரசியல் அமைப்பிலும் இருக்கவேண்டும்.

(7) மறைமுகத் தேர்தலின் மூலமாக அரசியலமைப்பை ஆக்கும் ஒரு நிறுவனத்தை உடனடியாக அமைக்கவேண்டும். பத்துலட்சம் பேர்களுக்கு ஒரு பிரதிநிதியாக மாகாணத்தின் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு இடங்கள் ஒதுக்கப்படும். மாகாணத்தின் மொத்த இடங்களை அங்குள்ள பிரதான இனங்களின் மக்கள்தொகைக்கேற்றவாறு பிரித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் இனத்திற்கெனவும் ஒதுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதே இனத்தைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் (பிரதான இனங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவைகள், முஸ்லிம், சீக்கியர், பிற பொது இனம்).

(8) இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அரசுகளின் பிரதிநிதிகளும் அரசியல் நிர்ணய சபையாகப் புதுடில்லியில் கூடுவர்.

(9) அரசியல் நிர்ணயசபை மூன்று பகுதிகளாகப் பிரியும்:

பகுதி A: மதராஸ், பம்பாய், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பீகார், ஒரிசா.

பகுதி B: பஞ்சாப், வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து.

பகுதி C: வங்காளம், அஸ்ஸாம்.

(10) ஒவ்வொரு பகுதியும் அதன் மாகாண அரசியலை முடிவு செய்யும். அல்லது அத் தொகுதி முழுவதற்குமான அமைப்பை உண்டாக்குவதானால் அதன் அதிகார வரம்புகளையும் நிர்ணயம் செய்யவேண்டும்.

(11) தொகுதி அரசியலமைப்புகளை நிர்ணயம் செய்தபின், தொகுதிகள் ஒன்று கூடி யூனியன் அரசியல் அமைப்பை நிர்ணயம் செய்யும்.

(12) அதிகார மாற்றத்தின் விளைவுகளை முறைப்படுத்த யூனியன் அரசியல் நிர்ணய சபை பிரிட்டனுடன் ஓர் உடன் படிக்கை செய்துகொள்ளவேண்டும்.

## இடைக்காலத் திட்டம்

அரசியலமைப்பு ஆக்கப்படும்பொழுது ஆட்சியை நடத்துவதற்காக எல்லாக் கட்சிகளின் ஆதரவுடன் ஓர் இடைக்கால அரசாங்கத்தை அமைக்கவேண்டும். இடைக்கால அரசாங்கத்தில் எல்லா இலாக்காப் பொறுப்புகளையும் இந்தியர்களே ஏற்று நடத்துவர். இடைக்கால அரசாங்கத்தை எதிர்நோக்கி இருந்த வேலைகளைச் செய்துமுடிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் முழுமனத்துடன் ஒத்துழைக்கும்.

கேபினெட் குழுவினர் அறிக்கையை எல்லாக் கட்சியினரும் நன்முக ஆராய்ந்தனர். காங்கிரசுக் கட்சி, மாகாணங்களைத் தொகுக்கும் பிரிவுகளை வன்மையாகத் தாக்கியது. பாகிஸ்தான் கோரிக்கை மறுக்கப்பட்டதால் ஜின்னுவும் மகிழ்ச்சி அடையவில்லை. சீக்கியர்கள் தங்கள் நலன் காக்கப்படவில்லையெனக் கருதினர்.

1946ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆரும் தேதி முஸ்லீம் லீக், சில நிபந்தனைகளுடன் கேபினெட் தூதுக் குழுவினர் திட்டத்தை ஏற்றது. ஆறு மாகாணங்களின் கட்டாயத் தொகுப்பு பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதாரமாக அமையும் என்று கருதியது. இத் திட்டத்தைப் பயன்படுத்திப் பாகிஸ்தானை அடைய லீக் முயன்றது.

மாகாணத் தொகுப்பு முறைக்குக் காங்கிரசு எதிர்ப்புத் தெரிவித்தது. சுதந்திர, ஐக்கிய, ஜனநாயக இந்திய அரசியலமைப்பை ஆக்க, காங்கிரசு அரசியல் நிர்ணய சபையில் சேர விரும்பியது.

நிர்வாகக் கவுன்சிலின் உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் போது, காங்கிரசின் தேசிய, இனச் சார்பற்ற தன்மையை ஏற்றுக் கொள்ளாவிட்டால் இடைக்கால அரசாங்கத்தில் சேர்வதில்லை எனத் தீர்மானித்தது. மேலும், காங்கிரசுக் கட்சியின் தலைவர் நேரு, 'அரசியல் நிர்ணய சபைக்குள் நுழைவது என்ற முடிவினைத் தவிர வேறெதற்கும் நாங்கள் கட்டுப்படவில்லை' என்று கூறினார். பின்னர், மாகாணங்களின் தொகுப்பென்று ஒன்றுமிருக்காது என்ற பொருள்படப் பல பொறுப்புள்ள தலைவர்கள் பேசிய பொழுது, ஜின்னா அதற்கு பிரிட்டனிடம் விளக்கம் கேட்டார். தக்க விளக்கத்தை அவர் பெற்றார் எனினும், 1946ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் தேதி கூடிய லீக் கவுன்சில், கேபினெட் குழுவின் முழுத் திட்டத்தையும் நிராகரித்து, பாகிஸ்தான் கோரிக்கையை மறுபடியும் கிளப்பிக் குறிக்கோளை அடைய 'நேர் நடவடிக்கை' மேற்கொள்ளத் திட்டமிட்டு 1946ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 16ஆம் தேதியை, 'நேர் நடவடிக்கை நாள்' என அறிவித்தது.

இதற்கிடையில், வைசராய் இந்திய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கத் திட்டமிட்டார். அதன்படி நிர்வாகக் கவுன்சிலின் 14 உறுப்பினர்களில் 6 காங்கிரசிற்கும் (இதில் ஒன்று ஷெட்யூல்டு வகுப்பினருக்கு) 5 முஸ்லீம் லீக்கிற்கும், 3 மற்றச் சிறுபான்மையினருக்குமென உறுப்பினர்களை வைசராயே நியமிப்பதாக இருந்தது. இத் திட்டத்திற்கு ஜின்னா உடன்படாதுபோகவே, வைசராய் காங்கிரசை இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு அழைப்பு விடுத்தார். காங்கிரசு அழைப்பை ஏற்றது.

பின்னர் 1946ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரண்டாம் நாள் முதன்முறையாக வைசராயின் நிர்வாகக் கவுன்சிலில் மக்கள் பிரதிநிதிகள் அமர்ந்தார்கள். கவுன்சிலில் ஜவகர்லால் நேரு, வல்லபாய்பட்டேல், ராஜேந்திரப்பிரஸாத், இராஜகோபாலாச்சாரியார் முதலானோர் இடம் பெற்றனர். இவர்களிடம் இந்திய ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர். கவுன்சிலின் உப தலைவராக நேரு பணியாற்றினார்.

நேர் நடவடிக்கையையொட்டிக் கல்கத்தாவிலும் மற்ற நகரங்களிலும் நடந்த வகுப்புக் கலகத்தில் பல்லாயிரம் மக்கள் கொலையுண்டனர். இந் நிகழ்ச்சிகளால் அதிர்ச்சியடைந்த வைசராய்

எப்படியும் லீக்கை இடைக்கால அரசாங்கத்தில் சேர்க்க முனைந்தார். நீண்ட நாட்களுக்குப் பிறகு (1946ஆம் ஆண்டு, அக்டோபர் 26ஆம் நாள்) லீக் பிரதிநிதிகள் ஐவர் இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்தனர்.

இடைக்கால அரசாங்கம் நல்லமுறையில் செயல்படவில்லை. இருதரப்பினரும் இணைந்து பொதுநோக்குடன் செயல்பட்டிருந்தால் நினைத்தற்கரிய நன்மைகள் பிறந்திருக்கும். கேபினெட் குழுவினர் திட்டத்தை ஏற்காத லீக், நேருவின் தலைமையையும் ஏற்க மறுத்தது. இதனால் கவுன்சிலின் கூட்டுப் பொறுப்பு குலைந்தது. 1946ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 9ஆம் தேதி கூடிய அரசியல் நிர்ணய சபையில் முஸ்லீம் லீக் கலந்து கொள்ளவில்லை. நாட்டின் பல பகுதிகளில் வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டதால் பலர் உயிரிழந்தனர்.

இந்திய அரசியல் முட்டுக்கட்டையை அகற்றும் நோக்குடன் இரு கட்சிகளின் பிரதிநிதிகளையும் பிரிட்டிஷ் அரசாங்கம் லண்டனுக்கு அழைத்துப் பேச்சுவார்த்தை தொடங்கியது. இம் முயற்சியும், தோல்வியில் முடிந்தது. இந்தியா திரும்பிய இரு கட்சியினரும் தமது பழைய போக்கில் சென்றனர்.

அரசியல் நிர்ணய சபையில் சேராமல், லீக் தனது பாகிஸ்தான் கோரிக்கையை வலியுறுத்தியது. எனவே, காங்கிரசும் மற்ற கவுன்சில் உறுப்பினர்களும், லீக் இடைக்கால அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்றனர். இதன் விளைவுகள்பற்றி வைசராய் அச்சமுற்றார். இடைக்கால அரசாங்கத்திலிருந்து லீக் விலகவும் இல்லை; காங்கிரசுடன் அரசியல் நிர்ணய சபையில் ஒத்துழைக்கவுமில்லை. சிக்கல் நீடித்தது.

1947ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி பிரதம அமைச்சர் ஆட்லி பொதுமக்கள் சபையில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அவ்வறிக்கை 1948ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குமுன் பிரிட்டிஷ் அரசாங்கம், பொறுப்புடைய இந்தியர்களிடம் அமைதியான முறையில் அதிகார மாற்றம் செய்யவிருக்கும் நோக்கத்தை வெளியிட்டது. அதற்குள் இந்திய அரசியல் கட்சிகளுக்குள் ஒருவித உடன்பாடும் ஏற்படாவிட்டால் மத்திய அரசாங்க அதிகாரத்தை யாருக்கு மாற்றம் செய்வதென்பதை பிரிட்டன் ஆராயும். அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திடமே விட்டுவிடுவதா? அல்லது மாகாணங்களிடம் விட்டுவைப்பதா? அல்லது இந்தியர்களின் நலன்கருதி ஒரு புதிய நிறுவனத்திடம்

மாற்றுவதா? என்பதை ஆராய்ந்து ஆவன செய்யும் பொறுப்புப் புதிய வைசிராயாகிய மவுண்ட்பேட்டன் பிரபுவிடம் விடப் பெற்றது.

இவர் 1947ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம் இந்தியா வந்த பொழுது அரசியல் நிலை சீரழிந்து காணப்பட்டது. நேர் நடவடிக்கையும், வகுப்புக் கலகமும், இந்து முஸ்லீம் வேற்றுமையும் நாட்டில் நெருக்கடி நிலையையுண்டாக்கி இருந்தன.

## மவுண்ட்பேட்டன் திட்டம்
## (Mountbatten Plan)

கேபினெட் குழுவினரின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளிடையே உடன்பாடு காண இவர் முயன்றார். ஐக்கிய இந்தியாவிற்கான ஓர் உடன்பாட்டை எல்லோருடைய ஒப்புதலுடன் செய்யமுடியாதென்பதை உணர்ந்தார். எனவே, ஒரு மாற்றுத் திட்டத்தைத் தயாரித்தார். அத் திட்டமும் ஆட்லி அறிக்கையை யொட்டியதாக இருந்தது. பெரும்பான்மை இந்து முஸ்லீம் மாகாணங்களாகிய வங்காளம், பஞ்சாபின் பிரதிநிதிகள் பிரிவினையை விரும்பி வாக்களித்தால் அம் மாகாணங்கள் பிரியும். பெரும்பான்மை முஸ்லீம்கள் வசிக்கும் சில்ஹட் (அஸ்ஸாம்) முஸ்லீம் மாகாணத்துடன் சேர விருப்புத் தெரிவிக்கவேண்டும். வடமேற்கு எல்லை மாகாணத்தின் மக்கள் விருப்பை அறிய 'குடியொப்பம்' பெறவேண்டும். இத் திட்டத்தின்படி பிரிவினைப் பொறுப்புகளனைத்தையும் இந்திய மக்களே ஏற்கவேண்டும்.

மவுண்ட்பேட்டனின் இப் பிரிவினைத் திட்டத்தை விருப்பில்லாமல் எல்லாக் கட்சிகளும் ஏற்றன. வகுப்புக் கலகம், கொலை, கொள்ளை போன்ற துயர நிகழ்ச்சிகளால் நாடு அவதிப்பட்டது. இவற்றைத் தடுத்து நிறுத்த வைசிராய் தமது திட்டத்தைச் செயலாற்ற விரும்பினார். இந்தியத் தலைவர்களையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் கலந்துகொண்டு நாட்டை இந்தியா, பாகிஸ்தான் என்று பிரிக்கவும் அவற்றிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்கவும் வழி வகுத்தார். அதிகார மாற்றமும் 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி நடைபெறுமென்று அறிவித்தார். இந்நாளையே நாம் சுதந்திர தினமாகக் கொண்டாடுகிறோம்.

இந்தியச் சுதந்திரச் சட்டத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1947ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ஆம் தேதி நிறைவேற்றியது.

இச் சட்டம் இந்தியாவில் இரண்டு சுதந்திர டொமினியன்களை உண்டாக்கிற்று. அவை இந்தியா, பாகிஸ்தான் என்று பெயர் பெற்றன. பாகிஸ்தானில் சேர்க்கப்பட்ட பகுதிகள் நீங்கலாக மற்ற பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளைக் கொண்டதாக இந்தியா இருக்கும். பாகிஸ்தானில் மேற்கு பஞ்சாபும், கிழக்கு வங்காளமும், சிந்துவும், வடமேற்கு எல்லை மாகாணமும், பலுஸிஸ்தானும் அடங்கி இருக்கும். அஸ்ஸாமின் ஒரு மாவட்டமாகிய சில்ஹட் குடியொப்ப வாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்குகள் பெற்றால் கிழக்கு வாங்காளத்துடன் சேரும்.

வங்காளம், கிழக்கு மேற்கு வங்காளங்களாகப் பிரிவுபடும். பஞ்சாபும், கிழக்கு மேற்கு பஞ்சாபுகளாகப் பிரிவுபடும். அவைகளின் எல்லைகளை ஓர் எல்லைக் கமிஷன் நிர்ணயிக்கும்.

டொமினியன்கள் இரண்டில் இந்திய அரசுகள் எதனுடனாவது சேர்ந்துகொள்ளலாம். ஒவ்வொரு டொமினியனிலும் பிரிட்டிஷ் மன்னரால் அமர்த்தப்படும் ஒரு கவர்னர் ஜெனரல் இருப்பார். ஒருவரே இரு டொமினியன்களிலும் கவர்னர் ஜெனரலாக இருக்கலாம்.

டொமினியன் சட்டசபை அதற்கான சட்டங்களை இயற்ற அதிகாரம் பெற்றிருந்தது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதிக்குப் பின் பிரிட்டன், இந்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்காது. இச் சட்டம் நிறைவேறிய நாளிலிருந்து இந்திய அரசுகளின் பேரில் பிரிட்டனுக்கிருந்த மேலாதிபத்திய உரிமை நீங்கும். அதனுடன் பிரிட்டனுக்கும், இந்திய மன்னர்களுக்குமிடையே இருந்துவந்த உடன்பாடுகளும் நீங்கும்.

டொமினியன் சட்டசபை செயல்படுத்திய எல்லா அதிகாரங்களையும் அரசியல் நிர்ணயசபை செயல்படுத்தலாம்.

அரசியல் நிர்ணய சபைகள் இறைமையுடையனவாக, கட்டுப்பாடுகளின்றி, அரசியலமைப்பையும் உருவாக்கலாம். ஆனால், சட்டசபைகளாகச் செயல்படும்போது 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்திற்குட்பட்டு இயங்கவேண்டும்.

நாற்பது கோடி மக்களைக் கொண்ட ஒரு பெரிய நாட்டைப் பிரித்து, இரண்டு சுதந்திர அரசாங்கங்களுக்கு அதிகார மாற்றத்தை எளிதாகவும் விரைவாகவும் செய்தது ஓர் அரிய சாதனையேயாகும்.

மவுண்ட் பேட்டன் பிரபுவை இந்தியா கவர்னர் ஜெனரலாக ஏற்றுக்கொண்டது. அவர் 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். புதிய இந்திய வாழ்வு மலர்ந்தது.

# 4. அரசியல் நிர்ணய சபை

வரலாற்றுச் சிறப்புடைய இந்திய அரசியல் நிர்ணய சபை 1946ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் ஒன்பதாம் நாள் கூடிற்று. சபையின் வயது முதிர்ந்த உறுப்பினராகிய சச்சிதானந்த சின்ஹா என்பார் முதல் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். பின்னர், காங்கிரசுக் கட்சியின் முதன்மையாளர்களில் ஒருவராகிய இராஜேந்திரபிரசாத் என்பாரைத் தலைவராகச் சபை உறுப்பினர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

சபையைக் கூட்டிய பிரிட்டிஷ் அரசாங்கம் அதைக் கலைக்கவும் முடியுமென்றமையால் சிலர் அதன் இறைமையைப் பற்றி ஐயுற்றனர். இருப்பினும், இச் சபைக்கான விதிமுறைகளைச் சபையே செய்து நிறைவேற்றலாமென்றமையால் சபை தன் பணிகளைத் தொடங்கும்பொழுதே இறைமையுடையதாக மாறிக் கொள்ளும் என்றும் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் கருதினர்கள். இக் கருத்தினை நீண்ட விவாதத்திற்குப்பின் சபை ஏற்றுக் கொண்டது.

சபை சில நடைமுறை விதிகளைச் செய்துகொண்டது. அவற்றில் சிறப்பாக இரண்டு விதிகளைக் கூறலாம். ஒன்று, சபைத் தலைவரைச் சபையின் தனிச்சிறப்புரிமைகளுக்குக் காவலராக அமர்த்தியதாகும். இரண்டு, சபை உறுப்பினர்களின் மூன்றிலிரு பெரும்பான்மை வாக்குகளாலன்றிச் சபையைக் கலைக்க முடியாது. இவ்விரு விதிகளும் சபையின் முழு இறைமையை வலியுறுத்தினவெனக் கருதலாம்.

சபை மேற்கொள்ளத்தக்க பணிகளை, நேருவின், 'குறிக்கோள்கள்பற்றிய தீர்மானம்' (Objective Resolution) நன்கு விளக்கிக் கூறிற்று. அரசியலமைப்புபற்றிய கருத்துகளை

ஆராய, சபை பல குழுக்களை அமர்த்தியது. பல குழுக்களில் நேருவும் பட்டேலும் தலைவர்களாய் இருந்து அரசியலமைப்பின் சில அடிப்படைக் கருத்துகளை உருவாக்கினர். குழுக்களின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு பெனகல் நரசிங்கராவ் ஒரு நகல் அரசியலமைப்பை உருவாக்கினர். அம்பேத்காரைத் தலைவராகக் கொண்ட ஒரு வரைவுக் குழுவினைச் (Drafting Committee) சபை அமர்த்தியது. இக் குழு நகல் அரசியலமைப்பை நன்றாக ஆராய்ந்து பிறிதொரு நகல் அரசியலமைப்பைச் சபை முன் வைத்தது. இந் நகலைச் சபை நீண்ட நாட்கள் ஆழ்ந்து ஆய்ந்த பின் ஏற்றுக்கொண்டது.

அரசியலமைப்பைப் படைக்க (அரசியல் நிர்ணய) சபை ஏறத்தாழ மூன்றாண்டுகளைச் செலவிட்டது. சபை பதினொரு தொடக்கக் கூட்டங்களாக 165 நாட்கள் கூடிற்று. 165 நாட்களில் 114 நாட்களை நகல் அரசியலமைப்பு ஆய்வினில் செலவிட்டது. அரசியலமைப்பு இறுதிநிலையில் 395 பிரிவுகளையும் 9 தபசில்களையும் கொண்டிருக்கிறது.

சபை, அரசியலமைப்பைப் படைக்க ஜனநாயக முறைகளையே மேற்கொண்டது. நகல் அரசியலமைப்பிற்கு 7,635 திருத்தங்களைச் சபை உறுப்பினர்கள் கொண்டுவந்தனர். இவற்றில் 2,473 திருத்தங்களைச் சபை ஏற்று விவாதித்துப் பின் அவைகளைத் தள்ளியது. உறுப்பினர்கள் அஞ்சாமல் கருத்துகளை வெளியிடவும், பிறர் கருத்துகளை ஏற்றுச் சிந்திக்கவும் சபை பெருமளவில் உதவியதெனலாம்.

மற்ற நாடுகளின் அரசியல் நிர்ணய சபைகளுடன் நமது சபையை ஒப்பிடும்பொழுதுதான் அதன் சிறப்பு நமக்கு விளங்குகிறது. அமெரிக்கா தனது அரசியலமைப்பைப் படைக்க நான்கு மாதங்களையும், ஆஸ்திரேலியா ஒன்பது ஆண்டுகளையும், கனடா இரண்டு ஆண்டுகள் ஐந்து மாதங்களையும் செலவிட்டன. இந் நாடுகளின் அரசியலமைப்புகளெல்லாம் மிகச் சிறியனவாகவே இருந்தன. ஆனால், நமது அரசியலமைப்போ மிகப் பெரியதாகும். இதை மனத்திற்கொண்டு பார்க்கும்பொழுது நாம் செலவிட்ட காலம் குறைவானதேயாகும். மற்ற நாடுகளின் அரசியல் நிர்ணய சபைகள் திருத்தங்களை ஏற்கவில்லை. அவை நகல் அரசியல் அமைப்புகளைக் கொண்டுவந்தபடியே நிறைவேற்றின.

கேபினெட் குழுவினர் திட்டப்படி அரசியல் நிர்ணய சபையில் 385 உறுப்பினர்கள் இருக்கவேண்டும். இவர்களில் 292 உறுப்

பினர்களை பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களுக்கெனவும், 93 உறுப்பினர்களை இந்திய அரசுகளுக்கெனவும் கேபினெட் குழுவினர் பிரித்திருந்தனர். ஆனால், நாட்டுப் பிரிவினைக்குப் பின் 75 உறுப்பினர்கள் குறைந்துவிட்டார்கள் ; எனினும், சபை பெரிதாகவே தோன்றிற்று.

சபையின் செயற்கரிய பணிகளைச் செய்துகாட்டியவர்களில் தலைசிறந்தாராக வரைவுக்குழு உறுப்பினர்களையும், அதன் தலைவரையும் குறிப்பிடவேண்டும். இக் குழு, அம்பேத்காரைத் தலைவராகவும், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், கோபாலசாமி அய்யங்கார், கே. எம். முன்ஷி, டி. டி. கிருஷ்ணமாச்சாரி, முகமது சாதுல்லா, மாதவராவ் போன்றோரை உறுப்பினராகவும் கொண்டிருந்தது. இவர்களனைவரும் தம்மாலான பணிகளைச் சிறப்புடன் செய்து புகழ்பெற்றனர்.

அம்பேத்கார் காங்கிரசுக் கட்சியின் எதிர்ப்பாளராகவே அரசியல் நிர்ணய சபையில் நுழைந்தாரெனினும், நாட்டுப் பிரிவினைக்குப் பின் அவருடைய கொள்கைகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. அவரும் சபையுடன் ஒத்துழைக்க விரும்பினார். எனவே, காங்கிரசுத் தலைவர்கள் அவரை வரைவுக் குழுவின் தலைவராகத் தேர்ந்தமர்த்தினார்கள். அவருக்களித்த பொறுப்புகளைத் திறமையுடன் செயலாற்றினார். தேர்ந்த கல்வியறிவாலும், பரந்த அனுபவத் திறனாலும், அவர் சபையின் சிக்கல் நிறைந்த சொற்போர்களுக்குத் தக்க விளக்கம் கூறிச் சபை நிகழ்ச்சிகளில் அறிவொளி படரச் செய்தார்.

சபைத் தலைவராக இருந்த இராஜேந்திரப்பிரசாத், தம் கடமை உணர்ந்து, நடுநிலை நின்று மாண்பு குறையாது சபை நிகழ்ச்சிகளை நடத்தினார். அடிக்கடி சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தம் தெளிந்த கருத்துகளையும் சபைக்கு வழங்கினார்.

நேரு பிரதம அமைச்சர் என்ற முறையிலும், காங்கிரசுக் கட்சியின் தலைவர் என்ற முறையிலும் சபையில் எழுந்த சிக்கல்களனைத்திற்கும் தக்க மாற்றம் கூறி நிகழ்ச்சிகளில் தெளிவுண்டாக்கினார்.

அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர்கள்பற்றிய குழுவின் தலைவராகச் சர்தார் வல்லபாய் பட்டேல் பணியாற்றினார். அவருக்களித்த மிகக் கடினமான பொறுப்புகளை அவருக்கே உரித்

தான திறமையால் செய்து காட்டினுர்; எல்லோரையும் அச்சுறுத்தி வந்த இந்திய அரசுகளைத் தக்கமுறையில் பக்குவமாய் இணைத்துக் கூட்டாட்சிக்கு அடிக்கல் நாட்டினுர்.

அரசியல் நிர்ணய சபையின் ஆலோசகராக B. N. ராவ் பணியாற்றினுர். சபைக்குப் பயன்படும் வகையில் இவர், ஒரு நகல் அரசியலமைப்பினை வழங்கினுர். இதையே வரைவுக் குழுவினர் ஆதாரமாகக் கொண்டு மற்ருெரு நகல் அரசியலமைப்பினைச் சபை முன் வைத்தனர்.

இவர்கள் நீங்கலாகச் சபை நிகழ்ச்சிகளில் பெரும் பங்கு கொண்டவர்களில் எச். வி. காமத், நாசர்யுதின் அகமது, சிபன்லால் சாக்செனு. கே. டி. ஷார், குன்சுரு, தக்குர்தாஸ் பார்க்காவா, ஃபிராங் அந்தோனி, ஜெய்பால் சிங் போன்ருேர்களுடன் இன்னும் பலரைச் சேர்த்துக்கொள்ளலாம்.

சபையின் திறமை மிக்க உறுப்பினர்களுடன் கட்சிச் சார்பற்ற உறுப்பினர்களும் நன்முறையில் செயல்பட்டுச் சபையின் பரந்த அமைப்பிற்கு மெருகிட்டு அணி செய்தனர்.

# 5. இந்திய அரசியலமைப்பு

**சில அடிப்படைக் கருத்துகள் :** சில அடிப்படைக் கருத்துக் கொண்ட ஓர் அரசாங்கத்தை அரசியலமைப்பு உருவாக்குகிறது. அக் கருத்துகள் நிலைபெற்றனவாக இருக்க வேண்டும். எனினும், அக் கருத்துகள் அரசியலமைப்புகளில் ஒரே மாதிரியாக இல்லாமல் மாறுபட்டும் இருக்கலாம். அம் மாறுபாடுகள் ஒரு நாட்டின் சூழ்நிலைக்கேற்ப அமையும். நமது அரசியலமைப்பிலும் சூழ்நிலைக்கேற்ப சில அடிப்படைக் கருத்துகள் இருக்கின்றன. எனவே, நம் நாட்டின் ஜனநாயக அரசாங்க அமைப்பில் காணும் சில கருத்துகளை ஆராய்வோம்.

**கூட்டரசு முறை (Federal System) :** இருபதாம் நூற்றுண்டின் அரசியல் அமைப்புகளில் கூட்டாட்சி முறை இன்றியமையாததாகிவிட்டது. இக் கூட்டாட்சி அரசாங்க அமைப்புபற்றிய விளக்கம் தெளிவின்றிக் குழப்பத்தோடு காணப்படினும், அதன் அடிப்படைக் கருத்துகள்பற்றிய ஐயப்பாடு யாருக்கும் கிடையாது. பல்லினங்களையும், மரபுகளையும், கருத்துகளையும், குறிக்கோள்களையும் இணைத்து, ஓர் அரசியலமைப்பை உருவாக்க இம்முறை ஏற்றதாகும். கூட்டாட்சியின் நோக்கம் பன்மையில் ஒருமை காண்பதேயாம். அதிகார வளர்ச்சியும், ஆட்சியைப் பன்முனைப்படுத்தலும் இதன் நோக்கமாகும். இதன் சிறப்பியல்பாக அதிகாரப் பங்கீட்டினைக் கூறலாம். மத்திய, மாநில (State) அரசாங்கங்களின் அதிகாரங்களை அரசியலமைப்பு, பங்கீடு செய்கிறது. பங்கீடு செய்தபின் பெறப்படும் அதிகாரங்களில் அரசாங்கங்கள் இறைமையுடையனவாய் இருக்கின்றன. கூட்டாட்சிமுறை, தன் விருப்புக் கூட்டுறவு ஒற்றுமையை வளர்க்கிறது. இவ்வமைப்பில் உறுப்பரசுகள் (Part States) ஒன்று சேர இசைந்து பொதுவான மத்திய அரசாங்கத்தை நிறுவித் தங்களின் தனியுரிமைகளைத் துய்த்த

லோடு மற்ற மாநிலங்களுடன் நல்லுறவு கொள்ளவும் இக் கூட்டாட்சி வகை செய்கிறது. பரந்த நிலப்பரப்பில் வாழும் பல்வேறு இனங்களையும் மொழியினங்களையும் இணைத்து அவர்களுக்கு ஓர் அரசியலமைப்பினை வழங்கவேண்டுமெனின் இக் கூட்டாட்சி முறை பெருமளவில் உதவும். எனவேதான், நம் அரசியலமைப்பாளர்களும் நம்மை எதிர்நோக்கியிருந்த சிக்கல்களைத் தவிர்க்கவும், ஐக்கிய இந்தியாவை உருவாக்கவும், கூட்டாட்சி முறையைப் பயன்படுத்தி இருக்கின்றனர். இவர்கள் நாடெங்கிலும் பரந்து காணப்படும் வேற்றுமையில் ஒற்றுமையுணர்வுகளைப் புகுத்தி ஓர் உணர்வொளி அரசியல் சமுதாயத்தைப் படைக்க விழைந்தனர்.

இம்முறை ஆட்சி முன்னர் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் செயல்பட்டுவந்திருக்கிறது. சிலர் நம் நாட்டின் நிலைக்குக் கூட்டாட்சி முறைதான் சிறந்ததெனக் கருதினர். இருப்பினும், நாட்டின் ஐக்கியத்தை முதன்மையாகக் கருதிய அரசியலமைப்பாளர்கள் ஒருமைப்பாடும் மாறுபாடும் மோதுகின்றபொழுது ஒருமைப்பாட்டினைக் காக்க வழி வகுத்திருக்கின்றனர். இது பற்றியே அழிவிலா ஓர் இந்திய யூனியனைப் படைத்தனர்.

அரசியலமைப்பாளர்கள் நாட்டில் நிலவும் பிளவுச் சக்திகளை மனத்திற்கொண்டு ஒற்றுமையை நிலைநாட்டவும், இடர்க்காலங்களில் செயல்படவும், மத்திய அரசாங்கத்திற்குச் சில சிறப்பு அதிகாரங்களை வழங்கினர். இவ்விடர்க்கால அதிகாரங்கள் செயல்படும்பொழுது கூட்டாட்சி அமைப்பு ஒருமுக (Unitary Government). ஆட்சியாக மாறியியங்கும். இடர்க்காலம் நீங்கியதும் கூட்டாட்சி முறை மீளும். இது நம் அரசியலமைப்பின் ஒரு சிறப்பியல்பாகும்.

**கேபினெட் அமைச்சரவை அரசாங்கம்**

யூனியன், மாநில (ராஜ்ய) அரசாங்கங்கள் பிரிட்டிஷ் பாராளுமன்ற அரசாங்கத்தைத் தழுவி அமைந்திருக்கின்றன. யூனியன் மாநில நிர்வாகத் துறைகள் சட்டசபைக்குப் பொறுப்புடையனவாக இருக்கவேண்டும். யூனியன் அமைச்சரவைத் தலைவரைப் பிரதம அமைச்சரென்றும், மாநில அமைச்சரவைத் தலைவரை முதல் அமைச்சரென்றும் அரசியலமைப்பு வழங்குகிறது. அமைச்சவைகள் அரசாங்கத்தின் கொள்கைகளை நிர்ணயித்துச் செயல்படுத்துகின்றன. அமைச்சவை நிர்வாக அதிகாரச் செறிவுடனும், தக்க கட்டுப்பாடுகளுடனும் இயங்கும். கேபினெட் அரசாங்க முறையில் நிர்வாகத் துறைக்கும் சட்டசபைத் துறைக்கும்

நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. அமைச்சவை (Council of Ministers) சட்டசபைக்குப் பொறுப்புடையதாயிருக்க வேண்டும்.

சட்டசபையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே அமைச்சவையை ஆக்குகிறார்.

அமைச்சவை (நிர்வாகத் துறை) சட்டசபைக்குப் பொறுப்புடையதாகையால், அது தன்போக்கில் சென்றாலும், சட்டசபையின் விருப்பிற்கு மாறாக நடந்துகொண்டாலும், அதைப் பதவி நீக்கம் செய்ய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சட்டசபை நிறைவேற்றலாம்.

சட்டசபையின் பெரும்பான்மைக் கட்சியினரின் ஆதரவை நிர்வாகத் துறை பெற்றிருக்கும்வரை அது பதவியிலிருக்கலாம். அவ்வாறின்றி நிர்வாகத் துறை கட்சி பலமில்லாமல் செயல்படுமானால் நிலையான அரசாங்கத்தை மக்கள் பெறமுடியாது.

பிரிட்டிஷ் கேபினெட் அரசாங்க முறையையொட்டி நமது அமைச்சவைகள் அமைந்திருந்தாலும், பிரதம அமைச்சரை அமைச்சவைத் தலைவராக்கி ஓர் உயர்ந்த நிலையை அரசியலமைப்பு அவருக்குக் கொடுத்திருக்கிறது. பிரிட்டிஷ் பிரதமர் நடைமுறையில் உயர்வு பெற்றிருந்தாலும் சட்டத்தால் அவர் மற்ற அமைச்சர்களுடன் சமமாகக் கருதப்படுகிறார்.

கேபினெட் அரசாங்க முறையை மாநில அரசாங்கத்திற்கும் அரசியலமைப்பு வழங்கியிருக்கிறது.

**நீதிமன்றத்தின் சுயேச்சை நிலை**

அரசியலமைப்பு ஜனநாயகச் சுதந்திர நீதிமன்றங்களை உருவாக்கியிருக்கிறது. நீதி, நிர்வாகப் பிரிவினைக்கும் வகை செய்கிறது. நீதிபதிகளை நியமனம் செய்யச் சில கடினமான தகுதிகளை அரசியலமைப்பு குறிப்பிட்டிருக்கிறது.

ஜனாதிபதி தலைமை நீதிமன்றப் பிரதம நீதிபதியைக் கலந்துகொண்டே நீதிபதிகளை நியமனம் செய்யவேண்டும்.

நன்னடத்தையின்மை காரணமாக நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்யலாம். பதவி நீக்கத் தீர்மானத்தைப் பாராளுமன்றம் நிறைவேற்றவேண்டும். இதற்கு மூன்றிலிருவர் பெரும்பான்மை

வேண்டும். அல்லது அத் தீர்மானத்தைக் கொண்டுவரும் சபை உறுப்பினர்களில் ஒரு முழுமையான (absolute majority) பெரும் பான்மையினரின் ஆதரவு இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்யலாம்.

இந்திய நீதிமன்றங்கள் நேர்மைக்கும் சுயேச்சைக்கும் பெயர்பெற்றனவாகும். நீதிமன்றங்கள் தம் எல்லைக்குட்பட்டு எழுகின்ற வழக்குகளில் முடிவு கூறலாம். இழந்த அடிப்படை உரிமைகளைப் பெற எவரும் இந்தியாவின் மிக உயர்ந்த நீதி மன்றங்களை அணுகலாம். இதுவரை முடிவான பல வழக்குகளி லிருந்து நீதிமன்றம் சுயேச்சைச் சூழ்நிலையோடு நடுநிலை நின்று செயல்பட்டு வருவது தெரியவரும்.

## அடிப்படை உரிமைகள்

ஓர் அரசிற்குட்பட்டிருக்கும் மக்கள், தாமாகவே ஓர் அரசாங்கத்தை அமைத்துச் செயல்படுத்தும் உரிமையை அரசிய லமைப்பு வழங்குகிறது. இவ்வுரிமையை அரசியலமைப்பு காக்க வேண்டும். ஓர் உரிமைச் சாசனத்தின் வாயிலாக மக்களின் அடிப்படை உரிமைகளை அரசியலமைப்பு காக்கவேண்டும்.

ஜனநாயகம், பெரும்பான்மையினர் ஆட்சியாக இருக்க வேண்டுமென்னும் நிலைமாறி அது மக்களாட்சியாக மலரவேண்டும். ஓர் அரசாங்கத்தின் போக்கை மக்கள் விருப்பு வரையறுத்தல் போல் மக்களின் போக்கையும் ஓர் அரசாங்கம் கட்டுப்படுத்தலாம். கட்டுப்பாடில்லாப் பொதுமக்களின் விருப்பானது ஒரு நிலையான கொடுங்கோலாட்சியை நிலைபெறச் செய்யலாம். இது மக்க ளாட்சியை எதிர்நோக்கியுள்ள பேரிடராகும்.

அரசியலமைப்பு இருவகைப் பாதுகாப்புகளை மக்களுக்கு வழங்கலாம். ஒன்று, மக்களின் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதும், அரசாங்கத் தலையீட்டைத் தவிர்ப்பது மாம். இரண்டு, அரசின் அதிகாரங்களைப் பங்கீடு செய்து தனிப் பட்ட நிறுவனத்திடம் விட்டுவைத்தல். எனவே, ஒரு குறிப்பிட்ட சிலர் வரையறையற்ற அதிகாரங்களைப் பெறமுடியாது. இந்திய அரசியலமைப்பு முந்திய முறையைப் பின்பற்றிக் குறிப்பிட்ட சில அடிப்படை உரிமைகளை மக்களுக்கு வழங்கி, அவற்றைக் காக்க சுயேச்சையான நீதித் துறையை நிறுவியிருக்கிறது. மக்களின் இவ்வுரிமைகள், சட்டசபையின் அதிகாரங்களையும், நிர்வாகத் துறையின் அதிகாரங்களையும் வரையறை செய்கின்றன. தனி மனிதச் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் சட்டசபைகள்

சட்டமியற்ற முடியாது. குடிமக்களைப் பொறுத்தவரையில் நிர்வாகத் துறையும் சில குறிப்பிட்ட நடைமுறைகளைத்தான் மேற்கொள்ளவேண்டும். அடிப்படை உரிமைகளைப் பெற, அரசின் செயற்பாட்டு எல்லையையும், தனிமனிதனின் செயற்பாட்டு எல்லையையும், அரசியலமைப்பு வரையறை செய்து இருக்கிறது.

தனி மனிதன் துய்க்கவிரும்புகின்ற சில ஆதார உரிமைகளை அரசியலமைப்பு ஏற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பெரும்பான்மையினர் விருப்பிற்குட்படுத்தவில்லை. பெரும்பான்மையினர் இவ்வுரிமைகளை நீக்கிவிடமுடியாது. இவ்வடிப்படை உரிமைகள் யாதெனில் பேச்சுரிமை, நடமாட்ட உரிமை, கூடி வாழ்வுரிமைகளும், சட்டத்தின் முன் சமத்துவமும் சமத்துவப் பாதுகாப்பும், சமய நம்பிக்கை, பண்பாடு, கல்வி போன்ற உரிமைகளுமாகும். இவ்வுரிமைகளை அரசியலமைப்புமுறைப் பரிகார உரிமையெனக் கூறியிருக்கிறது. இதன்படி உரிமையை இழந்துவிட்ட ஒவ்வொரு குடிமகனும் தலைமை நீதிமன்றத்தை அணுகி இழந்த உரிமைப் பெறலாம்.

அரசியலமைப்பு, தனிமனிதன் ஆளுமையை வளர்க்க வேண்டிய சூழ்நிலையை உண்டாக்க உறுதியளிக்கிறது. கட்டுப்பாடற்ற அரசியல் போட்டியை அடிப்படையாகக் கொண்டதோர் அரசியல் வாழ்வினை அரசியலமைப்பு நமக்களிக்கிறது. பெரும்பான்மையினரின் விருப்பு அவ் வுரிமைகளை எப்படிச் செயல்படுத்தலாமென்று முடிவு செய்யலாமேயன்றி இவற்றை மறுக்க முடியாது.

தனி மனிதனின் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டிருத்தல் முழுமையானதெனக் கருதலாகாது. தனி மனித உரிமைகள் எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், நாட்டுப் பாதுகாப்பு பொதுநலன் போன்றவைகளைக் கடந்து இருக்கமுடியாது. பேச்சுரிமையென்பது பிறரைத் தூற்றுவதாகாது. இவ்வடிப்படை உரிமைகளைத் துய்க்கவும், அரசியலமைப்புச் சில தடைகளை விதிக்கிறது. உரிமைகளைத் துய்ப்போர் அவற்றிலிருந்து பெறப்படும் சில கடமைகளையும் உணர்தல் வேண்டும்.

### அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்

அரசும் அதன் பல்வேறு நிறுவனங்களும் பின்பற்றவேண்டிய கொள்கைகளை நெறிமுறைக் கோட்பாடுகள் என்கின்றோம். இவைகளே அரசு, மக்களுக்கு வழங்கும் உரிமைகளாகும்.

மத்திய, மாநில அரசாங்கங்கள், தேச சமுதாய வாழ்க்கையின் எல்லா நிலையங்களிலும் சமூக, பொருளாதார, அரசியல், நீதி நிரம்பிய அமைப்பை இயன்ற அளவு திறம்பட நிலைபெறச்செய்து, பொதுமக்களின் நலத்தைப் பேணி வளர்க்க முயலவேண்டும்.

**அரசு பின்பற்றவேண்டிய விதிகள்**

(1) குடிகள், ஆண்களும் பெண்களும் சரிசமமாகப் போதிய ஊதியம் பெற உரிமை உள்ளவராதல்;

(2) சமூகத்தின் பொருட்சாதனங்களின் உடைமையும், அவற்றின் ஆட்சியும் சிறந்த முறையில் பொதுநலனுக்குப் பயன் படும் வகையில் பகிர்ந்தளிக்கப்படுதல் ;

(3) பொருளாதார முறைச் செயற்பாட்டின் விளைவாகப் பொதுநலத்திற்குத் தீங்கு விளைக்கும் வகையில் செல்வமும் உற்பத்திச் சாதனங்களும் சிலரிடம் செறிவு பெறுதிருத்தல் ;

(4) ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் ஒத்த வேலைக்கு ஒத்த சம்பளம் உடையராதல் ;

(5) ஆண், பெண் வேலையாளரின் உடல் நலமும் வலிமையும், பிள்ளைகளின் இளமைப் பருவமும் மிதமிஞ்சிப் பயன்படுத்தப் படாதிருத்தல், பெருளாதார அவசியத்தால் குடிகள் தம்முடைய வயதுக்கோ வலிமைக்கோ ஒவ்வாத வேலைகளில் புகும்படி கட்டாயப்படுத்தப்படாதிருத்தல் ;

(6) பிள்ளைப் பருவமும் வாலிபப் பருவமும் வீணுக்கப்படாமலும், ஒழுக்கநெறி பழுதுபடாமலும், பிழைக்க வழியின்றிக் கைவிடப்படாமலும் காக்கப்படல் ;

இந் நெறிகள் நிலைபெறுமாறு செய்வதை அரசுகள் தம் நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

அரசாங்கங்களை இயக்குவோர் நெறிமுறைக் கோட்பாடுகளை மதித்துச் செயல்படுத்தவேண்டும். இக் கோட்பாடுகளைப் புறக்கணிப்போர் வாக்காளர்களின் செல்வாக்கைப் பெற இயலாது. இந் நெறிகளை வெற்றுரைகளெனக் கருதலாகாது. இவைகள், இன்று நம் சமூக, பொருளாதார முன்னேற்றத்தின் அளவுகோல்களாக இருக்கின்றன. மத்திய, மாநில அரசாங்களின் வெற்றியும், தோல்வியும் இந் நெறிமுறைக் கோட்பாட்டின் செயற்பாட்டுத் திறனையே சாரும்.

இந் நெறிசெய் கோட்பர்டுகள் அடிப்படை உரிமைகளைவிடச் சிறப்புடையன. இவை இரண்டிற்கும் மோதல் ஏற்படும்பொழுது நெறிமுறைக் கோட்பாடுகளே நிலைபெறும்.

இந் நெறிமுறைக் கோட்பாடுகள் எந்த நீதிமன்றத்தாலும் நிறைவேற்றத்தக்கனவல்ல எனினும், இக் கோட்பாடுகள் நாட்டின் ஆட்சி முறைக்கு அடிப்படைகளாக அமைகின்றன. சட்டங்களின் வாயிலாக இக் கோட்பாடுகளை அரசாங்கங்கள் செயல்படுத்த வேண்டும்.

பாராளுமன்ற முறை மக்களாட்சிக்கான அரசியலமைப்பில் இந் நெறிமுறைக் கோட்பாடுகள் காணப்படுவது ஒரு புதுமையே யாகும்.

**மக்கள் இறைமை**

மக்களின் இறைமையை நம் அரசியலமைப்பின் உயிரெனக் கொள்ளலாம். 'இந்திய மக்களாகிய நாம் இந்தியாவை ஓர் இறைமையுள்ள ஜனநாயகக் குடியரசாக அமைக்கிறோம்' என்று அரசியலமைப்பின் முகப்புக் கூறுகிறது. சட்டசபைகளுக்கான தேர்தல்கள், வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்னும் அடிப் படையில் நடக்கும்? மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங் களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண் டியங்கும். எனவே, நிர்வாக அதிகாரமுடையோர், சட்ட சபைக்குப் பொறுப்புடையோராகவும் அதன்வழி, மக்களுக்குப் பொறுப்புடையோராகவும் இருக்கவேண்டுமென்பது தெளிவு.

மக்களின் இறைமை வெறும் குறிக்கோளாக மட்டுமின்றி அரசியல் வாழ்க்கையில் அது செயல்படுவதைப் பார்க்கிறோம். கடந்த நான்கு பொதுத் தேர்தல்களில் பங்கு கொண்ட மக்கள் அனைவரும் தக்கமுறையில் வாக்குரிமையைப் பயன்படுத்தி இருக்கின்றனர்.

மக்களாட்சி பரவலாக அமையவும், மக்களின் எண்ணம் அரசாங்கத்தில் நிலவவும், மக்களின் இறைமை இன்றியமையாததொரு பண்பாகும். 'வயதுவந்தோருக்கு வாக்குரிமை' என்பது மக்கள் இறைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அரசிய லமைப்பாளர்கள் மக்களுக்கு வாக்குரிமையை மட்டும் வழங்கி விட்டு வாளாவிருக்கவிரும்பவில்லை. சுயேச்சையாய்த் தேர்தல்களை நடத்த அரசியலமைப்பின் அதிகாரம்ஒரு பெற்ற தனி நிறுவனத்

தையும் அரசியலமைப்புப் படைத்திருக்கிறது. இந் நிறுவனம் (தேர்தல் கமிஷன்) சுயேச்சையுடன் நடுநிலை நின்று, நேர்மை தவறாமல் தேர்தல்களை நடத்தி மக்கள் இறைமையை அரசியலில் செயல்படுத்திக் காட்டுகிறது.

**சமயச் சார்பில்லாத அரசு**

நமது குடியரசைச் சமயச் சார்பற்றதாக அரசியலமைப்புப் படைத்திருக்கிறது. இந்திய அரசிற்கென ஒரு சமயம் கிடையாது. எந்தச் சமயத்திற்கும் சிறப்புரிமை கிடையாது. இந்தியாவிலுள்ள சமயத்தினரனைவருக்கும் சமயப் பாதுகாப்பையும் சமயச் சுதந்திரத்தையும் அரசியலமைப்பு வேற்றுமையின்றி வழங்கியிருக்கிறது.

இவ்வடிப்படைக் கருத்துகளை ஆதாரமாகக் கொண்டு நமது மத்திய, மாநில அரசாங்கங்கள் இயங்கிவருகின்றன.

# 6. அரசியலமைப்பின் முகப்பு

மக்கள் இறைமையினின்றும், விருப்பினின்றும் பிறந்ததே நமது அரசியலமைப்பாகும். இக் கருத்துகளை வலியுறுத்தும் வகையில் அரசியலமைப்பின் முகப்பு அமைந்திருக்கிறது. 'நாமே நமக்களித்துக்கொண்ட அரசியலமைப்பு' என்று முகப்புக்கூறுகிறது. நாமனைவரும் கலந்துகொண்டு உருவாக்கிய அரசியலமைப்பென்று கூறும்பொழுது, நம் சார்பில் நமது பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் எனக் கொள்ளலாம். இப் பிரதிநிதிகள் மக்களின் கருத்துகளைப் பிரதிபலித்தனரா என்ற ஐயப்பாடு எழுந்தது. ஏனெனில், மக்கள் இவர்களை 'வயதுவந்தோருக்கு வாக்குரிமை' என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கவில்லை.

நாடு முழுமைக்குமான ஒரு வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கவும், அதில் பதினெட்டுக் கோடி வாக்காளர்களுக்கு இடமளிக்கவும் போதிய காலமும் வசதியும் அப்பொழுது (1946-ல்) கிடையாது. இவ்வடிப்படையில் தேர்தலை நடத்தி அரசியல் நிர்ணய சபையை அமைக்க ஆண்டுகள் பலவாகலாம் என்ற அச்சம் எல்லோரிடையும் காணப்பட்டது. எனவே, கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, மக்கள் இசைவுடன் ஓர் அரசியலமைப்பைப் படைக்க நம் தலைவர்கள் ஒப்பினர். மேலும் இந்தியச் சூழ்நிலைக்கேற்ப ஒரு புதிய அரசியலமைப்பை உண்டாக்க வேண்டுமென்ற விருப்பினால் நம் தலைவர்கள் 'கேபினெட் குழுவினர் திட்டப்படி' ஓர் அரசியல் நிர்ணய சபையைத் தேர்ந்தமர்த்தினர். இச் சபை படைத்து வழங்கியதே நமது அரசியலமைப்பாகும்.

'இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஓர் இறைமையுள்ள ஜனநாயகக் குடியரசாக அமைக்கிறோம்' என்று முகப்புக் கூறுகிறது. 1947ஆம் ஆண்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேறிய இந்தியச் சுதந்திரச் சட்டம், இந்தியாவை ஒரு

சுதந்திர நாடாக்கியது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் முதல் 1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதி வரையுள்ள இடைக்காலத்தில் இந்தியா டொமினியன் அந்தஸ்துடைய நாடாகவிருந்தது.

புதிய அரசியலமைப்புடன் கூடிய நமது குடியரசின் துவக்க நாளாகிய 1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதியிலிருந்து இந்தியா ஒரு முழு இறைமையுள்ள நாடாயிற்று.

முகப்பில் காணும் 'ஜனநாயகக் குடியரசு' எனும் சொல், சட்டப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பொறுப்புடன் செயல்படும் ஓர் அரசாங்க அமைப்பைக் குறிக்கிறது. இச் சொல், இன்னும் விரிவாக அரசியல், பொருளாதார, சமூக ஜனநாயகத்தையும் குறிக்கும். இப் பொருளையொட்டி அமையும் ஜனநாயகத்தையே அரசியலமைப்பின் முகப்புச் சுட்டுகிறதெனலாம்.

'குடியரசு' எனும் சொல், அரசுத் தலைவர், தேர்ந்தெடுக்கப் பெற்றவராக இருத்தல்வேண்டுமென்பதைக் குறிக்கிறது. ஒரு ஜனநாயக அரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவோ (அமெரிக்க அதிபர்) அல்லது வழிவழி வந்த தலைவராகவோ (பிரிட்டனின் அரசியார்) இருக்கலாம். ஒரு குடியரசில் குறிப்பிட்ட காலத்திற்கான, தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை இயல்பாகவே இருந்துவருகிறது. நாமும் நமது குடியரசுத் தலைவரை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தேர்ந்தெடுத்துப் பதவியில் அமர்த்துகிறோம்.

குடியரசின் குறிக்கோள்களையும் முகப்பு விளக்குகிறது. அவற்றில் நான்கினைச் சிறப்பாகக் கூறலாம். அவை, நீதி, உரிமை, சமத்துவம், சகோதரத்துவமாம். சமுதாயத்தின் பொது நலத்துடன் தனிமனிதனின் நடத்தையை ஒருமைப்படுத்த முயல்வதே நீதியின் நோக்கமாகும். பொதுநலத்தை உருவாக்குவதே நீதியின் கருத்தாக இருக்கும். மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் செயற்பாடுகளில் நீதி நிலவவேண்டுமென்பதை முகப்பு வலியுறுத்துகிறது.

முகப்பில் 'உரிமை' என்ற சொல் வழங்கப்பட்டிருக்கிறது. இது வெற்றுரிமையாக மட்டுமல்லாமல் துய்த்தற்குரியதாகவும் இருத்தலைக் காணலாம். இவ்வுரிமை, தனிமனிதச் சுதந்திரச் செயற்பாடுகளில் தடையில்லாமல் ஆளுமையை வளர்க்கும் சூழ்நிலைகளையும், கூறுகளையும் வழங்கவேண்டும். ஏனெனில், தனி

மனிதர்களைக் கொண்ட சமூகம், அதன் முன்னேற்றத்திற்கு அவர்களையே நம்பியிருக்கிறது. ஆகவே, சமூக நிலைக்குத் தக்க வாறு தனிமனிதர்களுக்குப் பேச்சுரிமையும், செயலுரிமையும் வழங்கவேண்டும்.

உரிமையும் சமத்துவமும் தொடர்புடைய கருத்துகளாம். சமத்துவம் என்றவுடன் எல்லா மனிதர்களும் உடலாலும் மனத் தாலும் சமமானவர்களெனக் கருதலாகாது. அதாவது சமமான (அந்தஸ்தும்) நிலையும், வாய்ப்பும் தனிமனிதர்களுக்கு இருக்கும் எனப் பொருள்படும். இக் கருத்துகளே அரசியலமைப்பு முகப்பில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

தனி மனிதனின் கண்ணியத்தையும் அரசின் ஐக்கியத்தையும் வலியுறுத்துகின்ற வகையில் சகோதரத்துவம் அமையவேண்டு மென்னும் நோக்கம் முகப்பிலிருந்து தெளிவாகிறது. இன, மொழி வேறுபாடுகளையும், வட்டார மனப்பான்மைகளையும் கொண்டவர்கள் வாழ்கின்ற நம் நாட்டில், இவ் வேறுபாடுகளை நீக்கி, அனைவரையும் இணைக்கவல்லதாய் இச் சகோதரத்துவம் அமையவேண்டும். நீதி, உரிமை, சமத்துவம் ஆகியவற்றின் அடிப் படையில் நிறுவப்படும் ஒரு புதிய சமுதாயத்தில் அனைவரும் தாய்த்திருநாட்டின் மக்களென உணரவேண்டும்.

எழுத்துருவில் இருக்கின்ற முகப்புகளிலெல்லாம் தலைசிறந்த தாக நம் அரசியலமைப்பின் முகப்புத் திகழ்கிறது; கருத்து களாலும், விளக்கங்களாலும் உயர்வுபெற்று விளங்குகிறது. ஒரு புதிய இந்தியாவை உருவாக்கி அதில், நீதி, உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கருத்துகள் வெற்றியுடன் செயல்பட வேண்டுமென்ற உறுதியுடன் அரசியலமைப்பு ஆக்கப்பட்டிருக் கிறது. அதன் சிறப்புகளை முகப்பு தெற்றென எடுத்துக்காட்டு கிறது.

'நமது அரசியலமைப்பின் திறவுகோல்' என இம் முகப்பைக் கூறலாம்.

# 7. யூனியனும் ஆட்சிப் பரப்பும்

'இந்தியா அதாவது பாரதம், அரசுகளைக் கொண்ட ஒரு யூனியன் (ஒன்றியம்) ஆகும்' என அரசியலமைப்பின் முதல் பிரிவு கூறுகின்றது. நம் நாட்டை, இந்தியா என வழங்குவதா அல்லது பாரதம் என்ற பழைய பெயரினைச் சூட்டுவதா என்பது பற்றிய சொற்போரின் முடிவில், சபையினர் இருதரப்பாரின் கருத்துகளையும் இணைத்து மேலே கண்டவாறு பெயரிட்டனர்.

'அரசுகளின் யூனியன்' என்பதன் சிறப்புபற்றி இருவகையாக அம்பேத்கார் விளக்கம் கூறினர். முதலாவதாக, இந்தியக் கூட்டரசானது உறுப்பரசுகளின் ஒப்பந்த வாயிலாகத் தோன்றவில்லை யெனவும்; இரண்டாவதாக, இணைந்த உறுப்பரசுகட்கு யூனியனிலிருந்து பிரிந்து செல்ல உரிமையில்லையெனவும் விளக்கந் தந்தார். யூனியன் என்ற சொல்லை ஏற்க மறுத்தவர்கள், அச் சொல் இந்தியக் கூட்டாட்சி முறையைத் தெளிவாகக் குறிக்க வில்லை என வாதித்தனர். எனவே, இந்தியாவைக் கூட்டாட்சி யென வழங்கவேண்டுமென்று வற்புறுத்தினர்.

இந்திய யூனியன் அரசுகளின் நிலையை நாம் நன்கறிய வேண்டும். நமது அரசியல் அமைப்பு ஏற்படுமுன் இவ்வரசுகளுக்கு இறைமை இருந்ததில்லை. 1935ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டப்படி பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் தன்னாட்சி உறுப்புகளாக இருந்தன. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் தேதிக்கு முன் இந்திய அரசுகள் பிரிட்டிஷ் மன்னரின் மேலாதிபத்திய உரிமையை ஏற்றுக்கொண்டிருந்தன. இவ்வரசுகளின் உள்நாட்டு ஆட்சியையும் வெளிநாட்டுக் கொள்கையையும் பிரிட்டிஷ் அரசுதான் நிர்ணயித்து வந்தது. ஆனால், இந்தியச் சுதந்திரச் சட்டத்தால் (1947) இங்கிலாந்தின் மேலாதிபத்திய உரிமை நீங்கி இவ்வரசுகள் இறைமை பெற்றன. இவ்வரசுகளின் நிலை எதுவாயினும் இவைகளின் இறைமை இந்திய யூனியனுக்கு ஓர் ஒப்பந்தப்படி மாற்றப்பட்டது.

அமெரிக்கச் சுதந்திரப் பேர்றிக்கைக்கு முன் பதின்மூன்று அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பெற்றிருந்த இறைமைக்கும், இந்தியச் சுதந்திரப் பேரறிக்கைக்குப் பின் நமது யூனியன் உறுப் பரசுகள் பெற்றிருந்த இறைமைக்கும் வேறுபாடு உண்டு. அரசியல் நிர்ணய சபை உறுப்பரசுகளின் பிரதிநிதியாகச் செயல்படாமல், இந்திய மக்கள் அனைவரின் இறைமையைப் பெற்ற பிரதிநிதியாக இருந்து ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கியது. அவ்வரசியல் அமைப்பு மக்களின் விருப்பத்திற்கு இணங்கவே உருவாகியது. இணைந்து வாழ அரசுகள் விருப்புத் தெரிவித்தபின் பிரிந்துபோதல் இயலாது. அமெரிக்கக் கூட்டாட்சியும் உறுப்பரசுகளும் அழிக்கப் பட முடியாதன. அவ்வாறின்றி, இந்திய யூனியன் அழிக்கப்பட முடியாததாகவும் உறுப்பரசுகள் அழிக்கப்படக்கூடியனவாகவும் இருக்கின்றன. அரசியல் அமைப்பின் இரண்டாவது பிரிவின்படி, யூனியன் பாராளுமன்றம் தனக்குச் சரியெனப்பட்டால் சில நிபந்தனைகளுடன் புதிய அரசுகளைச் சேர்க்கவும் ஏற்படுத்தவும் முடியும். பாராளுமன்றச் சட்டத்தினால் எந்த அரசிலிருந்தாவது ஒரு பகுதியைப் பிரித்தேனும், இரண்டோ அதற்கு மேற்பட்ட அரசுகளையோ, அரசுகளின் பாகங்களையோ இணைத்தேனும், அல்லது எந்தப் பிரதேசத்தையாவது ஓர் அரசின் பாகத்தோடு இணைத்தேனும், புதிய அரசு ஒன்றை அமைக்கலாம்; அரசுகளின் பரப்பைப் பெருக்கலாம், குறைக்கலாம்; அவற்றின் எல்லைகளை யும் பெயர்களையும் மாற்றலாம். இவைகளைச் செய்யப் பாராளு மன்றத்திற்கு முழு அதிகாரம் இருப்பினும், சம்பந்தப்பட்ட அரசுகளின் சட்டசபைகளைக் கலந்தே செய்யவேண்டும். இவ்வாறு கலந்து செய்வதால் சம்பந்தப்பட்ட அரசுகளின் மக்கள் கருத்தைப் பாராளுமன்றம் அறிந்துகொள்ளவியலும் இத்தகைய பாராளு மன்றச் செயல்களை அரசியலமைப்புத் திருத்தங்கள் எனக் கருதுதல் கூடாது.

இந்திய யூனியனில் பதினேழு உறுப்பரசுகள் இருக்கின்றன. மேலும் பத்து யூனியன் பிரதேசங்கள் மத்திய அரசாங்கத்தின் நேர் முக ஆட்சியின் கீழ் இருக்கின்றன. பெருத்த இடர்ப்பாடுகளுக்கும் துயர நிகழ்ச்சிகளுக்கும் பின், தொடக்கத்திலிருந்த இந்திய அரசுகளை இணைத்தும், மாகாணங்களைச் சீரமைத்தும் உறுப்பரசு களின் எண்ணிக்கையைக் குறைத்தனர். இனி இந்திய அரசுகளும் மாகாணங்களும் இணைந்து கலந்த வரலாற்றினைச் சுருக்கமாகப் பார்ப்போம். பிரிட்டிஷாரின் ஆட்சி, பதினேழாம் நூற்றாண்டில் இந்தியக் கடற்கரையோரப் பகுதிகளில் சிறு குடியேற்றங்களாக வளர்ச்சியடைந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டிஷார் தாம் பிடித்த இடங்களை வங்காளம், சென்னை, பம்பாய் மாகாணங்

களுடன் சேர்த்தனர். புதிய பகுதிகளைக் கைப்பற்றியபொழுது புதிய மாகாணங்கள் அமைத்தனர். 19ஆம் நூற்றுண்டின் இறுதியில் இந்த மூன்று மாகாணங்களோடு பன்னிரண்டு லெஃப்டினெண்ட் கவர்னர் மாகாணங்களும், சில பிரதம கமிஷனர் மாகாணங்களும் இருந்தன. இம் மாகாணங்களை எந்த ஒரு குறிப்பிட்ட அடிப்படைக் கொள்கையோடும் அமைக்கவில்லை. இவைகள் தாமாகவே வளர்ந்துவிட்டவை. எனினும், இவற்றை முறைப்படி அமைக்கவேண்டுமென்று பிரிட்டிஷார் முயன்றனர். 1935ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டப்படி இயங்கிய பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் 1947வரை எவ்வித மாற்றமு மின்றி இருந்தன.

இந்தியச் சுதந்திரச் சட்டம் (1947) இந்தியாவில் ஒரு புதிய அரசியல் சூழ்நிலையை உருவாக்கியது. பிரிட்டன் தன் அதிகாரங் களையும் ஆட்சிப் பொறுப்புகளையும், இந்திய அரசாங்கத்திற்கு மாற்றிற்று. எனவே, பிரிட்டனுக்கிருந்த இந்தியப் பொறுப்பு கள் மாற்றப்பட்டு இந்தியா பிரிட்டனின் வாரிசாயிற்று. இதன் பயனுக இந்திய அரசுகள் இந்திய அரசாங்கத்துடன் அரசியல் உறவுகொண்டு வாழவேண்டியதாயின. இந்தியச் சுதந்திரச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உருவாகிக்கொண்டிருக் கும்போதே, இந்திய அரசாங்கம் பல இந்திய மன்னர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி இந்திய அரசுகளை யூனியனில் சேர்க்க முயன்றது. இம் முயற்சியின் பயனுகப் பல மன்னர்கள் தம் அரசுகளை யூனியனில் சேர்க்க ஒப்புக்கொண்டனர். அதைத் தொடர்ந்து மேலும் பல மன்னரும் யூனியனில் சேர்ந்தனர். இம்முறைச் சேர்க்கையால் நாட்டின் அடிப்படை ஒற்றுமை உறுதிப்பட்டது. இவ்வாறு, மாகாணங்களையும் இந்திய அரசு களையும் உறுப்புகளாகக் கொண்ட ஒரு கூட்டாட்சியாக இந்தியா மலர்ந்தது.

இந்திய அரசாங்கம், அதிகார மாற்றம் பெற்றபின், இந்திய அரசுகளின் போக்கில் சில புரட்சிவாய்ந்த மாற்றங்களை ஏற் படுத்தியது. இந்தியாவுடன் சேர்ந்துகொள்ள இந்திய அரசுகள் முடிவு செய்தபின் விருப்பமில்லையெனினும், அவைகள் வரலாற்றுப் போக்கில் செல்லவேண்டியவையாயின.

இந்திய அரசுகளை யூனியனில் சேர்க்க இரண்டு புதிய முறை களைச் சர்தார் வல்லபாய் பட்டேல் மேற்கொண்டார். அவைகளை இணைப்பு (Integration), கலப்பு (Merger) என்பர். இணைப்பு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்துள்ள

இந்திய அரசுகள் யூனியனில் ஓர் உறுப்பாக மாற்றியமைக்கப்படுவதாகும். மாகாணங்களுக்குள் இருந்த இந்திய அரசுகள் அம் மாகாணங்களுடன் கலந்து மறைந்துவிடுவது கலப்பாகும். இவ் விணைப்பு, கலப்புக் கொள்கைகளால் 600 இந்திய அரசுகள் ஒரு சில உறுப்பரசுகளாக இந்திய யூனியனில் இடம்பெற்றன. இவற்றுள் 216 இந்திய அரசுகள் மாகாணங்களுடன் கலந்து மறைந்தன. 61 இந்திய அரசுகள் இணைந்து இந்திய அரசாங்கத்தின் நேர்முக ஆட்சிக்குள் வந்தன. 275 இந்திய அரசுகள் ஐந்து புதிய உறுப்பு அரசுகளாக இருந்தன. எஞ்சி நின்ற ஐதராபாத், மைசூர், ஜம்மு-காஷ்மீர் என்ற மூன்றும் இந்த இணைப்பு, கலப்பு முறைகளுக்காளாகாமல் மிஞ்சின.

இவ்வித இணைப்பு வளர்ச்சியுறும்போது இந்திய அரசுகளிலும் அரசுகளின் யூனியன்களிலும், கூட்டாட்சியின் அதிகாரமும் நிதிமுறையும் பரவின; இந்திய அரசுகளில் சில ஜனநாயக முறையாட்சியைச் செயல்படுத்தின; இன்னும் சில சட்டசபைகளை அமைத்துச் செயல்பட்டன. எனவே, மாகாணங்களும், இந்திய அரசுகளும், இந்திய யூனியனில் சம அந்தஸ்துடைய உறுப்பரசுகளாயின.

இதுகாறும் பல மாகாணங்களும், இந்திய அரசுகளும் எவ்வாறு இணைந்தன எனக் கண்டோம். இவ்விணைப்பு முழுமையும் சீர்படவில்லை எனக் கருதிய மத்திய அரசாங்கம் அரசுகளின் சீரமைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தது. அச் சட்டம் பெருமளவில், இணைப்பைச் சீர்படுத்தத் துணை செய்தது.

மொழி, இனம், வரலாற்று மரபுகளால் இணைந்தனவும், கலந்தனவுமான இந்திய அரசுகள் இடைக்கால ஏற்பாடுகளாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனவே, 1949ஆம் ஆண்டில் நிறைவேறிய அரசியல் அமைப்பில் A பிரிவு, B பிரிவு, C பிரிவு அரசுகள் எனப் பலதரப்பட்ட நிலைகளையுடைய அரசுகள் யூனியனில் உறுப்புகளாக இடம்பெற்றன. பழைய பிரிட்டிஷ் இந்திய பத்து மாகாணங்களும் A பிரிவு அரசுகளாக அமைந்தன. இவைகளில் சில, இந்திய அரசுகளின் கலப்பால் உருவில் பெரியனவாகவும், இன்னும் சில, நாட்டுப் பிரிவினையால் சிறியனவாகவும் தோற்றமளித்தன. எல்லா A பிரிவு அரசுகளும் யூனியனில் முழு அந்தஸ்துடைய உறுப்பினவாயின.

இணைப்புகளின் பயனாக B பிரிவு அரசுகள் தோன்றின. அவைகளும் A பிரிவு அரசுகளைப்போல யூனியனில் சம அந்தஸ்துடையவை

யேனும், A பிரிவு அரசுகளைவிட ஒருபடி குறைவானவையே. ஏனெனில், இவை மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருப்பவையாகும். மேலும், A பிரிவு அரசுகளுக்குத் தலைவர்களாக கவர்னர்களிருக்க, இந்த B பிரிவு அரசுகளுக்கு ராஜப் பிரமுக் என்பவர்கள் தலைவர்களாகவிருப்பர்.

C பிரிவு அரசுகள், யூனியனின் உறுப்பரசுகள் ஆகா. இவை மத்திய அரசாங்கத்தின் நேர்முக ஆட்சிப் பகுதிகளாகும். இவைகள் பழைய பிரதம கமிஷனரின் மாகாணங்களைப் போன்றவைகளாகும். இவைகளில் சிலவற்றில் சட்டசபையும், பொறுப்புடைய அமைச்சர்களும் இருந்தாலும், சட்டசபையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த, யூனியன் நிர்வாகத் துறைக்கும் பாராளுமன்றத்துக்கும் அதிகாரம் உண்டு.

இந்திய நாட்டின் பகுதிகளாகிய D பிரிவு அரசுகளும் யூனியனைச் சேர்ந்தவையே. இவைகள் அந்தமான், நிக்கோபர் தீவுகளாம். இவைகள் மத்திய அரசாங்கத்தின் நேர்முக ஆட்சிக்கு உட்பட்டவை.

இத்தகைய பலதரப்பட்ட அந்தஸ்துகளையுடைய அரசுகள் போற்றத்தக்கனவாக இல்லை. இந் நிலைகளை மாற்றியமைக்க வேண்டுமென மக்கள் பெரிதும் விரும்பினர். எதிர்பாராவகையில் 1952-ல் A பிரிவு அரசாகிய மதராசிலிருந்து, தனித்த ஆந்திர அரசு ஒன்றைப் பிரித்து அமைக்க மத்திய அரசாங்கம் முடிவு செய்தது. அம் முடிவினையொட்டி, மொழிவழி அரசுகளை அமைக்க வேண்டுமெனும் கருத்தினை மக்கள் வலியுறுத்தினர். இச் சூழ்நிலையில் (1953-ல்) மத்திய அரசாங்கம் ஒரு கமிஷனை நிறுவி அரசுகளைச் சீரமைப்பதற்கு இயலும் கூறுபாடுகள்பற்றிய கருத்துகளை எடுத்துச் சொல்லுமாறு கேட்டுக்கொண்டது. இன்று நாம் காணும் அரசுகளின் அமைப்பு, இக் கமிஷனின் சிபார்சுகளையொட்டியே காணப்பட்டாலும், இத்தகைய சீரமைப்புக் கருத்துகள் பல காலமாகப் பலராலும் ஆராயப்பட்டவைகளே.

1918-ல் மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கையில் மாகாணங்களின் சீரமைப்புபற்றிய கருத்துகள் காணப்பட்டன. மாகாணங்களுக்குள் உப மாகாணங்கள் அமைக்கும் கருத்தினை அவ்வறிக்கை குறிப்பிட்டது. 12 ஆண்டுகளுக்குப் பின் பிரிட்டிஷ் அரசாங்கம் மொழிவழி மாகாணச் சீரமைப்புபற்றித் தனது அரைகுறையான ஆதரவைத் தெரிவித்தது. 1933-34-ல் சிந்து மாகாண அமைப்பு இக் கருத்திற்கு உயிரூட்டியது.

இந்திய தேசிய காங்கிரசும் மொழிவழி மாகாணச் சீரமைப்பு பற்றித் தனது கருத்தை வற்புறுத்தி வந்திருக்கிறது. 1928-ல் கூடிய சர்வகட்சி மாநாடும் இக் கருத்திற்கு ஆதரவு காட்டியது.

அரசியல் நிர்ணய சபை, சட்டசபையாக இயங்கியபொழுது இதுபற்றி ஆராய்ந்தது. நாட்டுப் பிரிவினையால் ஏற்பட்ட விளைவுகளைக் கண்டு, காங்கிரசு இக் கருத்தினை வலியுறுத்தியதில் சில மாற்றங்கள் காணப்பட்டன. இருப்பினும் இதுபற்றி ஆராய 1947-ல் தார் கமிஷன் (Dhar Commission) அமர்த்தப் பட்டது. அப்பொழுது இருந்த நிலையில் தார் கமிஷன் மொழிவழி மாகாண அமைப்பிற்கு ஆதரவு கொடுக்கவில்லை.

1948-ல் ஜெய்பூரில் கூடிய காங்கிரசுக் கட்சி ஜவஹர், வல்லபாய் பட்டேல், பாட்டாபி சீத்தாராமய்யா கமிட்டியை நியமித்தது. இதன் அறிக்கை மொழிவழி மாகாணங்கள்பற்றிய அச்சத்தை வெளியிட்டது. இருப்பினும், பொதுமக்கள் இதன் விளைவுகளை உணர்ந்துகொண்டபின் ஆராயலாம் எனக் கூறியது.

மற்றக் கட்சிகளும் மொழிவழி மாகாணக் கருத்தையொட்டிச் செயல்பட்டன.

இவ்வாறு ஏற்கெனவே வெளியான கமிஷன்களின் அறிக்கைகள், தீர்மானங்கள், கருத்துகள் ஆகியவை அரசுகளின் சீரமைப்புக் குழுவிற்குப் பெரிதும் உதவின.

இக் கமிஷன் இந்தியாவின் ஒற்றுமை, பாதுகாப்பு, மொழி, பண்பாடு, நிதி, பொருளாதாரம், தேசீய முன்னேற்றத் திட்டங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, தன் சிபார்சுகளை வெளியிட்டது. இச் சிபார்சுகளை மேற்கண்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு வெளியிட்டதெனினும், அவற்றிற்கும் மேலாக மக்கள் விருப்பம், நாட்டு நலம் என்பனவற்றையே உயிர்க் கொள்கைகளாகக் கொண்டது.

கமிஷன் செய்த சிபாரிசுகளில் குறிப்பிடத்தக்கன வருமாறு

(1) A, B, C பிரிவு அரசுகளை நீக்கிவிட்டு ஒரே அந்தஸ்துள்ள அரசுகளை அமைத்தல் ;

(2) B பிரிவு அரசுகளுடன் இந்திய யூனியன் செய்து கொண்ட சில சிறப்பு ஒப்பந்தங்களை நீக்கிவிடுதல். ராஜப்பிரமுக் பதவிகளை நீக்கிவிடுதல் ;

(3) போதிய நிதி வசதியின்மையாலும் அரசியல் அமைப்புச் சிக்கல்களாலும் அல்லலுறும் C பிரிவு அரசுகளை (டெல்லி, மணிப்பூர். அந்தமான், நிக்கோபர் தீவுகள் நீங்கலாக) அண்மையிலுள்ள அரசுகளுடன் இணைத்தல் ;

இத்தகைய சிபாரிசுகளால் 16 அரசுகளும், மத்திய அரசாங்க ஆட்சிக்குட்பட்ட 3 பிரதேசங்களும் அமைந்தன.

இக் கமிஷனின் அறிக்கை வெளியானதும் நாட்டில் குழப்ப நிலை உண்டாயிற்று. பெருத்த மாற்றங்களைச் செய்ததால் பலருடைய நலன்கள் பாதிக்கப்பட்டன. எனவே, போராட்டத்தாலும், வன்முறையாலும் மக்கள் ஆட்சியாளரைப் பணிய வைக்கலாம் என நினைத்தனர் கமிஷனின் சிபாரிசுகளிலும் சில குறைபாடுகள் இருந்தன. சிபாரிசுகள் பலதரப்பட்ட அடிப்படைக் கருத்துகளைக் கொண்டதாகத் தோன்றினும் சீரமைப்புப் பெற்ற அரசுகள் மொழிவழி அரசுகளாகவே காணப்பட்டன.

இத்தகைய குறைபாடுகளை நீக்கக் கமிஷன் சில வழி வகைகளைக் கூறியது. அவை : மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகள், பாதுகாப்புச் சேவாவர்க்கங்களின் இணைப்பு, நதி பாயும் பகுதிகள்பற்றிய சட்டம், நீர்ப் பங்கீட்டுத் தகராறுகள், பிரதேசக் குறைபாடுகள். நலவளர்ச்சிக் கழகங்கள், பிரதேசப் பொருளாதாரக் குறைபாடுகள், தொழிலியல் நலத் திட்டங்கள் முதலியவற்றைக் கண்காணிக்க ஒரு நிறுவனம் அமைத்தல் போன்றவையாம்.

கமிஷனின் அறிக்கையைப் பாராளுமன்றம் நெடுநாள் ஆராய்ந்தது ; அரசுகளின் சட்டசபைகளிலும் அறிக்கை ஆராயப் பட்டது. யூனியன் அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டோரின் நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, அரசாங்கம் தனது கருத்துகளை அரசுகளின் சீரமைப்பு மசோதாவில் தெரிவித்தது. இச் சீரமைப்பால் அரசியல் அமைப்பும் திருத்தப்படவேண்டியதாயிற்று. மசோதாவும் திருத்தமும் பாராளுமன்றத்தில் 1956-ல் நிறைவேறி அதே ஆண்டு நவம்பர் மாதம் சீரமைப்புச் சட்டம் செயல்படத் துவங்கியது. அதன்படி 14 அரசுகளும் 6 மத்திய ஆட்சிப் பகுதிகளும் உருவாயின. அதன்பின் 1960-ல் ஓரரசாக இருந்த பம்பாய் மகாராஷ்டிரம், குஜராத் என ஈரரசாகப் பிரிந்தது. 1961-ல் போர்ச்சுகீசிய ஆட்சியின்கீழிருந்த கோவா, டையூ, டாமன் ஆகியவை மத்திய ஆட்சிப் பகுதியாகச் சேர்ந்தன. ஃபிரெஞ்சு அரசாங்கத்திற்குட்பட்டிருந்த பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனும் ஆகிய பகுதிகள் சட்டப்படி இந்தியாவுடன் இணைந்தன.

1962 ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தின்படி நாகாலாந்து அமைக்கப்பெற்றது. அஸ்ஸாம் அரசின் மாவட்டங்களாகிய நாகர் மலைகளும், முற்காலத்திய வடகிழக்கு எல்லைப்பகுதியாகிய டியுன்சாங் பிரிவையும் இது கொண்டிருக்கிறது. இப்பொழுது இந்திய யூனியனின் ஓர் உறுப்பரசாக இருக்கிறது.

தாதர், நாகர் ஹாவாலி என்னும் போர்த்துகீசிய திட்டுகளும் இந்திய ஆட்சிப்பரப்புகளாயின.

பாராளுமன்றத்தின் சட்டத்தால் 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பஞ்சாப், மொழி வழியாக பஞ்சாப், ஹரியாஞ என இரண்டு அரசுகளாகச் சீரமைக்கப்பெற்றது. இச் சீரமைப்பிற்கு முன் பஞ்சாப்பின் தலைநகராகிய சண்டிகட்டை இரு அரசுகளும் பெற விரும்பிப் போராட்டம் நடத்திச் சிக்கல் உண்டாக்கின. நிலையைச் சமாளிக்க மத்திய அரசாங்கம் சண்டிகட்டை யூனியன் ஆட்சிப் பரப்பாக்கி இரண்டு அரசாங்கங்களும் தலைநகரை இங்கு வைத்துக்கொள்ள வழி செய்தது. ஆனால், இம் முடிவை இரண்டு அரசுகளும் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

எனவே, இன்று நம் இந்திய யூனியனில் 17 அரசுகளும், 10 யூனியன் ஆட்சிப் பரப்புகளும் இருக்கின்றன.

**சீரமைப்புபெற்ற அரசுகள்**

1. ஆந்திரப்பிரதேசம்
2. அஸ்ஸாம்
3. பீகார்
4. குஜராத்
5. ஹரியாஞ
6. ஜம்மு-காஷ்மீர்
7. கேரளா
8. தமிழ் நாடு
9. மத்தியப்பிரதேசம்
10. மகாராஷ்டிரம்
11. மைசூர்
12. நாகாலாந்து
13. ஒரிசா
14. பஞ்சாப்
15. இராஜஸ்தானம்
16. உத்தரப்பிரதேசம்
17. மேற்கு வங்காளம்

**யூனியன் ஆட்சிப்பரப்புகள்**

1. டெல்லி
2. இமாலயப்பிரதேசம்
3. மணிப்பூர்
4. திரிபுரா
5. அந்தமான், நிக்கோபர்
6. லக்கத் தீவு, மினிகாய், அம்மிஸன் தீவு.
7. கோவா, டையூ, டாமன்
8. தாதர், நாகர் ஹவாலி
9. பாண்டிச்சேரி
10. சண்டிகட்

## யூனியனும் அரசுகளும்

### சட்டமியற்றற்குரிய அதிகாரப் பங்கீடு

கூட்டாட்சியமைப்பு முறையில் அதிகாரப் பங்கீடு, இன்றியமையாததொரு கூறாகும். கூட்டாட்சியமைப்பிற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் அமெரிக்க அரசியலமைப்பு இவ்வதிகாரப் பங்கீட்டைச் சிறப்பாகவும், சரிநுட்பமாகவும் செய்திருக்கிறது என்று கூறுவர். இதையொட்டி எழுந்த மற்றக் கூட்டாட்சியமைப்புகளிலும் இவ்வதிகாரப் பங்கீட்டினை ஒருசில மாறுபாடுகளுடன் புகுத்தியிருக்கின்றனர். ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளின் கூட்டாட்சியமைப்பு முறையை நமது அரசியலமைப்பாளர்களும் பயன்படுத்தியிருக்கின்றனர். குறிப்பிட்ட ஒரு சில அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திற்கு உறுப்பரசுகள் வழங்கி, எஞ்சிய அதிகாரங்களைத் தாம் வைத்துக்கொள்ளுதல் ஒரு முறையாகும். மொத்த அதிகாரங்களில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரங்களை மத்திய அரசாங்கமும், தலச்சார்புடைய அதிகாரங்களை உறுப்பரசுகளும் பிரித்துக்கொள்ளுதல் மற்றொரு வகையாகும். மத்திய அரசாங்கத்திற்குரிய அதிகாரங்கள் தனித்தும் உறுப்பரசுகளுக்குரிய அதிகாரங்கள் தனித்தும் இரு வேறு பட்டியலாகவும், இரண்டிற்கும் பொதுப்படையான நாட்டமுள்ள அதிகாரங்களைப் பொதுப்பட்டியலாக வைத்துக்கொள்வது மூன்றாம் வகையாகும்.

நமது அரசியலமைப்பாளர்கள், இம் மூன்றாம் வகை அதிகாரப் பங்கீட்டு முறையினையே மேற்கொண்டனர். அரசாங்க நடவடிக்கைகள் அனைத்தையும் உள்ளத்தில் கொண்டு அமைந்த அதிகாரங்களை, 97 இனங்கள் கொண்டதொரு மத்தியப் பட்டியலென்றும், 66 இனங்கள் கொண்டதோர் அரசுகளின் பட்டியலென்றும், 47 இனங்கள் கொண்டதொரு பொதுப் பட்டியலென்றும் மூன்று வகையாகப் பிரித்தனர். இம் மூன்று பட்டியல்களிலும் அடங்கா அதிகாரங்கள் மத்திய அரசினையே சாரும்.

மத்தியப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் மிகச் சிறப்பானவை பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், செய்திப் போக்குவரத்துகள், தேசிய பொருளாதாரம், உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகம், நிதி, வரிவிதிப்பு முதலானவையாகும்.

அமைதியைக் காத்தல், சமூக நலம், விவசாய வளர்ச்சி ஆகியவைகளும், தொழிலும், வாணிகமும், பொதுப்பணியும், பல வகை அதிகாரங்களும், நிதியும், வரிவிதிப்பும் அரசுப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளவைகளில் சிறப்பானவைகளாகும்.

சட்டமுறைகள், பொருளாதாரத் திட்டம், சமூகக் காப்பு, தொழில், வாணிகம், பல்வகை அதிகாரங்கள் முதலியவை பொதுப் பட்டியலில் சிறப்பான இனங்களாகும்.

பாராளுமன்றம், மத்தியப் பட்டியலுள் குறிப்பிட்ட அதிகாரங் களையொட்டிச் சட்டம் இயற்றலாம். அரசுகளின் சட்டசபைகள் இரண்டாவது பட்டியலிலுள்ள அதிகாரங்களையொட்டிச் சட்டம் இயற்றலாம். பொதுப்பட்டியலில் உள்ள அதிகாரங்களையொட்டிச் சட்டமியற்ற இரண்டிற்கும் உரிமை உண்டு. பொதுப்பட்டியலை யொட்டிச் சட்டமியற்றுங்கால் கருத்து வேறுபாடு எழுந்தால், அப்போது பாராளுமன்றம் ஆக்கும் சட்டமே நிலவும். பொதுப் பட்டியலையொட்டி அரசுகளின் சட்டசபை நிறைவேற்றிய ஒரு சட்டம் பாராளுமன்றச் சட்டத்திற்கு முரணானதாகவிருந்தும், அச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்றால், ஜனாதிபதி யின் இசைவினைப் பெறவேண்டும்.

மூன்று பட்டியல்கள் தனித்தனியாக ஆக்கப்பட்டிருந்தாலும், சில சமயம் பாராளுமன்றம், அரசுப்பட்டியலில் காணப்படும் இனங் களைத்தான் சேர்த்துக்கொள்ளும் நெகிழ்ச்சித் தன்மையை இப் பங்கீட்டு முறையில் காணலாம். இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட அரசுகளின் வேண்டுகோளுக்கிணங்கிப் பாராளுமன்றம், அரசுப் பட்டியலின் இனங்களையொட்டிச் சட்டங்களை இயற்றலாம். அச் சட்டங்களைச் செயல்படுத்த, அரசுகளின் சட்டசபைகள் இசையவேண்டும் (பிரிவு 248).

அரசுப் பட்டியலின் இனங்களையொட்டிச் சட்டமியற்றும் அதிகாரத்தை, ராஜ்யசபை தனது மூன்றில் இரு பங்கு பெரும் பான்மையான வாக்குகளால், மக்கள் சபைவழிப் பாராளுமன்றத் திற்கு அளிக்கலாம் (பிரிவு 249). இம் முறையையொட்டிப் பாராளுமன்றம் இயற்றும் சட்டம் ஓராண்டுக் காலமே நிலவும். தொடர்ந்து நிலவ, மீண்டும் மேற்சொன்ன முறையே பாராளு மன்றம் சட்டமியற்றவேண்டும். இத்தகைய அதிகாரம் வேறெந்தக் கூட்டாட்சிப் பாராளுமன்றத்திற்கும் இல்லை.

பிரிவு 250-ன்படி அரசுப் பட்டியலின் எல்லா இனங்களை யொட்டியும், இடர்க்காலங்களில் பாராளுமன்றம் சட்ட மியற்றலாம்.

**நிர்வாக அதிகாரப் பங்கீடு**

யூனியனின் நிர்வாக அதிகாரம் அதன் சட்டசபை அதிகாரத்தை யொட்டியே இருக்கும். நிர்வாக அதிகாரத்தை லாக் என்பார், 'சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரம்' என்று விளக்கி இருக்கிறார். இவ் விளக்கத்தை அரசியல் வல்லுநர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதே விளக்கத்தைதான் நமது அரசியலமைப்பாளர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். யூனியன் அதிகாரம், பாராளுமன்றம் சட்டமியற்றும் பொருள்களுக்கும் நீளும் (பிரிவு 73). மேலும் யூனியன், உடன்பாடுகளையும் ஒப்பந்தங்களையும் நிறைவேற்றும் அதிகாரம் பெற்றிருக்கிறது.

அரசுகளின் சட்டசபைகள் சட்டமியற்றுகின்ற துறைகளில் அரசுகளின் நிர்வாக அதிகாரம் வியாபிக்குமென 162ஆவது பிரிவு குறிப்பிடுகிறது. யூனியன் பாராளுமன்றமும் அரசுகளின் சட்டசபைகளும் பொதுப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளவை பற்றிச் சட்டமியற்றலாமென முன்னர்ப் பார்த்தோம். இதனையும் பார்க்கும்பொழுது முரணாகத் தோன்றலாம். ஆனால், இதனை அரசியலமைப்புத் தெளிவாக்குகிறது. அதாவது, யூனியன் பாராளுமன்றம் பொதுப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள வகைகளில் எதுபற்றியேனும் சட்டமியற்ற அதிகாரமுண்டு. ஆனால், அச் சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரத்தினை அரசியலமைப்பு அரசுகளிடம் விட்டிருக்கிறது. எனினும், பாராளுமன்றம் விரும்பினால் அரசுகளிடமிருந்து இந்த நிர்வாக அதிகாரத்தை ஒரு சட்டத்தால் அது மேற்கொள்ளலாம்.

யூனியன் அரசாங்கம் தனது நிர்வாக அதிகாரத்தை ஓர் உறுப்பரசிற்கு ஒப்படைக்கலாம். இவ்வாறு ஒப்படைக்கப்படும் அதிகாரம் யூனியன் அரசாங்கத்திற்கேயுரியதாகவும், பொதுப் பட்டியலையொட்டியதாகவும் இருக்கலாம் [பிரிவு 258 (1), (2)].

யூனியன் அரசாங்கம் உறுப்பரசுகளுக்குச் சில கட்டளைகளை இடுவதற்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது. யூனியன் சட்டங்களை அரசுகள் ஏற்றுச் செயலாற்றவேண்டும். பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களோடும் அரசு செயல்படும். ஏற்கெனவேயுள்ள சட்டங்களோடு இணங்கி நடப்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வோர் அரசின் நிர்வாக அதிகாரம் செலுத்தப்பட வேண்டும் (பிரிவு 256). இதையொட்டி யூனியன் அரசாங்கம் அரசுகளுக்குக் கட்டளை பிறப்பிக்கலாம். அரசுகள் தம் நிர்வாக அதிகாரத்தைச் செலுத்தும்போது யூனியனின் நிர்வாக அதிகாரத்தைச் செலுத்துவதற்குத் தடையோ, பாதகமோ ஏற்படாதபடி செலுத்தவேண்டும்.

தேசிய ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது என அறிவிக்கும் போக்குவரவு சாதனங்களை அமைக்கவும், பராமரிக்கவும், ஓர் அரசிற்குள் இருக்கும் இருப்புப் பாதைகளைப் பாதுகாப்பதற்கான செயல்களைப்பற்றிக் கட்டளையிடவும் யூனியன் அரசாங்கம் அதிகாரம் பெற்றிருக்கிறது. இக் கட்டளைகளை ஓர் அரசு நிறைவேற்றுகையில் செலவாகும் தொகையை யூனியன் அரசாங்கம் அரசிற்குக் கொடுக்கவேண்டும். பல அரசுகளிலுள்ள ஓர் ஆற்றில் அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்கில் உள்ள நீரின் உபயோகம், பங்கீடு அல்லது கட்டுப்பாடு ஆகியவைபற்றிய விவாதத்திலோ பிராதிலோ தீர்ப்பு அளிப்பதற்காகப் பாராளுமன்றம் சட்டத்தினால் ஏற்பாடு செய்யலாம். இவ் வாதம் அல்லது பிராதைப்பற்றித் தலைமை நீதி மன்றமாவது, வேறெந்த நீதிமன்றமாவது, விசாரணை அதிகாரம் செலுத்தலாகாது எனப் பாராளுமன்றம் சட்டமியற்றலாம் [பிரிவு 262 (1), (2)].

யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையேயும் அல்லது அரசுகளுக்குமிடையேயும் நல்லுறவு நிலவச்செய்யவும், ஆட்சிமுறையை ஒழுங்குபடுத்தவும் ஜனாதிபதி அனைத்தரசுக் குழுவொன்றைத் தேவையான போது கூட்டலாம். ஆனால், இக் குழுவை ஜனாதிபதி இன்றுவரை கூட்டவில்லை. கூட்டவேண்டிய நிலையும் ஏற்படவில்லை.

யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே ஆட்சியியல்பற்றிய பூசல்கள் ஏற்படாதிருக்க, நமது அரசியலமைப்பாளர்கள் விரிவாகவும் தெளிவாகவும் உறவு முறைகளை வகுத்தளித்திருக்கின்றனர்.

# 8. குடிமை

குடிமைபற்றி முடிவு செய்ய அரசியல் நிர்ணய சபை இரண்டு ஆண்டுகளுக்குமேல் செலவிட்டது. இந்தியப் பிரிவினையாலும் வெளிநாடுகளில் வசித்துவந்த இந்தியர்கள் நிலையாலும் குடிமை பற்றிய முடிவுகளை உடனடியாகச் செய்யமுடியவில்லை. 1947-க்கும் 1949-க்கும் இடைப்பட்ட காலத்தில் இலட்சக்கணக்கான மக்கள்—பாகிஸ்தானிலிருந்து இந்துக்களும், சீக்கியர்களும், இந்தியாவிலிருந்து முஸ்லீம்களும்-குடிபெயர்ந்துகொண்டிருந்தனர். வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் இந்தியர்கள், விடுதலைபெற்ற இந்தியாவில் வந்து வசிக்க விரும்பலாம். இவர்களனைவருக்கும் பொருந்துமாறு குடிமைபற்றிய பிரிவுகளைத் தயாரிக்க காலம் அதிகமாய்த் தேவைப்பட்டது. நீண்ட விவாதங்களுக்குப் பிறகு பிரிவுகள் 5 முதல் 11 முடிய தயாரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டன.

5 ஆவது பிரிவுப்படி, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத் தில் இந்தியாவில் நிலையாக வாழ்ந்து வரும் ஒவ்வொருவருக்கும் குடியுரிமை வழங்கப்படுகிறது. குடிமைபற்றிய நிலையான ஒரு சட்டத்தை இயற்றுவது இப் பிரிவின் நோக்கமன்று. இதுபற்றிச் சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு விடப்பட்டிருக் கிறது. எனவே, அரசியல் அமைப்பின் தொடக்க காலத்தில் இந்தியாவில் நிலையாக வாழ்ந்துவரும் ஒவ்வொருவரும் :

(1) இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் பிறந்தவராய், அல்லது

(2) அவருடைய பெற்றோர்களில் ஒருவர் இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் பிறந்தவராய், அல்லது

(3) அத்தகைய தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் சாதாரணமாய் வசித்தவராய், இருந்தால் இந்தியாவின் குடியாவர்.

அரசியல் அமைப்பு செயல்படத் தொடங்கியதும் இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் இந்திய மரபினர்கள், தாங்கள் வசிக்கும் நாடுகளில் உள்ள இந்திய ராஜதந்திரப் பிரதிநிதி அல்லது ராஜ்யத் தூதரிடம் இந்தியாவின் குடியெனப் பதிவு செய்துகொள்ளலாம்.

பிரிவுகள் 6-ம் 7-ம் இந்தியாவில் வசித்துவந்தவர்கள் பாகிஸ்தானில் குடியேறியும், பாகிஸ்தானில் வசித்துவந்தவர்கள் இந்தியாவில் குடியேறியும் உள்ளவர்களைப் பற்றியனவாகும். பாகிஸ்தானிலிருந்து இந்தியாவில் குடியேறியவர்களை 1948ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் தேதிக்கு முன் வந்தவர்கள் எனவும், அந்தத் தேதிக்குப் பின் வந்தவர்கள் எனவும் இரு வகையாகப் பிரிக்கலாம். அதன்படி குறிப்பிட்ட தேதிக்கு முன் வந்தவர்கள் இந்திய அரசியல் அமைப்புத் தொடக்கத்தில் இந்தியக் குடிகள் எனப் பதிவு செய்துகொள்ளலாம். இப் பிரிவுகள், பாகிஸ்தானிலிருந்து கூட்டமாக இடம் பெயர்ந்து வந்தவர்கள் அனைவரையும் இன வேறுபாடில்லாமல், இந்தியக் குடிகளாய்ப் பதிவு செய்து கொள்ள உதவின.

பாகிஸ்தானில் குடியேறிய இந்தியர்கள் மறுபடியும் இந்தியாவில் நிரந்தரமாய்த் தங்கி வசிக்க விரும்பினல் அவர்கள் இந்தியக் குடியுரிமை பெற 7ஆவது பிரிவு வகை செய்கிறது. பாகிஸ்தானுக்குச் சென்றவர்கள் மறுபடியும் இந்தியாவில் வசிக்க 'அனுமதிச் சீட்டு முறை'யை இந்திய அரசாங்கம் 1949ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் தேதிக்குப் பின் வழங்கியது. அப்படி இந்தியாவில் தங்கியவர்கள் இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் குடியேறியவர்களாகக் கருதப்பட்டனர்.

தேசிய இனங்கள்பற்றிய சட்டத் தொகுப்பை வழங்குவது அரசியல் நிர்ணய சபையின் நோக்கமன்று என்பது மேற்கண்ட பிரிவுகளிலிருந்து நன்கு விளங்கும். இந்திய அரசியல் அமைப்பு ஒரு குடியரசமைப்பாகையால், அதன் பல அங்கங்களுக்குமான தேர்தல் முறை இருந்துவரும். இத் தேர்தல்களில் கலந்து கொள்வோர் இந்தியக் குடிகளாக இருக்கவேண்டும். எனவே, இந்திய அரசியல் அமைப்பின் தொடக்கத்தில் குடிகளின் நிலையைத் திட்டவட்டமாகக் குறிப்பிட வழி செய்யவேண்டியதாயிற்று. இவ் வழிமுறைகள் இல்லையென்றால் பிரதிநிதித்துவ நிறுவனங்களை உருவாக்கவும், பொறுப்புள்ள பதவிகள் வகிப்பவர்கள் தகுதிபற்றி முடிவு செய்யவும் குடியரசு வகை செய்யமுடியாதுபோகலாம். எனவேதான், நாட்டியல்பிற்கேற்றவாறு குடியுரிமைபற்றிய

சட்டங்களை இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. குடியுரிமை வழங்கச் சட்டமியற்றுவதுபோல் குடியுரிமையை நீக்கவும் சட்டங்கள் செய்யலாம்.

9ஆவது பிரிவுப்படி பிற நாட்டுக் குடியுரிமையை ஒருவர் இசைந்து பெறுவாராயின் அவர் இந்தியக் குடியுரிமையை இழந்துவிடுவார்.

அரசியலமைப்பு இந்தியா முழுமைக்கும் ஒரே குடியுரிமையை வழங்கியிருக்கிறது. விடுதலைக்குமுன் பிரிட்டிஷ் இந்தியக் குடிகள் என்றும், இந்திய அரசுக் குடிகள் என்றும் பலதரப்பட்டனவாக இருந்தன. அரசியலமைப்பு, அம் மாறுபட்ட அந்தஸ்துகளை நீக்கிவிடுகிறது. இதனால் இந்தியாவின் ஒருமைப்பாடு உயர்கிறது. இதற்குமுன் அரசுகளுக்கிடையே இருந்துவந்த செயற்கைத் தடைகள் நீங்கி, அவைகளுக்கிடையே தடையில்லா வாணிக வளர்ச்சிக்கு வாய்ப்பும் வசதியும் பெருகியிருக்கின்றன.

அரசியலமைப்பின் 11ஆவது பிரிவையொட்டிப் பாராளுமன்றம் விரிவானதொரு குடியுரிமைச் சட்டத்தை 1955ஆம் ஆண்டு இயற்றிற்று. இதன்படி ஐந்து விதங்களில் குடியுரிமை பெறலாம்.

1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதியோ அல்லது அதற்குப் பிறகோ ஒருவர் இந்தியாவில் பிறந்திருந்தால் அவர் இந்தியக் குடியாவார்.

1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதியோ அல்லது அதற்குப் பிறகோ ஒருவர் இந்தியாவிற்கு வெளியில் பிறந்திருந்தாலும் அவர் பிறந்த நாளில் அவரின் தந்தை இந்தியக் குடியாக இருந்திருந்தால் அவர் இந்தியக் குடியாகலாம்.

இந்தச் சட்டத்தின்படியோ அல்லது இந்திய அரசியலமைப்பின்படியோ ஒருவர் இன்னும் இந்தியக் குடியாகவில்லையென்றால் அவர் பதிவு முறையில் இந்தியக் குடியாகலாம்.

இந்தியாவிலேயே தங்கி வசித்த ஒருவர் இந்திய அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக் குடியுரிமையைப் பெறலாம்.

ஏதாவதொரு நிலப்பகுதி இந்தியாவுடன் சேர்ந்தால், இந்திய அரசாங்கம் ஓர் ஆணையால், அப் பகுதி மக்களை இந்தியக் குடிகளாக்கலாம்.

காமன்வெல்த் நாடுகளின் குடிமக்கள் இந்தியக் குடியுரிமை பெறலாம்.

குடியுரிமையை நீக்கவும், இச் சட்டம் சில வழிவகைகளைக் கூறியிருக்கிறது.

இச் சட்டம், மிகத் தாராள மனத்துடன் குடியுரிமை பெற எளிதான வழிமுறைகளைக் கூறியிருக்கிறது.

# 9. அடிப்படையான உரிமைகள்

நமது அரசியலமைப்பில் இவ் வடிப்படையான உரிமைகள் பற்றிய பகுதியே மிகச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அரசியலமைப்பின் முகப்பு கூறும் உறுதிமொழிகளை நடைமுறையில் செயல்படுத்தக்கூடியனவாக இவைகள் அமைந்திருக்கின்றன. இவைகள் செயல்படும்பொழுது நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிறுவனங்கள் புத்துயிர் பெறுவதோடு விரைவிலேயே ஒரு புதிய சமுதாயம் உறுவாகலாமென்று அரசியலமைப்பாளர்கள் கருதினர். இக் கருத்தையொட்டியே, அடிப்படையான உரிமைகளையும், நெறிசெய் கோட்பாடுகளையும் அரசியலமைப்பில் சேர்த்தனர். அமெரிக்க, ஃபிரெஞ்சுப் புரட்சிக் கருத்துகள் நம் அரசியலமைப்பாளர்களுக்கு முன்னோடிகளாய் நின்று உதவின எனலாம்.

அரசியலமைப்பாளர்கள், அடிப்படையான உரிமைகளைத் தேர்ந்து வகைப்படுத்தினர். அவற்றைப் பொது அல்லது அரசியல் உரிமைகளென்றும் தனி அல்லது தனிமனித உரிமைகளென்றும் இருவகைப்படுத்தினர். ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்தலும், அவர்களின் நடத்தைக்கு அவர்களையே பொறுப்புடையோராக்குதலும், சட்டமியற்றுவதில் பங்கு பெறலும், படைக்கலம் தரித்தலும் மக்களின் அரசியலுரிமைகளாகும். தனியுரிமைச் சுதந்திரம், மதசுதந்திர உரிமை, பேச்சு, கருத்து வெளியீட்டுரிமை, சமத்துவ உரிமை, பண்பாடு, கல்வி இவைபற்றிய உரிமை, சொத்துரிமை இவைபாற்பட்ட அனைத்தையும் தனியுரிமைகளென அரசியலமைப்புக் கூறுகிறது.

இன்புற்றிருத்தலை வாழ்க்கையின் குறிக்கோளெனக் கொண்டால் இன்பம் பெறவும், அதைப் பயனுடன் துய்க்கவும், இவ் வடிப்படையான உரிமைகள் இன்றியமையாதனவாகும். எனவேதான் அரசியலமைப்பு அடிப்படையான உரிமைகளை, மறுப்பிலாச்

சிறப்புரிமைகளெனக் கூறுகிறது. இவ்வுரிமைகளை இழந்தோர், சட்டவாயிலாக இழந்த உரிமைகளை மீளவும் பெறமுடியும். இதற்கு அரசியலமைப்பின் 32ஆவது பிரிவு வகை செய்திருக்கிறது. இப் பிரிவே நமது அரசியலமைப்பின் உயிர்நாடியாகும். மக்களின் அடிப்படையான உரிமைகளைக் கவரும் வகையில் அரசாங்கம் சட்டமியற்றிச் செயல்படுத்த முனைந்தால், அதை மக்கள் சுட்டிக்காட்டி நீதிமன்றத்தில் வழக்காடினுல், நீதிமன்றம் சட்டத்தை ஆய்ந்து, அது அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ள அடிப்படையான உரிமைகளுக்கு முரணுயிருப்பின் அச் சட்டம் செல்லாதெனக் கூறும். இம் முறையிலிருந்தும் அடிப்படையான உரிமைகளுக்கு நீதிமன்றம் அரணுதலைக் காணலாம்.

அரசியலமைப்பு அடிப்படையான உரிமைகளை, ஏழு வகையாகப் பிரித்துக் கூறுகிறது. 1. சமத்துவ உரிமை. 2. சுதந்திர உரிமை. 3. சுரண்டப்படாமலிருப்பதற்கான உரிமை. 4. மத சுதந்திர உரிமை. 5. பண்பாடு, கல்வி இவைபற்றிய உரிமைகள். 6. சொத்துரிமை. 7. அரசியலமைப்பு தரும் பரிகார உரிமை. இவை தவிர வேறு சில உரிமைகளுமிருக்கலாம். ஆனுல், அவற்றை அரசியலமைப்பு அடிப்படையான உரிமைகளென இங்குச் சேர்க்கவில்லை.

12ஆவது பிரிவு, அரசு (ராஜ்யம்) என்னும் சொல்லுக்கு வரையறை கூறுகிறது. அதன்படி 'அரசு' என்பது இந்திய அரசாங்கத்தையும் (நிர்வாகத்துறை), பாராளுமன்றத்தையும், ஒவ்வோர் அரசின் அரசாங்கத்தையும், சட்டசபையையும், இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள அல்லது இந்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழுள்ள சகல ஸ்தல அல்லது மற்றைய அதிகார நிலையங்களையும் கொண்டதாகும். இங்கு மாவட்டக் கழகங்களையும், வட்டக் கழகங்களையும், கிராமப் பஞ்சாயத்துகளையும், நகராட்சி மன்றங்களையும் ஸ்தல அதிகார நிலையங்களெனப் பொருள் கொள்ளவேண்டும். சுருங்கக் கூறின் சட்டமியற்றிச் செயல்படுத்தும் நிறுவனங்களனைத்தையும் ஸ்தல நிலையங்கள் என்று பொருள் கொள்ளலாம்.

அடிப்படையான உரிமைகளோடு முரண்படும் அல்லது அவற்றைக் குறைபடுத்தும் சட்டங்கள் செயற்பாடிழக்கும் என்று பிரிவு 13 குறிப்பிடுகிறது.

பிரிவு 13-ன் (3) (அ) பகுதி, 'சட்டம்' என்பதில் இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலே சட்டத்தின் திறனுடைய அவசரச் சட்டம், உத்தரவு, துணைச்சட்டம், விதி, ரெகுலேஷன், விளம்பரம், வழக்கம், பழக்கம் இவைகளடங்குமெனக் கூறுகிறது.

பிரிவு 13 (2) அடிப்படையான உரிமைகளைப் பறிக்கும் அல்லது சுருக்கும் சட்டம் எதையும் ஓர் அரசு (இராஜ்யம்) இயற்றலாகாதெனவும், அப்படி மீறி இயற்றப்படும் சட்டம் எதுவும், அப்படி மீறிய அளவிற்குச் செயற்பாடிழக்குமெனவும் குறிப்பிடுகிறது.

எனவே, இப் பிரிவுகளால், அடிப்படையான உரிமைகளின் செயற்பாட்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்டிருத்தலையும் 'அரசு', 'சட்டம்' இவற்றின் எல்லைகள் வரையறை செய்யப் பட்டிருத்தலையும் காணலாம்.

**(1) சமத்துவ உரிமை:** இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள் சட்டத்தின் முன்னிலையில் சமத்துவத்தையாவது சட்டங்களின் சம பாதுகாப்பையாவது அரசு எவருக்கும் மறுக்கலாகாதென 14ஆவது பிரிவு குறிப்பிட்டிருக்கிறது. இப் பிரிவில் குறிப்பிட் டிருக்கும் 'சட்டத்தின் முன்னிலையில் சமத்துவம்' என்பதும் 'சட்டங் களின் சம பாதுகாப்பு' என்பதும் முறையே பிரிட்டிஷ் அமெரிக்க அரசியலமைப்புகளில் காணப்படுவனவாகும். நம் அரசியலமைப் பாளர்கள் இவ்விரு கருத்துகளையும் இணைத்து மக்கள் 'சம அந்தஸ்தும் சம வாய்ப்பும்' பெறவேண்டிய நோக்கத்தை உறுதிப் படுத்தியிருக்கிறார்கள். இதனால் சட்டங்கள் செயல்படும்போது எவரையும் பாதிக்குமளவிற்கு வேற்றுமை பாராட்டலாகா தென்பது தெளிவு. அரசு வேற்றுமை பாராட்டுவதைத்தான் இப் பிரிவு தடை செய்கிறதேயன்றித் தனிமனிதர்கள் வேற்றுமை பாராட்டுவதைத் தடுக்கவில்லை. ஏனெனில், அரசு தனிமனித வாழ்க்கையில் தலையிட்டு அவர்களுக்கு வழங்கி இருக்கும் அடிப் படையான உரிமைகளைப் பறிக்கலாகாது. இருப்பினும், சமூக நலன் கருதி அரசியலமைப்பு, தனிமனித உரிமைக்குச் சில தடை களையும் விதித்திருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாகத் தீண்டாமை ஒழிப்பைக் கூறலாம்.

பொதுவாகச் சமத்துவ உரிமையை மக்களுக்கு வழங்கிய தோடு நிற்காமல், மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் காரண மாக அல்லது இவற்றில் எவையேனும் ஒன்றன் காரணமாக எக் குடிக்கும் பாதகமாக அரசு வேற்றுமை பாராட்டலாகாது (பிரிவு 15) எனவும் அரசியலமைப்புக் கூறுகிறது. சமூக வாழ்க்கை யில் காணப்பட்ட வேற்றுமை மனப்பான்மையைக் கருதி அரசியலமைப்பு, மக்களுக்கு இன்னும் பல பாதுகாப்புகளையும் வழங்கி இருக்கிறது. அதாவது கடைகள், பொது விடுதிகள், ஓட்டல்கள், பொதுக் கேளிக்கையிடங்கள் இவற்றுள் நுழைதலி

லாவது, அரசின் நிதிகளிலிருந்து முழுவதுமோ அல்லது ஓரளவோ பராமரிக்கப்பட்ட அல்லது பொதுமக்கள் உபயோகத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்ட கிணறுகள், குளங்கள், நீராடு துறைகள், பாட்டைகள், பொதுமக்கள் நாடும் இடங்கள் இவற்றை உபயோகித்தலிலாவது மதம், இனம், சாதி, பிறப்பிடம் காரணமாக எக் குடியும் எத்தகைய தகவின்மை, கட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கும் உள்ளாக்கப்படமாட்டாது [பிரிவு 15 (2), (3)].

15ஆவது பிரிவிற்கு இரண்டு விலக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. (1) பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அரசு எத்தகைய தனித்த ஏற்பாடுகளையும் செய்யலாம். (2) குடிகளில் சமூக நிலையிலும், கல்வி நிலையிலும் பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்காகவாவது அல்லது அனுபந்த சாதியார்கள் அனுபந்த மலைச்சாதியார்கள் இவர்களுக்காகவாவது அரசு எத்தகைய விசேட ஏற்பாடுகளையும் செய்யலாம்.

அரசாங்க வேலைபற்றிய விஷயங்களில் குடிகளுக்குச் சமத்துவமான வேலை வாய்ப்பினை அரசியலமைப்பு வழங்கி இருக்கிறது. அதனுடன் குடிகளுக்குப் பாதகமாக அரசு வேற்றுமை பாராட்டலுமாகாதெனக் குறிப்பிடுகிறது (பிரிவு 16).

'தீண்டாமை' ஒழிக்கப்படுகிறது ; அதன் எவ்வகை வழக்காறும் தடுக்கப்படுகிறது. 'தீண்டாமையிலிருந்து விளையும் எந்தத் தகவின்மையும் நடைபெறுதல் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்' (பிரிவு 17). தீண்டாமையை அரசியலமைப்பு விலக்கியிருக்கிறதெனினும், சட்டத்தால் மிகப்பழைய சமூகத் தீய வழக்கத்தை ஒரு நொடியில் அகற்றிவிட முடியாது. மக்களிடையே மனமாறுதல் ஏற்படாத வரையில் எந்தச் சட்டமும் பயன்தர முடியாத நிலையில் இருக்கிறது. சட்டத்துடன் தீண்டாமையைக் கடைப்பிடிக்கின்ற குற்றவாளிகளை மக்கள் கண்காணித்துத் தண்டனை வழங்கவேண்டும்.

'இராணுவச் சிறப்பு அல்லது கலைச் சிறப்பைக் குறிக்காத எந்தப் பட்டத்தையும் அரசு அளித்தலாகாது. அரசியல், சமூக, பொருளாதார சமத்துவ சமுதாயத்தை உருவாக்க விரும்பும் அரசு, மக்களிடையே வேற்றுமை பாராட்டும் வகையில் பட்டங்களை அளிக்கலாகாது. அரசு பட்டங்களை வழங்கின் அதன்வழி ஓர் உயர்குடியினை மக்களிடையே உருவாக்கலாம். இதன் விளைவாகச் சமத்துவ உரிமை கெடலாம் ; மக்களாட்சிக் கோட்பாடு மறையலாம். எனவே, 'இந்தியாவின் குடி எவரும் அந்நிய அரசாங்கத்திடமிருந்து எந்தப் பட்டத்தையும் ஏற்கலாகாது.'

18ஆவது பிரிவின்படி, அரசு பட்டங்களை வழங்காததோடு, இந்தியக் குடி அல்லது எவரும் ஜனாதிபதியின் சம்மதம் இன்றிப் பட்டமோ, சன்மானமோ, சம்பளமோ அல்லது அந்நிய அரசாங்கத்தின் கீழ் உள்ள எவ்வித உத்தியோகமோ ஏற்கலாகாது. மக்களிடையே சமத்துவ உணர்ச்சியை வளர்க்க இவை தேவையானவை என அரசியலமைப்பாளர்கள் கருதினர்.

### (2) சுதந்திர உரிமை

அடிப்படையான உரிமைகளுக்கெல்லாம் அடிப்படையாகத் தனி (மனித) உரிமை விளங்குகின்றது. 19முதல் 22ஆவது பிரிவு முடிய உள்ள பிரிவுகளை ஒரு தனியுரிமைச் சாசனமென்று கூறலாம். இப் பிரிவுகளே நமது அடிப்படையான உரிமைகளின் முதுகெலும்பெனலாம். ஏழு சுதந்திரங்களை மக்களுக்கு வழங்கும் 19ஆவது பிரிவு மிகச் சிறப்பு வாய்ந்ததொன்றாகும். குடிகள் எல்லோரும்,

1. பேச்சு, கருத்து வெளியீடு இவற்றில் சுதந்திரம் பெறவும்,

2. அமைதியாகவும் ஆயுதமின்றியும் கூட்டங் கூடவும்,

3. கழகங்களும், சங்கங்களும் அமைக்கவும்,

4. இந்தியாவின் ஆட்சிப்பரப்பு முழுவதிலும் தடையின்றிச் செல்லவும்,

5. இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலும் எந்தப் பாகத்தில் வசிக்கவும், தங்கி வாழவும்,

6. சொத்துகளைச் சம்பாதிக்கவும், வைத்திருக்கவும், வினியோகப்படுத்தவும்,

7. எத் தொழிலையும் மேற்கொள்ளவும், எந்த அலுவலையும், வியாபாரத்தையும், வேலையையும் நடத்தவும் உரிமை உடையவர் ஆவர்.

மக்களாட்சி அமைப்பிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் துய்த்தற்குரிய உரிமைகளனைத்தையும் அரசியலமைப்பாளர்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் இங்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருப்பினும் இவ்வுரிமைகளைக் குடிமக்கள் முழுமையாக அனுபவிக்கலாம் என்பதில்லை. அரசு சில நியாயமான கட்டுப்பாடுகளையும் விதிக்கலாம் என்பதை 19ஆவது பிரிவின் உட்பிரிவுகளைப் பார்த்தால் விளங்கும்.

பேச்சுரிமையும் கருத்து வெளியீட்டுரிமையும், மக்கள் அரசாங்கங்களின் அடிப்படைகளாகும். மக்கள், அரசின் கொள்கைகளை விருப்பு வெறுப்பின்றி ஆக்க வழியில் திறனாய்வு செய்வதால் அரசு குறைகளைக் களைந்து நல்ல முறையில் ஆட்சியை நடத்த முடிகிறது. வெளிப்படையாக அரசின் போக்குபற்றிப் பொது மக்கள் ஆய்கின்றபொழுது ஆட்சியாளர்கள் குறைவின்றிச் செயல்படவும், அரசாங்கத்தைத் திறம்பட நடத்திச் செல்லவும் பேச்சுரிமை உதவுகின்றது.

19 (1) ஆம் பிரிவினில் குறிப்பிட்டுள்ள உரிமையை ஆளுதல் பற்றி, அரசின் உறுதிநிலை, அந்நிய அரசுகளுடன் நேச உறவுகள், பொது அமைதி, நல்லொழுக்கம் அல்லது நன்னெறி இவற்றின் பொருட்டாவது அல்லது நீதிமன்ற அவமதிப்பு அவதூறு அல்லது குற்றம் செய்யத் தூண்டுதல் இவைபற்றியாவது நியாயமான கட்டுப்பாடுகளை அரசு விதிக்கலாம்.

இக் கட்டுப்பாடுகள், நியாயமானவையா என்பதை ஆய்ந்து முடிவு கூறும் அதிகாரத்தை அரசியலமைப்பு, நீதிமன்றங்களிடம் விட்டிருக்கிறது.

அமைதியாகவும் ஆயுதமின்றியும் கூட்டம் கூடும் உரிமையினால் பொது அமைதி கெடும் என அரசு கருதினால் நியாயமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் சட்டத்தை இயற்றலாம். இதைப் போன்றே 19ஆவது பிரிவின் உட்பிரிவுகளில் குறிப்பிட்டிருக்கும் உரிமைகளனைத்தையும் அரசு நியாயமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி அவற்றைச் சுருக்கிவிடலாம்.

பிரிவு 20 (1)-ன்படி, 'குற்றம் எனச் சாட்டிய எச் செயலையாவது செய்யும் காலத்தில் அமலிலுள்ள சட்டத்தை மீறியதற்காகவன்றி எவரும் குற்றப்படுத்தப்படலாகாது. அன்றியும், குற்றம் செய்த காலத்தில் அமலிலுள்ள சட்டத்தின் கீழ் விதித்திருக்கக்கூடிய தண்டனையைவிட அதிகமான தண்டனைக்கு எவரும் உள்ளாக்கப்படலாகாது'.

'ஒரே குற்றத்திற்காக ஒரு முறைக்கு மேல் எவரும் வழக்குத் தொடரப்பட்டுத் தண்டிக்கப்படலாகாது' [பிரிவு 20 (27)].

'குற்றம் சாட்டப்பட்ட எவரும் தனக்கு விரோதமாயிருக்கும்படி கட்டாயப்படுத்தப்படலாகாது' [பிரிவு 20 (3)].

சட்டத்தினால் ஏற்படுத்திய நடைமுறைப்படியன்றி ஒருவருடைய உயிரையோ சுவாதீனத்தையோ பறிக்கலாகாது. கைது செய்யப்பட்ட எவரும் அப்படிக் கைது செய்ததன் காரணங்களை இயன்ற விரைவில் அறிவிக்கப்பெறாமல் பாதுகாவலில் வைக்கப் படலாகாது; அன்றியும் தாமே தேர்ந்தெடுத்த சட்டவாதி ஒருவரைக் கலந்துகொள்ளவும் அவரைக்கொண்டு எதிர்வாதம் செய்யவும் உள்ள உரிமை எவருக்கும் மறுக்கப்படலாகாது.

கைது செய்து பாதுகாவலில் வைக்கப்பட்ட எவரும், கைது செய்ததிலிருந்து இருபத்திநான்கு மணி நேரத்திற்குள், மிக அருகிலுள்ள மாஜிஸ்டிரேட்டின் முன்பு கொண்டுவரப்பட வேண்டும். அத்தகைய எவரும் மாஜிஸ்டிரேட்டின் உத்தரவின்றி மேற்சொன்ன நேரத்திற்குமேல் பாதுகாவலில் வைக்கப் படலாகாது.

இவ்வித உரிமைகளுக்கு இரு விலக்குகளிருக்கின்றன. பகை அந்நியராயுள்ள எவருக்கும் அல்லது தடுப்புக் காவலுக்காக இயற்றப்பட்ட எச் சட்டத்தின் கீழாவது கைது செய்யப்பட்ட அல்லது பாதுகாவலில் வைக்கப்பட்ட எவருக்கும் இப் பிரிவின்படி கிடைக்கும் உரிமைகள் வழங்கப்படமாட்டா.

தடுப்புக்காவல் சட்டத்தால் உண்டாகும் தீய விளைவுகளைக் குறைக்கச் சில வழிகள் மேற்கொள்ளப்பட்டன. தடுப்புக்காவல் சட்டத்தையொட்டி எழும் வழக்குகள் சட்ட நடைமுறைப்படி இருக்கவேண்டும். நிர்வாகத்துறையின் சொந்த விருப்பில் இருக்க லாகாது. தடுப்புக்காவல் சட்டத்தின்படி எவரையும் மூன்று மாதங்களுக்குமேல் காவலில் வைத்திருக்கக்கூடாது. மூன்று மாதங்களுக்குமேல் ஒருவரைத் தடுப்புக்காவலில் வைக்கவேண்டுமெனின் அவர்பற்றிய வழக்கினை நீதிபதிகளாலான ஓர் ஆலோசனை போர்டிடம் விடவேண்டும். போர்டு தனது அபிப்பிராயத்தில் போதிய காரணம் இருப்பதாக அறிக்கை செய்தாலன்றி எவரையும் மூன்று மாதத்திற்கு மேல் காவலில் வைக்கலாகாது.

பாராளுமன்றம் சூழ்நிலையையொட்டி ஒரு சட்டத்தால் ஒருவரை மூன்று மாதங்களுக்கு மேலும் தொடர்ந்து காவலில் வைக்கலாம். ஆலோசனை போர்டின் சம்மதம் பெறவேண்டியது மில்லை.

தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் ஒருவரைக் காலவரையறையின்றிக் காவலில் வைக்கமுடியாது.

எவராவது, பாதுகாவலில் வைக்கப்பட்டால், அந்த உத்தரவை இடும் அதிகாரி, இயன்ற விரைவில், அந்த உத்தரவை இடுவதற்கான காரணங்களை அவருக்குத் தெரிவிக்கவேண்டும்; அந்த உத்தரவுக்கு மாறாக முறையீடு செய்வதற்கு அதிசீக்கிரமான வாய்ப்பை அவருக்குக் கொடுக்கவும் வேண்டும்.

அரசியலமைப்பு வழங்கியிருக்கும் அடிப்படையான உரிமைகளில் சில கட்டுப்பாடுகள் இருப்பினும் அவ் வுரிமைகள் தனிமனிதர் சுதந்திர உரிமைக்குப் பாதுகாவலாய் இருக்கின்றன.

### (3) சுரண்டப்படாமலிருப்பதற்கான உரிமைகள்

பிரிவுகள் 23-ம், 24-ம் மனித வாணிபத்திற்கும் பலவந்த வேலை முறைக்கும் தடை விதிக்கின்றன. மீறினால் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் ஆகும். பதினான்கு வயதுக்குக் கீழ்ப்பட்ட எந்தப் பிள்ளையும் ஒரு தொழிற்சாலையிலோ சுரங்கத்திலோ, வேலைக்கு வைக்கப்படலாகாது; அல்லது அபாயகரமான வேறெந்த வேலையிலும் அமர்த்தப்படலாகாது.

சுரண்டப்படாமலிருப்பதற்கான சட்டங்களை அரசு இயற்றி அவைகளைத் திறனுடன் செயல்படுத்தவேண்டும். இவ்வடிப்படை உரிமைகளைச் செயல்படுத்தச் சமூகம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

### (4) மதச் சுதந்திர உரிமை

பல்வேறு சமயங்கள் உள்ள நம் நாட்டிற்கு மதச் சுதந்திர உரிமை ஒரு தனிச் சிறப்பைக் கொடுக்கிறது. மக்களனைவரும் மனச் சாட்சிச் சுதந்திரத்திற்கும், தடையின்றி எம் மதத்தையும் தழுவுதல், அனுஷ்டித்தல், பரவச்செய்தல் இவைபற்றிய உரிமைக்கும் சமமான பாத்தியதை உடையவர் ஆவர்.

சமூக நலன் கருதிச் சீர்திருத்தச் சட்டங்களை அரசு இயற்றிச் செயல்படுத்தலாம். பொதுத்தன்மை வாய்ந்த இந்து மத ஸ்தாபனங்களை இந்துக்களில் எல்லா வகுப்பினருக்கும் பிரிவினருக்கும் திறந்துவிடச் சட்டங்களை அரசு இயற்றலாம்.

மதஸ்தாபனங்களை நிறுவவும், பராமரிக்கவும், நிர்வகிக்கவும் ஒவ்வொரு மதப்பிரிவும் உரிமை பெற்றிருக்கிறது.

சொத்துகளை மதஸ்தாபனங்கள் சுவாதீனம் செய்யவும், சம்பாதிக்கவும், அவற்றைச் சட்டப்படி பரிபாலிக்கவும் உரிமை உண்டு.

குறிப்பிட்ட எம் மதத்தையேனும் வளர்ப்பதற்கான வரிகளைச் செலுத்தும்படி எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாது. அரசின் நிதிகளிலிருந்து முழுதும் பராமரிக்கப்படும் எக் கல்வி ஸ்தாபனத்திலும் மதபோதனை அளிக்கப்படலாகாது.

பண்பாடு, கல்விபற்றிய உரிமைகள்: சிறுபான்மையினரின் மொழி, லிபி அல்லது பண்பாடு இவற்றைச் சிதையாமல் காக்க மக்கள் உரிமை உள்ளவர் ஆவர். மதம், இனம், சாதி, மொழி இவை காரணமாக அரசின் நிதிகளிலிருந்து உதவி பெறுகின்ற எந்தக் கல்வி ஸ்தாபனத்திலும் சேர்வதற்கு எக்குடியும் மறுக்கப்படலாகாது. இவ்வடிப்படை உரிமையை 1951ஆம் ஆண்டு திருத்திக் கல்வியில் பின்னடைந்த வகுப்பினருக்கும் அனுபந்த சாதியினருக்கும் அரசு சிறப்பு விதிகளைச் செய்ய வகை செய்தது.

சிறுபான்மையினர் தாம் விரும்பும் கல்வி ஸ்தாபனங்களை நிறுவவும், பரிபாலிக்கவும் உரிமை உள்ளவர் ஆவர். கல்வி ஸ்தாபனங்களுக்கு உதவியளிக்கையில் அரசு அதற்கு மாறாக வேற்றுமை பாராட்டலாகாது.

## சொத்துரிமை

நம் நாடு அரசியல் விடுதலை பெற்றபொழுது பொருளாதாரத் துறையில் பிற்போக்கானதாகவே காணப்பட்டது. நாட்டின் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த பிரிட்டன் முயலவில்லை. மேலும், நாட்டுப் பிரிவினையால் இந்தியா வளமான பகுதிகளை இழந்தது. இதன் பயனாக உணவுப் பஞ்சம் ஏற்பட்டு நாட்டின் பொருளாதார நிலையைக் குலைத்தது.

பிரிட்டிஷார் ஆட்சித் தொடக்ககாலத்தில் நிலவரி வசூலிப்பை எளிதாக்க நிலத்தைப் பிரித்து ஒரு சிலரிடம் வழங்கி, அவர்களிடமிருந்து நிலவரியைப் பெற்றுவந்தனர். இந்த ஒரு சிலரே பிற்காலத்தில் ஜமீன்தார்கள் என வழங்கப்பட்டனர். இவர்களில் சிலர் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாயுமிருந்தனர். ஜமீன்தார்கள் நிலத்தைப் பல கூறுகளாய்ப் பிரித்துக் குத்தகைக்கு விட்டு அவர்களிடமிருந்து குத்தகைப் பணத்தைப் பெற்று பிரிட்டிஷாருக்கு வரியைச் செலுத்திவந்தனர். குத்தகைக்காரர்களில் சிலர் நிலச் சொந்தக்காரர்களாகவுமிருந்தனர். நிலமற்றோர் சிலர் காலப்போக்கில் வரி செலுத்தும் குத்தகைக்காரர்களாய் மாறினர். எனவே, குத்தகைக்காரர்கள் தாம் நிலத்திற்குச்

சொந்தக்காரர்களில்லேயென உணர்ந்து உழைக்கும் ஊக்கமின்றிக் காணப்பட்டனர். மேலும் பிறர் உழைப்பால் புதிதாய் ஒரு சமூகம் உருவாகிவந்தது. பொருளாதாரத் துறையிலும் சமூகத்திலும் உழவர்கள் பற்றிழந்து காணப்பட்டனர். இந் நிலேயை மாற்றியமைக்க நிலச் சீர்திருத்தங்கள் இன்றியமையாதன வாயின.

இந்திய உழவர்களின் நிலே உணர்ந்தவருக்கு இந் நிலச் சீர்திருத் தங்களின் சிறப்பு நன்கு விளங்கும். நிலச் சீர்திருத்தங்களின் வாயிலாக மனநிறைவுடைய ஓர் உழவர் சமுதாயத்தை உருவாக் கிஞல் அது நிலேயான ஒரு சமுதாய வாழ்வு முறையை நமக் களிக்கலாம்.

நிலச் சீர்திருத்தங்களால்மட்டும் நாம் முன்னேற்றம் காண முடியாது. தொழில்துறையில் நாடு வெகு விரைவில் முன்னேற, அரசும் தொழில் துறையில் ஈடுபட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். அரசின் ஈடுபாடு தனிமனிதச் சொத்துரிமையைப் பாதிக்கலாம். எனவேதான் இச் சொத்துரிமை பற்றிய அடிப்படையான உரிமைகளே நமது அரசியலமைப்புத் தேர்ந்து வகைப்படுத்திக் கூறி இருக்கிறது.

'சட்டத்தின்படியன்றி எவருடைய சொத்தும் பறிக்கப்பட லாகாது' என அரசியலமைப்புக் கூறுகிறது. பொதுநலக் காரியத்துக்காகமட்டுமே சொத்துகளே வலிந்து அடையலாம். இதையும் ஒரு சட்டத்தின் வாயிலாகவே செய்யவேண்டும். அதற்கான இழப்பீடுபற்றியும் சட்டம் வழி செய்யவேண்டும். இழப்பீட்டுத் தொகையைச் சட்டம் நிர்ணயிக்கலாம் அல்லது நிர்ணயிப்பதற்கான வழிமுறையாவது சட்டம் குறிப்பிடலாம். சொத்துகளே வலிந்து பெறவோ அல்லது விரும்பிப் பெறவோ அரசுகள் இயற்றும் சட்டம் ஜனுதிபதியின் ஒப்புதல் பெருமல் செயல்பட முடியாது.

சொத்துரிமைபற்றிய வழக்குகளில் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகள் சில இடர்ப்பாடுகளே உண்டாக்கின. எனவே, சமூக நலச் சட்டங்களே அரசாங்கம் இயற்றிச் செயல்படுத்த முடியாது போயிற்று. இந்நிலேயை மாற்ற அரசியல் சட்டம் நான்காம் முறையாக 1955-ல் திருத்தப்பட்டது. இதன் விளேவாகத் தனியார் உடைமைகள்பற்றிய சட்டங்கள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சொத்துகளே அரசாங்கம் வலிந்து பறிமுதல் செய்வது அல்லது கோரிப்பெறுவது ஒருவகை.

அரசாங்கத்தின் ஒழுங்குமுறை அல்லது தடுப்புச் சட்டங்களின் காரணமாக ஒருவர் உடைமையை இழக்க நேரிடுவது இன்னொரு வகை. சொத்துரிமையைப் பாதிக்கும் சமூக நலச் சட்டங்களை அரசியல் அமைப்பின் 14, 19, 31ஆம் பிரிவுகள் பாதிக்காதபடியும் இத் திருத்தம் பாதுகாக்கிறது. இதற்கேற்ப அரசியலமைப்பின் 31, 31-A பிரிவுகளும் திருத்தப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாகச் சட்டப்படி கொடுக்கப்படும் இழப்பீடு போதுமானதா இல்லையா என்பதை நீதிமன்றங்கள் ஆராயமுடியாது.

அரசியலமைப்பின் நான்காம் திருத்தம் சொத்துரிமை பற்றிய பிரிவுகளை முற்றிலும் மாற்றிவிட்டது. சொத்துரிமையை நீதிமன்றம் செயல்படுத்த முடியாதவாறு அதன் அடிப்படையான தன்மையை நீக்கிவிட்டது. சட்டசபையின் பெரும்பான்மையினரின் வல்லாட்சியினின்றும் நிர்வாகத் துறையின் தலையீட்டினின்றும் பாதுகாப்புப் பெறும் உரிமைகளே அடிப்படையான உரிமைகளாகும். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை இவ்வுரிமையை அழித்துவிடலாம். பாராளுமன்றத்திலிருந்து உருவாகிச் செயலாற்றும் அமைச்சரவையின் (நிர்வாகத்துறை) ஆட்சியில்தான் இவ் வுரிமை செயல்படும். பாராளுமன்றத்தின் அதிகாரம் சொத்துரிமையின் பெருமையைக் குலைத்துவிட்டது எனச் சிலர் கருதினர். இருப்பினும் சொத்துரிமைபற்றிய சட்டங்களை அரசு இயற்றிச் செயல்படுத்துமுன் ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெறவேண்டும். இதன் பயனாக இவ் வுரிமைபற்றிய தேசீயக் கொள்கையை உருவாக்கவும், சீரான நீதியையும் சமத்துவத்தையும் மக்கள் பெறலாம்.

இத் திருத்தம் நிறைவேறிய பின்னும் உடைமைகள் தேசீயமயமாக்கப்பட்டபொழுது உடைமைகளை இழந்தோருக்குத் தக்க இழப்பீடுகளை அரசாங்கம் வழங்கியது.

அரசியலமைப்புத் தரும் பரிகார உரிமைகளைச் செயல்படுத்தித் தக்க பரிகாரம் வழங்க ஒரு நிறுவனம் வேண்டும். அடிப்படையான உரிமைகளை நிறைவேற்றும் பொறுப்பை நமது அரசியலமைப்பு நீதிமன்றத்திற்களித்திருக்கிறது. உரிமைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தக்க நடவடிக்கைகளின் மூலமாகத் தலைமை நீதிமன்றத்தில் (Supreme Court) எவரும் வழக்குத் தொடரும் உரிமையை அரசியலமைப்பு உறுதியாக அளிக்கிறது.

# 10. அரசியலமைப்புத் தரும் பரிகார உரிமை

குடிமக்களனைவரும் சட்டமுறைப்படி பரிகாரம் பெற நமது அரசியலமைப்பு வழி செய்திருக்கிறது. இப் பரிகார உரிமையை நமது அரசியலமைப்பின் உயிர்நாடியெனலாம். முறையாக உறுதி செய்யப்பட்டுச் செயல்படும் உரிமைகள்தாம் உண்மையான அடிப்படையான உரிமைகள். இவ் வுரிமைகளைக் காத்துக்கொள்ள ஒவ்வொரு குடிமகனும் தலைமை நீதிமன்றம். உயர்நீதிமன்றம் போன்றவற்றின் உதவியை நாடலாம். உரிமைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தக்க நடவடிக்கைகளின்மூலமாகத் தலைமை நீதி மன்றத்தில் வழக்குத் தொடரும் உரிமையைக் குடிமக்களுக்கு அரசியலமைப்பு அளிக்கிறது (பிரிவு 32).

அடிப்படையான உரிமைகளைப் பாதுகாக்கும் பொது அதி காரத்தை அரசியலமைப்பு, தலைமை நீதிமன்றத்திற்கும் உயர் நீதி மன்றத்திற்கும் அளித்திருக்கிறது. அடிப்படையான உரிமைகளில் எதையேனும் நிறைவேற்றுவதற்காக, ஹேபியஸ் கார்பஸ் (Habeas Corpus), மாண்டமஸ் (Mandamus), புரோகிபிஷன் (Prohibition), கோ வாரண்டோ (Quo warranto), ஸெர்டியோராரை (Certiorari) போன்ற 'ரிட்' ஆணைகளைப் பிறப்பிக்கத் தலைமை நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

பாராளுமன்றம், ரிட் ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரத்தை வேறொரு நீதிமன்றத்திற்கு வழங்கலாம். இதனால் தலைமை நீதி மன்றத்திற்கான அதிகாரங்கள் பாதிக்கப்படலாகாது.

அரசியலமைப்பின் 32ஆவது பிரிவு, அடிப்படையான உரிமை களுக்கு உயிரூட்டி அவற்றை எவரும் துய்க்க வழிசெய்கிறது. இப்

பரிகார உரிமையை நமது அரசியலமைப்பு ஓர் அடிப்படையான உரிமையாக்கிச் சிறப்புச் செய்கிறது. எனவேதான் இப் பிரிவு அரசியலமைப்பின் உயிரெனக் கருதப்படுகிறது.

இப் பிரிவின் (32) நோக்கமாகச் சில கருத்துகளைக் கூறலாம். அரசியலமைப்பு வழங்கியிருக்கும் அடிப்படையான உரிமைகளை இப் பிரிவு நிறைவேற்றுகிறது. உரிமை இழந்த எவரும் தாம் இழந்த உரிமைக்குப் புரிகாரம் தேடச் சட்டப்படி தலைமை நீதி மன்றத்திடம் முறையிடலாம். தலைமை நீதிமன்றம் 'குறிப்பிட்ட' பரிகாரங்களை அளிக்கவும் அதற்கேற்றாற்போல் 'ரிட்' ஆணைகளைப் பிறப்பிக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறது. கடந்த சில ஆண்டு களில் நீதிமன்றம் தன் பணியை நடுநிலை நின்று சிறப்புறச் செய்து அடிப்படையான உரிமைகளுக்கு அரணாகிச் செயல்படுவதைக் காணலாம்.

இடர்க்கால நிலையை யொட்டி ஜனாதிபதி, அரசியலமைப்பு வழங்கியிருக்கும் பரிகார உரிமையைச் சிறிது காலத்திற்கு விலக்கி வைக்கலாம். வெளியார் தாக்குதல் ஏற்பட்டாலும், உள்நாட்டுக் குழப்பம் காணப்பட்டாலும், அரசுகளின் ஆட்சி முறிவுற்றாலும் ஜனாதிபதி, நாட்டின் அந்நிலை நெருக்கடி நிலையென அறிவிக்கலாம். அந்நிலை முடியும் வரை அரசியலமைப்புத் தரும் பரிகார உரிமையை ஜனாதிபதி ஓராணையின்மூலம் விலக்கிவைக்கலாம். ஜனாதிபதியின் ஆணை, பாராளுமன்றத்தின் இரு சபைகளின் ஏற்புப் பெற வேண்டும்.

குடிகளின் அடிப்படையான உரிமைகளைத் தலைமை நீதி மன்றம் பாதுகாக்கவும் செயல்படுத்தவும், நமது அரசியலமைப்பு அதற்கு ஆணை (Writ) பிறப்பிக்க அதிகாரம் வழங்கி இருக்கிறது. ஆணைகள் பிறப்பிக்கும் உரிமை நீதிமன்றத்தின் தனிச்சிறப்புரிமை யாகும்.

உரிமை இழந்தோர் எவரும், நீதிமன்றத்திடமிருந்து இவ் வாணைகளைப் பெறலாம். இவற்றை வழக்குத் தொடராமல் எவரும் பெறமுடியும். இவற்றின் நோக்கம் இடைக்காலத் துயருதவியேயாம். சட்டமுறைப்படி வழக்குத் தொடராமல் ஒருவரைக் கைது செய்தால் அவர் விடுதலை வேண்டி நீதிமன்றத் திற்கு விண்ணப்பித்து அதன் கட்டளையைப் பெறலாம். இது போன்ற வழக்குகளில் நீதிமன்றம் ஒரு சட்டத்தைப்பற்றி ஆராயாமல், சட்டமுறைப்படி கைது செய்யப்பட்டிருக்கிறாரா என்பதைத்தான் முதலில் ஆராயும். ஒருவரைக் கைது செய்வதற் குதவியாய் இருந்த சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானதா இல்லையா என்பதை நீதிமன்றம் பின்னர் ஆராயும்.

நீதிமன்றத்திற்கு அரசியலமைப்பு வழங்கியிருக்கும் இவ் அதிகாரத்தைச் சட்டசபைகள் தம் விருப்பில் மாற்றவோ நீக்கி விடவோ முடியாது. அரசியலமைப்பைத் திருத்தினலன்றி, நீதி மன்றங்களின் (ரிட்) கட்டளை பிறப்பிக்கும் உரிமையைப் பறிக்க முடியாது.

அடிப்படையான உரிமைகளைக் காக்க நீதிமன்றம் சில கட்டளைகளைப் பிறப்பிக்கலாமெனப் பார்த்தோம். இப்பொழுது அவற்றில் சிலவற்றைப்பற்றி இங்கு ஆராயலாம்.

சிறை வைக்கப்பட்டவரை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரும் படி இடும் கட்டளைக்கு ஹேபியஸ் கார்பஸ் ரிட் என்று பெயர். சட்டத்திற்கு விரோதமாகச் சிறை வைக்கப்பட்டாரை விடுவிக்கக் கோரும் உரிமைக்கே இப் பெயரிடப்பட்டது. பிரிட்டிஷார் இவ்வுரிமையை மிகப் பழைய காலந்தொட்டே பெற்று வந்திருக் கின்றனர். நமது அரசியலமைப்பு இக் கட்டளைகளைப் பிறப்பிக்கும் உரிமையைத் தலைமை நீதிமன்றத்திற்கும் உயர் நீதிமன்றத்திற்கும் மட்டுமே வழங்கியிருக்கிறது. 'சிறை வைத்திருக்கும் ஒருவருக்கு சிறை வைக்கப்பட்டவரை ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கொண்டுவர இடும் நீதிமன்றத்தின் கட்டளையே ஹேபியஸ் கார்பஸ்' என வழங்கப்படுகிறது. முறைப்படியன்றிச் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஒருவரை விடுதலை செய்வதே இக் கட்டளை யின் நோக்கமாகும். சட்டவிரோதமாகச் சிறை வைத்தவரை இக் கட்டளை தண்டிப்பதில்லை. பாதிக்கப்பட்டோர், தக்க சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சிறை வைக்கப்பட்டிருப்பவர் தாமாகவும் அன்றி அவர் சார்பில் பிறரும் நீதிமன்றத்திடம் தக்க காரணங்களைக் கூறி விண்ணப்பித்துக்கொள்ள உரிமை வழங்கப் பட்டிருக்கிறது.

அடிப்படையான உரிமைகள்பற்றிய பிரிவுகள் 19, 21, 24-ல் அடங்கியிருக்கும் உரிமைகள்பற்றி ஹேபியஸ் கார்பஸ் கட்டளை பெற அரசியலமைப்பு வகை செய்திருக்கிறது. தடுப்புக் காவல் சட்டம்பற்றிய உரிமை இழப்புகளுக்காக நீதிமன்றம் பல கட்டளை களைப் பிறப்பித்திருக்கிறது.

'மாண்டமஸ்' (Mandamus) என்பதற்கு 'நாம் கட்டளையிடு கிறோம்' என்று பொருள். தலைமை நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றம் ஒருவருக்கு அவருக்குரியதைச் செய்யவும், கடமையைச் செய்யவும் அல்லது அதற்குரியதையும் கடமையையும் செய்ய

இடும் கட்டளைக்கு மாண்டமஸ் என்று பெயர். வேலைக்காக விண்ணப்பித்துக்கொண்ட ஒருவர் எல்லாத் தகுதிகளையுமுடையவ ராகித் தேர்ந்தெடுத்த பின்னும் அவரை அமர்த்தவேண்டியவர் அமர்த்த ஆணை அனுப்ப மறுப்பினும் அல்லது தவறினும், விண்ணப்பித்துக்கொண்டவர் பரிகாரம் பெற நீதிமன்றத்தின் மாண்டமஸ் கட்டளையைப் பிறப்பிக்குமாறு வேண்டிக்கொள்ள லாம்.

தனியொருவருக்கெதிராக மாண்டமஸ் கட்டளை பொது வாகப் பிறப்பிக்கப்படுவதில்லையெனினும் சில விதிவிலக்குகளும் இருக்கின்றன.

ஒரு கீழ் நீதிமன்றம் தன் அதிகார வரம்புகடந்து செயல் படுவதையோ அல்லது இயற்கை நீதிக்கு முரணாகச் செயலாற்று வதையோ தடுக்கப் பிறப்பிக்கப்படும் நீதிமன்றக் கட்டளைக்கு புரோகிபிஷன் எனப் பெயர். நீதிபற்றிய பொதுப்பணிகளைச் செயலாற்றும் நிறுவனங்களை எதிர்த்தே இக் கட்டளையை நீதி மன்றம் பிறப்பிக்கும்.

கீழ் நீதிமன்றத்திலிருந்து மேல் நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கினை மாற்ற ஸெர்டியோரரரை என்னும் கட்டளை பிறப்பிக்கப் படும். அதிகார வரம்பு கடந்து ஒரு நீதிமன்றம் வழக்கை விசாரிக்கும்பொழுது மேல் நீதிமன்றத்திற்கு மாற்றவே இக் கட்டளை பயன்படும். கீழ் நீதிமன்ற முடிவு இயற்கை நீதிக்குப் புறம்பாக இருந்தாலும் இம்முறைக் கட்டளையைப் பாதிக்கப்பட்ட வர்கள் பெறலாம்.

கோவாரண்டோ என்பதற்கு 'எத் தகுதிபற்றி' யெனப் பொருள். தனக்குச் சொந்தமில்லாத ஒரு பொதுப்பதவியி லிருந்துகொண்டு ஒருவர் செயலாற்றுவதைத் தடுக்கத் தலைமை நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் 'எத் தகுதிபற்றி' எனும் கட்டளை யைப் பிறப்பிக்கலாம்.

கோவாரண்டோ என்னும் கட்டளை, பொதுத்துறை பற்றிய பதவிகளைப்பற்றியதாக இருக்கும். தனியார் நிறுவனங்கள் பற்றிக் கட்டளை பிறப்பிக்கப்படுவதில்லை.

# 11. அரசுகளின் நெறிமுறைக் கோட்பாடுகள்

இந் நெறிமுறைக் கோட்பாடுகள் தற்கால அரசியலமைப்புகளில் காணப்படும் ஒரு புதிய கருத்தாகும். அயர்லாந்துக் குடியரசமைப்பில் காணப்படும் நெறிசெய் கோட்பாடுகள் நமது அரசியலமைப்பாளர்களைப் பெரிதும் கவர்ந்தனவெனலாம். ஐக்கிய நாடுகளின் சாசனம், மக்களுரிமைச் சாசனம் போன்றவைகளின் சாயல் இந் நெறிமுறைக் கோட்பாடுகளில் காணப்படுகிறது. இருப்பினும் இக் கோட்பாடுகள் அனைத்தையும் நாம் வெளிநாடுகளிலிருந்துதான் பெற்றோம் என்று கூறுதல் தவறாகும்.

இக் கோட்பாடுகளில் பல நம் நாட்டைச் சேர்ந்தவைகளே. நம் தேசிய இயக்கத்துடன் இக் கோட்பாடுகள் இணைந்திருந்தன. கிராமப் பஞ்சாயத்து, குடிசைத் தொழில், மதுவிலக்கு, பசுவதைத் தடுப்புப் போன்ற கருத்துகளும், சமூக, கல்வித்துறைகளில் பின்தங்கிவிட்டவர்கள்பற்றிய நலன்கள் போன்றவைகளும் முற்றிலும் இந்தியக் கருத்துகளேயாம்.

இக் கோட்பாடுகள் அரசாங்கங்களுக்கும் அவைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கும் வழிகாட்ட வல்லனவாய் இருக்கின்றன. இக் கோட்பாடுகளைச் செயலாற்றும் நோக்கத்துடன் அரசுகள் சட்டங்களை இயற்றவேண்டும். சட்டசபைகளின் உறுப்பினர்கள் இக் கோட்பாடுகளை மனத்திற்கொண்டே செயல்படவேண்டும். ஆட்சியாளர்கள் இக் கோட்பாடுகளை ஒழுக்க நெறியாகக் கொண்டு தங்களின் பொறுப்புகளை நிறைவேற்றவேண்டும். அரசியலமைப்பின் முகப்பு உறுதியளிக்கும் குறிக்கோளையடைய இவை வழி வகுக்கின்றன. இக் கோட்பாடுகளே நமது ஆட்சிமுறைக்கு அடிப்படையான நெறிகளென்பது பலர் கருத்து.

பொதுமக்களின் நலத்தைப் பேணி வளர்ப்பதற்காகச் சமூக அமைப்பு ஒன்றை அரசு நிலைபெறச்செய்யவேண்டும் (பிரிவு 38).

அரசு முக்கியமாக

(1) குடிகள், ஆண்களும் பெண்களும், சரிசமமாக, போதிய வாழ்க்கை வசதிக்கு உரிமை உள்ளவராதல்;

(2) சமூகத்தின் பொருட்சாதனங்களின் உடைமையும் அவற்றின் ஆட்சியும் சிறந்த முறையில் பொதுநலனுக்குப் பயன் படும் வகையில் பகிர்ந்தளிக்கப்படுதல்;

(3) பொதுநலத்திற்குத் தீங்கு இழைக்கும் வகையில், செல்வமும் உற்பத்திச் சாதனங்களும் சிலரிடம் செறிவு பெரு திருத்தல்;

(4) ஆண் பெண் ஆகிய இருபாலாரும் ஒத்த வேலைக்கு ஒத்த சம்பளம் உடையராதல்;

(5) ஆண், பெண் வேலையாளரின் உடல் நலமும் வலிமை யும், பிள்ளைகளின் இளமைப் பருவமும் மிதமிஞ்சிப் பயன்படுத்தப் படாதிருத்தல்; பொருளாதார அவசியத்தால் குடிகள் தம்முடைய வயதுக்கோ அல்லது வலிமைக்கோ ஒவ்வாத வேலைகளில் புகும் படி கட்டாயப்படுத்தப்படாதிருத்தல்;

(6) பிள்ளைப் பருவமும் வாலிபப் பருவமும் சுரண்டலுரு மலும், ஒழுக்க நெறியும் பிழைக்க வழியும் இன்றிக் கைவிடப் படாமலும் காக்கப்படுதல்;

இவை நிலைபெறுமாறு செய்வதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். இவைகளுடன் அரசு, கிராமப் பஞ்சாயத்துகளை அமைத்து அவைகளுக்குத் தக்க அதிகாரங்களையும் அளிக்க வேண்டும். அரசு, தனது பொருளாதார வசதிக்கு உட்பட்டு வேலை செய்வதற்கும், கல்வி கற்பதற்கும், வேலையின்மை, முதுமை, நோயுடைமை, ஊனமுடைமை ஆகிய நிலைகளிலும் ஏனைய தகா வறுமை நிலைகளிலும் பொதுவிலிருந்து உதவி பெறுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். நியாயமான, பண்பான வேலை வசதி களும், கருவுற்றவர்களுக்குச் சகாயத்தையும் அரசு செய்து தர வேண்டும். அனைவருக்கும் வேலையும் பிழைப்பிற்குப் போதிய சம்பளமும் கிடைக்குமாறு செய்வதுடன், அரசானது முக்கியமாகக் கிராமத் தொழில்களைத் தனிப்பட்ட முறையிலோ கூட்டுறவு முறையிலோ வளர்க்க முயலவேண்டும்.

இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுவதிலும் ஒருபடித்தான சிவில் சட்டத்தை அரசு குடிகளுக்குக் கிடைக்க வழிசெய்ய வேண்டும். எல்லாப் பிள்ளைகளுக்கும் பதினுன்கு வயது நிரம்பும் வரை இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வி அளிக்க அரசு முயலவேண்டும்.

அனுபந்த சாதியினர், அனுபந்த மலைச்சாதியினர், சக்தி குறைந்த ஏனைய வகுப்பினர் ஆகியோருக்கு அரசு கல்வி, பொருளாதார வசதிகளைச் செய்து கொடுத்தலுடன் அவர்களை எல்லாவிதமான சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கவேண்டும்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பொது சுகாதாரத்தை விருத்தி செய்யவும் அரசுக்குள்ள கடமையை அரசு உணர வேண்டும்.

அரசு விவசாயத்தை நவீன முறைகளில் செய்ய மக்களுக்கு உதவவேண்டும். கால்நடைகளைப் பேணி வளர்க்கவும் அவைகளின் கொலையைத் தடைசெய்யவும் முயலவேண்டும். தேசீய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பொருள்களையும் பாதுகாத்தல் அரசின் கடமையாகும்.

அரசாங்க சேவை வர்க்கங்களில் நிர்வாக இலாகாவிலிருந்து நீதி இலாகாவைப் பிரிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் (பிரிவு 50).

அரசு, சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் வளர்க்கவும், உலகத்து நாடுகளிடையே நியாயமும் கண்ணியமும் வாய்ந்த உறவுகளை நிலைபெறச் செய்யவும், சர்வதேச சட்டத்திற்கும் உடன்படிக்கைப் பொறுப்புகளுக்கும் நன்மதிப்பை வழங்கவும், எல்லா விவகாரங்களையும் மத்தியஸ்தத்தினுல் தீர்த்துக்கொள்ள ஊக்கமளிக்கவும் முயலவேண்டும். இக் கோட்பாடுகளைக் கொண்டே புதிய இந்திய ஜனநாயகத்தைப் படைக்கவேண்டும். இவைகளே நம் மக்களின் குறைந்த அளவு குறிக்கோள்களெனக் கொண்டு இவற்றை விரைவில் நம் அரசுகள் நிறைவேற்ற வேண்டும்.

நெறிமுறைக் கோட்பாடுகள் அடங்கிய பாகத்தின் பிரிவுகள் எந்த நீதிமன்றத்தாலும் நிறைவேற்றத்தக்கனவல்ல; எனினும் இதில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகள் நாட்டின் ஆட்சிமுறைக்கு அடிப்படையானவை ஆகும்; மேலும் சட்டங்களைச் செய்கையில் இக் கோட்பாடுகளைச் செயல்படுத்தவேண்டியது அரசின் கடமையாகும் (பிரிவு 37).

அரசாங்கம் இக் கோட்பாடுகளைச் செயல்படுத்தத் தவறி விட்டாலும், இவற்றையே எதிர்த்தாலும் என்னவாகுமெனக் கேட்கலாம். நீதிமன்றத்தால் இவைகள் நிறைவேற்றத்தக்கன வல்லவெனினும் மற்ற முறைகளால் மக்கள் அரசாங்கத்தைப் பணியச் செய்யலாம். அதாவது நமது அரசியலமைப்பு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்கியிருக்கிறது. இவ்வரசாங்கம் தொடர்ந்து சட்டசபைக்கும் மக்களுக்கும் பொறுப்புடையதாய் இருக்கிறது. அரசியலமைப்பின் உயிர்க் கருத்துகளைச் செயலாற்றும்பொருட்டே மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்புகின்றனர். பிரதிநிதிகள் மக்களுக்களித்த வாக்குறுதிகளையும் தங்களின் பொறுப்புகளையும் மறப்பரேல் தொடர்ந்து அவர்கள் பதவியிலிருக்க முடியாது. வாக்காளர்கள் தாம் விரும்புகின்றவர்களைத் தேர்ந்தெடுத்துப் பதவியிலமர்த்த உரிமை பெற்றிருத்தலால் அரசாங்கம் பெற்ற செல்வாக்கை இழந்துவிடத் துணியாது.

பொதுமக்கள் விருப்பும் அதன் வலிமையும் இக் கோட்பாடுகளை நிறைவேற்ற வல்லனவாய் இருக்கும். மேலும் இக் கோட்பாடுகளை மதிக்காமல் பாராளுமன்றமோ சட்டசபைகளோ சட்டமியற்றினால், ஜனாதிபதியோ, கவர்னரோ சட்டத்திற்கு இசைவுதர மறுப்பதின் பயனாக மக்களின் கவனத்தை ஈர்க்கலாம்.

அடிப்படையான உரிமைகளும் நெறிமுறைக் கோட்பாடுகளும் ஒத்துச் செயல்படுவதுடன் ஒன்றுக்கொன்று துணைநிற்கவும் வேண்டும். இவையிரண்டும் பொருதுகின்றபோது நெறிமுறைக் கோட்பாடு நின்று நிலவவேண்டும்.

# 12. யூனியன் நிர்வாகம்

இந்திய யூனியன் நிர்வாகம், பிரிட்டிஷ், அமெரிக்க நிர்வாக அமைப்புகளின் நல்லியல்புகளைக் கொண்டு அமைந்திருக்கிறது. சட்டசபைக்குப் பொறுப்பில்லா அமெரிக்க நிர்வாக முறையை அரசியல் நிர்ணயசபை ஏற்கவில்லை. ஆதலால் சட்டசபைக்குப் பொறுப்புடைய கேபினெட் அரசாங்க முறையே நம் நாட்டிற்கு ஏற்றதென அரசியல் நிர்ணய சபை கருதிற்று. பிரிட்டனைப் போலன்றிக் குடியரசுத் தலைவராக ஒருவரைத் தேர்ந்தெடுத்து அமர்த்த அரசியலமைப்பு வகை செய்திருக்கிறது.

இந்தியாவின் ஜனாதிபதி (ராஷ்டிரபதி) என்று ஒருவர் இருக்க வேண்டும் (பிரிவு 52). யூனியனின் நிர்வாக அதிகாரம் ஜனாதிபதியிடம் நிலைபெற்றிருக்கவேண்டும். ஜனாதிபதியின் பதவிக்குச் சில இயல்பான தகுதிகள் இருக்கவேண்டும். அதாவது, ஒருவர் இந்தியக் குடியாகவும் முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவராகவும் இருந்து மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய தகுதிகளைப் பெற்றிருந்தால் அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுதற்குரியராவார். ஒருவர் இந்திய அரசாங்கத்தின் கீழாவது அல்லது ஓர் உறுப்பு அரசாங்கத்தின் கீழாவது லாபம் தரும் பதவி எதையும் வகித்தால், அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தக்கவர் ஆகார். ஆனால், அரசாங்கப் பொறுப்பிலுள்ள பதவிகளாகிய ஜனாதிபதி, உப-ஜனாதிபதி, கவர்னர்கள், மத்திய, மாநில (அரசு) அமைச்சர்கள் ஆகிய இவர்களுக்கு மேற்சொன்ன விதியினின்று விலக்களிக்கப் பட்டிருக்கிறது. ஜனாதிபதி பாராளுமன்றத்திலோ ஓர் அரசின் சட்டசபையிலோ உறுப்பினராய் இருத்தலாகாது. அப்படி உறுப்பினராய் இருக்கும் ஒருவர் இப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் படின் அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் தேதியன்று சபையின் தமது இடத்தை இழந்துவிட்டதாகக் கருதப்படுவார். ஜனாதிபதி லாபம் தரும் மற்றெந்தப் பதவியையும் வகித்தலாகாது. ஜனாதிபதி

தமது பதவிக்குரிய இருப்பிடங்களுக்கு வாடகை செலுத்த வேண்டியதில்லை. பாராளுமன்றச் சட்டத்தினால் நிர்ணயிக்கப் படும் ஊதியங்கள், படிகள், சிறப்புரிமைகள் ஆகியவற்றிற்கும் அவர் உரியவர் ஆவார். அவருக்கான ஊதியங்களையும் படிகளையும் அவருடைய பதவிக்காலத்தில் குறைக்கலாகாது.

## ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் முறை

இந்தியப் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினரும் மாநிலச் சட்டமன்றங்களின் தேர்ந் தெடுக்கப்பெற்ற கீழ்ச் சபை உறுப்பினரும் ஜனாதிபதியைத் தேர்ந் தெடுக்கும் தேர்வாண்மைக் குழுவாக அமைவர். பாராளுமன்றம் ஒரு தொகுதியாகவும், மாநிலக் கீழ்ச்சபை ஒவ் வொன்றும் ஒரு தொகுதியாக இருந்து ஜனாதிபதியை மறை முகமாக, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையைப் பயன்படுத்தி ரகசியமாக வாக்களிக்கும். எனவே, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப் பதில் தேர்ந்தெடுக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினரும் மாநிலக் கீழ்ச்சபை உறுப்பினரும் பங்குபெறுகின்றனர்.

மாநிலச் சட்டமன்ற (கீழ்ச் சபையினர்) உறுப்பினர் எண்ணிக்கையால் பாராளுமன்ற உறுப்பினர்களைவிட அதிகமாக இருப்பதால் இத் தேர்தலை அரசுகளே முடிவு செய்துவிடாதவாறு பாராளுமன்றத்தினர்களின் வாக்குகளின் மதிப்பை மாநிலச் சட்ட மன்றத்தினரின் வாக்குகளின் மதிப்பிற்கு அரசியலமைப்பு உயர்த்தி யுள்ளது. அதாவது மாநிலச் சட்டமன்றத்தினரும் பாராளு மன்றத்தினரும் எண்ணிக்கையால் 5:1 என்ற விகிதத்தில் இருந்தால் இதை அரசியலமைப்பு 5:5 என்று உயர்த்துகிறது. இதன் பயனாகத் தேர்வாண்மைக் குழுவின் இரு பிரிவினரும் நாட்டுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் இவர்கள் சமபங்கும் சமபலமும் பெறுகின்றனர்.

ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதில் நாட்டு மக்களையும் தொடர்புபடுத்தவேண்டுமென்பதற்காக ஒரு நூதன முறையை அரசியலமைப்புக் கையாளுகிறது.

இதன்படி ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் பிரதிநிதி அம் மாநில மக்கள் தொகையில் எத்தனை பேர்களின் பிரதிநிதியாக இருக்கி றாரோ அதை எடுத்துக்கொள்ளவேண்டும் (மக்கள் தொகை: ÷ மாநிலச் சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள்). மேலும் அரசுகளிடையே ஒரேபடித்தான நிலையைப் பெறவும் அரசுகளுக்கும் யூனியனுக்குமிடையே சமநிலையைப் பெறவும்,

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் எத்தனைபேர்களின் பிரதிநிதியாக இருக்கிறாரோ அதைப் பின்னும் 1,000-த்தால் வகுக்க வேண்டும். வகுத்துப் பெற்ற ஈவை எடுத்துக்கொண்ட பிறகு மீதி 500-க்குக் குறைவாக இருந்தால் விட்டுவிடவேண்டும்; மீதி 500-க்கு மேலும் 1 000-க்குள்ளும் இருந்தால் ஒன்றெனக் கணக்கிட வேண்டும். 1,000-த்தால் வகுத்துப் பெற்ற ஈவே ஒவ்வோர் உறுப்பினரும் ஜனாதிபதிக்களிக்கும் ஒரு வாக்கின் மதிப்பாகும். கீழ்க் காணும் எடுத்துக்காட்டு இதைத் தெளிவுபடுத்தும் :

தமிழ் நாட்டின் மக்கள் தொகை 3,36,86,953 ஆகும். தமிழ் நாட்டின் கீழ்ச்சபையின் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் 234. எனவே, ஒவ்வோர் உறுப்பினரும் (3,36,86,953 ÷ 234, 1,43,961 பேர்களின் பிரதிநிதியாக இருப்பார். அரசுகளுக்குள் ஒரேமாதிரியான நிலையை உண்டாக்கவும் அரசுகளுக்கும் யூனியனுக்கும் இடையே சமநிலையைப் பெறவும் இதை (1,43,961) 1,000-த்தால் வகுத்தால் 143 ஈவும் மீதி 961-ம் கிடைக்கிறது. இம் மீதி 500-க்கதிகமாக இருப்பதால் இதை ஒன்றெனக்கொண்டு நூற்றுநாற்பத்துமூன்றோடு கூட்டிக்கொள்ளவேண்டும். எனவே, தமிழ் நாட்டின் கீழ்ச்சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் தாம் அளிக்கும் ஒரு வாக்கு 144 வாக்குகளாகக் கணக்கிடப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எத்தனை வாக்குகள் என்பதைக் கணக்கிட, அரசுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மொத்த வாக்குகளை, பாராளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுக்கவேண்டும். 1957ஆம் ஆண்டின் ஜனாதிபதியின் தேர்தலில் வாக்களித்த ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் 496 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றைமாற்று வாக்கின் மூலமாய் ஜனாதிபதியின் தேர்தல் நடத்தப்படவேண்டும். அத்தகைய தேர்தலில் ரகசிய வாக்களிப்பு முறை இருக்கும்.

ஜனாதிபதியின் தேர்தல் முறை நூதனமாய்க் காணப்பட்டாலும் அதற்கான காரணங்களுமிருக்கின்றன. காபினெட் அரசாங்க முறையில் ஜனாதிபதி, அரசியலமைப்பு முறை அரசுத் தலைவராகப் பணியாற்ற வேண்டியமையின் அவரை அமெரிக்க அதிபரைப் போன்று நேர்முகமாகத் தேர்ந்தெடுக்காமல் மறைமுகமாகத் தேர்வாண்மைக் குழுவினர் தேர்ந்தெடுத்தனர். இருப்பினும்

பெருமளவு மக்கள் செல்வாக்கினையுடைய ஒரு நிறுவன வாயிலாக ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுதல் நலமானதாய்த் தோன்றிற்று. பாராளுமன்ற உறுப்பினர்களையும் சட்டசபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் கொண்ட தேர்வாண்மைக் குழு மறைமுகமாகவும் எளிதாகவும் இத் தேர்தலை நடத்திக் காட்டியிருக்கிறது. 21 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களே சட்டசபையின் (அசம்பிளியின்) உறுப்பினர்களாய்த் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதே முறையில்தான் பாராளுமன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ராஜ்யசபை உறுப்பினர்களைச் சட்டசபை தேர்ந்தெடுக்கிறது. எனவே, தேர்வாண்மைக் குழு பரந்த அமைப்புடையதாகவும் பெரியதாகவும் இருக்கிறது.

நாட்டுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்கள்மட்டும் கலந்துகொண்டால் பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சி, தான் விரும்புகின்ற ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால், அரசுகளின் சட்டசபை உறுப்பினர்களும் இத் தேர்தலில் கலந்துகொள்வதால் நிலை பெரும் மாறுதலடையலாம். பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சியானது மற்ற அரசுகளில் சிறுபான்மைக் கட்சியாகவுமிருக்கலாம். இந் நிலையில் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான கட்சியால் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க முடியாது. அரசுகளின் சட்டசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் தேவையாகிறது.

ஒருவரைத் தேர்ந்தெடுக்க விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை ஏன் பயன்படுத்தவேண்டுமென்று கேட்கலாம். பதிவான மொத்த வாக்குகளில், தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் முழுமையான பெரும்பான்மை வாக்குகள் பெறவேண்டுமென்பதற்காகவேயாம். ஜனாதிபதி அரசுத் தலைவராகவும் நாட்டினரின் பிரதிநிதியாகவும் விளங்குவதால், அவர் எல்லாக் கட்சியினராலும், எல்லாப் பிரிவினராலும் தேர்ந்தெடுக்கப்பெறுதல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெறுபவர் கட்சிச் சார்பில்லாமல் செயலாற்ற வேண்டியதாக இருப்பதால், பெருமளவில் வாக்குகளைப் பெறல் நலமாகும். சாதாரணப் பெரும்பான்மை முறையில் இது சாத்தியமாகாது. மேலும், ஜனாதிபதியின் இத் தேர்தல் முறை பாராளுமன்றத்தில் இருக்கும் சிறிய கட்சிகளுக்கு உதவியாய் இருக்கிறது. அரசின் சட்டசபைகளில் செல்வாக்குடைய தலக் கட்சிகளுக்கும் இம்முறை உதவுகிறது. தேர்வாண்மைக் குழுவில் ஒரு கட்சி முழுமையான பெரும்பான்மையைப் பெறவில்லையென்றால் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுபவர் இரண்டு

மூன்று கட்சிகளை நாடி ஆதரவு பெறவேண்டும். இந்நிலை சிறிய கட்சிகளுக்கும் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளிக்கிறது. எனவே, ஜனாதிபதியின் தேர்தலில் சிறுபான்மையினருக்கும் வாய்ப்பளிக்க விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அரசியலமைப்பு மேற்கொள்கிறது.

ஜனாதிபதியின் தேர்தல், பார்வைக்குக் கடினமானதாக இருந்தாலும் நடைமுறையில் எளிதாகவே இயங்குகிறது. இம்முறை மறைமுகத் தேர்தல், கூட்டாட்சி அமைப்பிற்கு ஏற்றதாகவே இருக்கிறது. நம்நாட்டில் குடியரசுத் தலைவரின் தேர்தல் அமைதியாக நடைபெறும் ஓர் அனைத்திந்திய அரசியல் சிறப்பு நிகழ்ச்சியாகும். இத் தேர்தலில் பங்கு பெறும் உறுப்பினர்கள் (சுமார் 4,000) அமைதியாகச் செயலாற்றிக் கலைகின்றனர்.

குடியரசுத் தலைவர் (ஜனாதிபதி) பெயரளவில் நிர்வாக அதிகாரங்களைச் செயலாற்றுபவராய் இருந்தாலும், இத் தலைமைப் பதவி பெருமாண்பும் தனிச்சிறப்புமுடையதாய் விளங்குகிறது. ஜனாதிபதியின் தனிச் சிறப்புரிமைகளிலிருந்து இவை தெளிவாகும். ஜனாதிபதி, தம் பதவிக்கான அதிகாரங்களையும், செயல்களையும் செயலாற்றுவதுபற்றி எந்த நீதிமன்றத்திற்கும் கட்டுப்பட்டவரல்லர். இவருடைய பதவிக்காலத்தில் இவரைக் கைது செய்யவோ சிறைவைக்கவோ முடியாது. இவருக்கெதிராகக் கிரிமினல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. பெறவேண்டிய நிவாரணம்பற்றி, இரண்டு மாதங்களுக்குக் குறையாமல் எழுத்து மூலம் அறிவித்த பின்னரே ஜனாதிபதிக்கெதிராகச் சிவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஜனாதிபதி தமது பதவியை ஏற்பதற்கு முன், இந்தியாவின் பிரதம நீதிபதியின் முன்னிலையிலாவது அவர் இல்லாதிருந்தால் தலைமை நீதிமன்றத்து நீதிபதிகளில் சேவையில் மூத்தவரின் முன்னிலையிலாவது பின்வரும் முறையில் ஒரு பிரமாணம் அல்லது உறுதிமொழி கூறிக் கையெழுத்திட வேண்டும். அதாவது,

'அ. ஆ. ஆகிய நான், இந்தியாவின் ஜனாதிபதிப் பதவியை நெறிமுறையாக நிர்வகிப்பேன் (அல்லது ஜனாதிபதியின் அலுவல்களை நிறைவேற்றுவேன்); அரசியலமைப்பையும், சட்டங்களையும் என்னுடைய முழுத்திறமையுடன் பேணி, ஆதரித்துப் பாதுகாப்பேன்; இந்தியாவின் மக்களுடைய சேவைக்கும் நல்வாழ்வுக்கும் என்னை அர்ப்பணம் செய்வேன் என்று கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன் அல்லது மனப்பூர்வமாக உறுதி கூறுகிறேன்' என்பதாகும்.

ஜனாதிபதியின் இப் பிரமாணத்தை ஆதாரமாகக் கொண்டு, பின்னர் சமயம் நேர்ந்தால், பெருங்குற்றச்சாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அரசியலமைப்பை மீறி நடந்தால்தான் ஜனாதிபதி குற்றச்சாட்டுக்குள்ளாவார்.

ஜனாதிபதியின் மரணம், ராஜிநாமா அல்லது நீக்கம் காரண மாக அவரது பதவியில் காலி ஏற்படலாம். ஜனாதிபதியின்மீது பெருங்குற்றச்சாட்டுக்கான நடைமுறை விதிகளை அரசியலமைப்பு கூறி இருக்கிறது. ஜனாதிபதியைப் பெருங்குற்றச்சாட்டுக் குள்ளாக்கவேண்டுமானால் பாராளுமன்றச் சபைகளில் ஒன்றால் அக் குற்றச்சாட்டு கொணரப்படவேண்டும். குற்றச்சாட்டுகள் அடங்கிய *கோரிக்கையை எழுத்து மூலமாகக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னதாகச் சபைக்கு அறிவிக்க வேண்டும். அக் குற்றச்சாட்டுக் கோரிக்கையைத் தீர்மானமாகக் கொண்டுவர அச் சபையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக் கையில் கால் பங்குக்குக் குறையாதவர்கள் கையெழுத்திட வேண்டும். அச் சபையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையோரால் அத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டால் அச் சபை குற்றச்சாட்டுகளை ஏற்கும்.

பாராளுமன்றச் சபை ஒன்றால் ஒரு குற்றச்சாட்டு கொணரப் பட்டிருந்தால் மற்றைய சபை அக் குற்றச்சாட்டை விசாரிக்க வேண்டும். அல்லது அந்தக் குற்றச்சாட்டை விசாரிக்கும்படி செய்யவேண்டும். ஜனாதிபதிக்கு அத்தகைய விசாரணையில் கலந்து கொள்ளவும் பிரதிநிதியை அமர்த்தவும் உரிமை உண்டு. அவ் விசாரணையின் விளைவாக, அக் குற்றச்சாட்டை விசாரித்த சபையில் உள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையோரால், ஜனாதிபதியின்மீது கொணரப்பட்ட குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப் பட்டதென்று அறிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட் டிருந்தால், அப்படி நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஜனாதி பதியைப் பதவியிலிருந்து நீக்கிவிடும் பயனை அத் தீர்மானம் பெறும் [பிரிவு 61 (1) (2) (3) (4)].

பெரும் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்து நிறைவேற்ற, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை, அரசியல் அமைப்பு, ஜனாதிபதியின் நிலை, மாண்பு இவைகளைக்கொண்டு நிர்ணயித் திருக்கிறது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடியுமுன் அப் பதவிக்கான தேர்தலை நடத்தவேண்டும். மரணம், ராஜிநாமா, நீக்கம் இவை களால், ஜனாதிபதியின் பதவியில் காலி ஏற்பட்டால், புதிய ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் வரை உபஜனாதிபதி அப் பதவியில் அமர்வார். ஆனால், புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க, இயன்ற விரைவில், எப்படியும் காலி ஏற்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதத்திற்கு மேற்படாமல் தேர்தல் நடத்தப்பட வேண்டும். புதிய ஜனாதிபதி தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து பதவிக்கால மாகிய ஐந்து ஆண்டு முழுவதும் பதவி வகிக்கலாம்.

**ஜனாதிபதியின் அதிகாரங்கள் :** யூனியனின் நிர்வாக அதிகாரம் ஜனாதிபதியிடம் நிலைபெற்றிருக்கும். அது அவரால் நேராகவேனும் தமக்குக் கீழ்ப்பட்ட அலுவலர்களின் மூலமாகவேனும் செயல் படுத்தப்பட வேண்டும், என்று 53ஆவது பிரிவு குறிப்பிடுகிறது. அரசியலமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கி இருக்கும் அதிகாரங்கள் மிகப்பல. அவற்றை நாம் நிர்வாக அதிகாரங்கள், சட்டமியற்றும் அதிகாரங்கள், இடர்க்கால அதிகாரங்கள் எனப் பிரித்து அறியலாம்.

**நிர்வாக அதிகாரங்கள் :** யூனியனின் நிர்வாக அதிகாரமும் சட்டமியற்றும் அதிகாரமும் சமமாகச் செயல்பட வேண்டுமென்ற கருத்தினை அரசியலமைப்பு வலியுறுத்தியிருக்கிறது. யூனியனின் எல்லாச் செயல்களிலும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பரவி நிற்கும். ஜனாதிபதி, யூனியன் நிர்வாகத் தலைவராகையால் இந்நிலை ஏற்படுகிறது. யூனியனின் தலைமைச் சேனாதிபத்தியம் ஜனாதி பதியிடம் நிலைபெற்றிருக்குமென அரசியலமைப்புக் கூறுகிறது. இதனால் பாதுகாப்புப் படைகளனைத்தையும் சிவில் அதிகாரத் திற்குட்படுத்தியிருத்தல் தெளிவாகிறது. ஜனாதிபதி பிரதம அமைச்சரையும், அமைச்சரவை உறுப்பினர்களையும் அமர்த்து கிறார். இந்திய அரசாங்க அலுவல்களைச் செயல்படுத்த விதிகளை வகுக்கிறார். அமச்சர்களுக்கு அலுவல்களைப் பகிர்ந்து கொடுக்கிறார். இவர் அட்டார்னி ஜெனரலையும், தலைமை நீதிமன்றப் பிரதம நீதி பதியையும், மற்ற நீதிபதிகளையும், உயர் நீதிமன்ற நீதிபதிகளையும், யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் உறுப்பினர்களையும், தேர்தல் கமிஷனையும், இந்தியாவின் மாபெரும் கணக்கர் பரிசோதகரையும், வெளிநாடுகளுக்கான அரசத்தூதர்களையும், ராஜதந்திரப் பிரதிநிதி களையும், ஷெட்யூல்டு வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினராகிய சிறுபான்மையினருக்கான கமிஷனர்களையும், கவர்னர்களையும், யூனியன் பிரதேசங்களின் பிரதம கமிஷனர்களையும், நிதிக் கமிஷனின் உறுப்பினர்களையும், அனைத்தரசின் கவுன்சிலையும்

நியமிக்கிறார். சுருங்கக் கூறின் எல்லா நியமனங்களும் ஜனாதிபதியின் பெயராலோ அல்லது அவர் அதிகாரத்தாலோ செய்யப்படுகின்றன.

அரசியலமைப்பின் 72ஆவது பிரிவு மன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. இதன்படி ஜனாதிபதி, (அ) ஓர் இராணுவ நீதிமன்றத்தால் தண்டனை அல்லது குற்றத் தீர்ப்பு அளிக்கப்படும்போதும், (ஆ) யூனியன் சட்டத்தை மீறிய குற்றத்திற்காகத் தண்டனை அல்லது குற்றத் தீர்ப்பு அளிக்கப்படும் போதும், (இ) குற்றத்தீர்ப்பு மரணத் தீர்ப்பாக உள்ளபோதும் தண்டனையை மன்னித்தல், தடுத்தல், நிறுத்தல் அல்லது தவிர்த்தல் செய்யவும், குற்றப்படுத்தப்பட்ட ஒருவருடைய குற்றத் தீர்ப்பை நிறுத்தவும், தவிர்க்கவும், மாற்றவும் அதிகாரம் உடையவர் ஆவார். மரணத் தீர்ப்புகளை மாற்றும் அதிகாரத்தை அரசியலமைப்பு ஜனாதிபதிக்கும் கவர்னர்களுக்கும் வழங்கி இருக்கிறது. ஒரு குறிப்பிட்டவரின் கருணை விண்ணப்பத்தை கவர்னர் ஏற்காவிடில், அவர் ஜனாதிபதியின் கருணையை நாடலாம்.

### சட்டமியற்றும் அதிகாரங்கள்

சட்டமியற்றும் துறைகளில் அரசியலமைப்பு ஜனாதிபதிக்குச் சிறப்பான அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. பாராளுமன்ற மசோதாக்கள் சட்டமாக, ஜனாதிபதியின் இசைவு பெறவேண்டும். இதிலிருந்து ஜனாதிபதி பாராளுமன்றச் சட்ட மியற்றும் நடைமுறைகளில் கலந்து நிற்றலைக் காணலாம். ஜனாதிபதி பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் கூட்டலாம்; அவைகளின் கூட்டத் தொடரைத் தள்ளிவைக்கலாம். மக்கள் சபையை இவர் கலைக்கலாம். இவர் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும், தனித்தனியாக உரை நிகழ்த்தலாம் அல்லது இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தலாம். இரு சபைகளுக்கும் செய்திகள் அனுப்பலாம்.

ஜனாதிபதி ராஜ்ய சபைக்குப் பன்னிரண்டு உறுப்பினர்களை நியமிக்கிறார். ஆங்கிலோ-இந்திய வகுப்பினர் இருவரை இவர் மக்கள் சபைக்கு உறுப்பினராய் நியமிக்கலாம்.

பாராளுமன்றத்தில் நிறைவேறிய மசோதாக்கள் ஜனாதிபதியின் இசைவினைப் பெற அனுப்பப்பட வேண்டும். பண மசோதாக்கள் நீங்கலாக மற்ற மசோதாக்களுக்கு இசைவு தராமல் நிறுத்திவைக்கவோ, மறுபடியும் ஆயுமாறு பாராளு

மன்றத்திற்கு அனுப்பவோ இவருக்கு உரிமை உண்டு. யூனியனின் ஓராண்டு வரவு செலவுபற்றிய மதிப்பீட்டறிக்கையைப் பாராளு மன்றத்தின் முன் வைக்குமாறு இவர் ஆணையிடுவார். இவருடைய சிபாரிசு இல்லாமல் எந்தவொரு நிதிமானியக் கோரிக்கையையும் பாராளுமன்றம் வழங்காது.

பாராளுமன்றத்தின் கூட்டங்கள் நடைபெறாத இடைக் காலத்தில் ஜனாதிபதி அவசரச் சட்டங்களைப் பிரகடனம் செய்ய லாம். இவ்வவசரச் சட்டங்கள் பாராளுமன்றத்தின் சட்டத்தை யொத்த பயனும் திறனும் உடையனவாயிருக்கும். ஆனால், அத் தகைய சட்டங்கள் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் முன்னிலை யிலும் வைக்கப்படவேண்டும். பாராளுமன்றம் மறுபடியும் கூடிய பின் ஆறு வாரங்களுக்குள் ஜனாதிபதி இதைச் செய்யவேண்டும். பாராளுமன்றத்தின் இரு சபைகளும், ஆறு வாரம் முடிந்தவுடன் அல்லது அக்காலம் முடிவடைவதற்குமுன் அவசரச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளலாகாது என்னும் தீர்மானங்கள் இரு சபை களாலும் நிறைவேற்றப்பட்டிருந்தால் அந்த அவசரச் சட்டம் செயலற்றுப்போகும். ஜனாதிபதி எந்தச் சமயத்திலும் அவரது அவசரச் சட்டத்தை நீக்கிவிடலாம். எனவே, பாராளுமன்றம் கூடாத காலம்வரை அவசரச் சட்டம் செயல்படும். பாராளு மன்றத்தின் இரண்டு தொடர்க் கூட்டங்களுக்கிடையேயுள்ள காலம் ஆறுமாதங்களுக்கு மேல் இருக்கக்கூடாதென அரசிய லமைப்புக் கூறுவதால் இந்த அவசரச் சட்டம் ஆறுமாதத்திற்கு மேல் உயிர் பெற்றிருக்கமுடியாதெனலாம். பாராளுமன்றம் கூடியதும் அவசரச் சட்டம் நீங்கிவிடாது. இரு சபைகளும் கூடிய பின் அவைகள் அவசரச் சட்டத்தை ஏற்கவில்லையென்றால்தான் அது நீங்கும்.

நிர்வாகத்துறையின் இத்தகைய சட்டமியற்றும் அதிகாரத்தினை அரசியலமைப்பாளர்களில் சிலர் எதிர்த்தன ரெனினும், அவசரகால நிலை விளைவுகளைச் சமாளிக்க நிர்வாகத் துறைக்கு இவ்வதிகாரத்தை வழங்கப் பலர் இசைந்தனர். மேலும் நிர்வாகம், சட்டசபைக்குப் பொறுப்புடையதாகையால் அது பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி எதையும் செய்யமுடியாது.

**இடர்க்கால அதிகாரங்கள்**

ஜனாதிபதி இடர்க்கால நிலையை யூனியனின் ஆட்சிப்பரப்பில் உள்ள ஒரு பகுதிக்கோ, இந்தியா முழுமைக்குமோ பிரகடனம் செய்யலாம். போரச்சம் இருக்கிறதாகவோ, வெளியார் தாக்குதல்

பற்றியோ, உள்நாட்டுக் குழப்பநிலைபற்றியோ இடர்நிலை ஏற்படலாமென்று ஜனாதிபதி கருதினால் இவ்விடர்க்கால நிலையைப் பிரகடனம் செய்யலாம். அது தவிர யூனியன் அரசுகளில் ஏதொன்றிலாவது அரசியலமைப்பு முறிவு ஏற்படின் ஜனாதிபதி இடர்க்காலப் பிரகடனம் செய்வார். நிதிநிலை முறிவுகளையொட்டியும் நெருக்கடிகள்பற்றியும் ஜனாதிபதி இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி இடர்க்காலப் பிரகடனம் செய்யலாம்.

**அரசியலமைப்பு முறையில் இயங்கும் ஓர் அரசுத்தலைவர்:** மேலெழுந்தவாறு ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பார்க்கும்போது அவரது அதிகாரங்கள் அளப்பிலாதனவாய்த் தோன்றலாம். இவ்வளவு அதிகாரங்களை வேறெந்த அரசியலமைப்பும் நிர்வாகத் தலைவருக்கு வழங்கவில்லை. இவ்வளவு அதிகாரங்களையும் ஜனாதிபதி எவ்வாறு செயலாற்றுகிறார் என்பதை அறிந்துகொண்டால் அவரது நிலை விளங்கும். இதை அறிய நாம் இந்திய அரசாங்க அமைப்பை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். நமது அரசாங்க அமைப்பு பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையையொட்டி இருத்தலைக் காணலாம். பிரிட்டனில் அரசர் அல்லது அரசியார் அரசுத் தலைவராக இருக்கிறார். அங்கு, அவருக்கென வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அவருக்குரியனவல்ல. அவற்றைச் செயல்படுத்துவதைக் கேபினெட் அமைச்சவை மரபு வழியாகத்தான் மேற்கொண்டது. இந்திய அரசியலமைப்பில் காணும் ஜனாதிபதியும் அரசுத் தலைவராகக் கேபினெட் அரசாங்கத்தின் ஒரு கூறாய் இருந்து செயல்படுவதைக் காணலாம். பிரிட்டிஷ் மன்னரின் நிலையையும் அதிகாரங்களையும் ஏறத்தாழ நமது ஜனாதிபதியும் பெற்றிருக்கிறார்.

இந்திய யூனியன் தலைவராகச் செயலாற்ற ஒரு ஜனாதிபதி இருத்தலைக் காணலாம். பெயரளவில் இவர் அமெரிக்க ஜனாதிபதியை ஒத்திருப்பினும் இவர்களுக்கிடையே பல வேறுபாடுகள் இருக்கின்றன. 'அமெரிக்க ஜனாதிபதி நிர்வாகத் துறையின் தனிப்பெரும் தலைவராவர். ஆட்சி அவரிடம் நிலைபெற்றிருக்கிறது. இந்திய ஜனாதிபதியின் நிலை பிரிட்டிஷ் மன்னரின் நிலையையொத்திருக்கிறது. இவர் அரசுத் தலைவரேயன்றி நிர்வாகத் தலைவரல்லர். இவர் நாட்டின் பிரதிநிதியேயன்றி நாட்டை ஆள்பவரல்லர். இவர் நாட்டின் சின்னமாய்த் திகழ்கின்றார்' என்பன போன்ற கருத்துகளை அம்பேத்கார் அரசியல் நிர்ணய சபையில் கூறியிருத்தலை இங்கு நினைவிற்கொள்ளவேண்டும்.

இந்திய ஜனாதிபதியின் நிலை, அதிகாரம்பற்றிய கருத்து மயக்கங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், 'ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தின் ஜனாதிபதியின்

நிலையையும், ஒரு பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் (அமெரிக்கா) ஜனாதிபதியின் நிலையையும் ஒன்றெனக் கருதுதல் தவறென்பதைச் சுட்டிக்காட்டினார். பிரிட்டிஷ் பொறுப்பாட்சி முறையை இந்தியா பின்பற்றியிருப்பினும் கூட்டாட்சி அமைப்பிற்கு ஏற்றவாறு சில மாற்றங்களை அரசியல் நிர்ணயசபை செய்திருக்கிறது.

பிரிட்டிஷ் மன்னர் கேபினெட் அமைச்சவையின் மதியுரைப் படி செயலாற்றச் சில அறிய மரபுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார். இந்திய அரசியலமைப்பில் அத்தகைய மரபுகளோ குறிப்பிடத் தக்க பிரிவுகளோ இல்லாததால் ஜனாதிபதி தனியாட்சி நடத்த முற்படலாமெனச் சிலர் அஞ்சினர். எனவே, இந்திய ஜனாதிபதியும் சட்டசபைக்குப் பொறுப்புடைய அமைச்சவையின் மதியுரைப் படி நடக்கச் சில நல்ல மரபுகளை மேற்கொள்ளவேண்டுமென்னும் விருப்பு அரசியல் நிர்ணயசபையில் காணப்பட்டது.

ஜனாதிபதிக்கும் அமைச்சவைக்கும் இடையே உள்ள உறவினை அரசியலமைப்பின் பிரிவுகள் 74, 75, 78 தெளிவாக்குகின்றன. ஜனாதிபதி தம்முடைய அலுவல்களைச் செய்கையில், அவருக்கு உதவவும் ஆலோசனை கூறவும் பிரதம அமைச்சரைத் தலைவராக உடைய அமைச்சவை ஒன்று இருக்கவேண்டும் (பிரிவு 74). பிரதம அமைச்சரை ஜனாதிபதி நியமிப்பார். மற்றைய அமைச்சர்களைப் பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி நியமிக்கிறார். இவர்கள் ஜனாதிபதியின் விருப்பம் இருக்கும்வரை பதவியிலிருப்பர். அமைச்சவை, மக்கள் சபைக்குக் கூட்டுப் பொறுப்புள்ளதாக இருக்கும்.

அமைச்சவையின் எல்லா முடிவுகளையும் தகவல்களையும் பிரதம அமைச்சர் ஜனாதிபதிக்கு அறிவிக்கவேண்டும். இவைகளிலிருந்து ஜனாதிபதி அமைச்சவையின் ஆலோசனைப்படி நடக்கவேண்டுமென்பது தெளிவாகிறது.

பாராளுமன்ற முறை அரசாங்கத்தில், நிர்வாகம் சட்டசபைக்குப் பொறுப்புடையதாகும். இதன்படி இந்திய நிர்வாகமும் சட்டசபைக்குப் (மக்கள் சபைக்கு) பொறுப்புடையதாகும். மக்கள் சபையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும்வரைதான் அமைச்சவை பதவியிலிருக்கலாம். பாராளுமன்றத்தின் நம்பிக்கையை அமைச்சவை பெற்றிருக்கும்வரை ஜனாதிபதி அதன் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டு இயங்கவேண்டியவராகிறார்.

கடந்தகால நிகழ்ச்சிகளைக் கொண்டு ஜனாதிபதியின் நிலையைத் திறனாய்வு செய்யும்பொழுது அவர் அரசியலமைப்பு முறைப்படி இயங்கும் ஓர் அரசுத் தலைவராய் இருந்துவந்திருத்தலைக் காணலாம்.

# 13. அமைச்சவை

## பிரதம அமைச்சர்

ஜனாதிபதிக்கு உதவிபுரியவும் ஆலோசனை கூறவும் பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சவை ஒன்று இருக்க வேண்டுமென்று அரசியலமைப்பின் 74ஆவது பிரிவின் 1ஆம் பகுதி குறிப்பிடுகிறது. பிரதம அமைச்சருக்கு நமது அரசியலமைப்பு ஒரு சிறப்பு நிலையைச் சட்டத்தால் வழங்கியிருத்தலைக் காண்கிறோம். இச் சிறப்பு நிலையைப் பிரதம அமைச்சருக்கு, இங்கிலாந்து, மரபால் வழங்கியிருக்கிறது.

அமைச்சவை மக்கள்சபைக்குக் கூட்டுப் பொறுப்புள்ளதாக இருப்பதால் (பிரிவு 75), இத்தகைய சிறப்பு நிலை இந்தியப் பிரதம அமைச்சருக்கு இருக்கவேண்டியதாயிற்று. அமைச்சவையின் அமைச்சர்கள் பலர் இருப்பினும் அவர்கள் ஒற்றுமையாய் ஒரே குரலில் பேசவேண்டும். இதனால் அமைச்சர்கள் மாறுபட்ட கருத்துடையவர்களாய் இருக்கலாகாது என்று நினைத்துவிடக் கூடாது. மாறுபட்ட கருத்துகளையும் கொள்கைகளையும் அமைச் சவையில் விவாதித்து முடிவு செய்தபின்னர் தனிப்பட்ட கருத் தாக அவற்றை வெளியிடாமல் அமைச்சவையின் கருத்தையே இறுதிவரை பின்பற்றவேண்டும்.

அரசாங்க நடவடிக்கைகளனைத்தும் அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பில் இருக்கும். இருப்பினும், ஓர் அமைச்சர் கூட்டுப் பொறுப்பை உணராது கருத்துகளை வெளியிட்டுத் திறனாய்வு செய்வதனால் அவரைக் குற்றத்திற்குள்ளாக்கவோ தண்டிக்கவோ சட்டம் வகை செய்யவில்லை. அப்படி மாறுபட்ட கருத்துகளை யுடைய ஓர் அமைச்சர் மற்ற அமைச்சர்களுடன் ஒத்துழைக்கவோ அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயலாற்றவோ முடியவில்லை யெனின் அமைச்சவையிலிருந்து விலகிக்கொள்வது முறையாகும்.

ஆனால், அவ்வமைச்சர் விலகிக்கொள்ள மறுத்தால் அவரைப் பதவி நீக்கம் செய்யப் பிரதம அமைச்சர் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறலாம். பிரதம அமைச்சரின் அறிவுரை கேட்டே ஜனாதிபதி அமைச்சர்களை அமர்த்துவதால் அவர்களை நீக்கவும் ஜனாதிபதியால் முடிகிறது. இம் முறையை மேற்கொள்ளப் பிரதம அமைச்சர் விரும்பவில்லையெனில் அவர் தமது அமைச்சவையின் ராஜிநாமாவை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பார். பின்னர் அமைச்சவையைப் பிரதமர் அமைக்கும்போது தான் விரும்பா அமைச்சரை நீக்கிவிடலாம். எனவே, அமைச்சர்களை அமர்த்துவதற்கும் நீக்கு தற்கும் அதிகாரமுடைய பிரதமரால் அமைச்சவையின் கூட்டுப் பொறுப்பைக் காக்கமுடிகிறது.

பிரதம அமைச்சரின் தலைமையில் கூட்டுப் பொறுப்பேற்று நடக்கும் அமைச்சவை உட்கிளர்ச்சிகளின்றிச் செயல்படும். பிரதமரில்லா அமைச்சவையாயின் ஜனாதிபதி அதைக் கட்டுப் படுத்தவும் தனித்து அமைச்சர்களுடன் உறவு கொள்ளவும் இட மேற்படலாம். இதன் பயனாக அமைச்சவைக் குலைவேற்படலாம். இந் நிலையைத் தவிர்க்கவே கூட்டுப் பொறுப்புக் கோட்பாட்டினை அரசியலமைப்பு உறுதிப்படுத்தி அமைச்சவையைச் சட்டசபைக்குப் பொறுப்புள்ளதாக்கி இருக்கிறது. கேபினெட் அரசாங்கத்தில் கூட்டுப் பொறுப்புத் தவிர்க்க முடியாத அளவிற்கு வளர்ந்து விட்டது. இதனையேற்று இயக்குபவர் பிரதமர். இவரைக் கேபினெட் அமைப்பின் உயர்நிலையெனலாம்.

ஜனாதிபதி விருப்பமுள்ள காலம் வரை அமைச்சர்கள் பதவி வகிப்பார்கள் [பிரிவு 75 (2)]. அமைச்சர்களின் பதவிக்காலம், மக்கள் சபையின் நம்பிக்கையையும் தூய்மையான ஆட்சித் திறனையும் பொறுத்தே அமைகிறது. அமைச்சர்கள் மக்கள் சபையின் செல்வாக்கைப் பெற்றிருப்பினும் நேர்மையும் தகுதியு மில்லாதவர்களைப் பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதிக்கு அதிகார மிருக்கிறது.

நிர்வாகத்துறையில் மிக உயர்ந்த பதவிகளிலிருப்போர் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாயுமிருக்கின்றனர். ஆனாலும் தக்க திறனுடையவர்கள் அமைச்சர்களாக அமர்த்தப்படும் பொழுது உறுப்பினர்களாக இருக்கத் தேவையில்லை. அவ் வமைச் சர்கள் பதவியேற்ற நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள்ளாகப் பாராளுமன்ற உறுப்பினராதல் வேண்டும். பொதுவாகப் பார்க்கும்போது நியமன உறுப்பினர்களும் தேர்தலில் தோற்றவர்

களும் அமைச்சர்களாய் நியமனமாவதில்லை. அரசுகளின் நிர்வாகத் துறையில் ஓரிரண்டு விதி விலக்குகள் இருக்கலாம்.

அமைச்சர்கள், பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியங்களையும் படிகளையும் பெற அரசியலமைப்பு வகை செய்திருக்கிறது. ஆட்சியில் தூய்மை காணும் நோக்கத்துடன் அமைச்சர்களுக்குப் போதிய அளவு ஊதியம் வழங்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரதமரை நியமனம் செய்கிறார் என முன் பார்த்தோம். இந் நியமனம் பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றிருக்கவேண்டுமென்பதால் ஜனாதிபதி தம் விருப்பில் எவரையும் நியமனம் செய்யமுடியாது. எனவே, ஜனாதிபதி பிரதமரை நியமிப்பதென்பது ஒரு நடைமுறை வழக்காகிவிட்டது. ஜனாதிபதி நியமிக்கும் அமைச்சர்களும் பிரதமரின் நியமன உறுப்பினரேயாவர். அமைச்சவையின் நடவடிக்கைகளும் முடிவுகளும் பிரதமர் மூலமாக ஜனாதிபதிக்கு அறிவிக்கப் படுகின்றன. பாராளுமன்றத்தின் தலைவராகிய பிரதமர் அமைச்சவையுடன் சபைக்குக் கூட்டுப் பொறுப்புடையவராகிறார். இவர் அமைச்சவைக்கும் ஜனாதிபதிக்கும் இணைப்பாக இருத்தல் போன்றே அமைச்சவைக்கும் பாராளுமன்றத்திற்கும் தொடர்புண்டாக்குகிறார். அமைச்சவையிலும் பாராளுமன்றத்திலும் பிரதமர் பெற்றிருக்கும் இடம் அவருக்கு அரசியலமைப்பில் ஈடில்லா ஒரு சிறப்பினைக் கொடுத்திருக்கிறது.

அரசியலமைப்பில் பிரதமரின் நிலையையறிய அவருக்கான அதிகார்ரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஜனாதிபதியிடம் நிலைபெற்றிருக்கும் அதிகாரங்களனைத்தையும் செயலாற்றுபவர் பிரதமரே. பிரதம அமைச்சர் பெரும்பான்மைக் கட்சித் தலைவரென்றமையால் பாராளுமன்றத் தலைவராகவும் அதன் வழி அமைச்சவைத் தலைவராய் நிர்வாகத் தலைவராகவும் இருக்கிறார். இவர் கட்சி, அமைச்சவை, நாடு இம் மூன்றையும் இயக்குகிறார் எனலாம். இதுபற்றியே இவர் இந்திய அரசாங்க அமைப்பில் முதன்மையானவராகத் தோன்றுகிறார். இடர்க்காலங்களில் இவரது அதிகாரம் விரிவடையும். இவர் தம் ஆளுமையால் ஜனாதிபதியின் அதிகாரங்களை உயர்த்தவும் வரையறை செய்யவும் முடியும்.

பிரதம அமைச்சர் விரும்பினால் ஒரு சர்வாதிகாரியாக மாறலாம் என்ற கருத்தினை அரசியலமைப்பாளர்களில் சிலர் வெளியிட்டனர். அந்த அளவிற்கு இவரிடம் அதிகாரங்கள் செறிந்து இருக்கின்றன. இந்தியப் பிரதமருக்கு அமெரிக்க ஜனாதி

பதியையொத்த அதிகாரங்களிருக்கின்றன. இவரை அரசியலமைப்பு, பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவராக்கிக் கட்டுப்படுத்துகிறது.

வெறும் மக்கள் கூட்டத்திற்கு ஒரு குறிக்கோளை வழங்குவது அரசியற் கட்சிகளே. இவைகள்பற்றி அரசியலமைப்பு ஒன்றும் குறிப்பிடவில்லை யெனினும் ஓர் அரசியலமைப்பை இயக்குவது அரசியல் கட்சிகளே. இந்தியாவின் பாராளுமன்ற முறை அரசாங்கம் வளர்ந்தோங்க நன்கமைந்த அரசியல் கட்சிகள் இன்றியமையாதனவாம். பொதுத் தேர்தல்கள் பிரதமராவதற் குரியவரைத் தெரிவு செய்கிறது. எக் கட்சி தேர்தலில் பெரும் பான்மை கட்சியாக உருவாகிறதோ அக் கட்சி தலைவரைத் தேர்ந் தெடுத்து ஜனாதிபதியிடம் அனுப்புகிறது. ஜனாதிபதி அவரையே பிரதம அமைச்சராக நியமனம் செய்கிறார்.

**யூனியன் கேபினெட் :** கேபினெட் என்னும் சொல்லையும் அமைச்சவை என்பதையும் சிலர் மாற்றுச் சொற்களாகப் பயன் படுத்தலைக் காண்கின்றோம். அமைச்சவை என்பது எல்லாவகை யான அமைச்சர்களையும் கொண்டது. கேபினெட் அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், உதவி அமைச்சர்களென இப்பொழுது மூன்றுவகை அமைச்சர்கள் இருக்கின்றனர். கேபினெட் அமைச்சர்கள் தனித்து ஒரு நிறுவனமாக இயங்குகின்றனர். இவர்கள் அமைச்சவையின் உட்குழுவாய் அமைகின்றனர். இந்திய அரசியலமைப்பு இக் கேபினெட்பற்றி ஒன்றும் கூறவில்லை யெனினும் அமைச்சவைபற்றிக் குறிப்பிடுகிறது.

அரசியலமைப்புச் செயல்படும்போது உருவாகிய மரபுகளின் ஒன்றாகக் கேபினெட்டைக் குறிப்பிடலாம். இது பிரிட்டிஷ் கேபினெட்டை ஒத்தமைந்ததெனினும் இதற்கெனச் சில சிறப் பியல்புகளையும் வளர்த்துக்கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷார் இந்தியர்களுக்கு அதிகார மாற்றம் செய்தபோது இதுபோன்றதொரு நிறுவனம் இருக்கவில்லை. ஆனால், கவர்னர் ஜெனரலின் நிர்வாகக் கவுன்சில் என்று ஒன்றிருந்தது. பொறுப் புடைய அரசாங்கம் அமைந்தபின்னர் 'அமைச்சு' என்று ஒன் றிருந்தது. கேபினெட் என்றும் இது வழங்கப்பட்டது, பிரதமர் நீங்கலாக மற்ற அமைச்சர்களனைவரும் சம அந்தஸ்துடைய வர்களே.

1950-க்குப் பிறகு அரசாங்கத்தின் உயர்மட்ட அமைப்பை ஆய்ந்து ஓர் அறிக்கையைக் கோபாலசுவாமி அய்யங்கார் வெளியிட்டார். இதில் அவர் அமைச்சர்களை வகைப்படுத்தி அவர்களுக்கான வேலைகளையும் பொறுப்புகளையும் விளக்கியிருக்கிறார்.

இதன்படி கேபினெட் அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், உதவி அமைச்சர்களென மூன்றடுக்கமைப்பொன்று உருவாயிற்று.

நாடு முழுமைக்குமான ஆட்சிப் பொறுப்பினையுடைய சேவையில் மூத்தவர்களே கேபினெட் அமைச்சர்களாயினர். கேபினெட் சிறியதாகவும் மிக்க செல்வாக்குடையதாகவும் உள்ள ஒரு நிறுவனம். அமைச்சவையினின்று இக் கேபினெட் விரைவில் உருவாகித் தனக்கென ஒரு விரிவான அமைப்பைப் பெற்று விளங்குகிறது. அரசியலமைப்புப்படி ஜனாதிபதிக்கு ஆலோசனை கூற அமைச்சவையே உரிமையுடையதெனினும் இப்பொழுது கேபினெட்தான் அதைச் செய்துவருகிறது.

அரசியல், ஆட்சித் துறைகளில் சிறந்த திறமையும் செல்வாக்குமுடையவர்களே கேபினெட்டில் உறுப்பினராய் இருப்பர். மிக முக்கியமான துறைகளாகிய நிதி, வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, போக்குவரத்து, வாணிகம், உள்துறை, ரயில்வே போன்றன கேபினெட் அமைச்சர்களின் பொறுப்பில் இருக்கும். பிரதமரின் திறமை, இவர் கேபினெட் அமைச்சர்களைத் தேர்ந்து அமர்த்துவதிலிருந்து வெளியாகும். இக் கேபினெட் இதுவரை சிறியதாகவே இருந்துவந்திருக்கிறது.

அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயல்படுத்த சட்டங்களை இயற்ற உதவுதல்; உயர்ந்த பதவிகளுக்கான நியமனங்களைச் செய்தல்: பல்வேறு துறைகளுக்கிடையே எழுகின்ற தகராறுகளைத் தீர்த்தல்; அரசாங்க நடவடிக்கைகளை இணைத்து மேற்பார்வையிடல் போன்ற தலையாய பணிகளைக் கேபினெட் செய்து வருகிறது.

கேபினெட் வாரமொருமுறை கூடித் தனிப்பட்ட அமைச்சுகளோ துறைகளோ கொணர்ந்த பல இனங்கள்பற்றியும் ஆய்ந்து முடிவினைக் கூறுகிறது. அரசாங்கத்தின் எல்லாச் செயற்பாடுகள் பற்றிய முடிவுகளைக் கேபினெட் செய்கிறது. கேபினெட்டிற்கு உதவ ஒரு செயலாண்மைத்துறை இருக்கிறது. இதன் தலைவராக ஒரு கேபினெட் செயலாளர் இருக்கிறார். கேபினெட் கூட்டங்களில் நடைபெறும் விவாதங்களும், அமைச்சர்களின் கருத்துகளும், கேபினெட்டின் இறுதியான முடிவுகளும் குறித்துக் கொள்ளப்பட்டுப் பின் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இவற்றைச் சிறப்புடன் செய்யவே செயலாண்மைத் துறை இருக்கிறது.

அரசாங்க அலுவல்கள் பெருமளவிற்கு வளர்ந்துவிட்டமையாலும் அவற்றின் சிக்கலான தன்மையாலும் கேபினெட்டை எதிர்நோக்கியுள்ள இவ் அலுவல்களைப் பகிர்ந்துகொண்டு செயலாற்ற வேண்டியதாகிறது. எனவே, கேபினெட் பல கமிட்டிகளாய்ப் பிரிந்துகொண்டு செயல்படுகிறது. இவைகள் நிலைக் கமிட்டிகளெனவும், சிறப்புக் கமிட்டிகளெனவும் இரு வகைப்படும். பாதுகாப்பு, பொருளாதாரம், ஆட்சியியலும் அமைப்பும், பாராளுமன்றச் சட்ட விவகாரங்கள் ஆகிய இவைபற்றிய நான்கு நிலைக் கமிட்டிகளிருக்கின்றன. அவ்வப்போது கிளர்ந்து உருவாகும் சில முக்கியப் பிரச்சினைகள்பற்றித் தெளிவாய் ஆய்ந்து முடிவு காணும்பொருட்டுச் சில சிறப்புக் கமிட்டிகளை கேபினெட் அமர்த்துகிறது. பின் இக் கமிட்டியின் ஆய்வறிக்கையை யொட்டிக் கேபினெட் முடிவுகளைச் செய்கிறது. இக் கமிட்டிகள் உட்குழுக்களையும் அமர்த்திக்கொள்ளலாம். இக் கமிட்டிகளின் செயலாற்றும் தன்மை திறமையாகவும், விரைவாகவும், நுட்பமாகவும் இருத்தலால் கேபினெட் தனது பணிகளைச் சிறப்புறச் செய்ய முடிகிறது.

கேபினெட் அமைச்சர்களுக்கு அடுத்தபடியாக, ராஜாங்க அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்கள் சுயேச்சைப் பொறுப்புகளுடன் பல்வேறு துறைகளின் தலைவர்களாக இருந்து செயலாற்றுகிறார்கள். இவர்கள் கேபினெட் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை. ஆனாலும், சிறப்பு அழைப்பின் பேரில் இவர்கள் கேபினெட் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். தனிப் பொறுப்புகளின்றி கேபினெட் அமைச்சர்களின் கீழ்ப் பணியாற்றும் ராஜாங்க அமைச்சர்களுமிருக்கின்றனர். போதிய அனுபவம் பெற்றபின் இவர்கள் கேபினெட் அமைச்சர்களாக உயரும் வாய்ப்புகளிருக்கின்றன.

உதவி அமைச்சர்களுக்குத் தனித்த ஆட்சிப் பொறுப்புகள் கிடையாது. இவர்கள் கேபினெட் அமைச்சர்களின் சார்பில் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்கள். அரசாங்க மசோதாக்களைக் கொண்டு வருவார்கள். கொள்கைகளையும் திட்டங்களையும் பொது மக்களுக்கு விளக்குவதுடன் பாராளுமன்றம், அரசியல் கட்சிகள், செய்தித்தாள்கள் இவற்றுடன் தொடர்பு கொள்ளுதலும் இவர்களின் கடமையாக இருக்கும். இதன் பயனால் விளையும் அனுபவத்தைப் பெற்று ராஜாங்க அமைச்சர்களாய்த் தேர்வுபெற இவர்களுக்கு வாய்ப்புகள் உண்டு.

உதவி அமைச்சர்களுக்கு அடுத்துப் பாராளுமன்றச் செயலாளர்களுமிருக்கின்றனர். ஆனல், இவர்கள் அமைச்சவையில் இடம் பெறுவதில்லை. இவர்களுக்கு ஆட்சிப் பொறுப்புகளும் கிடையா. அமைச்சர்களுக்குப் பதிலாகப் பாராளுமன்றத்தில் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவார்கள். பொதுவாக, இவர்கள் பாராளுமன்றத்தில் அமைச்சர்களுக்கு உதவியாக இருப்பார்கள் என்று சொல்லலாம்.

### கேபினெட்டும் பாராளுமன்றமும்

கேபினெட்டின் நிலையைப்பற்றிப் பார்த்தோம். இப்பொழுது அதற்கும் பாராளுமன்றத்திற்கும் உள்ள தொடர்பைப் பார்க்கலாம். கேபினெட் தன் எல்லாச் செயல்களுக்கும் கூட்டாகப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையது. அதேபோலத் தனித்த அமைச்சர்களும் அவர்களின் பொறுப்பிற்குட்பட்ட செயல்களுக்குப் பாராளுமன்றத்திற்குத் தனிப்பொறுப்புடையராதல் வேண்டும். நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபைக்கு அமைச்சவை பொறுப்புடையதாகின்றது.

### இந்தியப் பாராளுமன்ற முறை

அரசாங்கத்தின் சிறப்பியல்பு என்னவென்றல், இரு சபைகளிலும் உறுப்பினராயில்லாத ஒருவர் அமைச்சராகலாம். அவர் இரு சபைகளிலும் தோன்றி விவாதங்களில் கலந்துகொள்ளலாம் என்ருலும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளக்கூடாது. அதே போன்று இரு சபைகளில் யாதொன்றிலாவது உறுப்பினராய் உள்ள அமைச்சர் இரு சபைகளின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம். ஆனல், அவர் உறுப்பினராய் இல்லாத சபையில் நிகழும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளக்கூடாது. பிரதம அமைச்சர்கள் மூவரில் இருவர் மக்கள் சபை உறுப்பினராகவே இருந்து வந்திருக்கிருர்கள். ஆனல், கேபினெட்டில் உறுப்பினராக ராஜ்ய சபையிலிருந்து ஓரிருவரைப் பிரதமர் அமர்த்திக்கொள்கிருர். அவர்களில் ஒருவர் ராஜ்ய சபையில் கட்சித் தலைவராகிருர்.

பாராளுமன்றத்தில் கேள்விகளாலும், ஆண்டு வரவு செலவு அறிக்கையை யொட்டிய விவாதங்களாலும், தள்ளிவைப்புக் கோரிக்கைகளாலும், பல துறைகளின் அறிக்கைகளை யொட்டிய விவாதங்களாலும் உறுப்பினர்கள் அமைச்சவையைப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாக்குகிருர்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானங்களின் வாயிலாக அமைச்சவையின் பொறுப்

புடைமையையும் செல்வாக்கையும் பாராளுமன்றம் அறிந்து கொள்ளமுடிகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளு மன்றத்தில் வெற்றி பெற்றால் அமைச்சவை ஆட்சிப் பொறுப்பி லிருந்து விலகிக்கொள்ளவேண்டும். எனவே, பாராளுமன்ற முறை அரசாங்கம் எப்பொழுதும் தொடர்ந்து பாராளுமன்றத் தின் கண்காணிப்பில் இருந்து வருகிறது.

பாராளுமன்றத்தில் ஒருகட்சி பெற்றிருக்கும் பலம் அதிலிருந்து அமையும் கேபினெட்டின் வலிமையிலிருந்து வெளிப்படும். நிலையான பாராளுமன்ற ஆதரவைப் பெற்றிருக்கும் கேபினெட் அதன் தலைமையாய்ச் செயல்படுகிறது.

இந்தியப் பாராளுமன்றம் கேபினெட்டைச் செயல்படுத்து வதிலும், கேபினெட் பாராளுமன்றத்தில் நடந்துகொள்ளும் முறையிலும் நல்லுறவு இருந்துவருதலைப் பார்க்கிறோம். சிக்கல் நிறைந்த பிரச்சினைகளைக் கேபினெட் பாராளுமன்றத்தின் முடிவுக்கு விடுதலையும், அதேபோன்று பாராளுமன்றமும் சில பிரச்சினைகளைக் கேபினெட்டிடம் விடுதலையும் நாம் காண்கின்றோம்.

நல்ல மரபுகளைத் தோற்றுவிக்கவேண்டுமெனும் நோக்குடன் இருதரப்பினரும் செயல்பட்டுவருதல் பாராளுமன்றமுறை அரசாங்கம் எதிர்காலத்தில் சிறப்புற்றோங்க வகை செய்வதாய் இருக்கும்.

# 14. உபஜனாதிபதியும் அட்டர்னி ஜெனரலும்

இந்தியாவின் உபஜனாதிபதி என்று ஒருவர் இருக்கவேண்டு மென்று அரசியலமைப்புக் கூறுகிறது (பிரிவு 63). இவர் அரசாங்கத் தில் பெரும்பங்கு பெறுவதில்லை. இவர் தம் பதவி முறையில் ராஜ்ய சபையின் தலைவராய் இருக்கிறார். நமது உபஜனாதி பதியையும் அமெரிக்க உபஜனாதிபதியையும் ஒப்பிடுவோமானால் இவ்விருவருக்குமுள்ள ஒற்றுமை விளங்கும். அமெரிக்க ஜனாதிபதி பதவிக்காலத்தில் இறந்துவிட்டால் உபஜனாதிபதி ஜனாதிபதியாகப் பதவிக்காலம் முடியும் வரை பதவியிலிருக்கலாம். ஜனாதிபதிக்கான தேர்தல் இடையில் நடைபெறுவதில்லை. இதனால் அமெரிக்க உபஜனாதிபதி அங்குச் சிறப்புப் பெறுகிறார். இந்திய ஜனாதிபதி இறந்தாலோ, ராஜிநாமா செய்தாலோ அல்லது வேறு காரணம் பற்றிப் பதவியிலிருந்து விலகிக்கொண்டாலோ உபஜனாதிபதி, ஜனாதிபதியாகச் செயலாற்றலாம். அப் பதவியைப் பெருமளவு ஆறுமாதங்கள் வகிக்கலாம். இருப்பினும் பதவி காலியான நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள்ளாகப் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எனவேதான் ஆறு மாதத்திற்கு மேற் படாமல் உபஜனாதிபதி அப் பதவியை வகிக்கலாமென வரையறை செய்யப்பட்டிருக்கிறது.

உபஜனாதிபதி ராஜ்ய சபையின் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கிறார். இவரே அச் சபையின் தலைவருமாகிறார்.

### உபஜனாதிபதியின் தேர்தல்

பாராளுமன்றத்தின் இரு சபையின் உறுப்பினர்கள் ஒருங்கு கூடிய கூட்டம் ஒன்றில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றைமாற்று வாக்கு வாயிலாக உபஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்

படவேண்டும். அத் தேர்தலில் வாக்களிப்பது ரகசிய முறைப்படி இருக்கவேண்டும் (பிரிவு 66). இவர் பாராளுமன்றத்தின் இரு சபைகளில் எதிலும் அல்லது ஓர் அரசின் சட்டசபையிலும் உறுப்பினராக இருத்தலாகாது. அப்படி ஒருவர் ஏதாவதொரு சபையில் உறுப்பினராய் இருந்தால் அவர், உபஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் நாளிலிருந்து, தம் உறுப்பினர் பதவியைக் காலி செய்துவிட்டதாகக் கருதப்படுவார். ஒருவர் இந்தியாவின் குடியாகவும் முப்பத்தைந்து வயது நிரம்பியவராகவும், ராஜ்ய சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ளவராக வும் இருந்தாலன்றி, அவர் உபஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு அருகர் ஆகார் [பிரிவு 66 (3)]. ஒருவர் அரசாங்கத்தின் கீழ் லாபம் தரும் பதவி எதையேனும் வகித்தால் உபஜனாதிபதி யாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அருகர் ஆகார். ஆனால், ஒருவர் ஜனாதிபதியாகவோ, உபஜனாதிபதியாகவோ அல்லது கவர்ன ராகவோ அல்லது யூனியனுக்காவது ஓர் அரசிற்காவது அமைச்ச ராகவோ இருப்பதால்மட்டும் அவர் லாபம் தரும் பதவியை வகிப்பவராகக் கருதப்படமாட்டார்.

உபஜனாதிபதி, பதவி ஏற்கும் நாளிலிருந்து ஐந்தாண்டுகள் பதவி வகிப்பார். எனினும் இவர் பதவியை விரும்பியபோது ராஜிநாமா செய்யலாம். ராஜ்ய சபையின் அப்போதைய உறுப் பினரனைவரின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டு, மக்கள் சபையால் ஒத்துக்கொள்ளப்பட்ட தீர்மானத்தால் உபஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்யலாம். ஆனால், இத்தகைய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருமுன் குறைந்தது பதினான்கு நாள் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி அத்தகைய தீர்மானம் எதுவும் கொண்டுவரப்படலாகாது.

உபஜனாதிபதி, தமது பதவிக்காலம் முடிவடைந்திருந்தாலும், தமக்குப்பின் வருபவர் பதவி ஏற்கும்வரை தொடர்ந்து பதவியி லிருக்கவேண்டும்.

உபஜனாதிபதி, ஜனாதிபதியாகச் செயலாற்றும்போது இவருக்கு ஜனாதிபதியின் எல்லா அதிகாரங்களும் சிறப்புரிமைகளு முண்டு. ஜனாதிபதிக்கான ஊதியங்கள், படிகள், குடியிருப்பு வசதிகள் அனைத்திற்கும் இவர் உரியவராவார்.

கடந்த மூன்று உபஜனாதிபதித் தேர்தல்களில் முதலிரண்டில் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். மூன்றாவது தேர்தலில் ஜாகீர்ஹுசேன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

அரசியலமைப்பு இவருக்குப் பெரும் அதிகாரம் வழங்கா விட்டாலும் தம் நிலையால் உபஜனாதிபதி மக்களின் பெருமைக் குரியவராகச் சிறப்புடன் விளங்குகிறார்.

**இந்தியாவின் அட்டர்னிஜெனரல் :** தலைமை நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமனம் பெறத் தகுதியுள்ள ஒருவரை ஜனாதிபதி அட்டர்னி ஜெனரலாக நியமிக்கிறார். இவர் இந்திய அரசாங்கச் சட்ட ஆலோசகராகப் பணிபுரிவார். ஜனாதிபதியால் இவருக்கு அனுப்பப்படும் சட்டங்கள் குறித்து ஆலோசனை கூறவேண்டும். இவர், இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள எல்லா நீதிமன்றங்களி லும் தோன்றி வாதிப்பதற்கு உரிமை பெற்றிருக்கிறார். இவர், ஜனாதிபதிக்கு விருப்பமுள்ள காலம் வரை பதவி வகிப்பார். ஜனாதிபதி நிர்ணயித்தபடி சன்மானம் பெறுவார்.

அட்டர்னிஜெனரல் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தோன்றி உரை நிகழ்த்தலாம். பாராளுமன்ற உறுப்பினருக்கான எல்லாச் சிறப்புரிமைகளும் இவருக்கு உண்டு. இவர் புதுடில்லியில் தங்கி வசிப்பார். இவருக்கு மாதமொன்றுக்கு ரூ 4,000 சம்பளமும் படிகளும் கொடுக்கப்படுகின்றன. இவருக்கு அலுவலக வசதியும், தொலைபேசிகளும், தங்கி வசிக்க இடமும் அரசாங்கச் செலவில் கொடுக்கப்படுகின்றன.

# 15. யூனியன் சட்டசபை

## இந்தியப் பாராளுமன்றம்

யூனியன் சட்டசபை பாராளுமன்றமென வழங்கப்படுகிறது, இந்தியப் பாராளுமன்றம் இரு சபைகளைக் கொண்டதாகும். அரசியலமைப்பு கூட்டாட்சி முறையை மேற்கொண்டிருத்தலால் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மக்கள் சபையையும் (கீழ்ச்சபை), ராஜ்யங்களின் (அரசுகளின்) பிரதிநிதிகளைக் கொண்ட ராஜ்ய சபையையும் (மேல்சபை) ஏற்படுத்தியிருக்கிறது.

யூனியனுக்குப் பாராளுமன்றம் ஒன்று இருக்கவேண்டும். அது ஜனாதிபதியையும் இரண்டு சபைகளையும் கொண்டதாக இருக்கும். பாராளுமன்ற முறை, அரசாங்கத்தின் நிர்வாகத் துறைக்கும் சட்டசபைத் துறைக்கும் மிக நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துகிறது. ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினரில்லையாயினும் அவர் பாராளுமன்றத்தின் ஒரு பாகமாக இருக்கிறார். அவர் நிர்வாகத் தலைவராய் இருத்தலாலும், நிர்வாக அதிகாரமும் சட்டமியற்றும் அதிகாரமும் இணைந்தே செயல்படுவதாலும் ஜனாதிபதி பாராளுமன்றத்தின் ஒரு பாகமாய் இருத்தல் இயல்பேயாம்.

**மக்கள் சபை**

பாராளுமன்றத்தின் கீழ்ச்சபை மக்கள் சபையெனப் பெயர் பெற்றிருக்கிறது. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 520-க்கு மேற்படாமல் இருக்கவேண்டுமென அரசியலமைப்புக் கூறுகிறது (பிரிவு 81). இவர்களில் 500 பேர் அரசுகளின் உறுப்பினராக இருப்பர். இவர்களை நிலம் சார்ந்த தொகுதிகளிலிருந்து நேர்முகத் தேர்தல் வாயிலாக வயதுவந்தோர் வாக்களித்துத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். எஞ்சிய 20 உறுப்பினர்களை யூனியன் (ஆட்சி) பிரதேசங்களுக்கென அரசியலமைப்பு ஒதுக்கி இருக்கிறது. இவர்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம்

அல்லது பாராளுமன்றம் இதுபற்றிச் செய்யும் சட்டத்தையொட்டியும் தேர்ந்தெடுக்கலாம். அரசு ஒவ்வொன்றுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கைக்கும் அந்த அரசின் மக்கள் தொகைக்கும் உள்ள விகிதமானது இயன்றவரையில் அரசு எங்ஙனும் சமமாய் இருக்கவேண்டும். அதாவது மொத்த மக்கள் தொகைக்கும் ஒரு குறிப்பிட்ட அரசின் மக்கள் தொகைக்கும் உள்ள விகிதத்தில் ஒவ்வோர் அரசிற்கும் குறிப்பிட்ட இடங்களை அரசியலமைப்பு ஒதுக்கி இருக்கிறது, இதற்கேற்றவாறு ஒவ்வோர் அரசும் ஏறத்தாழ ஒரே அளவான நிலம் சார்ந்த தொகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் சபையின் உறுப்பினர்கள் 520-க்கு மேற்படலாகாதென அரசியலமைப்புக் கூறுகிறது. இதனால், மக்கள் தொகை பெருகினும் உறுப்பினர்களின் எண்ணிக்கை பெருகாது. குறைந்த அளவு பிரதிநிதிகள் பெருமளவு மக்கள் தொகையைப் பிரதிபலிக்கும்பொழுது பிரதிநிதித்துவ நிலையும் குறையலாம். எனவே, அரசியல் நிர்ணய சபையின் இக் கருத்தைச் சிலர் எதிர்த்தனர். இருப்பினும் பலர் மக்கள் சபை மிகப் பெரியதாக இருக்கலாகாதெனும் கருத்தைத் தெரிவித்தனர்.

438 மில்லியன் மக்களைக் கொண்ட நம் நாட்டிற்கு 520 பிரதிநிதிகள் என்பது மிகக் குறைவானதாகத் தோன்றுகிறது. 55 மில்லியன் மக்களுள்ள பிரிட்டனில் கீழ்ச்சபையில் 640 உறுப்பினர்களும், 50 மில்லியன் மக்களுள்ள ஃபிரான்சு நாட்டின் தேசீய சபையில் 540 உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இந் நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நம் நாட்டின் மக்கள் சபை மிகக் குறைவான பிரதிநிதிகளைக் கொண்டிருத்தலைக் காணலாம்.

இப்பொழுது மக்கள் சபையில் 502 உறுப்பினர்களிருக்கின்றனர். இவர்களில் இருவரை ஆங்கிலோ இந்திய வகுப்பினருக்காக ஜனாதிபதி நியமனம் செய்கிறார். இந் நியமனம் அரசியலமைப்புப்படி செய்யப்படுகிறது.

மக்கள் சபையின் உறுப்பினர்கள், வயதுவந்தவர்களால் (21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும்) நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இத் தேர்தல்களில் வாக்காளர்கள் மறைவாக வாக்குகளை வழங்க அரசியலமைப்பு வகை செய்திருக்கிறது. மிக அதிகமான வாக்குகளைப் பெறுவோர்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

சபையின் இயல்பான பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். ஆனாலும், ஜனாதிபதி மக்கள் சபையைப் பதவிக்காலம் முடிவுறும் முன்பே கலைத்துவிடலாம். நெருக்கடி நிலை நிலவுமாயின் சபையின் பதவிக்காலம் ஓர் ஆண்டு நீடிக்கலாம். இருப்பினும் நெருக்கடி நிலை நீங்கியபின் சபையின் பதவிக்காலம் ஆறு மாதங்களுக்கு மேல் நீடிக்க முடியாது. சபை ஓராண்டில் இருமுறையாவது கூடுவதுடன் ஒரு கூட்டத்திற்கும் அடுத்த கூட்டத்திற்கு மிடையே ஆறு மாதங்களுக்கு மேல் காலம் மிகக்கூடாது (பிரிவு 85). ஜனாதிபதி மக்கள் சபையைத் தாம் தகுதியெனக் கருதும் காலத்திலும் இடத்திலும் கூடும்படி அழைக்கவேண்டும். இவர் மக்கள் சபையைக் காலவரையறையின்றி ஒத்திப்போடலாம். இவர் மக்கள் சபையைக் கலைக்கலாம்.

**பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதிகள்:** உறுப்பினரின் பதவிக்குரிய தகுதிகளைதையும் அரசியலமைப்புக் குறிப்பிடவில்லையெனினும் ஒருவர் இந்தியாவின் குடியாகவும், ராஜ்ய சபைக்கானல் முப்பது வயதுக்குக் குறையாதவராகவும், மக்கள் சபைக்கானல் இருபத்தைந்து வயதுக்குக் குறையாதவராகவும் இருக்கவேண்டும். பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தினலோ அல்லது அதன் கீழோ இதற்கென விதிக்கப்படும் மற்றைய தகுதிகளையும் உடையவராக இருந்தாலன்றி அவர் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ளவர் ஆகார். மக்கள் சபைத் தேர்தலில் ஒரு வேட்பாளர் இந்தியாவில் எந்தப் பாராளுமன்றத் தொகுதியிலும் நிற்கலாம். இக் கருத்துக் கூட்டாட்சி முறைக்குப் புதியதெனினும் இந்தியாவின் ஒற்றுமையைக் கருதியும் ஒரே குடியுரிமைப்பேற்றை வளர்க்க விரும்பியும் அரசியலமைப்பாளர்கள் இதை மேற்கொண்டனர். ஒருவர் ராஜ்ய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட விரும்பினல் அவர் எந்த அரசிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட விரும்புகிருரோ அந்த அரசின் பாராளுமன்றத் தொகுதிகளில் யாதொன்றிலாவது வாக்காளராக இருக்கவேண்டும். இக் கருத்து ராஜ்ய சபையானது அரசுகளின் பிரதிநிதித்துவ சபையாக இருப்பதை வலியுறுத்துகிறது.

அரசுகளின் சட்டசபை உறுப்பினருக்கும் யூனியன் பாராளுமன்ற உறுப்பினருக்கும் சில சிறப்புத் தகுதிகளை அரசியலமைப்புக் குறிப்பிட வேண்டுமெனச் சிலர் விரும்பினர். ஆனல், எத்தகைய தகுதிகளைக் குறிப்பிடுவதென்பதில் மாறுபட்ட கருத்துகள் நிலவியமையால் அரசியலமைப்பு எதையும் குறிப்பிடவில்லை. இருப்பினும் அரசியலமைப்பு, உறுப்பினர்களின் சில தகுதியின்மை

களைக் குறிப்பிட்டிருக்கிறது. எவரும் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் உறுப்பினராக இருத்தலாகாது. இதுபோன்றே அரசின் சட்டசபைகளிரண்டிலும் ஒருவர் உறுப்பினராய் இருக்க முடியாது. ஒருவர் மக்கள் சபைக்கோ சட்டசபைக்கோ எத்தனை இடங்களில் வேண்டுமானாலும் போட்டியிடலாம். ஒருவர் பாராளுமன்றத்திற்கும் அரசின் சட்டசபைக்கும் தேர்ந் தெடுக்கப்பட்டிருந்தால் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தமது சட்டசபை இடத்தை ராஜிநாமா செய்யவில்லையெனில் பாராளுமன்றத்தில் அவருடைய இடம் காலியாகிவிடும் [(பிரிவு 101 (27)]; மேலும்,

(1) பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவர் சபையின் அனுமதியின்றி அறுபது நாட்கள் அதன் கூட்டத்திற்கு வராம லிருந்தால் அவருடைய இடம் காலியாகிவிடும்.

(2) இந்திய அரசாங்கங்களின் கீழ் ஒருவர் லாபம் தரும் பதவி வகித்தால் அவர் உறுப்பினராய் இருக்கவும் தேர்ந்தெடுக்கப் படவும் தகுதியற்றவர் ஆவார்.

(3) ஒருவர் சித்தவிகாரப்பட்டவராகவும்,

(4) திவாலாகி விடுதலை பெறாதவராயிருந்தாலும்,

(5) ஒருவர் இந்தியக் குடியாக இல்லாவிட்டாலும் அல்லது ஓர் அந்நிய அரசின் குடிமையைத் தாமே விரும்பிப் பெற்றிருந் தாலும் அவர் பாராளுமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்படுவதற்கும் இருந்துவருவதற்கும் தகுதியற்றவர் ஆவார்.

1951ஆம் ஆண்டு நிறைவேறிய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமும், உறுப்பினர்களின் சில தகுதியின்மைகளைக் குறிப்பிட் டிருக்கிறது.

**சபாநாயகர்**

மக்கள்சபை, சபாநாயகராக இருப்பதற்கு ஓர் உறுப்பினரை இயன்ற விரைவில் தெரிந்தெடுக்கவேண்டும். இவர் நடுநிலை நின்று சபை நடவடிக்கைகளை நடத்தவேண்டும். சபாநாயகரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டுமாயின் மக்கள் சபையில் அப்போது உள்ள மொத்த உறுப்பினரின் பெரும்பான்மையோரால் ஒரு தீர்மானம் நிறைவேறவேண்டும். எனினும் இத் தீர்மானத்தைக்

கொண்டுவரும் நோக்கத்தைக் குறித்துக் குறைந்தது பதினுன்கு நாள் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அப்படிப்பட்ட தீர்மானம் எதுவும் கொண்டுவரப்படலாகாது. மக்கள் சபை கலைக்கப்படும்போதெல்லாம், சபாநாயகர் அக் கலைப்புக்குப் பிறகு மக்கள் சபையின் முதல் கூட்டத்திற்கு அடுத்து முன்னதாக உள்ள காலம்வரை தமது பதவியைக் காலிசெய்யலாகாது.

சபாநாயகரின் நிலை அவரது அதிகாரங்களாலும், அவற்றை அவர் செயலாற்றும் முறையாலும் சிறப்படைகின்றது. சபையில் வாக்கெடுப்பு நிகழும்பொழுது இவர் கலந்துகொள்வதில்லை. ஆனுல், வாக்கெடுப்பில் சமநிலை காணுமாயின் இவர் வாக்களிக்க லாம். ஒரு மசோதா நிதி மசோதாதானு என்பதை இவர்தான் முடிவுசெய்யவேண்டும். இதற்கெனச் சில விதிமுறைகள் இருக் கின்றன. நிதி மசோதாவை ராஜ்ய சபையின் பார்வைக்கு அனுப்பவும், ஜனதிபதியின் ஒப்புதல் பெறவும் சபாநாயகர் இம் மசோதாவிற்குச் சான்று வழங்கவேண்டும். சபையில் குறிப்பிட்ட குறைவெண் உறுப்பினர்கள் இல்லாவிட்டால் சபா நாயகர் கூட்டத்தைத் தள்ளிவைக்கலாம். இரு சபைகளின் ஒருங்கிருப்புக் கூட்டத்திற்கான விதிமுறைகளை ஜனதிபதி செய்யும் பொழுது சபாநாயகரையும் ராஜ்ய சபைத் தலைவரையும் கலந்துகொள்ளவேண்டும். சபைகளின் ஒருங்கிருப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க சபாநாயகருக்கு உரிமை உண்டு. ஆங்கிலத்திலோ இந்தியிலோ கருத்துகளைத் தெளிவாக வெளியிட இயலா உறுப்பினர்களுக்கு, அவர்களுடைய தாய்மொழியில் பேச சபாநாயகர் அனுமதி கொடுக்கலாம். கடமைகளைச் செயலாற்றுவதுபற்றி, சபை நீங்கலாக, வேறு யாருக்கும் இவர் பொறுப்புடையவரல்லர்.

**சபையில்**

சபாநாயகர், சபையின் அலுவல்களைச் சிறப்புடன் செய்ய அரசியலமைப்புச் சில விதிமுறைகளைக் கூறியிருக்கிறது. கேள்விகள், தீர்மானங்கள், மசோதாக்கள், கோரிக்கைகள், திருத்தங்கள் முதலியனவற்றை ஏற்க இவர் செய்யும் முடிவுகள் இறுதியானவை. இவைபற்றிச் சபையின் விதிமுறைகளை இடமறிந்து, நிலையறிந்து விளக்கம் கொடுக்க இவருக்குச் சிறப்புரிமை வழங்கப்பட்டிருக் கிறது. நாட்டு நலங் கருதி, இவர் சபையில் எப் பொருள் பற்றியும் உறுப்பினர்கள் விவாதிக்க அனுமதி கொடுக்கலாம். சபாநாயகரின் முடிவுகளை உறுப்பினர்கள் விவாதிக்க அனுமதி கொடுக்கலாம். சபாநாயகரின் முடிவுகளை உறுப்பினர்கள்

எதிர்க்கமுடியாது. சபையின் ஒழுங்கை நிலைபெறச் செய்வதிலும், சபை நிகழ்ச்சிகளை முறைப்படி நடத்துவதிலும் இவரது அதிகாரங்கள் ஒப்பற்று விளங்குகின்றன. சபையின் பல்வேறு கமிட்டிகளை (குழுக்களை) அமர்த்தவும் அவற்றை இயக்கவும் இவருக்கு அதிகாரமிருக்கிறது. உறுப்பினர்களின் தனிச் சிறப்புரிமைகளுக்கு இவர் காவலராக அமைகிறார். சபாநாயகர் சபையில் தனிச்சிறப்பு உடைய பிரதிநிதியாக விளங்குகிறார். இதையே, பைலி என்பாரும், 'சபையின் அதிகாரங்கள், விதிமுறைகள், மாண்பு இவற்றின் பிரதிநிதியாகச் சபாநாயகர் விளங்குகிறார்' எனக் கூறுகிறார்.

**உதவிச் சபாநாயகர்**

சபாநாயகரைப்போலவே இவரையும் சபை தேர்ந்தமர்த்துகிறது. சபாநாயகர் இல்லாதபோது இவர் தலைமை தாங்கிச் சபை நிகழ்ச்சிகளை நடத்துவார். அப்போது இவருக்குச் சபாநாயகருக்கான எல்லா அதிகாரங்களும் உரிமைகளும் இருக்கும். சபாநாயகரைப்போல் இவரையும் பதவிநீக்கம் செய்யலாம்.

**ஒரு குழுவில் (கமிட்டியில்)**

இவர் உறுப்பினரானால் அக் குழுவிற்குத் தலைவராகும் சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறார். இவர் விரும்பினால் எக் குழுவின் கூட்டங்களிலும் கலந்துகொள்ளலாம்; அதற்குத் தலைமையும் தாங்கலாம். ஐயுறும்போது இவர் தம் முடிவுகளைச் சபாநாயகருடன் கலந்துகொண்டு வெளியிடலாம். சபைத் தலைமையை ஏற்காத காலங்களில் இவர் மற்ற உறுப்பினர்களைப் போல, அவர்களுக்கான உரிமைகளுடன் சபை நிகழ்ச்சிகளில் பங்கு பெறலாம்.

**அறுவர் அடங்கிய தலைவர்களின் பட்டியல் :** சபாநாயகரும் உதவிச் சபாநாயகரும் இல்லாதபோது சபை நிகழ்ச்சிகளைத் தடையின்றி நடத்திக்கொடுக்க ஆறு தலைவர்களைச் சபாநாயகர் நியமனம் செய்கிறார். இவர்களின் நியமனம் ஒரு பட்டியல் வரிசையிலிருக்கும். இப் பட்டியலின் வரிசைப்படி ஒரு தலைவர் சபை நிகழ்ச்சிகளை நடத்துவார். இப் பட்டியலில் மாற்றுக் கட்சியினரும் இடம் பெறலாம்.

## மக்கள் சபையில் அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள்

| எண் | அரசுகள் | மக்கள்தொகை மில்லியனில் | இடங்கள் |
|---|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | 35.98 | 14 |
| 2. | அஸ்ஸாம் | 11.86 | 14 |
| 3. | பீகார் | 46.46 | 53 |
| 4. | குஜராத் | 20.62 | 24 |
| 5. | ஹரியாஞ |  | 9 |
| 6. | ஜம்மு-காஷ்மீர் | 3.58 | 6 |
| 7. | கேரளா | 16.88 | 19 |
| 8. | தமிழ்நாடு | 33.65 | 39 |
| 9. | மத்தியப் பிரதேசம் | 32.39 | 37 |
| 10. | மகாராஷ்டிரம் | 39.50 | 45 |
| 11. | மைசூர் | 23.55 | 27 |
| 12. | நாகாலந்து |  | 1 |
| 13. | ஒரிசா | 17.56 | 20 |
| 14. | பஞ்சாப் |  | 13 |
| 15. | ராஜஸ்தான் | 20.15 | 23 |
| 16. | உத்தரப் பிரதேசம் | 73.75 | 85 |
| 17. | மேற்கு வங்காளம் | 34.97 | 40 |

| எண் | பெயர் | மக்கள்தொகை மில்லியனில் | இடங்கள் |
|---|---|---|---|
| 1. | டெல்லி | 2.64 | 7 |
| 2. | ஹிமாசல் பிரதேசம் | 1.34 | 6 |
| 3. | மணிப்பூர் | 0.78 | 2 |
| 4. | திரிபுரா | 1.14 | 2 |
| 5. | அந்தமான், நிக்கோபர் | 0.06 | 1 |
| 6. | லக்ஷத் தீவுகள் | 0.02 | 1 |
| 7. | கோவா, டையு, டாமன் | 0.62 | 2 |
| 8. | தாதர், நாகர்ஹவாலி | 0.57 | 1 |
| 9. | பாண்டிச்சேரி | 0.36 | 1 |
| 10. | சண்டிகட் | 0.12 | 1 |

# 16. ராஜ்ய சபை

பாராளுமன்றத்தின் மேல்சபையே ராஜ்ய சபை என வழங்கப் படுகிறது. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் பன்னிரண்டு உறுப்பினர்களையும், அரசுகள், யூனியன் ஆட்சிப் பரப்புகள் இவற்றின் பிரதிநிதிகள் இருநூற்றுமுப்பத்தெட்டுப் பேருக்கு மேற்படாதவர்களையும் இச் சபை கொண்டதாக் இருக்கவேண்டும். ராஜ்ய சபையில் இப்பொழுது இருநூற்றுமுப்பத்திரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் பன்னிரண்டு பேர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை போன்றவைகளில் சிறப்பறிவு அல்லது செயல் முறைத் திறன் வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். எஞ்சிய இருநூற்றிருபது பேரை அரசுகளும் யூனியன் ஆட்சிப் பரப்புகளும் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றன.

**தேர்தல் முறை :** ஒவ்வோர் அரசிற்குமென அரசியலமைப்பு இடங்களைப் பங்கீடு செய்திருக்கிறது. ராஜ்ய சபையின் இவ்விடங்களுக்கான உறுப்பினர்களை அரசுகளின் சட்டசபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றை மாற்று வாக்கு வாயிலாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதுபோன்றே யூனியன் ஆட்சிப் பரப்புகளுக்கான உறுப்பினர்களைப் பாராளுமன்றம் சட்டத்தினால் வகுக்கும் முறைப்படி தேர்ந்தெடுக்கவேண்டும்.

ராஜ்ய சபையின் இம் முறை அமைப்பு, கூட்டாட்சி அரசியலமைப்புகளில் காணும் மேல்சபைகளைப் போலன்றித் தனித்த சிறப்புடையதாய்க் காணப்படுகிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள கூட்டாட்சி மேல்சபைகளுக்கு உறுப்பரசுகள் சமமான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனுப்புகின்றன. இவர்களும் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படு

கிறார்கள். பெரிய, சிறிய அரசுகள் என்னும் வேற்றுமையின்றி அவைகளுக்குச் சமமான பிரதிநிதித்துவம் வழங்குவதை அரசியலமைப்பாளர்கள் மக்களாட்சி முறைக்கு முரணானதெனக் கருதி ஒதுக்கினர்.

நமது அரசுகளின் மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டு, அரசியலமைப்பு, ராஜ்ய சபையில் அவற்றிற்கான இடங்களைப் பங்கீடு செய்திருக்கிறது. சிறிய அரசுகள் ஓரளவிற்குச் சலுகை பெற்றிருக்கின்றன. இருப்பினும், இப் பங்கீடு ஏற்றத்தாழ்வுகளை ஈடுசெய்துவிட்டதெனக் கருதிவிடலாகாது.

அரசுகளின் கீழ்ச்சபை உறுப்பினர்கள் வாக்காளர்களாய் அமைந்து ராஜ்ய சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பர். இச் சபை அரசுகளின் பிரதிநிதியென்பதை உறுதிப்படுத்துகிறதெனலாம். இதற்கான தேர்தலும் எளிதாகவும் மறைமுகமாகவும் நடைபெறுகிறது.

ராஜ்ய சபை கலைக்கப்படமாட்டாது. ஆனால், ஒவ்வோர் ஈராண்டின் முடிவிலும் இயன்ற விரைவில் அதன் உறுப்பினர்களில் கிட்டிய அளவு மூன்றிலொரு பகுதியார் விலகிக்கொள்ள வேண்டும் [பிரிவு 83 (1)]. விலகிக்கொண்ட மூன்றிலொரு பகுதியாருக்கான தேர்தல் நடக்கும். கீழ்ச்சபையைப் போன்று முற்றிலும் இச் சபை மாறுவதில்லை.

**மக்கள் சபையும் ராஜ்ய சபையும்**

சட்டமியற்றுவதில் இரு சபைகளும் சேர்ந்தே இயங்கினும், மக்கள் சபை உயர்நிலை அடைகிறது. ஏனெனில், ராஜ்ய சபை அமைச்சவையைக் கட்டுப்படுத்தவியலாததேயாம். அமைச்சவை பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றியங்கவேண்டுமென்பது, நடைமுறையில் அது மக்கள் சபையின் நம்பிக்கையைப் பெற வேண்டுமென்ற கருத்தேயாகும். அதேபோல் அமைச்சவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாய் இருக்கவேண்டுமென்றால், அது மக்கள் சபைக்குப் பொறுப்புடையதாய் இருக்க வேண்டுமெனக் கொள்ளவேண்டும். அரசாங்கம் மக்களாட்சியின்படி மக்களுக்கே பொறுப்புடையதாய் இருக்கவேண்டுமாகையால், அதை அரசியலமைப்பு நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபைக்குப் பொறுப்புடையதாக்கியிருக்கிறது. இது பற்றியே மக்கள் சபை ஓர் உயர்நிலையை அடைந்திருக்கிறது.

நிதி மசோதாக்களைப் பொறுத்தவரையில் இச் சபைக்கு எந்தவிதமான அதிகாரமுமில்லை என்று சொல்லலாம். ஏனெனில், அம் மசோதாக்களை மக்கள் சபையே கொண்டுவருகிறது. வரி விதிப்புபற்றியதாக இவைகள் இருத்தலால் மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபை இவற்றைக் கொணரல் பொருத்தமுடையதேயாம். இதன் வழியாக இந் நிதி மசோதாக்களுக்கான மக்கள் இசைவும் பெறப்படுகிறது. இருப்பினும், ராஜ்ய சபை இம் மசோதாக்களை ஆய்ந்து அறிவுரை வழங்கலாமென அரசியலமைப்புக் கூறுகிறது. கீழ்ச்சபையில் நிறைவேறிய நிதி மசோதா மேல்சபையின் ஆய்விற்குச் செல்லும். இங்கு இம் மசோதா பதினான்கு நாட்கள் இருக்கும். இப் பதினான்கு நாட்களுக்குள் மேல்சபை தன் முடிவினைக் கூறவேண்டும். மசோதாவை ராஜ்ய சபை அப்படியே ஏற்றுக்கொண்டால், ஜனாதிபதியின் இசைவைப் பெற்றுச் செயல் படும். மசோதாவில் ராஜ்ய சபை மாற்றங்களைச் செய்தால், அது மறுபடியும் கீழ்ச்சபைக்குச் சென்று நிறைவேற்றப்பட்டு, நேரே ஜனாதிபதியின் இசைவைப் பெற்றுச் செயல்படும்.

சட்டமியற்றும் மற்றத் துறைகளிலெல்லாம் இரு சபைகளும் சமமான அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றன. ஒரு மசோதா பற்றிய மேல்சபையின் கருத்துகளை மக்கள் சபை ஏற்கவில்லை யெனின், இரு சபைகளும் ஒருங்கே கூடி இம் மசோதாவை இயல்பான பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம். ராஜ்ய சபையின் மொத்த உறுப்பினர்கள் மக்கள் சபையினரில் பாதியே யாகையால் இம் முறை மிக எளிதாகும்.

இச் சபையின் ஏற்பினைப் பெறுமல் அரசியலமைப்பைத் திருத்தமுடியாது. திருத்தங்கள்பற்றி இரு சபைகளும் சமமான அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றன.

இச் சபையின் சிறப்பு அதிகாரங்களென இரண்டினைச் சொல்லலாம். அதாவது, அரசுகளின் சபை என்ற முறையில் இச் சபை மூன்றிலிரு பெரும்பான்மை வாக்குகளால் நாட்டின் நலம் கருதி, அரசுப் பட்டியலிலுள்ள ஒரு பொருள்பற்றிப் பாராளு மன்றம் சட்டமியற்றவேண்டுமென்று கூறலாம் (பிரிவு 249). இதையொட்டி எழும் பாராளுமன்றச் சட்டம், இந்தியா முழுமைக்கோ, ஒரு பகுதிக்கோ ஓராண்டு செயல்படும்.

அனைத்திந்தியப் பணிகளை அமைக்க ராஜ்ய சபை மூன்றிலிரு பெரும்பான்மையுடன் தீர்மானம் கொண்டுவந்து சட்டமியற்ற

வேண்டும். இப் பணிகளை அமைப்பதெனின் அரசுகள் தம் உரிமையை இழக்க வேண்டிவரும். இவைபற்றிய சட்டங்களை இயற்றலாமென அரசியலமைப்புக் கூறுகிறது.

ராஜ்ய சபையின் இவ்விரு அதிகாரங்களையொட்டி மசோதாக்களை அச் சபையில் கொண்டுவந்த பின்னரே மக்கள் சபை ஏற்றுப் பின் சட்டமியற்றுகிறது. கீழ்ச்சபையில் சட்டங்கள் அவசரமாய் உருவாவதைத் தடுக்கவும், அதற்கு அறிவுரை வழங்கவும் ராஜ்ய சபை பயன்படுகிறது.

**ராஜ்ய சபைத் தலைவரும் உதவித் தலைவரும்**

இந்தியாவின் உபஜனாதிபதி தம் பதவி முறைமையில் ராஜ்ய சபையின் தலைவராக இருப்பார். ராஜ்ய சபை இயன்ற விரைவில் அதன் உறுப்பினர் ஒருவரை உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப் பதவி காலியாகும்போது சபை மற்றோர் உறுப்பினரை உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். சபைத் தலைவர் (உப ஜனாதிபதி) சபையின் உறுப்பினரல்லர். இவர் ஜனாதிபதியாகச் செயலாற்றும்போது ராஜ்ய சபைத் தலைவராக இருக்கமாட்டார். இக் காலத்தில் சபைத் தலைவருக்கென வழங்கப் படும் ஊதியம் அல்லது படிகள் இவற்றை இவர் பெற்றுக்கொள்ள மாட்டார்.

சபாநாயகருக்கு வழங்கப்பட்டிருப்பன போன்ற அதிகாரங்களையும் உரிமைகளையும் ராஜ்ய சபைத் தலைவருக்கும் அரசியலமைப்பு வழங்கியிருக்கிறது.

ராஜ்ய சபைத் தலைவரில்லாதபோது உதவித் தலைவர் தலைமை வகிப்பார், உதவித் தலைவர் சபையின் உறுப்பினராவார். இவர் சபையால் தேர்ந்தெடுக்கப்படுபவர். இவர் தாம் கையெழுத்துச் செய்து சபைத் தலைவருக்கு விலாசமிட்டு அனுப்பிய எழுத்தின் மூலம் தமது பதவியை எச் சமயத்திலும் ராஜிநாமாச் செய்யலாம். உதவித் தலைவர் ராஜ்ய சபையில் உறுப்பினராக இராதுபோனால் தமது பதவியைக் காலி செய்யவேண்டும். ராஜ்ய சபையில் அப்போதுள்ள மொத்த உறுப்பினரின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றால் உதவித் தலைவரை அவருடைய பதவியிலிருந்து நீக்கிவிடலாம். இவர் சபைத் தலைமைப் பதவிக்கான ஊதியத்தையும் படிகளையும் பெறுகிறார். ராஜ்ய சபைத் தலைவரும் உதவித் தலைவருமில்லாதபோது சபை நிகழ்ச்சிகளை நடத்த, உறுப்பினர்களில் சிலரைக்கொண்ட 'உப தலைவர்'களை ஒரு பட்டியல் வரிசையில் சபைத் தலைவர் நியமிக்கிறார்.

**பாராளுமன்றச் செயலாண்மைத்துறை :** பாராளுமன்றச் சபை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான செயலாண்மைத்துறைப் பணியாளர்களிருக்கவேண்டும். இச் செயலாண்மைத் துறைகள் சபாநாயகருக்கும் ராஜ்ய சபைத் தலைவருக்கும் பொறுப்புடையன. இரு சபைகளின் சுதந்திரத்தைக் காக்கவும், நிர்வாகத் துறையின் தலையீட்டினின்று தனித்து நிற்கவும் இவ்வமைப்புப் பயனுள்ளதாக இருக்கிறது. இரு சபைகளின் செயலாண்மைத் துறைகளுக்கும் தனித்தனியாகச் செயலாளர்களிருக்கின்றனர். சபைகளின் ஆட்சியில் நிர்வாகத் தொடர்புடைய எல்லா வேலைகளையும் இவர்கள் செய்வார்கள்.

**அரசுகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ள விதம்**

| எண் | அரசுகளின் பெயர் | | மொத்த இடங்கள் |
|---|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | ... | 18 |
| 2. | அஸ்ஸாம் | ... | 7 |
| 3. | பீஹார் | ... | 22 |
| 4. | குஜரத் | ... | 11 |
| 5. | கேரளா | ... | 9 |
| 6. | மத்தியப் பிரதேசம் | ... | 16 |
| 7. | தமிழ்நாடு | ... | 18 |
| 8. | மகாராஷ்டிரம் | ... | 19 |
| 9. | மைசூர் | ... | 12 |
| 10. | ஒரிஸ்ஸா | ... | 10 |
| 11. | பஞ்சாப் | ... | 11 |
| 12. | ராஜஸ்தானம் | ... | 10 |
| 13. | உத்தரப் பிரதேசம் | ... | 34 |
| 14. | மேற்கு வங்காளம் | ... | 16 |
| 15. | ஜம்மு-காஷ்மீர் | ... | 4 |
| 16. | நாகாலாந்து | ... | 1 |

**யூனியன் பிரதேசங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஹிமாசலப் பிரதேசம் | ... | 2 |
| 2. | டெல்லி | ... | 3 |
| 3. | மணிப்பூர் | ... | 1 |
| 4. | திரிபுரா | ... | 1 |
| 5. | பாண்டிச்சேரி | ... | 1 |
| 6. | கோவா, டையு, டாமன் | ... | 1 |

# 17. அலுவல் நடைமுறை

சபை ஒவ்வொன்றிலும் உறுப்பினர் பெயர்ப் பட்டிய லொன்றிருக்கும். சபையில் அமருமுன் உறுப்பினர்கள் இதில் கையெழுத்திடவேண்டும். உறுப்பினர்கள் பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்யவேண்டும். சபையின் மொத்த உறுப்பினரில் பத்தில் ஒரு பங்கினர் வந்திருந்தால் சபாநாயகர் அலுவல்களைத் தொடங்குவார். இக் குறைவெண் உறுப்பினர்கள் சபையில் இல்லையென்றால், சபாநாயகர் கூட்டத்தைத் தள்ளிவைக்கலாம் அல்லது சபையின் வேலையை விலக்கிவைக்கலாம். இயல்பாகப் பெரும்பான்மையினர் வாக்குகளைக் கொண்டே சபை தன் அலுவல்களைச் செய்கிறது.

கூட்டங்களின் முதல் மணியைக் கேள்வி நேரமென்பர். சபையின் நிகழ்ச்சிகளில் இக் கேள்வி நேரம் ஒரு சிறப்பு நிகழ்ச்சி யாகும். இந் நேரத்தில் சபை சுறுசுறுப்புடன் காணப்படும். பொது நிகழ்ச்சிகளைப்பற்றிய கேள்விகளால் உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்து தகவல் பெறுகின்றனர். கேள்விகளை ஏற்க சபாநாயகர் சில விதிமுறைகளைப் பின்பற்றுகிறார். உறுப் பினரின் முதல் கேள்வியையொட்டிக் கிடைக்கும் பதில்களி லிருந்து துணைக்கேள்விகளையும் உறுப்பினர் கேட்பர். இதன் பயனாக அரசாங்கம் செய்ததுபற்றியும், செய்யத் தவறியது பற்றியும் பொதுமக்களால் அறிந்துகொள்ளமுடிகிறது.

கேள்வி நேரத்திற்குப் பின் சபை அன்றைய அலுவல்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொள்ளும். இவ் அலுவல்கள் பலதரப்பட்டனவாம். இவை ஒவ்வொன்றிற்கும் ஒரு முறை இருக்கிறது. சபையின் அலுவல்களில் மிக முக்கியமானவையாகத் தள்ளிவைப்புக் கோரிக்கை, தீர்மானங்கள், நம்பிக்கையின்மைத் தீர்மானங்கள், சட்டமியற்றல் பற்றிய தீர்மானம், நிதி

அலுவல்கள்பற்றிய தீர்மானம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். சபையின் மற்ற அலுவல்களில், அமைச்சர்களின் கொள்கை விளக்க அறிக்கைகளையும், அமைச்சர்கள் சபைமுன் சில அறிக்கைகளை வைத்தலையும் குறிப்பிடலாம்.

பொது முக்கியத்துவம் வாய்ந்த, திடீரெனத் தோன்றிய ஒரு நிகழ்ச்சியை எல்லோருடைய பார்வைக்கும் கொண்டுவர, நிகழ்ச்சிகளைத் தள்ளிவைத்துவிட்டு, சபை, அந் நிகழ்ச்சிபற்றி உறுப்பினர் விவாதிக்கக் கோருவதே தள்ளிவைப்புக் கோரிக்கையெனப்படும். இக் கோரிக்கை, ஒரு குறிப்பிட்ட, அண்மையில் நடந்த, பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிபற்றியே இருக்கலாம். அரசாங்க நடவடிக்கைபற்றியோ, நடவடிக்கையின்மைபற்றியோ சபை முழுக் கவனத்தையும் செலுத்த இக் கோரிக்கை பயன்படுகிறது. அரசாங்கப் போக்கைக் கண்டிக்க இம் முறை ஒரு நடைமுறை வழக்காகிவிட்டது. இக் கோரிக்கை வரப்பெற்றவுடன் சபாநாயகர் குறிப்பிட்ட அமைச்சரிடம் கூறுவார்; அமைச்சர் இக் கோரிக்கைபற்றிய தகவல்களைக் கூறி உடனே சபையில் விளக்கலாம். இல்லையெனில், சபையின் அனுமதியுடன் எல்லாத் தகவல்களையும் சேர்த்துக்கொண்டு, பின் சபையில் விளக்கலாம். நிலை விளக்கம் பெற்றவுடன் இக் கோரிக்கையைச் சபை விட்டுவிடலாம். ஆனால், இக் கோரிக்கையைச் சபாநாயகர் ஏற்றுக்கொண்டால், விவாதத்திற்குப் பின்னரே முடிவு தெரியும்.

ஒரு குறிப்பிட்ட பொருள்பற்றிச் சபை, தன் கருத்தை விளக்கும் முறையாகத் தீர்மானங்களைப் பயன்படுத்துகின்றது. தீர்மானம் குறிப்பிட்ட ஒரு பொருள்பற்றியதாகவும், சரிநுட்பமாய் இயற்றப்பட்டதாகவும் இருக்கவேண்டும். நீதிமன்றங்களின் பார்வையில் உள்ள எப் பொருள்பற்றியும் சபை தீர்மானங்கள் இயற்றலாகாது.

அமைச்சவையில், சபைக்கு நம்பிக்கையின்மையை எடுத்துக் கூறும் தீர்மானம் நம்பிக்கையின்மைத் தீர்மானம் என்று வழங்குகிறது. இத் தீர்மானத்தைக் கொண்டுவர உறுப்பினர்களில் குறைந்தது ஐம்பது பேராவது ஆதரவு காட்டவேண்டும். ஆதரவு கிடைத்தவுடன், சபாநாயகர், இத் தீர்மானத்தை விவாதிக்க நாள் குறிப்பிடுவார். இத் தீர்மானம், அமைச்சவையின் குறைபாடுகளை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதுடன் அதன் செல்வாக்கைக் குறைக்கவும் பயன்படும்.

சபாநாயகரின் இசைவுடன், பொது முக்கியத்துவமுடைய ஒரு பொருள்பற்றி விவாதம் நடத்த ஓர் உறுப்பினர் ஒரு பிரேரணை கொண்டுவரலாம். சில சமயங்களில் அரசாங்கமே இத்தகைய பிரேரணை ஒன்றைக் கொணர்ந்து சபையின் ஆதரவைப் பெறலாம்.

சபை ஒரு பொருளைப்பற்றித் தொடர்ந்து நீண்ட விவாதம் செய்வதைத் தடுத்து நிறுத்தலாம். இதற்கென உறுப்பினர் எவரும் ஒரு 'முடித்தல் பிரேரணை'யைக் கொண்டுவரலாம். சபை இப் பிரேரணையை ஏற்குமாயின் விவாதம் அதனுடன் முடிவுறும். ஒரு குறிப்பிட்ட மசோதாவிற்காக ஒதுக்கிய நேரம் முடிவுறுமாயின், மசோதாவின் விவாதிக்கப்படாத பகுதிகளையும் ஏற்குமாறு ஒரு பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றினால், மசோதா முழுவதும் நிறைவேற்றியதாகக் கருதப்படும். இம் முறைக்கு 'கில்லோடின்' எனப் பெயர்.

சபையின் நடைமுறை விதிகளென 389 விதிகளுள்ளன. இவற்றுடன் சபாநாயகருக்கு வழிகாட்டியாக 123 விதிகளுமுள்ளன. இவைகளே நமது பாராளுமன்ற இயக்கத்திற்கு அடிப்படையான விதிமுறைகள்.

**சட்டமியற்றற்குரிய நடைமுறை**

அரசியலமைப்பு, மசோதாக்களைப் பாராளுமன்றத்தில் கொணருதல்பற்றியும், அவற்றை நிறைவேற்றுதல்பற்றியும் விரிவாகக் கூறியிருக்கிறது (பிரிவுகள் 107 முதல் 122 முடிய).

பண, நிதி மசோதாக்கள் நீங்கலாக மற்றவைகள் பாராளுமன்றச் சபை எதிலும் எழலாம். சட்டமாவதற்குரிய மசோதாவின் குறிக்கோள்களையும் காரணங்களையும் விளக்கும் ஓர் அறிக்கையுடன் ஒரு மசோதாவை ஓர் உறுப்பினர் சபைக்குக் கொண்டுவர வேண்டும். இதுவே சட்டமியற்றலின் முதல் நிலையாகும். இந் நிலையில் மசோதாவின் பெயர்மட்டும் வாசிக்கப்படும். விவாதங்கள் நடக்கமாட்டா. இது, முதல் வாசிப்பெனப் பெயர் பெறும்.

இரண்டாவது நிலையில், ஒரு மசோதாவைச் சபை ஏற்றுப் பார்வையிடலாம்; சபையின் பொறுக்குக் குழுவிற்கனுப்பலாம்; இரு சபைகளின் கூட்டுக் குழுவிற்கனுப்பலாம் அல்லது அதைப் பொதுமக்களின் கருத்தறிய வெளியிடலாம். ஆனால், விரைவில் சட்டமாகவேண்டிய மசோதாக்களைச் சபை வெளியிடுவதில்லை. எனவே, ஒரு மசோதா மற்ற நடைமுறையில் ஒன்றினைப் பின்பற்றவேண்டும்.

ஒரு மசோதாவைச் சபை பொறுக்குக் குழுவிற்கனுப்பினால், அக் குழு தன் ஆய்வறிக்கையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சபையில் தாக்கல் செய்யவேண்டும். செயல்திறமும் நுட்ப அறிவும் பெற்றவர்களே இக் குழுவினில் அமர்த்தப்படுவார்கள். இதில் எதிர்க் கட்சியினரும் இடம்பெறுவர். குழு தனது கருத்தை ஒருமனமாகவும், பெரும்பான்மையினரின் கருத்துக்கிணங்கியும் வெளியிடலாம். சிறுபான்மையினர் இணங்காக் குறிப்பினையும் கொடுக்கலாம்.

இரு சபையினராலும் அமர்த்தப்படும் கூட்டுக் குழுவினில் மக்கள் சபையினர் மூன்றிலிரு பங்கும், ராஜ்ய சபையினர் ஒரு பங்குமிருப்பர். இக் குழுவும் தன் கருத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தெரிவிக்கவேண்டும். இவ்விரு குழுக்களும் தம் அறிக்கையைச் சபைக்குத் தாக்கல் செய்வதை மசோதாவின் மூன்றுவது நிலை எனக் கூறலாம். இந்நிலையில் மசோதாவிற்கான திருத்தங்களை உறுப்பினர்கள் கொண்டுவரலாம்.

சபை, குழுவின் அறிக்கையை ஏற்றுப் பார்வையிடும் நிலையை மசோதாவின் நான்காம் நிலையெனக் கூறலாம். இப்பொழுது சபையினர் மசோதாவின் வாசகங்களை விவரமாய் ஆய்வார்கள். மசோதாவின் வாசகங்களுடன் திருத்தங்களையும் ஏற்று, விவாதித்துச் சபை முடிவு செய்யும் மசோதாவைச் சபை விரிவாக ஆய்ந்து ஏற்றுக்கொள்வதுடன், அதன் இரண்டாவது வாசிப்பு முடிவுறுகின்றது. இதன் பிறகு சில நாட்கள் சென்ற பின்னரே மசோதா மூன்றுவது வாசிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இப்பொழுது சபை திருத்தங்களை ஏற்பதில்லை. ஆனாலும், மசோதாவில் சிற்சில சொல் மாற்றங்களைச் சபை செய்யலாம். மசோதாவும் முழுமையாக நிறைவேறும். எனவே, மசோதா மற்றொரு சபைக்கனுப்பப்படும். மசோதா இப்பொழுது ஐந்தாவது நிலையை அடைகிறது.

மற்ற சபை, மசோதாவை, வந்தவாறு ஏற்கலாம்; திருத்தலாம்; அல்லது முழுதும் ஏற்க மறுக்கலாம்; அல்லது மசோதாவை மறுசபைக்குத் திருப்பியனுப்பாமல் இருக்கலாம். ஒரு மசோதாவை ஒரு சபை ஆறு மாதங்களுக்குமேல் வைத்திருந்தால், அச் சபை அதை ஏற்கவில்லையென்று பொருள்படும். இது மசோதாவின் ஆறும் நிலையாகும்.

மறுசபைத் திருத்தங்களுடன் திருப்பியனுப்பிய ஒரு மசோதாவைச் சபை பார்வையிடும். திருத்தங்களைச் சபை ஏற்றுக் கொண்டால் அதுபற்றி மறு சபைக்குச் செய்தியனுப்பும்.

திருத்தங்களை ஏற்கவில்லையென்றாலும் மறு சபைக்குச் செய்தி யனுப்பும். இம் முறையில் ஒரு மசோதா இரு சபைகளிலும் சென்று திரும்பினால் அது நிறைவேறாது. இதைத் தவிர்க்க ஜனாதிபதி இரு சபைகளையும் ஒருங்கே கூடுமாறு செய்வார். இக் கூட்டத்தில் குறிப்பிட்ட மசோதா விவாதிக்கப்படும். ஒருங்கே கூடிய இரு சபையினரின் பெரும்பான்மை வாக்குகளால் மசோதா ஒரு முடிவைப் பெறும். இது மசோதாவின் ஏழாவது நிலையாகும்.

இரு சபைகளிலும் நிறைவேறிய ஒரு மசோதா, சபாநாயகரின் கையெழுத்துடன், ஜனாதிபதியின் ஒப்புதல் பெறச் செல்லும். ஜனாதிபதியின் ஒப்புதல் பெற்றால் மசோதா சட்டமாகும். ஆனால், ஜனாதிபதி விரும்பினால் ஒரு மசோதாவை ஏற்கவும் மறுக்கலாம். மசோதாவை அவர் பாராளுமன்றத்திற்குத் திருப்பியனுப்பலாம். இதன் பயனாக மசோதா முன்கூறிய நடைமுறைப்படி மறுபடியும் ஆராயப்படும். இதன் பின் மசோதாவை இரு சபைகளும் திருத்தங்களுடனோ, இல்லாமலோ நிறைவேற்றியனுப்புமாயின், ஜனாதிபதி ஒப்புதல் தர மறுக்க முடியாது. எனவே, அவருடைய ஒப்புதலைப் பெற்று மசோதா சட்டமாகும். இதுவே ஒரு மசோதாவின் இறுதி நிலையாகும்.

### பணமசோதாக்கள்பற்றிய சிறப்பு நடைமுறை

ராஜ்ய சபையில் பண மசோதாக்கள் எதையும் கொணர லாகாதென அரசியலமைப்பின் 109ஆவது பிரிவு குறிப்பிட்டிருக் கிறது. அதாவது, மக்களின் பிரதிநிதிகளடங்கிய சபையே பண மசோதாக்களைக் கொண்டு வரலாமென்ற மக்களாட்சிக் கொள்கையை அரசியலமைப்பு ஏற்றுச் சிறப்பித்திருக்கிறது.

பணமசோதா ஒன்று மக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட பிறகு, ராஜ்ய சபைக்கு அதன் சிபார்சுகளுக்காக அனுப்பப்பட வேண்டும். ராஜ்ய சபை அம் மசோதாவைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் தன் சிபார்சுகளுடன் மக்கள் சபைக்குத் திருப்பியனுப்பவேண்டும். அதன் பேரில் மக்கள் சபை ராஜ்ய சபையின் சிபார்சுகள் எல்லாவற்றையுமோ அல்லது அவைகளில் எதையேனுமோ ஒப்புக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். ராஜ்ய சபையின் சிபார்சுகளை மக்கள் சபை ஒப்புக்கொண்டால், அம் மசோதா இரு சபைகளாலும் நிறை வேற்றப்பட்டதாகக் கருதப்படும். ராஜ்யசபையின் சிபார்சுகளை மக்கள் சபை ஒப்புக்கொள்ளாவிட்டால், அம் மசோதா திருத்தங் களெதுவுமின்றி மக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட உருவத்தி

லேயே இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். ராஜ்ய சபைக்கு அனுப்பப்பட்ட பண மசோதா பதினன்கு நாட்களுக்குள் மக்கள் சபைக்கு அனுப்பப்படவில்லையென்றால், இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

அரசின் வரிவிதிப்புடன் தொடர்புடையனவும், கடன் கொள்வதை முறைப்படுத்தல் அல்லது உத்தரவாதமளித்தல் இந்தியாவின் திரண்ட நிதியுடன் தொடர்புடையனபற்றிய ஏதேனும் ஒரு மசோதாவில் இடம் பெறுமானல், அது பண மசோதாவாகக் கருதப்படும்.

ஒரு மசோதா பண மசோதாவா அல்லவா என்பதுபற்றி ஐயம் எழுமாயின், அதுபற்றி மக்கள் சபையின் சபாநாயகர் அளிக்கும் தீர்ப்பே முடிவானதாகும் [பிரிவு 110 (3)]. பாராளுமன்றச் சபைகளால் பண மசோதா நிறைவேற்றப்பட்டவுடன் அதை ஜனுதிபதியிடம் சமர்ப்பிக்கவேண்டும். ஜனுதிபதி அதற்குச் சம்மதமளித்ததையோ அல்லது சம்மதம் மறுத்ததையோ அறிவிக்க வேண்டும். பண மசோதாக்களுக்கு ஜனுதிபதி சம்மதம் வழங்க மறுக்கமுடியாது.

### நிதிபற்றிய நடைமுறை

நிதித்தொடர்புடையனவும், பொதுநிதியிலிருந்து செலவிடப் படுவனவும் நிதி மசோதாக்களில் அடங்கும். இவை பாராளுமன்றத்தின் எச் சபையிலும் ஜனுதிபதியின் சிபார்சு இன்றி நிறைவேற்றமுடியாது. வரியைக் குறைக்கவோ நீக்கவோ எழும் மசோதாக்களுக்கு ஜனுதிபதியின் சிபார்சுகள் தேவையில்லை.

ஜனுதிபதி, ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் அவ்வாண்டில் இந்திய அரசாங்கத்தின் உத்தேச வரவுகளையும் செலவுகளையும் பற்றிய அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் முன்னிலையிலும் வைக்கும்படி செய்யவேண்டும். இது ஆண்டு நிதி அறிக்கையெனப் பெயர் பெறும். வழக்கில் இதை 'பட்ஜெட்' எனவும் வழங்குகிருேம். நாட்டின் நிதிக்காவலராக விளங்கும் நிதி அமைச்சர் வாயிலாக ஜனுதிபதி செயலாற்றுகிருர். ஆண்டு நிதி அறிக்கையை நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

இதில் இந்தியாவின் திரண்ட நிதியின் பேரில் சாட்டப்பட்ட செலவுகளைச் செய்வதற்கு வேண்டிய தொகைகளும், இந் நிதியிலிருந்து செய்யக் கருதிய மற்றைய செலவுகளைச் செய்வதற்கு

வேண்டிய தொகைகளும் தனித்தனியாகக் காட்டப்பட்டிருக்கும். அன்றியும், வருமானக் கணக்கிலிருந்து செய்யப்படும் செலவுகள் மற்றைய செலவுகளினின்றும் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கும்.

திரண்ட நிதியில் காட்டப்பட்டிருக்கும் செலவினங்களை அரசியலமைப்பு குறிப்பிட்டிருக்கிறது. சிறப்பாக ஜனாதிபதி, பாராளுமன்றச் சபைத் தலைவர்கள் ஆகியோரின் ஊதியம், படிகள் முதலியன இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் திரண்ட நிதியின் பேரில் சாட்டப்பட்ட செலவுகள்பற்றிய பகுதி பாராளுமன்றத்தின் வாக்களிப்பிற்குட் படுத்தப்படலாகாது. ஆனால், இவைபற்றிச் சபை விவாதிக்கலாம்.

மற்றைய செலவுகள்பற்றிய பகுதியை மானியக் கோரிக்கை யாக மக்கள் சபையில் அரசாங்கம் சமர்ப்பிக்கவேண்டும். கோரிக்கைக்குச் சம்மதம் அளிக்கவோ மறுக்கவோ, அல்லது கோரிக்கையில் குறித்த தொகையைக் குறைத்துச் சம்மதம் வழங்கவோ மக்கள் சபைக்கு அதிகாரம் உண்டு.

ஜனாதிபதியின் சிபார்சின் பேரிலன்றி, மானியக் கோரிக்கை யெதுவும் செயல்படலாகாதென அரசியலமைப்புக் கூறியிருக்கிறது.

மக்கள் சபை மானியம் பெற்றதும் அரசாங்கம், இயன்ற விரைவில் இம் மானியம்பற்றிய நிதி ஒதுக்கல் மசோதா ஒன்றைக் கொண்டுவரவேண்டும். இதில் இந்தியாவின் திரண்ட நிதியில் சாட்டுதலான தொகையும் இடம் பெறும். ஆனால், இவ்வாறு ஒதுக்கப்படும் பணம் ஆண்டறிக்கையில் கண்ட தொகைக்கு மேற்படலாகாது. இவ்வொதுக்கத்தின்படியின்றி இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து பணம் எதையும் அரசாங்கம் எடுத்த லாகாது.

பாராளுமன்றத்தின் மானியம் பெறுமல் இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கலாகாதெனினும், அரசாங்கம் எதிர் பாராப் பொறுப்பை நிறைவேற்றுவதற்குப் பாராளுமன்றம் மானியம் வழங்கவும், இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து பணங்களை எடுக்கவும் சட்டமியற்றலாம்.

நிதி மசோதாவை ஜனாதிபதியின் சிபார்சின் பேரிலன்றிக் கொணரலாகாது. நிதி மசோதா எதையும் ராஜ்யம் சபையில் கொண்டுவரலாகாது.

நாட்டின் நிதிநிலைபற்றி உறுப்பினர்கள் பட்ஜெட் பொது விவாதத்தின்போது குறிப்பிடுவார்கள். நிதி அமைச்சர் விவாதத்திற்குப் பதிலளிப்பார். உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணைகள் வாயிலாக அரசாங்கத்தின் கோரிக்கைத் தொகையைக் குறைக்க முயல்வர். அரசாங்கத்தின் ஒரு குறிப்பிட்ட அமைச்சின் கொள்கையை ஏற்க மறுப்பதைக் காட்டிக்கொள்ளக் கோரிக்கையில் ஒரு ரூபாய் குறைக்கவேண்டுமென்று சில உறுப்பினர் பிரேரணை கொண்டுவரலாம். ஒரு மொத்தத் தொகையைக் குறைக்கவோ, ஒரு செலவை நீக்கிவிடவோ வேண்டுமென்று உறுப்பினர் கொண்டு வரும் பிரேரணைக்குச் சிக்கனம்பற்றிக் குறைப்பு (வெட்டு) எனப் பெயர். இதன் நோக்கம் அரசாங்கம் செலவினங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பதே. கோரிக்கையில் நூறு ரூபாய் குறைக்கவேண்டுமெனும் உறுப்பினர் பிரேரணை அரசாங்கப் பொறுப்பிலுள்ள ஒரு குறிப்பிட்ட குறைபாட்டை வெளிக் கொணரப் பயன்படுகிறது. இப் பிரேரணைக்கு 'அடையாளக் குறைப்பு' (வெட்டு) எனப் பெயர். இவ் வெட்டுப் பிரேரணைகள், பட்ஜெட்டை நன்ருக ஆராய உறுப்பினருக்கு வாய்ப்பளிக்கின்றன.

இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து பணம் ஒதுக்க சட்ட அடிப்படையில் நடைமுறை இருந்துவருகிறது. இதன்படி நிதி ஒதுக்கல் சட்டத்தாலும் நிதிச் சட்டத்தாலுமே பணம் பெறமுடியும். நிதி ஒதுக்கல் சட்டத்தால் அரசாங்கம் திரண்ட நிதியிலிருந்து எவ்வளவு பணம் பெறலாம் என்பது நிர்ணயிக்கப் படுகிறது. இச் சட்டம் குறிப்பிட்ட தொகைக்கு மேல் அரசாங்கம் திரண்ட நிதியிலிருந்து பணம் எடுக்கலாகாது. நிதிச் சட்டத்தால், வரிவிதிப்புகளிலிருந்து அரசாங்கம் நிதியைப் பெறலாம்.

எனவே, பணம், நிதிபற்றியவைகளில் பாராளுமன்றத்திற்கு அரசாங்கம் கட்டுப்பட்டுப் பொறுப்புடன் நடந்துகொள்கிறது.

# 18. பாராளுமன்றத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்குமுள்ள சிறப்பு உரிமைகள்

பாராளுமன்றத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் குறிப்பிட்ட சில சிறப்புரிமைகள் உண்டு. பாராளுமன்றம், நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெறவும், உறுப்பினர்களிடையே ஒழுங்கு முறையைப் புகுத்தவும் சில சிறப்புரிமைகளைப் பெற்றிருத்தல் நல்லதாகும். அதுபோன்று உறுப்பினர்களும் தங்கள் கடமைகளைச் சிறப்புறவும் அச்சமின்றியும் செய்தற்குச் சில தனியுரிமைகள் இருக்கவேண்டும். மக்களாட்சி இயக்கத்திற்குப் பேச்சுரிமை இன்றியமையாததாகும். இவ்வுரிமையின்றேல் அரசாங்கம் நிலைபெற்றிருக்கமுடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசியலமைப்புச் சில தனியுரிமைகளை வழங்கி, அவர்களைப் பயனுள்ள கடமைகளில் ஈடுபடச் செய்கிறது.

நமது பாராளுமன்றத்திற்கும் உறுப்பினர்களுக்கும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கும் உறுப்பின்ர்களுக்கும் உள்ள எல்லாத் தனியுரிமைகளும் உண்டு. அரசியலமைப்பின் பிரிவுகளுக்கும், பாராளுமன்றத்தின் நடைமுறையை ஒருங்குபடுத்தும் விதிகளுக்கும், நிலையுத்தரவுகளுக்கும் உட்பட்டுப் பாராளுமன்றத்தில் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும் [பிரிவு 105 (1)]. பாராளுமன்றத்தின் உறுப்பினர் எவரும், பாராளுமன்றத்திலாவது அதன் கமிட்டியிலாவது பேசியதைப்பற்றி எந்த நீதிமன்றத்திலும், எவ்வித நடவடிக்கைக்கும் உள்ளாகமாட்டார். இந்தியப் பாராளுமன்றம் தனது உறுப்பினர்களின் உரிமைகள், கடமைகள், அதிகாரங்கள், பாதுகாப்புகள் முதலியவைபற்றிச் சட்டமியற்றுகின்றவரையில், இவைபற்றி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைப் பின்பற்றி இயங்கும்.

பாராளுமன்றக் கூட்டத் தொடரின்போதோ அல்லது அதற்கு முன்னும் பின்னும் நாற்பது நாட்களுக்கோ உறுப்பினர் எவரும் கைது செய்யப்படலாகாது. தேர்தலின்போது காவலில் வைக்கப்பட்டுள்ள ஓர் உறுப்பினர் விடுதலை பெறவும் உரிமை உண்டு. குற்றத் தண்டனைக்குட்பட்ட எவரும் இவ்வுரிமையைப் பெறமுடியாது. அதுபோன்றே தடுப்புக் காவல் சட்டத்தின்படி காவலில் இருப்பவர் எவரும் இவ்வுரிமையைப் பெறவியலாது. தடுப்புக் காவல் சட்டப்படி உறுப்பினரைக் கைது செய்வது முறையாகுமேயன்றித் தனியுரிமைகளைப் பறிப்பது முறையாகாது.

சபாநாயகரின் அல்லது ராஜ்ய சபைத் தலைவரின் இசைவின்றிப் பாராளுமன்ற உறுப்பினர் எவரையும் கைது செய்யலாகாது. சிவில் அல்லது கிரிமினல் குற்ற வழக்குகளைப்பற்றிய அழைப்புக் கட்டளைகளையோ, பிடிப்புக் கட்டளைகளையோ பாராளுமன்றக் கட்டடத்திற்குள் வழங்குவதற்குமுன் சபாநாயகர் அல்லது ராஜ்ய சபைத் தலைவரின் இசைவைப் பெறவேண்டும். ஓர் உறுப்பினரைக் கிரிமினல் குற்றத் தண்டனைக்குட்படுத்திக் கைது செய்யும் நிறுவனம் அதைச் சபாநாயகருக்கும் ராஜ்ய சபைத் தலைவருக்கும் அறிவிக்கவேண்டும். அதுபோன்றே தண்டனைக்குப் பின் விடுதலையடைந்து வெளிவருவோரைப்பற்றியும் சபைத் தலைவர்களுக்குத் தகவல் கொடுக்கவேண்டும்.

பாராளுமன்றச் சபை ஒன்றின் உறுப்பினர், ஊதியங்களையும் படிகளையும் பெற உரிமையுள்ளவராவர். இப்பொழுது உறுப்பினர்கள் மாதமொன்றுக்கு ரூ. 400 ஊதியமாகவும், பாராளுமன்றக் கூட்டங்களின்போது நாள் ஒன்றுக்கு ரூ. 21 படியாகவும் பெறுகிறார்கள். இதனுடன் இந்தியா முழுவதற்கும், எப்பொழுதும் முதல் வகுப்பு ரயில் பிரயாண உரிமையும் பெற்றிருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது உறுப்பினரின் ஊதியமும் படியும் குறைவெனத் தோன்றினாலும், நம் நாட்டின் நிலைக்கு இவை குறைவெனக் கருதலாகாது.

**பாராளுமன்றக் குழுக்கள் (கமிட்டிகள்):** இக் குழுக்கள் பாராளுமன்ற அரசாங்கத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகின்றன. பாராளுமன்றத்தின் வேலைகளை விரைவிலும் திறமையுடனும் தெளிவுடனும் இக் குழுக்கள் செய்துகொடுக்கின்றன. நாட்டின் கருத்துகளை நன்குணர்ந்து எதிர்க் கட்சிகளுடன் ஒத்துழைத்துச் சிக்கல் தவிர்க்க இக் குழுக்கள் அரிய சாதனங்களாகும்.

குழு உறுப்பினர்களைச் சபையோ அல்லது சபாநாயகரோ (தலைவரோ) அமர்த்தலாம் அல்லது நியமிக்கலாம். குழுவின் தலைவராகச் சபாநாயகர் குழு உறுப்பினர்களில் ஒருவரை நியமிப்பார். உதவிச் சபாநாயகர் ஒரு குழுவில் இருந்தால் அவரே அக் குழுவிற்குத் தலைவராவர். குழுவின் முடிவுகள் பெரும்பான்மை யினரையொட்டியே இருக்கும். குழு உறுப்பினர்களின் மூன்றி லொரு பங்கைக் குறைவெண்ணாகக்கொண்டு குழுக்கள் செயல் படும். உறுப்பினர்களின் பெரும்பான்மைக் கருத்தை ஏற்காதவர் கள் தங்கள் கருத்தையும் ஒரு குறிப்பாக வெளியிடலாம். குழுவில் வாக்களிக்கும்பொழுது சமநிலை ஏற்பட்டுவிட்டால், தலைவர் தம் வாக்கினையும் வழங்கி முடிவு காணலாம். பாராளுமன்றக் குழுக் கள் உட்குழுக்களை அமைத்துக்கொள்ளலாம். குழுக்கள் ஒரு கருத்தை அறிய எவரையும் அழைக்கலாம்; அவர்களின் சான்று களைப் பெறலாம்.

குழுக்களின் நடைமுறைபற்றியும், அவைகளின் வேலை யமைப்புப்பற்றியும் சபாநாயகர் நெறிமுறைகளை வகுக்கலாம்.

மக்கள் சபையின் நடைமுறையை யொட்டிப் பதினொரு குழுக்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன

1. **அலுவல் ஆலோசனைக் குழு :** சபையின் கூட்டத் தொடக்கத்தில் இக் குழுவைச் சபாநாயகர் அமர்த்துகிறார். இவரே இதன் தலைவர். மக்கள் சபையின் தலைவரும், மற்றக் கட்சிகளின் தலைவர்களும் இக் குழுவினில் இடம் பெறுவர். இக் குழுவில் பதினைந்து பேர் இருப்பார்கள். இவர்கள் சபையின் வேலைத்திட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொடுப்பார்கள். சபை நல்ல முறையில் செயல்படவும், உறுப்பினரின் ஒத்துழைப்பைப் பெறவும் இக் குழு பாடுபடும்.

2. **தனியுறுப்பினர் மசோதா, தீர்மானங்கள்பற்றிய குழு :** பதினைந்து உறுப்பினர்களை ஓர் ஆண்டிற்குச் சபாநாயகர் அமர்த்து கிறார். இக் குழு தனியுறுப்பினர் மசோதாக்கள்பற்றி ஆயும். இவற்றை வகைப்படுத்தலும், திறனறிந்து விவாதத்திற்காகக் காலம் ஒதுக்கலும் இக் குழுவின் வேலையாகும்.

3. **பொறுக்குக் குழு :** இக் குழுவினைப்பற்றிய செய்திகளைச் 'சட்டமியற்றற்குரிய நடைமுறை' பற்றிய அதிகாரத்தில் காணலாம்.

4. **விண்ணப்பங்கள்பற்றிய குழு:** இக் குழுவில் பதினைந்து பேர் இருப்பார்கள். இதனைச் சபாநாயகர் கூட்டத் தொடக்கத்தில் அமர்த்துகிறார். இக் குழு தனக்கு அனுப்பப்பட்ட விண்ணப் பங்களை ஆய்ந்து சபைக்கு அறிக்கையைத் தாக்கல் செய்யும். இதில் அமைச்சர் உறுப்பினராயிரார்.

5. **சிறப்புரிமைகள்பற்றிய குழு:** இக் குழுவைச் சபாநாயகர் சபையின் தொடக்கத்தில் அமைக்கிறார். இதில் பதினைந்து பேர் இருப்பர். இதற்கனுப்பப்படும் உரிமை இழப்புப் பிரேரணைகளை ஆய்ந்து, உரிமை இழப்பிருக்கிறதா இல்லையா என்பதைச் சபைக்கு அறிவிக்கவேண்டும்.

6. **நடைமுறை விதிகள்பற்றிய குழு:** இக் குழுவின் பதினைந்து உறுப்பினர்களையும் சபாநாயகர் அமர்த்துகிறார். சபாநாயகரே இக் குழுவின் தலைவர். சபையின் நடைமுறைகள் பற்றியும், அலுவல்பற்றியுமான விதிகளைத் திருத்தம் செய்யச் சபைக்கு இக் குழு சிபார்சு செய்யும்.

7. **சபைக்கு வாரா உறுப்பினர்களைப்பற்றிய குழு:** உறுப் பினர்களின் லீவு விண்ணப்பங்களை இக் குழு ஆராயும். எவரும் அறுபது நாட்களுக்கு மேலாக, அனுமதிப்பு இல்லாமல் வராமலிருந்திருந்தால், அதுபற்றி ஆராய்ந்து அவரை மன்னிக்க வேண்டுமா அல்லது அவர் பதவிக்கான இடம் காலியாகி விட்டதாகக் கருதலாமா என்பதுபற்றி இக் குழு சபைக்கு ஆலோசனை கூறும். குழுவின் பதினைந்து உறுப்பினர்களும் ஓராண்டிற்குச் செயல்படுவர்.

8. **அரசாங்க உறுதிமொழிகள்பற்றிய குழு:** இக் குழுவில் அமைச்சர்கள் இடம் பெறுவதில்லை. இதன் பதினைந்து உறுப் பினர்களையும் சபாநாயகர் ஓராண்டிற்கு நியமனம் செய்கிறார். சபையில் அமைச்சர்கள் கொடுக்கும் உறுதிமொழிகள் செய லாற்றப்பெறுகின்றனவாவென்பது பற்றி இக் குழு ஆய்வறிக்கை யைச் சபைக்குத் தாக்கல் செய்யும்.

9. **சட்டத்தின் உள் விதியமைப்புப்பற்றிய குழு:** அரசிய லமைப்போ, பாராளுமன்றமோ வழங்கிய உள் விதியமைப்பு அதிகாரங்களை அரசாங்கம் தக்க முறையில் செயல்படுத்துகின்றதா வென்பதை இக் குழு ஆய்ந்து சபையில் அறிக்கையைத் தாக்கல் செய்யும். இதன் பதினைந்து உறுப்பினர்களும் ஓராண்டு பதவி வகிப்பர். இவர்களைச் சபாநாயகரே நியமனம் செய்கிறார். இக் குழுவில் அமைச்சர்கள் இடம்பெறுவதில்லை.

**10. மதிப்பீட்டுக் குழு:** இப் பெயருடைய குழுவினைப் பாராளுமன்றம் 1952இல் அமைத்தது. அக் காலம்முதல் இக் குழு தன் வேலையைத் திறமுடன் செய்துவருகிறது. இக் குழுவை மக்கள் சபை ஓராண்டிற்கு அமர்த்துகிறது. குழுவின் உறுப்பினர்களைச் சபை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி தேர்ந்தெடுக்கிறது. சபையின் உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இக் குழுவில் முப்பது அங்கத்தினர்கள் இருப்பர். இக்குழு பல உட்குழுக்களாய்ப் பிரிந்து செயல்படுகிறது. பாராளுமன்றத்தின் நிதிப் பொறுப்புகள் பெருகியிருப்பதால், மதிப்பீடு செய்யும் குழுவின் வேலைகளும் வளர்ந்துகொண்டேயிருக்கின்றன. இக் குழு பட்ஜெட் மதிப்பீடுபற்றியே ஆராயும். நிதித்துறையில் அரசாங்க நடவடிக்கைகளைக் கண்காணிப்பதோடு, இக் குழு மற்றத் துறைகளிலும் அரசாங்கத்தின் போக்கை மாற்றியமைக்கமுடியும்.

மதிப்பீடுகள்பற்றிய கொள்கைகளை யொட்டி ஆட்சியில் சீர்திருத்தங்களைச் செய்யவும், சிக்கனத்தைக் கையாளவும், திறமையைப் பெருக்கவும் இக் குழு அரசாங்கத்திற்குச் சிபார்சுகள் செய்யலாம். ஆட்சியில் திறமையையும் சிக்கனத்தையும் உண்டாக்க அரசாங்கத்திற்கு மாற்றுக் கொள்கைகளை இக் குழு தெரிவிக்கலாம். மதிப்பீடுகளையொட்டித் தக்க முறையில் நிதி பிரித்து வழங்கப்பட்டிருக்கிறதா என்பதையும், மதிப்பீடுகளை எவ்வகையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென்பதையும் குழு எடுத்துரைக்கலாம். இக் குழு ஏற்றுச் செய்யவேண்டிய வேலைகள் மிகக் கடினமாயிருக்குமாதலால், உறுப்பினர்கள் நிதித் துறையில் நுட்ப அறிவுடையவர்களாக இருக்கவேண்டும். ஆண்டுதோறும் குழுக்கள் அமைக்கப்படும்பொழுது முன் அனுபவமுடையவர்களைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதில்லை. இக் குழு அரசாங்கத் துறைகளைப் பிரித்துக்கொண்டு அவைகளின் மதிப்பீட்டை ஆய்ந்து அறிக்கையைச் சபைக்குத் தாக்கல் செய்கிறது. பாராளுமன்றக் குழுக்களிலெல்லாம் சிறப்புடையதும் செல்வாக்குடையதுமென இக் குழுவினைக் கூறலாம்.

**11. பொதுக் கணக்குக் குழு :** இக் குழு, அரசாங்கம் பொது நிதியைச் செலவிடும் முறையையும், அதன் விளைவுகளையும் ஆராயும். இக் குழுவில் இருபத்திரண்டு உறுப்பினரிருப்பர். இவர்களில் ஏழு பேர் ராஜ்யசபை உறுப்பினர்கள். இக் குழுவின் உறுப்பினர்களை விகிதாசார முறையில் சபை தேர்ந்தமர்த்தும். இக் குழுவில் அமைச்சர்கள் இடம்பெறுவதில்லை. இது ஓராண்டு பணியாற்றும். இக் குழு அரசாங்கத்தின் செலவினங்களனைத்தையும், கொடுக்கல் வாங்கல் பற்றியும் ஆய்ந்து அறிக்கையைச்

சபைக்குத் தாக்கல் செய்யும். அரசாங்கம் சபையிடமிருந்து மானியம் கோரிப் பெற்ற பணங்களைச் சட்டத்தால் குறிப்பிட்ட இனங்களுக்குச் செலவிட்டிருக்கிறதாவென்பதையும், மானியத் தொகையை மீறிய செலவினங்கள் இருக்கின்றனவாவென்பதையும் இக் குழு ஆராயும். இது அரசின் கார்ப்பொரேஷன், சுயேச்சையாய் இயங்கும் உற்பத்தி நிறுவனங்களின் வரவுசெலவுபற்றியும், அவைகளின் இலாபநட்டக் கணக்குகள்பற்றியும் சபைக்கு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

இக் குழு தன் கடமைகளைச் சரிவரச் செய்ய இந்தியாவின் மாபெருங் கணக்கரின் உதவியையும் நாடலாம். இவர் அரசாங்கத் துறைகளின் அலுவலர் எவரையும் குழுவின்முன் வந்து சான்று கூறவைக்கவோ, அல்லது குழுவினரின் கேள்விகளுக்குத் தக்க பதிலைப் பெறவோ உரிமை பெற்றிருக்கிறார். இக் குழுவும் உட் குழுக்களை அமைத்துக்கொண்டு தன் பொறுப்புகளைத் திறமையுடன் செய்கிறது. இக் குழு தன் பணிகளை நீதிமன்ற நடைமுறைகளையொட்டிச் செய்கிறது. இதன் சிபாரிசுகள் அரசாங்கத்தின் வருங்காலச் செலவினங்களைப் பாதிப்பதோடு, நிதியமைப்பு முறைகளில் சில நல்ல மாற்றங்களையும் செய்கின்றன.

பொது நிதியைப் பாராளுமன்றம் தணிக்கை செய்து கட்டுப்படுத்துவதற்கான முறைகளை இக் குழு கூறுகிறது. இக் குழுவின் பார்வைக்கு வரும் எப் பொருள்பற்றியும் தகுந்த விளம்பர முறைகளால் ஒரு பொதுக் கருத்தை உருவாக்கலாம்.

பொதுக் கணக்குகளை ஆராயும் குழு நம் நாட்டில் 1923-லிருந்து இருந்துவந்திருக்கிறது.

# 19. யூனியன் நீதிமன்ற அமைப்பு—தலைமை நீதிமன்றம்

கூட்டாட்சி அரசியலமைப்புகளில் உயிர்நிலையாகத் தலைமை நீதிமன்றம் விளங்குகிறது. கூட்டாட்சி, அதிகாரப் பங்கீட்டை அடிப்படையாகக் கொண்டியங்கும். மத்திய அரசாங்கத்திற்குரிய அதிகாரங்களையும், உறுப்பரசுகளின் அதிகாரங்களையும் அரசியலமைப்பு வரையறை செய்து சரிநுட்பமாகப் பங்கீடு செய்கிறது. எனவேதான், கூட்டாட்சி அரசியலமைப்புகள் எழுதப் பெற்றவைகளாய் இருக்கின்றன. எழுத்துருவிலுள்ள அரசியலமைப்பையொட்டி எழுகின்ற ஐயப்பாடுகளையும் தகராறுகளையும் நடுநிலையிலிருந்து அரசியலமைப்பை அடிப்படையாகக்கொண்டு தீர்ப்பு வழங்க ஒரு நிலையான சுயேச்சையுள்ள தலைமை நீதிமன்றம் இருத்தல் இன்றியமையாததாகும். இதுபற்றியே நமது குடியரசமைப்பிலும் ஒரு தலைமை நீதிமன்றத்தை அரசியலமைப்பு உருவாக்கியிருக்கிறது.

கூட்டாட்சியமைப்புகளில் காணும் இரு வேறு நீதிமன்றங்களைப் போலன்றி, இந்தியா ஒரே நீதிமன்ற அமைப்பினைப் பெற்றிருக்கிறது. இவ்வமைப்பில் தலைமை நீதிமன்றம் உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கிறது. இதன் கீழுள்ள நீதிமன்றங்கள் அரசியலமைப்புச் சட்டத்தையொட்டி எழுகின்ற எல்லா வழக்குகளிலும் ஒரேபடித்தான அதிகாரவரம்பைப் பெற்றுச் செயல்படுகின்றன. மேலும், நாடு முழுமைக்குமான ஒரே நீதிமன்றப் பணியை அரசியலமைப்பு உருவாக்க வழி செய்திருக்கிறது. உயர் நீதிமன்றங்களிலிருந்து தலைமை நீதிமன்றத்திற்கு நீதிபதிகளை நியமிக்கவும், நீதிபதிகளை இந்தியாவின் எப் பகுதிக்கும் மாற்றவும் அரசியலமைப்பு வகை செய்யும் வழியாக நீதித் துறையின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தியிருக்கிறது. தலைமை நீதிமன்றத்தின் ஆணை நாடு முழுவதிலும் நீட்சி பெறுவதுடன், சிவில்,

கிரிமினல், அரசியலமைப்புச் சட்டங்களிலும் அதிகாரவரம்புடைய தாய்ப் பரவி நிற்றலை நாம் காணலாம்.

இந்தியத் தலைமை நீதிமன்றம் ஒன்றிருக்கவேண்டுமென்று அரசியலமைப்பின் 124ஆவது பிரிவு குறிப்பிட்டிருக்கிறது. இப்பொழுது தலைமை நீதிமன்றத்தில் ஒரு பிரதம நீதிபதியும் பத்து நீதிபதிகளுமிருக்கின்றனர். அரசியலமைப்பு வழங்கியிருக்கும் அடிப்படையான உரிமைகளனைத்தையும் மக்கள் பெற்றுத் துய்க்க இந் நீதிமன்றம் உதவுவதோடு, அரசியலமைப்பின் காப்புக் கோட்டையாகவும் செயல்படுகிறது. இப் பெரும் பணியைச் சிறப்புறச் செய்துமுடிக்கச் சுயேச்சையாய் இயங்கவல்ல நீதிபதிகளை அமர்த்தவும் அரசியலமைப்பு விதி முறைகளை வகுத்துதவியிருக்கிறது.

**நீதிபதிகளின் நியமன முறை :** தலைமை நீதிமன்ற நீதிபதிகளை ஜனாதிபதி நியமனம் செய்கிறார். எனினும், அவர் தேவையெனக் கருதினால், தலைமை நீதிமன்றம், உயர் நீதிமன்றம் இவற்றின் நீதிபதிகளில் எவருடனும் கலந்தாலோசித்த பின்னர் ஒருவரை நியமிக்கலாம். நீதிபதிகள் அறுபத்தைந்து வயது நிரம்பும்வரை பதவி வகிப்பர் [பிரிவு 124 (2)]. பிரதம நீதிபதியல்லாத மற்றைய நீதிபதிகளை ஜனாதிபதி நியமிக்கும்பொழுது நீதிபதியைக் கலந்து கொள்ளவேண்டும்.

**நீதிபதியாய் நியமனமாவதற்குரிய தகுதிகள் :** ஒருவர் இந்தியாவின் குடியாகவும், குறைந்தது ஐந்தாண்டாவது ஓர் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவராகவும், அல்லது பத்தாண்டாவது ஓர் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக அட்வகேட்டாகவும், அல்லது ஜனாதிபதியால் சிறந்த சட்டவியல் வல்லுநராகக் கருதப்படுபவராகவும் இருந்தால், நீதிபதியாக நியமனம் பெறத் தகுதியுள்ளவராவார்.

தலைமை நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பதவி வகித்திருந்து எவரும் இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள் எந்த நீதிமன்றத்திலாவது அல்லது எந்த அதிகாரி முன்னிலையிலாவது வாதிக்கவோ அல்லது செயல் புரியவோ கூடாதென அரசியல் அமைப்புக் கூறுகிறது [பிரிவு 124 (7)]. இருப்பினும், ஓய்வு பெற்ற நீதிபதியின் சட்ட அறிவையும் திறமையையும் அத்தகையவரின் துறையை யொட்டிய சில சிறப்புப் பணிகளுக்கு அரசாங்கம் பயன் படுத்தலாம்.

**பதவிநீக்கம் :** தலைமை நீதிமன்ற நீதிபதியொருவரை நிரூபிக்கப்பட்ட நடத்தைப் பிசகு அல்லது திறமையின்மை காரணமாக மட்டுமே பதவியிலிருந்து நீக்கலாம். ஒரு நீதிபதியின் நடத்தைப் பிசகுபற்றியும் திறமையின்மைபற்றியும் ஆராயப் பாராளுமன்றம் நடைமுறை விதிகளை வகுக்கலாம். நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்கப் பாராளுமன்றத்திற்கு அதிகாரமுண்டு. அதாவது, பாராளுமன்றச் சபை ஒவ்வொன்றிலும் ஒரே தொடர் கூட்டத்தில் அச் சபையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையோராலும், அச் சபையின் உறுப்பினர்களில் அங்கு வந்திருந்து வாக்களித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையோராலும் ஆதரிக்கப்பட்ட ஒரு வேண்டுகோளைச் சபை ஜனாதிபதிக்கு அனுப்பி, அவரால் செய்யப்பட்ட ஓர் உத்தரவுப்படி நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

**நீதிபதிகளின் சம்பளம் :** நீதிபதிகளின் சம்பளத்தைச் சட்டசபைகளின் நிர்ணயத்திற்கு விடாமல் அரசியலமைப்பே நிர்ணயம் செய்திருக்கிறது. நீதிபதிகள் சட்டசபையின் விருப்புவெறுப்பையொட்டி ஊதியம் பெறுமல் தம் உரிமையால் அதைப் பெறுகின்றனர். பிரதம நீதிபதி மாதமொன்றுக்கு ரூ. 5,000-மும், மற்ற நீதிபதிகள் ரூ. 4,000-மும் பெறுகின்றனர். ஒவ்வொரு நீதிபதிக்கும் வாடகை இல்லாது வசிக்க இடமும், குறிப்பிட்ட சில படிகளும், உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. நீதிபதிகளின் சம்பளம், படி, லீவு, ஓய்வு, உதவிகள் இவைபற்றிய உரிமைகளை அவர்களின் நியமனத்திற்குப் பிறகு அவர்களுக்குப் பாதகமாக மாற்றலாகாது. இருப்பினும், நிதி நெருக்கடி நிலை காரணமாகப் பாராளுமன்றச் சட்டத்தினுல் அவர்களின் சம்பளத்தைக் குறைக்கலாம். தலைமை நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. இவர்களின் சம்பளத்திற்காக அரசாங்கம் பாராளுமன்றத்தின் மானியக் கோரிக்கை பெற வேண்டியதில்லை.

தலைமை நீதிமன்றத்திற்கான தனித்த ஒரு நிறுவனத்தை அது தன் கட்டுப்பாட்டில் அமைத்துக்கொள்ளலாம். தலைமை நீதிமன்ற அலுவலர்களையும் பணியாளர்களையும் பிரதம நீதிபதியே அமர்த்துகிருர். இவர்களின் சேவை நிலையை நிர்ணயிக்க நீதிமன்றம் உரிமை பெற்றிருக்கிறது. இவர்களுக்கான ஊதியங்களும், நீதிமன்ற நிறுவனப் பராமரிப்புச் செலவுகளும் இந்தியாவின் திரண்ட நிதியில் சாட்டுதலாகின்றன. எனவே, நீதிமன்றம் நிர்வாகத் துறையை எதிர்பார்க்காமல் சுயேச்சையுடன் நடுநிலை நின்று செயல்படமுடிகிறது.

நீதிமன்றங்களின் செயல்களையோ, முடிவுகளையோ எவரும் நோக்கம் கற்பிக்கும் எண்ணத்துடன் திறனாய்வு செய்யலாகாதென அரசியலமைப்புக் குறிப்பிடுகிறது. இதன் பயனாக நீதிமன்றங்களின் சுயேச்சை நிலை காக்கப்படுகிறது. பாராளுமன்றம் ஒரு நீதிபதியைப் பதவிநீக்கம் செய்யத் தீர்மானம் கொண்டுவரும் போதன்றி, அவருடைய நடத்தைபற்றிச் சபையில் விவாதிக்கலாகாது. மேலும், நீதிமன்றத்தை அவமதிப்போரைச் சட்ட நடவடிக்கைகள் வாயிலாகத் தண்டிக்கவும் இதற்குரிமையுண்டு. இவைகளின் பயனாக நீதிமன்றங்கள் அவருடைய தலையீடின்றிச் சுயேச்சையுடன் இயங்குகின்றன.

**தலைமை நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு:** இந்திய நீதிமன்றம் மிகப் பரந்த அதிகார வரம்பினைப் பெற்றிருக்கிறது. இந்திய யூனியனுக்கும் உறுப்பரசுகளுக்குமிடையே ஏற்படுகின்ற தகராறு பற்றிய வழக்குகளில் இந் நீதிமன்றம் அசல் விசாரணை அதிகாரம் பெற்றிருக்கிறது. இதுபோன்றே உறுப்பரசுகளுக்கு இடையே ஏற்படுகின்ற தகராறுபற்றிய வழக்குகளிலும் இந் நீதிமன்றத்திற்கு அசல் விசாரணை அதிகாரத்தை அரசியலமைப்பு அளித்திருக்கிறது. வேறெந்த நீதிமன்றத்திற்கும் இந்த அதிகாரம் கிடையாது. அதாவது, ஒரு சட்ட உரிமை இருத்தலையோ, அதன் அளவையோ பொறுத்த சிக்கலைக்கொண்ட விவாதம் எழுந்தால், தலைமை நீதிமன்றம் அதைத் தீர்க்கலாம். சுருங்கக் கூறின், அரசுகளுக்கிடையே எழுகின்ற தகராறுகளைத் தீர்ப்பதற்குமட்டுமே இந்த நீதிமன்றம் அசல் விசாரணை அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. பல்வேறு அரசுகளில் வசிப்பவர்களுக்கிடையே அல்லது ஓர் அரசிற்கும் மற்றோர் அரசில் வசிப்பவருக்குமிடையே எழுகின்ற வழக்குகளில் தலைமை நீதிமன்றத்திற்கு அசல் விசாரணை அதிகாரம் கிடையாது. இவ் வழக்குகள் தலைமை நீதிமன்ற மேல்முறையீட்டு அதிகார வரம்பிற்குட்படும். ஆனால், 32ஆவது பிரிவையொட்டி எழுகின்ற வழக்குகளில் தலைமை நீதிமன்றம் அசல் விசாரணை அதிகாரம் பெற்றிருக்கிறது. ஆனால், இவ் வழக்குகளில் சில உயர் நீதிமன்றத்திடமும் செல்லலாம்.

**தலைமை நீதிமன்றத்தின் மேல்முறையீட்டதிகார வரம்பு:** தலைமை நீதிமன்றத்திற்குச் செல்லும் மேல்முறையீட்டு வழக்குகளை அரசியலமைப்பு முறையில் எழுந்தனவெனவும், சிவில், கிரிமினல், சிறப்பு எனவும் நான்கு வகையாகப் பிரித்துக்கொள்ளலாம்.

இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள ஓர் உயர்நீதிமன்றம், ஒரு சிவில், கிரிமினல், அல்லது வேறு நடவடிக்கைகளில் செய்த தீர்ப்பு, டிக்கிரி அல்லது முடிவான உத்தரவின்மேல் தலைமை நீதிமன்றத்

திற்கு மேல்முறையீடு செய்யலாம். அதாவது, அரசியலமைப்பிற்கு விளக்கம் செய்வதில் சாரமான சட்ட நுட்பம் அந்த வழக்கில் அடங்கியிருப்பதாக ஓர் உயர் நீதிமன்றம் சரி ஒப்பம் செய்தால் தான் தலைமை நீதிமன்றம் அப்பீல் வழக்குகளை ஏற்றுக்கொள்ளும். ஓர் உயர் நீதிமன்றம் ஒரு வழக்கில் அத்தகைய சரியொப்பம் செய்ய மறுத்தாலும், தலைமை நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதியுடன் மேல் முறையிடலாம். சரியொப்பம் கிடைத்தவுடனே அல்லது தலைமை நீதிமன்றத்தின் அனுமதி கிடைத்தவுடனே, இருகட்சியாரில் எவரும் தவறாகத் தீர்மானிக்கப்பட்ட முடிவெனக் கருதுவதை யொட்டித் தலைமை நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம். அரசியலமைப்பை விளக்கும் வகையை யொட்டி எழும் சிவில், கிரிமினல், அல்லது மற்ற வழக்குகளில் முடிவுகாண்பதில் தலைமை நீதிமன்றம் முடிவான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. சிவில் வழக்குகளில் தலைமை நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகார வரம்பு சுருங்கியே காணப்படுகிறது. அதாவது, ஒரு சிவில் வழக்கின் விவாதத்திற்குரிய பொருள்பற்றிய மதிப்பு இருபதினாயிரம் ரூபாய்க்குக் குறையாதென உயர் நீதிமன்றம் சான்று வழங்கினால், வழக்காடுவோர் தலைமை நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம். மேலும், உயர் நீதிமன்றமே ஒரு வழக்கினை மேல் முறையீடு செய்வதற்குரியதெனச் சரியொப்பம் செய்தாலும், அவ் வழக்குத் தலைமை நீதிமன்றம் செல்லும். சிவில் வழக்குகளில் தலைமை நீதிமன்றத்திற்கான மேல்முறையீட்டு அதிகார வரம்பினைப் பாராளுமன்றம் சட்டத்தால் நீட்டிக்கலாம்.

கிரிமினல் வழக்குகளில் சில தலைமை நீதிமன்றத்தின் மேல் முறையீட்டை நாடலாம்.

இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் உள்ள ஓர் உயர்நீதிமன்றத்தின் கிரிமினல் நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்ப்பு அல்லது முடிவான உத்தரவு அல்லது தண்டனையின்பேரில், அந்த உயர் நீதி மன்றம், அப்பீலில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை விடுதலை செய்யும் உத்தரவை மாற்றி அவருக்கு மரண தண்டனை விதித் திருந்தாலோ, அல்லது தன்னுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்ட எந்த நீதிமன்றத்திலிருந்தேனும் ஒரு வழக்கைத் தன் முன் விசாரணைக்கு வரவழைத்து அத்தகைய விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி என்று தீர்மானித்து அவருக்கு மரண தண்டனை விதித்தாலோ அல்லது அவ் வழக்குத் தலைமை நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ளத் தகுதியானதென்று சரி யொப்பம் செய்தாலோ, தலைமை நீதிமன்றத்திற்கு அப்பீல் உண்டு.

கிரிமினல் வழக்குகளில் தலைமை நீதிமன்றத்திற்கு மேலும் அதிகமான அதிகாரங்களைப் பாராளுமன்றம் சட்டத்தினால் அளிக்கலாம். கிரிமினல் வழக்குகளையொட்டி இதுவரை பல வழக்குகள் தலைமை நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றன. எனவே, உயர் நீதிமன்றங்கள் அப்பீல் செய்ய வழங்கும் சரி யொப்ப அனுமதியை ஆழ்ந்து சிந்தித்து அளித்துவருகின்றன. இருப்பினும், அரசியலமைப்பின் 136ஆம் பிரிவும் அதன் உட்பிரிவும் தலைமை நீதிமன்றம், இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் உள்ள ஒரு நீதிமன்றம், அல்லது நியாய சபை செய்த அல்லது அளித்த ஒரு தீர்ப்பு, டிக்கிரி, நிர்ணயம், தண்டனை அல்லது உத்தரவின் பேரில் தனக்கு அப்பீல் செய்துகொள்ள உசிதம் போல் சிறப்பு அனுமதி அளிக்கலாமெனக் குறிப்பிடுகிறது. இந்தியாவின் ஆயுதப் படைகள்பற்றிய நீதிமன்றமோ, நியாய சபையோ செய்த அல்லது அளித்த தீர்ப்புகளை அரசியலமைப்பு இதற்கு விலக்காகக் குறிப்பிட்டிருக்கிறது.

நீதிமன்றங்கள் தாம் வழங்கிய தீர்ப்புகளைப் புனராய்வு செய்யவும் அரசியலமைப்பு வகை செய்திருக்கிறது. அதாவது, தலைமை நீதிமன்றம், தான் கூறிய தீர்ப்பையோ, செய்த உத்தரவையோ மறுஆய்வு செய்ய அதிகாரமுடையதாகும்.

**தலைமை நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரத்தை விரிவாக்குதல்:** யூனியன் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவை எதற்கும் சட்டத்தினால் அதிகப்படியான அதிகாரத்தைத் தலைமை நீதிமன்றத்திற்குப் பாராளுமன்றம் அளிக்கலாம். இந்திய அரசாங்கமும் அரசுகளின் அரசாங்கமும் உடன்பட்டு யாதொரு பொருளையும் பாராளுமன்றச் சட்டத்தினால் தலைமை நீதி மன்றத்தின் அதிகாரவரம்பிற்கு உட்படுத்தலாம். நீதிமன்றம் தன் அதிகாரவரம்பினைத் திறனுடன் செயல்படுத்தப் போதிய அதிகாரத்தைப் பாராளுமன்றம் சட்டத்தால் அளிக்கலாம்.

## நீதிமன்றம் நிர்வாகத் துறைக்கு ஆலோசனை கூறல்

அரசியலமைப்பின் 143ஆம் பிரிவு தலைமை நீதிமன்றத்தை ஜனாதிபதி கலந்தாலோசித்தற்கான அதிகாரம்பற்றிக் குறிப்பிடு கிறது. ஒரு சட்டம் அல்லது விவகாரம்பற்றிய கருத்து விளக்கத்தை ஜனாதிபதி நீதிமன்றத்திடமிருந்து பெறலாம். ஆனால், நீதிமன்றங்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறவேண்டு மென அரசியலமைப்பு வலியுறுத்தவில்லை. ஜனாதிபதியின் விருப்பிற்கிணங்கி நீதிமன்றம் ஒரு சட்டம்பற்றிய தன் கருத்தினைக் கூறுங்கால், நீதிமன்றம் தனக்குகந்ததெனக் கருதும் முறையில் விசாரித்து முடிவு கூறலாம்.

அரசியலமைப்புத் தொடக்கத்திற்குமுன் இந்திய அரசாங்கம் செய்துகொண்ட உடன்படிக்கைகள், ஒப்பந்தங்களையொட்டி எழுகின்ற வழக்குகளைப்பற்றி ஜனாதிபதி நீதிமன்றத்திடம் அறிவுரை கேட்டால், அம் மன்றம் தனக்கு உசிதம் எனத் தோன்றும் விசாரணை செய்தபிறகு, அதைப்பற்றிய தன் கருத்தை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கவேண்டும். அரசியலமைப்பு அளித்திருக்கும் இவ்வதிகாரத்தை நீதிமன்றம் நல்ல முறையில் செயல்படுத்திவருகிறது. அரசியலமைப்பு இந் நீதிமன்றத்தை ஒரு ரிக்கார்டு நீதிமன்றமாகும் எனக் குறிப்பிட்டிருக்கிறது. இதன் பயனாக நீதிமன்றங்களின் ரிக்கார்டுகள் நற்சான்றுகளாய் இந்தியா முழுதும் விளங்கும். இந் நீதிமன்றத்தை அவமதித்தற்காகத் தண்டிக்கும் அதிகாரம் உட்பட நீதிமன்றத்திற்குரிய எல்லா அதிகாரங்களையும் இது உடையதாகும்.

இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள சிவில் அதிகாரிகள், நீதி அதிகாரிகள் ஆகிய அனைவரும் தலைமை நீதிமன்றத்திற்கு உதவியாகச் செயலாற்றவேண்டுமென்று அரசியலமைப்புக் குறிப்பிடுகிறது.

**நடைமுறையை ஒழுங்குபடுத்தற்கான விதிகள்:** பாராளுமன்றச் சட்டத்திற்குட்பட்டு, ஜனாதிபதியின் ஒப்புதலுடன், தலைமை நீதிமன்றம் அம் மன்றத்தின் காரியமுறையையும் நடைமுறையையும் ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளைச் செய்யலாம்.

**தலைமை நீதிமன்றமும் நீதிப் புனராய்வும்:** இந்திய அரசியலமைப்பு எழுதப்பெற்றதாகும். ஆங்கிலப் பாராளுமன்ற முறை அரசாங்கத்தை மேற்கொண்டதாய் இருப்பினும், இந்தியப் பாராளுமன்றம் சட்டமியற்றுதலில் முழுத் தலைமை பெறவில்லை. இந்தியாவில் அரசியலமைப்பே முழு இறைமையுடையதாய் அமைந்திருக்கிறது. பாராளுமன்றமும் அரசுகளின் சட்டசபைகளும் வரம்பிற்குட்பட்டே சட்டமியற்றலாம். இதற்கென அரசியலமைப்பு இவைகளுக்கு ஒதுக்கியுள்ள பொருள்கள், அதிகாரங்கள் பற்றியே சட்டமியற்றலாம். மேலும், அரசியலமைப்பின் மூன்றும் பாகத்தில் குடிகளுக்கு வழங்கியுள்ள அடிப்படையான உரிமைகளில் பாராளுமன்றமும் சட்டசபைகளும் தலையிட்டுச் சட்டமியற்றலாகாது. ஒரு சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானதா இல்லையாவென்பதை நீதிமன்றங்களே நிர்ணயிக்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றன. அதாவது, ஒரு சட்டம் செல்திறன் பெற அச் சட்டம் அரசியலமைப்பை யொட்டியதாக இருக்கவேண்டும்.

நீதிமன்றங்களின் இவ்வதிகாரத்தை 13ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. அடிப்படையான உரிமைகளோடு முரண்படும் அல்லது அவற்றைக் குறைப்படுத்தும் சட்டம், எந்த அளவிற்கு முரண்படுகின்றனவோ அந்த அளவிற்குச் செயல்திறனற்றுப் போகும். அரசியலமைப்பின் மூன்றும் பாகத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளைப் பறிக்கும் அல்லது சுருக்கும் சட்டமெதையும் ஓர் அரசு இயற்றலாகாது. இப் பகுதியை மீறி இயற்றப்படும் சட்ட மெதுவும் அப்படி மீறிய அளவிற்குச் செயல்திறனற்றுப்போகும். இதிலிருந்து, நீதிமன்றத்தின் சட்டப் புனராய்வதிகார நிலையை நன்கறியலாம்.

'சட்டம்' என்பதில், இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலே சட்டத்தின் திறனுடைய அவசரச் சட்டம், உத்தரவு, துணைச் சட்டம், விதி, ரெகுலேஷன், விளம்பரம், வழக்கம், பழக்கம் இவை அடங்குமென அரசியலமைப்பு விளக்கம் கொடுத்திருக் கிறது. இதிலிருந்து நீதிமன்றம் பெற்றிருக்கும் அதிகார வரம்பினையும், சட்டங்களைப் புனராய்வு செய்தற்குரிய அதிகாரத் தையும் நன்குணரலாம்.

எனவே, தலைமை நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பதோடு நிற்காமல், இந்தியச் சட்டங்களனைத்திற்கும் காவல் கோட்டையாக இருந்துவருதலைக் காணலாம்.

இந் நீதிமன்றம் டெல்லியிலாவது, ஜனதிபதி ஒப்புதலுடன் இந்தியாவின் பிரதம நீதிபதி அவ்வப்போது நியமிக்கும் வேறு இடத்தில் அல்லது இடங்களிலாவது கூடவேண்டும்.

சட்டத்தின் ஆட்சி நிலவவும், சட்டத்தின்முன் மக்கள் சமத்துவ நிலை பெறவும் நீதிமன்றம் பெருந்துணை புரிகின்றது.

# 20. இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர்

மக்களாட்சிமுறையில் நிர்வாகத்துறை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாக இருக்கவேண்டும். நிர்வாகத்துறையைக் கண்காணிக்கவும், அதன் நிதிச் செலவிடு முறையைத் தணிக்கை செய்யவும் பாராளுமன்றத்திற்குத் துணையாகச் சுயேச்சையான ஒரு கணக்கர் - பரிசோதகர் இருக்கவேண்டும். இவர் கணக்குத் தணிக்கைத் துறையில் வல்லுநராய் இருத்தலால், தம் சிறப்பறிவுரைகளைப் பாராளுமன்றத்திற்களித்து அதன் பொறுப்புகளைச் சிறப்புறச் செய்ய உதவுகிறார்.

1919ஆம் ஆண்டிலிருந்தே இக் கணக்கர் - பரிசோதகர் நிறுவனம் இந்தியாவில் இருந்துவந்திருக்கிறது. நமது குடியரசமைப்பும் இந் நிறுவனத்தைச் சுயேச்சையுடன் செயலாற்ற வழி செய்திருக்கிறது.

இந்தியாவின் மாபெருங் கணக்கர் - பரிசோதகரை ஜனாதிபதி நியமனம் செய்கிறார். தலைமை நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிப்பது போன்றுதான் இவரையும் ஜனாதிபதி நியமனம் செய்கிறார். அதேபோன்று நீதிபதிகளை விலக்குதற்கான முறையைப் பின்பற்றி இவரையும் பதவிநீக்கம் செய்யலாம். இவர் பதவி ஏற்பதற்குமுன் ஒரு பிரமாணம் அல்லது உறுதி மொழி செய்து கையெழுத்திடவேண்டும். இவரது ஊதியம், சேவை நிபந்தனைகள்பற்றிப் பாராளுமன்றம் சட்டமியற்றலாம். எனினும், மாபெருங் கணக்கர் - பரிசோதகரின் நியமனத்தின்பிறகு அவருடைய ஊதியத்தையோ, அல்லது லீவு, ஓய்வு, ஊதியம், அல்லது வேலையிலிருந்து ஓய்வுபெறும் வயது பற்றிய உரிமைகளையோ அவருக்குப் பாதகமாக மாற்றலாகாது.

மாபெருங் கணக்கர் - பரிசோதகர் இப்பொழுது மாத மொன்றுக்கு நாலாயிரம் ரூபாய் சம்பளமாகப் பெறுகிறார். இவர் பதவியிலிருந்து நீங்கியபிறகு, இந்திய அரசாங்கத்தின்கீழோ, ஓர் அரசின் அரசாங்கத்தின்கீழோ பின்னும் பதவி வகிக்கலாகாது. இவரது அலுவலகத்தின் நிர்வாகச் செலவுகளையும், இவ்வலுவலகத்தில் வேலைபார்ப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளங்களையும், படிகளையும், ஓய்வு ஊதியங்களையும் இந்தியாவின் திரண்ட நிதியில் காட்டவேண்டும். இந்தியத் தணிக்கைக் கணக்குத் துறையில் செயலாற்றுபவர்களின் சேவை நிபந்தனைகளைப் பற்றியும், மாபெருங் கணக்கர் - பரிசோதகரின் அதிகாரங்கள் பற்றியும் ஜனாதிபதியைக் கலந்துகொண்ட பிறகு இவர் விதிகளை வகுக்கவேண்டும். இவ் விதிகள் அரசியலமைப்பிற்கும் பாராளு மன்றச் சட்டத்திற்கும் உட்பட்டனவாக இருக்கவேண்டும்.

**மாபெருங் கணக்கர்-பரிசோதகரின் அதிகாரங்கள் :** யூனியன், அரசுகள், வேறோர் அதிகாரி, அல்லது நிறுவனம் இவற்றின் கணக்குகளைப்பற்றிப் பாராளுமன்றத்தால் அல்லது அதன்கீழ் வகுக்கப்படும் கடமைகளையும் அதிகாரங்களையும் மாபெருங் கணக்கர்-பரிசோதகரால் செலுத்தவும் பயன்படுத்தவும் வேண்டும். யூனியன், அரசுகள் இவற்றின் கணக்குகள் ஜனாதிபதியின் அனுமதியுடன் இந்தியாவின் மாபெருங் கணக்கர் - பரிசோதகர் நிர்ணயிக்கும் உருவத்தில் வைக்கப்படவேண்டும். யூனியன் கணக்குகளைப்பற்றிய இவருடைய அறிக்கைகள் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும். இவ்வறிக்கையைப் பாராளுமன்றத் தின்முன் வைக்குமாறு இவர் செய்யவேண்டும். ஓர் அரசின் கணக்குகளைப்பற்றிய இவரது அறிக்கையை அவ்வரசின் கவர்னரிடம் சமர்ப்பிக்கவேண்டும். அவ்வறிக்கையை இவர் அந்த அரசின் சட்டசபை முன்னிலையில் வைக்குமாறு செய்யவேண்டும்.

இந்தியாவில் யூனியனும் அரசுகளும் கணக்கு வைத்துக் கொள்ளு முறை பிரிட்டனைப் பின்பற்றியே அமைந்திருக்கிறது. ஆனால், இங்குச் செலவினங்கள்பற்றிய தணிக்கையை மாபெருங் கணக்கர்-பரிசோதகர் செய்யும்பொழுது, சிக்கனத்தை அரசாங்கம் மேற்கொள்ளவும், வீண்செலவினங்களைத் தவிர்க்கவும் வழி முறைகளைக் கூறுகிறார். அதாவது, இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து பணம் பெறும்பொழுது எவ்விதத் தணிக்கையையும் இவர் செய்வதில்லை. இக் கணக்கர் - பரிசோதகரின் துறைக்கு அரசாங்கச் செலவுகளைத் தணிக்கை செய்வதும், அரசாங்கச் செலவுகள் பற்றிய விதிகளையும் கட்டளைகளையும் அரசாங்கம் பின்பற்று

வதைப் பார்வையிடுவதும், அரசாங்கத்திற்குச் செலவுத் தொகை வழங்குபவர்களுக்கு அதைச் செய்ய அதிகாரமிருக்கிறதா வென்பதைக் கவனிப்பதும் தலையாய பணிகளாம். இவற்றுடன், இவர் பொதுக் கணக்குக் குழுவிற்கு அறிவுரை வழங்கியுதவுவதை முன் ஓர் அதிகாரத்தில் கண்டோம். நிர்வாகத் துறையைப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாகச் செய்ய இவர் பேருதவியாக இருக்கிறுர். எனவேதான், இம் மாபெருங் கணக்கர்-பரிசோதகரை மக்களாட்சி அரசியலமைப்பின் தூண் எனச் சிலர் கருதுகின்றனர்.

# 21. அரசின் நிர்வாக அமைப்பு

## கவர்னர்

இந்திய யூனியனின் உறுப்பரசுகளின் அரசாங்க அமைப்பு, யூனியனையொத்தே அமைந்திருக்கிறது. அரசுகளும் பாராளுமன்ற முறை அரசாங்கத்தை ஏற்றுச் செயல்பட்டுவருகின்றன. அரசின் தலைவராக கவர்னர் ஒருவர் இருப்பார். அரசுகளின் சட்ட சபையும் பாராளுமன்ற அமைப்பையே பெற்றிருக்கிறது. யூனியன் அரசாங்கத்தைப் போன்ற தோற்றமுடையனவாக அரசுகள் இருந்தாலும், ஒவ்வோர் அரசும் அதற்குரிய அதிகாரவரம்பிற் குட்பட்டு இயங்கிவருகின்றது.

ஒவ்வோர் அரசிற்கும் ஒரு கவர்னர் இருத்தல் வேண்டுமென அரசியலமைப்புக் கூறுகிறது. ஒருவர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளுக்கும் கவர்னராக நியமிக்கப்படலாம். ஜனதிபதி அரசின் கவர்னரை நியமனம் செய்கிறார். கவர்னர் ஜனதிபதிக்கு விருப்பமுள்ள காலம்வரை பதவி வகிப்பார். தான் பதவி ஏற்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு கவர்னர் பதவி வகிப்பார். ஒருவர் இந்தியக் குடியாகவும் முப்பத்தைந்து வயது நிரம்பியவராகவுமிருந்தால், கவர்னராக நியமிக்கப்படத் தகுதியுள்ளவராவார். கவர்னர், பாராளுமன்றச் சபைகளிலோ, எந்த ஓர் அரசின் சட்டசபையிலோ உறுப்பினராக இருத்தலாகாது. இவர் இலாபம் தரும் வேறெந்தப் பதவியையும் வகிக்கலாகாது. இவர் தாம் இருக்கும் மாளிகைகளை வாடகையின்றிப் பயன்படுத்த உரிமை பெற்றிருக்கிறார். இவருக்கு மாதமொன்றுக்கு ஐயாயிரத்தைந்நூறு ரூபாய் ஊதியமும், படிகளும், சில சிறப்புரிமைகளும் வழங்கப்படுகின்றன. இவருடைய ஊதியங்களையும், படிகளையும் இவருடைய பதவிக் காலத்தில் குறைத்தலாகாது. இவருடைய ஊதியங்களும் படிகளும் அரசின்

திரண்ட நிதியில் சாட்டப்படுகின்றன. ஒவ்வொரு கவர்னரும் பதவியேற்குமுன் ஒரு பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்து கையெழுத்திட வேண்டும்.

நாட்டின் ஒற்றுமையை வளர்க்கவும் நிலையான மக்களாட்சி முறையை உருவாக்கவும் விரும்பிய நம்முடைய அரசியலமைப்பாளர்கள், கவர்னர்களை ஜனாதிபதி நியமனம் செய்வதே உகந்ததெனக் கருதினர். கவர்னரை மக்கள் தேர்ந்தெடுத்தல், அரசின் கீழ்ச்சபையினர் அல்லது இரு சபையினரும் சேர்ந்து கவர்னரைத் தேர்ந்தெடுத்தல், அரசின் கீழ்ச்சபையினர் தயாரித்த ஒரு பட்டியலிலிருந்து ஜனாதிபதி கவர்னரைத் தேர்ந்தமர்த்தல், ஜனாதிபதியே கவர்னரை நியமனம் செய்தல் என இந் நான்கு முறைகளையும் அரசியல் நிர்ணயசபை ஆய்ந்தபின் ஜனாதிபதி நியமனம் செய்யும் முறையை ஏற்றுக்கொண்டது.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் கவர்னர், ஜனாதிபதியைப் போன்று அரசியலமைப்புமுறைத் தலைவராக விளங்கவேண்டும். நெருக்கடி நிலையில்தான் கவர்னர் சில சிறப்பதிகாரங்களைப் பெறுகிறார். இச் சமயங்களிலும் கவர்னர், ஜனாதிபதியின் அறிவுரையின்படிதான் செயல்படவேண்டும். கவர்னர் தமது பதவிக்கான பொறுப்புகளைத் திறம்படச் செயலாற்ற நியமனம் செய்யப்பட்டவராக இருத்தல் நலமெனத் தெரிகிறது. நியமனமாகும் கவர்னர்கள் தல அரசியலில் ஈடுபடாமல் நடுநிலை நின்று தம் கடமைகளைச் செய்யமுடியும். மேலும், ஓர் அரசின் கவர்னராக நியமனம் பெறுபவர், மற்றோர் அரசின் குடியாக இருக்கவேண்டுமென்னும் மரபும் இருந்துவருகிறது. எனவே, இவருக்குத் தல அரசியல் ஈடுபாடுகள் இருக்கமுடியாது. இந் நியமன முறை மற்ற முறைகளில் காணப்படும் தீமைகளை அகற்றியிருக்கிறது. இம் முறை கவர்னருக்கும் அமைச்சவைக்கும் நல்லுறவை உண்டாக்கி, ஆட்சியில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த உதவுகிறது.

அரசியலமைப்பு, கவர்னரை நியமிப்பதுபற்றிய முழு அதிகாரத்தையும் ஜனாதிபதிக்கு வழங்கியிருக்கிறது. ஜனாதிபதியின் இவ்வதிகாரம் மத்திய அரசாங்கத்தின் வாயிலாக நடைபெறுகின்றது. ஓர் அரசின் அமைச்சவையின் இசைவைத் தெரிந்துகொண்டே மத்திய அரசாங்கம் ஒருவரை கவர்னராக நியமிக்கிறது.

**கவர்னரின் அதிகாரங்களும் வேலைகளும் :** ஓர் அரசின் நிர்வாக அதிகாரம் அனைத்தும் கவர்னரிடம் நிலைபெற்றிருக்கும். இவ்வதிகாரத்தை கவர்னர் நேராகவோ, தமக்குக் கீழ்ப்பட்ட அலுவலர்

கள் மூலமாகவோ அரசியலமைப்பின்படி செயல்படுத்தவேண்டும். அரசின் சட்டசபை, சட்டமியற்றற்குரியவைகளையொட்டி கவர்னரின் நிர்வாக அதிகாரம் நீளும். அரசின் தலைவர் என்ற முறையில் கவர்னர் சில கடமைகளாற்றுகிறார். கவர்னர் முதலமைச்சரை அமர்த்துகிறார். முதலமைச்சரின் ஆலோசனையின் மேல் மற்ற அமைச்சர்களையும் கவர்னர் அமர்த்துகிறார். முதலமைச்சரையும் மற்ற அமைச்சர்களையும் கொண்ட அமைச்சவை, கவர்னரின் விருப்புள்ளவரை பதவியிலிருக்கும். அரசாங்க அலுவல்களை அமைச்சர்களிடையே இவர் பிரித்து வழங்குவதோடு, வேலைகள் திறம்படச் செயல்படுதற்குச் சில முறைகளையும் வகுத்துக் கொடுக்கிறார். அரசாங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகளெல்லாம் கவர்னர் பெயரிலேயே நடைபெற வேண்டும். இவர் அட்வகேட் ஜெனரலையும், அரசின் மற்றைய அலுவலர்களையும் அமர்த்துகிறார். பீகார், மத்தியப் பிரதேசம், ஒரிசா போன்ற அரசுகளின் கவர்னர்கள் பழங்குடி மக்களின் நலன்களைக் காத்தற்கெனத் தனித்த அமைச்சர்களை அமர்த்தித் தம் பொறுப்புகளை நிறைவேற்றவேண்டும். அஸ்ஸாம் அரசின் மலைச்சாதியினர் வசிக்கும் பகுதிகளை கவர்னர் ஆட்சி செய்ய அரசியலமைப்பு இவருக்குச் சில சிறப்பு அதிகாரங்களை வழங்கியிருக்கிறது.

அரசின் நிர்வாக அதிகாரத்திற்குட்பட்ட ஒரு சட்டத்தை மீறிய குற்றம் செய்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவருடைய தண்டனையை மன்னித்தல், தடுத்தல், நிறுத்தல் அல்லது தவிர்த்தல் செய்யவும், அவருடைய குற்றத் தீர்ப்பை நிறுத்தவும், தவிர்க்கவும், மாற்றவும் அந்த அரசின் கவர்னருக்கு அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது.

கவர்னர், சட்டசபையின் இணைந்த ஒரு பாகமாவார். சட்டசபையைக் கூட்டவும், அதில் அவர் உரை நிகழ்த்தவும், அதற்குச் செய்திகள் அனுப்பவும் இவருக்கு அதிகாரமுண்டு. இவர் சட்டசபையின் கூட்டத் தொடரைத் தள்ளிவைக்கலாம்; சட்டசபையைக் கலைக்கலாம். அரசின் ஆண்டு நிதியறிக்கையை அரசாங்கம் சட்டசபை முன் வைக்குமாறு இவர் செய்யவேண்டும். இவருடைய சிபார்சின்பேரில்தான் அரசாங்கம் சட்டசபையிடமிருந்து மானியம் கோரிப் பெறமுடியும். சட்டசபை நிறைவேற்றும் ஒவ்வொரு மசோதாவும் கவர்னரின் ஒப்புதலைப் பெறவேண்டும். இவர் ஒப்புதலைப் பெற்ற மசோதா உடனே சட்டமாகும். கவர்னர் சில மசோதாக்களைச் சட்டசபைக்குத் திருப்பியனுப்பிச் சில மாறுதல்களைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். அரசிய

லமைப்பு உருவாக்கியுள்ள உயர் நீதிமன்றங்களின் நிலைக்குச் சில இடர்களை உண்டாக்கும் நோக்கத்துடன் நிறைவேற்றிய ஒரு மசோதாவை ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற இவர் அனுப்பி வைக்கலாம். ஆனால், பண மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் கொடுக்க மறுக்கலாகாது.

**சட்டமியற்ற கவர்னருக்குள்ள அதிகாரம்:** சட்டசபைகளின் (இரு சபைகளின்) கூட்டங்கள் நடைபெறாத இடைக்காலத்தில் கவர்னர் அவசரச் சட்டங்களைப் பிரகடனம் செய்யலாம். இவ் விடைக்காலத்தும் உடனடியான நடவடிக்கை எடுக்கவேண்டிய தன் அவசியமும் நிலையும் இருக்கின்றனவென்று கவர்னர் கருதினால் இச் சட்டங்களைக் கொண்டுவரலாம். ஆனால், ஜனாதிபதியின் முன்னிசைவு பெற்று ஓர் அரசின் சட்டசபையில் நிறைவேறக் கூடிய கருத்துகளடங்கியவைபற்றியும் அல்லது ஜனாதிபதியின் பார்வைக்குச் செல்லவேண்டியதென்று கவர்னர் கருதி ஒதுக்கி வைக்கக்கூடியதொன்றைப்பற்றியும் அல்லது ஓர் அரசின் சட்ட சபையால் இயற்றப்பட்ட சட்டம் ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெறாவிட்டால் செயலற்றுப்போய்விடும் ஒன்றுபற்றியும் கவர்னர் ஜனாதிபதியின் உத்தரவின்றி அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்யலாகாது.

கவர்னரின் அவசரச் சட்டங்கள், சட்டசபைகளால் நிறை வேற்றப்பட்ட சட்டங்களின் செயல்திறன் பெற்று விளங்கும். அரசின் சட்டசபைகள் மீண்டும் கூடுகின்றபொழுது, அவர் அவசரச் சட்டத்தை நிறைவேற்றாவிட்டால் அவசரச் சட்டம் செயல் திறனற்றுப்போகும். எச் சமயத்திலும் கவர்னர், தாம் இயற்றிய அவசரச் சட்டங்களை நீக்கிவிடலாம். ஓர் அரசின் சட்டசபையால் நிறைவேற்றப்பட்டு கவர்னரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சட்டத்தில் எப் பிரிவை அமைத்திருந்தால் அது செல்லுபடி யாகாதோ, அப் பிரிவை ஓர் அவசரச் சட்டத்தில் அமைத்தால் அந்த அளவிற்கு அது செயல்திறனற்றுப்போகும்.

நெருக்கடி (இடர்) நிலையின்போதுதான் கவர்னர் உண்மையில் அரசின் தலைவராய் விளங்குகிறார். நெருக்கடி நிலையை ஜனாதிபதி அறிவித்ததும், அரசின் ஆட்சி யூனியனின் நேர்முகக் கட்டுப்பாட்டில் வரும். அப்பொழுது யூனியன் அரசாங்கத்தின் பிரதிநிதியாக விளங்கும் கவர்னர், தாமே ஆட்சியை ஏற்று, அரசின் சிவில் பணியாளர்களின் துணையுடன் அரசாட்சி செய்கிறார்.

# 22. அமைச்சரவை

கவர்னர் தாம் உசிதம்போல் செய்யவேண்டிய அலுவல்களையோ அல்லது அவற்றுள் எதையும் தவிர மற்றைய அலுவல்களைச் செய்கையில் அவருக்கு உதவி புரியவும் ஆலோசனையளிக்கவுமோ முதல் அமைச்சரைத் தலைவராகக்கொண்ட அமைச்சவை ஒன்றிருக்கவேண்டுமென்று அரசியலமைப்புக் கூறுகிறது. கவர்னரின் உசித அதிகாரத்தைப்பற்றி அமைச்சவைக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், கவர்னர் உசிதம்போல் செய்யும் தீர்ப்பே முடிவானதாகும். கவர்னர் செய்யும் எச் செயலையும், இவர் உசிதம்போல் நடந்திருக்கவேண்டும் அல்லது நடந்திருக்கக்கூடாதெனும் காரணத்தால் ஏற்க மறுக்கலாகாது. கவர்னர், அமைச்சர்களின் ஆலோசனைப்படி நடக்கவேண்டியிருந்தாலும், அமைச்சர்களின் ஆலோசனை யாது என்பதுபற்றி எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படலாகாது.

முதல் அமைச்சரை கவர்னர் நியமனம் செய்கிறார். முதல் அமைச்சரின் ஆலோசனையின்படி மற்றைய அமைச்சர்கள் கவர்னரால் நியமிக்கப்படுவார்கள். முதல் அமைச்சரையும் மற்றைய அமைச்சர்களையும் கொண்டதை நாம் அமைச்சவை என்கிறோம். கவர்னருக்கு விருப்பமுள்ள காலம்வரை இவ்வமைச்சவை பதவி வகிக்கும். பீகார், மத்தியப் பிரதேசம், ஒரிசா ஆகிய அரசுகளில் மலைச்சாதியார்களின் நலத்தைக் கவனிக்கும் அமைச்சரொருவர் இருக்கவேண்டும். அமைச்சவை அரசின் சட்டசபைக்குக் (கீழ்ச்சபைக்கு) கூட்டுப் பொறுப்புள்ளதாக இருக்கும். அமைச்சர்கள் கவர்னர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும். கவர்னர் சட்டசபையில் உறுப்பினராயில்லாத ஒருவரை அமைச்சராக நியமிக்கலாம். ஆனால், அவ்வமைச்சர், பதவி ஏற்ற நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அரசின் சட்டசபையில் ஓர் உறுப்பினராதல் வேண்டும்.

முதல் அமைச்சரின் கடமைகள்

அரசின் நிர்வாகம்பற்றியும், சட்டமியற்றுவதற்கான பிரேரணைகள்பற்றியும் அமைச்சவை செய்யும் எல்லா முடிவுகளையும் முதல்மைச்சர் கவர்னருக்குத் தெரிவிக்கவேண்டும். அரசாட்சிபற்றியும் சட்டங்கள்பற்றியும் கவர்னர் கேட்கும் தகவல்களை முதல் அமைச்சர் அவருக்கும் கொடுக்கவேண்டும். அமைச்சர் ஒருவரால் முடிவு செய்யப்பட்டதாயும், அமைச்சவையால் ஆலோசிக்கப்பட்டதாயுமுள்ள எப் பொருளையும் கவர்னர் விருப்பிஞல், அமைச்சவையின் ஆலோசனைக்கு முதலமைச்சர் சமர்ப்பிக்கவேண்டும்.

அரசியலமைப்பு அளப்பரிய அதிகாரங்களை கவர்னருக்கு அளித்திருப்பதுபோன்று தோன்றினும், இவர் செயல்படு முறையை ஆழ்ந்து நோக்கிஞல் உண்மைநிலை தெளிவாகும். இவர் அரசின் தலைவராகவும் தலைமை நிர்வாகியாகவும் இருந்தாலும், இவருடைய நிர்வாக அதிகாரங்களனைத்தும் அமைச்சவை வாயிலாகவே செயல்படுகின்றன. அதாவது, நடைமுறையில் கவர்னர் அமைச்சவையின் அறிவுரையை யொட்டியே இயங்குகிருர்

அமைச்சர்கள் கவர்னரின் விருப்பையொட்டியே செயல்படுகின்றனரென்பது ஒரு மரபாகும். அதாவது, அரசின் கீழ்ச் சபையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் காலம்வரை இவர்கள் பதவியிலிருக்கலாமென்பது பொருள். ஏனெனில், முதலமைச்சர், சபையின் பெரும்பான்மையினரால் தேர்ந்தெடுக்கப்படுகிருர். இவர் சபையின் ஆதரவைப் பெற்றிருக்கும்வரை பதவியிலிருப்பார்; ஆதரவு இல்லையெனத் தெரிந்ததும் விலகிக்கொள்ளலாம். இருப்பினும், சூழ்நிலைக்கேற்ப கவர்னர் ஓர் அரசின் ஆட்சியில் தம் உசித அதிகாரங்களால் நற்பங்கு பெறுகிருர். அவரது உசித அதிகாரங்களில் சிலவற்றைப் பார்க்கலாம்: (1) அமைச்சவை அமையுமுன்பு முதலமைச்சரைத் தெரிவு செய்தல்; (2) அமைச்சவையைக் கலைத்தல்; (3) சட்டம், ஆட்சிபற்றிய தகவல்களை முதலமைச்சரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்; (4) கீழ்ச் சபையைக் கலைத்தல்; (5) அமைச்சர் ஒருவரால் முடிவு செய்யப்பட்டதாயும், அமைச்சவைகளால் ஆலோசிக்கப்படாததாயும் உள்ளவைபற்றி கவர்னர் விரும்பிஞல் அமைச்சரவையின் ஆலோசனைக்குக் கொண்டுவருதல்; (6) சட்டசபையில் நிறைவேறிய மசோதாவை மறு ஆய்வு செய்யச் சபைக்குத் திருப்பி யனுப்புதல்; (7) சட்டசபையில் நிறைவேறிய மசோதாக்களை ஜனுதிபதியின் ஒப்புதலுக்கு ஒதுக்கிவைத்தல்; (8) அவசரச் சட்ட

மியற்றுமுன் ஜனதிபதியின் ஆலோசனை கேட்டல்; (9) நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்ய ஜனதிபதிக்கு அறிவுரை வழங்கல்; (10) மலைச்சாதியினர் வசிக்கும் அஸ்ஸாம் அரசில் அஸ்ஸாம் அரசாங்கத்திற்கும் மாவட்டக் குழுவிற்கும் இடையே ஏற்படும் கனிச்சுரங்க உரிமைகள்பற்றிய பூசல்களைத் தீர்த்துவைத்தல். இவ்வுசித அதிகாரங்களைப் பார்க்கும்பொழுது கவர்னர் வெறும் காட்சிப் பொருளாகவன்றித் திறனுடன் செயல்படும் அரசுத் தலைவராக இருத்தலைக் காண்கின்றோம்.

கட்சிச் சார்பற்று அமைச்சவைக்கு அறிவுரை வழங்கவும் எச்சரிக்கவும் கவர்னர் உரிமை பெற்றிருக்கிறார். அரசாங்கத்தின் மாண்பையும், நிலையையும், பொறுப்பையும் இவரால் காக்க முடிகிறது. அரசுபற்றிய ஜனதிபதியின் ஆலோசகராகவும், அரசிற்கு யூனியனின் பிரதிநிதியாகவும் கவர்னர் விளங்குகிறார். கவர்னர், யூனியனுக்கும் அரசிற்குமிடையே நல்லுறவை வளர்க்கிறார். அரசியலமைப்பு மிகச்சில அதிகாரங்களையே கவர்னருக்கு அளித்திருப்பினும், அவர் நல்லவராயின் நற்பணிகள் பல செய்யலா மென்றும், தீயவராயின் பெருந்தீமைகள் செய்யலாமென்றும் சிலர் கருதினர்.

**அரசின் அட்வகேட்-ஜெனரல்:** அரசின் சட்ட ஆலோசகராக ஒருவரை கவர்னர் அட்வகேட் ஜெனரலாக நியமனம் செய்கிறார். கவர்னருக்கு விருப்பமுள்ள காலம்வரை இவர் பதவி வகிப்பார். இவர் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெறத் தகுதியுள்ளவ ராய் இருக்கவேண்டும். கவர்னர் நிர்ணயிக்கும் ஊதியத்தை இவர் பெறுவார்.

இவர் சட்டம்பற்றிய ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு அளிப்பார்; கவர்னரால் இடப்படும் சட்ட சம்பந்தமான மற்றைய கடமைகளையும் செய்வார். தம் கடமையை நிறைவேற்ற இவர் அரசின் எல்லைகளுக்குட்பட்ட நீதிமன்றத்திலும் சட்டசபையிலும் தேவையானபோது தோன்றலாம்.

# 23. அரசின் சட்டசபை

யூனியனின் உறுப்பரசுகள் ஒவ்வொன்றிலும் சட்டசபை ஒன்றிருத்தல் வேண்டுமென அரசியலமைப்புக் கூறுகிறது. ஆனல், இச் சட்டசபை ஈரங்க சபையாகவும், ஓரங்க சபையாகவும் இருக்கலாம். எனவே, நமது இந்திய யூனியனில் ஆந்திரப் பிரதேசம், பீகார், மகாராஷ்டிரம், குஜராத், ஜம்மு - காஷ்மீர், மத்தியப்பிரதேசம், மதராஸ் (தமிழ்நாடு), மைசூர், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் போன்ற அரசுகளில் ஈரங்க சட்டசபையும், மற்ற அரசுகளில் ஓரங்க சட்டசபையும் இருத்தலைக் காண்கின்றோம். இரண்டு சபைகளைக்கொண்ட சட்டசபைகளில் ஒன்றை (கீழ்ச்சபையை) அசெம்பிளி என்றும், மற்றொன்றை (மேல்சபையைக்) கவுன்சில் என்றும் அரசியலமைப்பு வழங்குகிறது. ஒரே சபையைக்கொண்ட சட்டசபைக்கு அசெம்பிளி என்று பெயர். கவர்னர் சட்டசபையின் ஒரு பாகமாக விளங்குகிறார்.

அரசியலமைப்பின் 169ஆம் பிரிவு, கவுன்சில் (மேல்சபை) உள்ள ஓர் அரசில் அக் கவுன்சிலை நீக்கவோ அல்லது அத்தகைய கவுன்சில் இல்லாத அரசில் அதை உண்டாக்கவோ, அந்த அரசின் கீழ்ச்சபை, அதன் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையோராலும் வந்திருந்து வாக்குச் செய்யும் சபையுறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையோராலும், அதற்கென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினல், பாராளுமன்றம் அவ்வாறு சட்டத்தினல் ஏற்பாடு செய்யலாமெனக் கூறுகிறது. இதிலிருந்து, இருக்கும் மேல்சபைகளை நீக்கவும், இல்லாத இடங்களில் ஏற்படுத்தவும் குறிப்பிட்ட அரசுகளுக்கு அரசியலமைப்பு அதிகாரம் கொடுத்திருப்பது விளங்கும். இம் மாற்றத்தைச் செய்யும் நடைமுறை அரசியலமைப்புத் திருத்தமாகக் கருதப்படலாகாது.

## கீழ்ச்சபை அமைப்பு

இச் சபையின் உறுப்பினர்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இச் சபையின் பெரியஅளவு உறுப்பினர் தொகையை 500 எனவும், குறைந்த அளவுத் தொகையை 60 எனவும் அரசியலமைப்பு வரையறை செய்திருக்கிறது. ஒவ்வோர் அரசிற்குமென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கேற்பத் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன. மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்குப்பின் மக்கள்தொகைக்கேற்ப மாற்றியமைக்க வழி செய்யப்பட்டிருக் கிறது. இச் சபைக்கு கவர்னர் ஆங்கிலோ-இந்தியர்களுக்கெனப் பிரதிநிதிகளை நியமனம் செய்யலாம்.

## மேல்சபை (கவுன்சில்) அமைப்பு

இச் சபையின் அமைப்புப்பற்றி அரசியல் நிர்ணய சபையில் ஒருமனமான கருத்து உருவாகவில்லை. இருப்பினும், நீண்ட விவாதத்திற்குப்பின் கவுன்சிலின் அமைப்புப்பற்றிய ஒரு முடிவிற்குச் சபை வந்தது. இம் முடிவை 171 (4) பிரிவு குறிப் பிட்டிருக்கிறது. ஓர் அரசின் மேல்சபையின் (கவுன்சிலின்) மொத்த உறுப்பினர்கள், அந்த அரசின் கீழ்ச்சபையின் மொத்த உறுப்பினர் களில் மூன்றிலொரு பங்கிற்கு மேற்படலாகாது. எனினும், ஓர் அரசின் மேல்சபையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வாற்றானும் நாற்பதுக்குக் குறைவாய் இருக்கலாகாது. ஓர் அரசின் மேல்சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில்

(1) கிட்டியவரை மூன்றிலொரு பங்கினர் நகராட்சி மன்றங்கள், மாவட்டக் கழகங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களடங்கிய வாக்காளர்த் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(2) பன்னிரண்டில் ஒரு பகுதியினர், ஓர் அரசில் வசிப் பவர்களில் குறைந்தது மூன்று ஆண்டு இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள ஒரு பல்கலைக்கழகப் பட்ட தாரிகள் அடங்கிய வாக்காளர் தொகுதிகளால் தேர்ந் தெடுக்கப்படவேண்டும்.

(3) பன்னிரண்டில் ஒரு பகுதியினர் ஓர் அரசின் நடுநிலைப் பள்ளியின் தரத்திற்குக் குறையாமல் மூன்றாண்டுக் கல்வி கற்பித்தவர்களடங்கிய வாக்காளர்த் தொகுதி களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(4) மூன்றிலொரு பகுதியினர் ஓர் அரசின் கீழ்ச்சபை உறுப்பினர்களால் அச் சபையின் உறுப்பினரல்லாதவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(5) மீதியுள்ளவர் இலக்கியம், அறிவியல், கலை, கூட்டுறவு, சமூக சேவை இவைபோன்றவைகளில் நுட்ப அறிவு அல்லது செயல்முறை அனுபவம்பற்றி கவர்னரால் நியமிக்கப்படவேண்டும்.

கவர்னர் நியமனம் நீங்கலாக, மற்றவர்களெல்லாம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றை மாற்று வாக்கு வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

ஓர் அரசின் கீழ்ச்சபை (அசெம்பிளி), அதன் முதல் கூட்டத்திற்காகக் குறிப்பிட்ட நாளிலிருந்து ஐந்தாண்டுக் காலம், அதற்கிடையே கலைக்கப்பட்டாலன்றி, நீடித்திருக்கும். மேற்சொன்ன ஐந்தாண்டுக் கால முடிவே அச் சபையின் கலைப்பை விளைக்கும் திறனுடையதாகும். நெருக்கடி நிலைக் காலங்களில் ஓராண்டிற்கு மேற்படாமல் பாராளுமன்றம் சட்டத்தினுல் இச் சபையின் பதவிக் காலத்தை நீட்சி செய்யலாம்.

ஓர் அரசின் மேல்சபை (கவுன்சில்) கலைக்கப்படமாட்டாது. ஆனுல், ஒவ்வோர் ஈராண்டின் முடிவிலும் இயன்ற விரைவில் அதன் உறுப்பினர்களில் கிட்டிய அளவு மூன்றிலொரு பகுதியினர் விலகிக் கொள்ளவேண்டும்.

## சட்டசபை உறுப்பினரின் பதவிக்குரிய தகுதி

உறுப்பினரின் பதவிக்குரிய தகுதிகளைச் சிறப்பாக அரசியலமைப்பு எதையும் குறிப்பிடவில்லை. ஆனுல், ஓர் அரசின் கீழ்ச்சபையில் உறுப்பினராவதற்கு ஒருவர் இருபத்தைந்து வயது நிரம்பப்பெற்றவராகவும், மேல்சபையில் (கவுன்சில்) உறுப்பினராவதற்கு முப்பது வயது நிரம்பப்பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

ஓர் அரசின் கீழ்ச்சபையின் அலுவல்களைச் செய்யச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகர், உதவிச் சபாநாயகரென இருவர் இருப்பர். இவ்விருவரும் பாராளுமன்றத்தின் சபாநாயகர், உதவிச் சபாநாயகர்போன்று எல்லா அதிகாரங்களையும் பெற்றிருப்பர். சபையில் அப்போதுள்ள மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்ருல்

சபாநாயகரையும் உதவிச் சபாநாயகரையும் பதவியிலிருந்து நீக்கலாம். சபை கலைக்கப்படும்போதெல்லாம், அக் கலைப்புக்குப் பிறகு அச் சபையின் முதல் கூட்டத்திற்கு அடுத்து முன்னதாக உள்ள காலம் வரை சபாநாயகர் தமது பதவியைக் காலி செய்யலாகாது.

கவுன்சில் (மேல்சபை) உறுப்பினர்கள் ஒரு தலைவரையும் ஓர் உதவித் தலைவரையும் தேர்ந்தெடுத்துக்கொள்கிறார்கள். இவர்களுக்கும், கீழ்ச்சபையின் சபாநாயகர், உதவிச் சபாநாயகருக்கான அதிகாரங்களும் உரிமைகளுமிருக்கின்றன. இவர்களையும் கவுன்சில் பதவியிலிருந்து நீக்கமுடியும். அப்படி நீக்குவதற்கான கீழ்ச்சபையின் நடைமுறையையே இச் சபையும் பின்பற்றுகிறது.

இரு சபைகளுக்குமான செயலாண்மைத்துறையைத் தனித் தனியே அமைத்துக்கொண்டு சுயேச்சையுடன் செயல்பட அரசியலமைப்பு வகை செய்திருக்கிறது.

## அலுவல் நடைமுறை

அரசின் சட்டசபைக்கான அலுவல் நடைமுறைகள் பாராளு மன்றத்திற்கான நடைமுறைகளையொட்டியே அமைந்திருக் கின்றன. எனவே, யூனியன் பாராளுமன்ற அலுவல் நடைமுறை யென்ற தலைப்பில் நாம் முன்கூறியுள்ள செய்திகளை இங்கு நினைவிற்குக் கொணர்தல் வேண்டும். சுருங்கக் கூறின், ஓர் அரசின் சட்டசபை ஆண்டிற்கு இரு தடவைகளாவது கூடவேண்டும். அவ்வாறு கூடும்பொழுது முதற் கூட்டத்திற்கும் அடுத்த கூட்டத்திற்கும் இடைப்படும் காலம் ஆறு மாதத்திற்கு மேலாகக் கூடாது. சபையின் முதல் கூட்டத்தில், அரசாங்கத்தின் கொள்கையை விளக்கும் வகையில் கவர்னர் ஒரு பேருரை யாற்றுவார். அப் பேருரையைச் சபையினர் விவாதித்து ஏற்று கவர்னருக்கு நன்றி தெரிவிப்பார்கள். அரசாங்கத்தின் கொள்கையைத் திறனாய்வு செய்ய உறுப்பினர்களுக்கு இது நல்லதொரு வாய்ப்பாகும்.

பணமசோதா நீங்கலாக எந்த மசோதாவையும் இரு சபை களும் கொணரலாம். மூன்று வாசிப்புகளுக்குப் பிறகு மசோதா நிறைவேறும். அதன்பின் மசோதா சட்டமாக கவர்னரின் ஒப்பு தலைப் பெறவேண்டும். ஆனால், கவர்னர் ஒரு மசோதாவைச் சபை யின் மறு ஆய்விற்கு அனுப்பலாம். சபை மசோதாவை முன் பிருந்தபடியே மறுபடியும் நிறைவேற்றியனுப்பினால், கவர்னர் ஒப் புதல் அளிக்க மறுக்கலாகாது. ஆனால், கவர்னர் அம் மசோதாவை

ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக ஒதுக்கியும் வைக்கலாம். அதன்பின் ஜனாதிபதி கவர்னர் வழியாகச் சட்டசபையின் மறு ஆய்விற்கு அம் மசோதாவை வைக்குமாறு கேட்டுக்கொள்ளலாம். திருத்தங்களுடனோ, திருத்தங்களின்றியோ சபை மறுபடியும் அம் மசோதாவை நிறைவேற்றினால், அது ஜனாதிபதியின் பார்வைக்குச் செல்லும். இந் நிலையில் இம் மசோதாவைச் சபை இரண்டாம் முறையாக நிறைவேற்றியிருப்பினும், ஜனாதிபதி தம் ஒப்புதலைத் தெரிவிக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

இவ்விரு சபைகளின் உறவு முறைக்கும் பாராளுமன்ற இரு சபைகளின் உறவு முறைக்குமுள்ள கருதத்தக்க ஒரு வேற்றுமையென்னவெனில், இராஜ்ய சபையைப்போன்று அரசுகளின் மேல்சபையாகிய கவுன்சில் சட்டமியற்றுதலில் ஒரு சிறப்பான பங்கைப் பெறவில்லை எனலாம். பணத்தொடர்புடைய மசோதாக்கள் நீங்கலாக மற்றத் துறைகளில் பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்குமுள்ள சம அதிகாரத்தை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். சபைகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகளிருப்பின் அவற்றைத் தவிர்க்க இரு சபைகளும் ஒருங்கே கூடலாமென்பதையும் நாம் முன்பு கண்டோம். ஆனால், அரசுகளில் செயல்படும் கவுன்சில்கள் அறிவுரை வழங்குபவையாகவே இருக்கின்றன.

இரு சபைகளுக்கும் பூசல் ஏற்பட்டால் அதைத் தவிர்க்கவும் அரசியலமைப்புச் சில வழிகளைக் கூறியிருக்கிறது. அதன்படி ஒரு மசோதா கீழ்ச்சபைகளிலிருந்து மேல்சபைக்கு இரண்டு முறைகள்தாம் செல்லும். ஒரு மசோதா கீழ்ச்சபைகளிலிருந்து மேல்சபைக்கு முதல் தடவையாக வந்தால் மேல்சபை அதை ஏற்க மறுக்கலாம்; அதைத் திருத்தலாம்; அதுபற்றிய எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருக்கலாம்; கீழ்ச்சபை மசோதாவை அனுப்பியவாறு அதை நிறைவேற்றலாம். இம் முறைகளில் எதைப் பின்பற்றினாலும், கவுன்சில் ஒரு மசோதாவை மூன்று மாதத்திற்குத்தான் இந் நிலையில் முடக்கிவைக்கலாம். கீழ்ச்சபை இதற்கிடையில் அம் மசோதாவை இரண்டாம் முறையாக அதன் பார்வைக்கு எடுத்துக்கொண்டு, கவுன்சிலின் திருத்தங்களை ஏற்றோ ஏற்காமலோ நிறைவேற்றலாம். இதன் பின் அம் மசோதா இரண்டாம் முறையாகக் கவுன்சிலுக்கும் செல்லுமாயின், கவுன்சில் அதை ஒரு மாதத்திற்குத்தான் தேக்கிவைக்கலாம். கவுன்சில் கீழ்ச்சபையுடன் இணங்கிச் செல்லவில்லையென்றால், கீழ்ச்சபை முன் கூறிய முறைகளைப் பயன்படுத்தி மசோதாவை

நிறைவேற்றும். சுருங்கக் கூறின், கவுன்சில் கீழ்ச்சபையிலிருந்து வரும் மசோதாவை முதல் தடவையில் மூன்று மாதத்திற்கும், இரண்டாம் தடவையில் ஒரு மாதத்திற்குமே நிறுத்திவைக்கலாம்.

பண மசோதாக்களை நிறைவேற்றுவதில் ஓர் அரசின் கீழ்ச்சபை, மக்கள்சபை பெற்றிருக்கும் எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிறது. பண, நிதி மசோதாக்களை நிறைவேற்ற அரசின் கீழ்ச்சபை, மக்கள்சபை பின்பற்றுகின்ற நடைமுறை விதிகளைப் பின்பற்றவேண்டும். இந் நடைமுறைகளைப்பற்றிய விளக்கத்தை யூனியன் பாராளுமன்ற நடைமுறைகள் எனும் அதிகாரத்தில் பார்க்கவும்.

அரசின் சட்டசபைகளும் அதன் உறுப்பினர்களும், பாராளுமன்றமும் அதன் உறுப்பினர்களும் பெற்றிருப்பது போன்ற அதிகாரங்களையும் சிறப்புரிமைகளையும் பெற்றிருக்கின்றனர். அரசியலமைப்பு இவற்றைப் பிரிவுகள் 194 (1), (2), (3), (4), 195-ல் குறிப்பிட்டிருக்கிறது. சட்டசபைகளால் நிர்ணயிக்கப்படும் ஊதியங்களையும் படிகளையும் சட்டசபை உறுப்பினர்கள் பெறுவர். இவ் வூதியங்களும் படிகளும் எல்லா அரசுகளிலும் ஒரே சீராய் இருக்கவேண்டும் என்பதில்லை.

யூனியன் அரசுகளில் ஜம்மு-காஷ்மீர் ஒரு தனி நிலையைப் பெற்று விளங்குகிறது. இவ்வரசின் தலைவர் கவர்னர் எனப் பெயர் பெறுகிறார். இதுபோன்றே, அமைச்சவைத் தலைவரும் முதல் அமைச்சரென வழங்கப்படுகிறார். ஜம்மு-காஷ்மீர் பிரிவினைக்குப் பின், இந்தியாவுடன் இணைந்தபொழுதிருந்த சூழ்நிலையை யொட்டி இவ்வரசு இத் தனிநிலையைப் பெற்றிருக்கிறது.

## அரசுகளின் சட்டசபையில் இடங்கள் ஒதுக்கப்பட்ட வீதம்

| எண் | அரசுகள் | கீழ்ச்சபைக்கான இடங்கள் | மேல்சபைக்கான இடங்கள் |
|---|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | 287 | 90 |
| 2. | அஸ்ஸாம் | 126 | — |
| 3. | பீகார் | 318 | 96 |
| 4. | குஜரத் | 168 | — |
| 5. | ஹரியாளு | 81 | — |
| 6. | ஜம்மு-காஷ்மீர் | 75 | 36 |
| 7. | கேரளா | 133 | — |
| 8. | தமிழ்நாடு | 234 | 63 |
| 9. | மத்தியப் பிரதேசம் | 296 | 96 |
| 10. | மகாராஷ்டிரம் | 270 | 78 |
| 11. | மைசூர் | 216 | 63 |
| 12. | நாகாலாந்து | 45 | — |
| 13. | ஒரிசா | 140 | — |
| 14. | பஞ்சாப் | 104 | — |
| 15. | ராஜஸ்தானம் | 184 | — |
| 16. | உத்தரப் பிரதேசம் | 425 | 108 |
| 17. | மேற்கு வங்காளம் | 280 | 75 |

# 24. அரசுகளிலுள்ள உயர் நீதிமன்றங்கள்

அரசியலமைப்பின் பிரிவுகள் 214 முதல் 232 முடிய நீதிமன்றங்களைப்பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன. அரசு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உயர் நீதிமன்றம் இருக்கவேண்டுமென்று அரசியலமைப்புக் குறிப்பிட்டிருக்கிறது. உயர் நீதிமன்றங்கள் ரிக்கார்டு நீதிமன்றங்களாகவும் விளங்கும். அவை, தம்மை அவமதித்தற்காகத் தண்டிக்கும் அதிகாரம் உட்பட, அத்தகைய நீதிமன்றங்களுக்குரிய எல்லா அதிகாரங்களையும் பெற்றிருக்கும்.

இந்தியாவின் உயர் நீதிமன்றங்கள் வரலாற்றுப் பெருமைக்குரியன. பிரிட்டிஷார் காலத்திருந்தே அரசு சாசனங்கள் வாயிலாக இவை தோன்றி, அவைகளுக்கான அதிகார எல்லைகளுக்குள் செயல்பட்டுவந்தன. 1935ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தையொட்டி அமைந்த கூட்டாட்சி நீதிமன்றம் உயர் நீதிமன்றங்களிலிருந்து வரும் முறையீடுகளைக் கேட்கும். இம்முறையீடுகள் அரசியலமைப்புப் பற்றியனவாக இருக்கவேண்டும். கூட்டாட்சி நீதிமன்றத்திலிருந்து அரசியலமைப்புப்பற்றிய முறையீடுகள் பிரிவி கவுன்சிலுக்கும் செல்லும். பிரிவி கவுன்சிலுக்கு முறையிடுவது 1949-ல் சட்டத்தால் தடைசெய்யப்பட்டது.

நாம் முன்னர்க் கண்ட தலைமை நீதிமன்றம் இவ்வுயர் நீதிமன்றங்களைத் தனக்குள் அடக்கிக்கொண்டு ஒருமையுடன் செயல்படுதலை நினைவிற்கொள்ளவேண்டும். கூட்டாட்சி அமைப்புகளில் இருவகையான நீதிமன்றங்கள் செயல்படும். அரசுகள், சட்டத்தால், உயர் நீதிமன்றங்களின் அமைப்பை மாற்றமுடியாது. அதாவது, பாராளுமன்றம் நிறைவேற்றும் ஓர் அரசியலமைப்புத் திருத்தத்தாலன்றி இவற்றை மாற்றியமைக்க முடியாது.

உயர்நீதிமன்றம் ஒவ்வொன்றும் பிரதம நீதிபதி ஒருவரையும், ஜனாதிபதி அவ்வப்போது நியமித்தல் அவசியம் என்று கருதும் மற்றைய நீதிபதிகளையும் கொண்டதாக இருக்கவேண்டும். குறைந்த அளவு நீதிபதிகளின் எண்ணிக்கையை அரசியலமைப்பு இங்குக் குறிப்பிடவில்லை. அரசுக்கரசு உயர்நீதிமன்ற நீதிபதிகள் கூடுதலாகவும் குறைவாகவும் இருக்கலாம்.

ஜனாதிபதி இந்தியாவின் பிரதம நீதிபதியோடும், அரசின் கவர்னரோடும், அரசின் பிரதம நீதிபதியோடும் கலந்தாலோசித்து ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியை நியமனம் செய்யவேண்டும். ஒரு நீதிபதி நிரந்தரமாக அமர்த்தப்பட்டிருந்தால் அவர் அறுபத்திரண்டு வயது நிரம்பும்வரை பதவி வகிக்கலாம். எனினும், ஒரு நீதிபதி எழுத்து மூலமாக அறிவித்துத் தமது பதவியிலிருந்து விலகிக்கொள்ளலாம். நிரூபிக்கப்பட்ட நடத்தைப் பிசகு அல்லது திறமையின்மை காரணமாகத்தான் உயர் நீதிமன்ற நீதிபதியொருவரை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கலாம். இதைச் செய்யத் தலைமை நீதிமன்ற நீதிபதி யொருவரைப் பதவிநீக்கம் செய்யக் கையாளும் முறையைப் பின்பற்றவேண்டும்.

உயர் நீதிமன்றப் பிரதம நீதிபதியும், மற்ற நீதிபதிகளும் முறையே ரூ. 4,000, ரூ. 3,500 மாதமொன்றுக்குச் சம்பளமாகப் பெறுகிறார்கள். மேலும், சில குறிப்பிட்ட படிகளையும் ஓய்வூதியங்களையும் இவர்கள் பெறுகிறார்கள். எனினும், இவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், படி ஆகியவற்றை இவர்கள் நியமனமானபின் இவர்களுக்குப் பாதகமாக மாற்றலாகாது. இவர்களின் ஊதியத் தொகைகள் அனைத்தும் அரசின் திரண்ட நிதியில் சாட்டப்படுகின்றன. பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின் ஒரு நீதிபதி தலைமை, உயர் நீதிமன்றம் நீங்கலாக வேறெந்த நீதிமன்றத்திலும் வாதிக்கவோ செயல்புரியவோ கூடாது. அதிலும் தாம் எந் நீதிமன்றத்தில் நீதிபதியாகச் செயலாற்றினாரோ அந் நீதிமன்றத்தில் தோன்றி வாதிக்கலாகாதென அரசியலமைப்பு குறிப்பிட்டிருக்கிறது. நீதிபதிகளின் சுயேச்சை நிலையைக் காக்கத் தலைமை நீதிமன்ற நீதிபதிகளுக்கு அரசியலமைப்பு வழங்கியிருப்பது போன்ற பாதுகாப்புகளையே இவர்களுக்கும் வழங்கியிருக்கிறது.

**நீதிபதியாக நியமனம் பெறத் தகுதிகள் :** ஒருவர் இந்தியாவின் குடியாகவும், இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் குறைந்தது பத்தாண்டாவது நீதிப்பதவியொன்றை வகித்திருந்தவராகவும், குறைந்தது பத்தாண்டாவது ஓர் உயர் நீதிமன்றத்திலோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட அத்தகைய நீதிமன்றங்களிலோ

தொடர்ச்சியாக அட்வகேட்டாக இருந்தவராகவுமிருந்தால் ஓர் உயர்நீதி மன்ற நீதிபதியாக நியமனம் பெறத் தகுதியுள்ளவராவார். உயர்நீதிமன்ற நீதிபதிகள் தமது பதவியை ஏற்பதற்கு முன், அந்த அரசின் கவர்னரின் அல்லது அதற்கென அவரால் நியமிக்கப்பட்ட ஒருவர் முன்னிலேயில் ஒரு பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்து கையெழுத்திடவேண்டும்.

ஜனுதிபதி, இந்தியாவின் பிரதம நீதிபதியுடன் கலந்து கொண்டு ஒரு நீதிபதியை ஓர் உயர்நீதிமன்றத்திலிருந்து வேறெந்த உயர் நீதிமன்றத்திற்கும் மாற்றலாம் (பிரிவு 222). ஜனுதிபதியின் இவ்வதிகாரம் நீதிமன்றச் சுயேச்சையைப் பாதிப்பதாகத் தோன்றினும், இதனல் சில நன்மைகள் விளேயலாம். திறமை வாய்ந்த ஒரு நீதிபதியின் சேவை நாட்டின் எப்பகுதிக்கும் பயன் படலாம். எனவே, ஓர் அரசு அல்லது மண்டல மனப்பான்மையுடன் ஒரு நீதிபதியை நியமனம் செய்யாமல் பரந்த நோக்குடன் இவரை நியமிக்க அரசியலமைப்பு வழி செய்திருக்கிறது.

ஓர் உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியின் பதவி காலியாயிருக்கும்போது, பதிலாக வேலே பார்க்க அந் நீதி மன்றத்தின் மற்றைய நீதிபதிகளில் ஒருவரை ஜனுதிபதி நியமிப்பார். ஓர் உயர்நீதிமன்றத்தின் அலுவல்கள் அதிகரித்திருப்பினும் அல்லது வேலேகள் எஞ்சியிருப்பினும், அவற்றை விரைவில் செய்துமுடிக்க ஜனுதிபதி நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம். இவ்வதிகப்படியான நீதிபதிகளின் நியமனம் இரண்டாண்டிற்கு மேற்படலாகாது. இவர்களும் அறுபத்திரண்டு வயது நிரம்பிய பிறகு பதவி வகிக்கலாகாதென அரசியலமைப்புக் குறிப்பிடுகிறது.

**உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு:** உயர் நீதிமன்றங்களின் அதிகாரவரம்புபற்றி அரசியலமைப்பு விரிவாகக் குறிப்பிடவில்லே. ஏனெனில், இவ்வரசியலமைப்பின் தொடக்கத்திற்கு முன்பாகவே இவ்வுயர் நீதிமன்றங்கள் வரையறைக்குட்பட்ட அதிகார வரம்பினேயுடையவாயிருந்தன. அரசியலமைப்பிற்குட்பட்டு இந் நீதிமன்றங்கள் ஓர் அரசின் மிக உயர்ந்த நீதிமன்றங்களாய்ச் செயல் பட்டுவருகின்றன. எனவே, அரசியலமைப்பிற்கு முன், இந் நீதிமன்றங்கள் பெற்றிருந்த அசல் அதிகார வரம்பினேயே தொடர்ந்து பெற்றுவருகின்றன. இதனுடன் இந் நீதிமன்றங்கள் இதற்குமுன் பெற்றிராத சில சிறப்பு அதிகாரங்களேயும் பெற்றன. அதாவது, வருவாய்பற்றியும் அதன் வசூலிப்புப் பற்றியுமெழுகின்ற வழக்குகளில் உயர் நீதிமன்றம் அசல் விசாரணே அதிகாரத்தைப்

பெற்றது. உயர்நீதிமன்றம் தன் அலுவல்களை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை வகுத்துக்கொள்ள முழு அதிகாரத்தைப் பெற்றது. மேலும், அதன் அதிகார வரம்பிற்குட்பட்டு நீதி வழங்குவதைக் குறிப்பிடும் சில விதிகளையும் செய்துகொள்ள அரசியலமைப்பு இந் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளித்திருக்கிறது.

இந் நீதிமன்றங்கள் பெற்றிருக்கும் அசல், அப்பீல் அதிகாரங்களுடன் அரசியலமைப்பு இன்னும் சில அதிகாரங்களையும் கொடுத்திருக்கிறது. அதாவது, (1) அடிப்படையான உரிமைகளைச் செயல்படுத்துவதற்கான கட்டளைகளைப் பிறப்பிக்கவும்; (2) ஓர் அரசிலுள்ள மற்றெல்லா நீதிமன்றங்களின்மீதும் மேற்பார்வை செலுத்தவும்; (3) அரசியல் அமைப்பிற்கு விளக்கம் காணும் வகையில் எழுகின்ற வழக்குக்களை உயர் நீதிமன்றம் தனக்கே மாற்றிக்கொள்ளவும்; (4) நீதிமன்ற அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமிக்கும் அதிகாரத்தையும் உயர்நீதிமன்றம் பெற்றிருக்கிறது. மேலும், உயர்நீதிமன்றம், கீழ் நீதிமன்றங்களிலிருந்து விவரக் குறிப்புகளை அனுப்பும்படி கேட்கலாம். கீழ் நீதிமன்றங்களின் செயல்முறையையும் நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காகப் பொது விதிகள் செய்யலாம்; அவற்றின் அலுவலர்கள் தங்கள் புத்தகங்கள், பதிவுகள், கணக்குகள் இவற்றை வைக்கவேண்டியதற்கான முறைகளையும் நிர்ணயிக்கலாம்.

அரசியலமைப்பின் 236ஆம் பிரிவுப்படி, ஓர் உயர் நீதிமன்றம், தான் விசாரணை அதிகாரம் செலுத்தும் பிரதேசங்கள் முழுவதிலும் அடிப்படையான உரிமைகளின் காவல் கோட்டையாக அமைந்திருக்கிறது. இருப்பினும், இந் நீதிமன்றத்தின் அதிகாரமும் கட்டளையும் அதன் விசாரணை அதிகாரம் நீட்டிக்கும் எல்லைகளுக்கு மப்பால் செல்லாது. அடிப்படையான உரிமைகளைக் காக்க அரசியலமைப்பின் 32ஆம் பிரிவு தலைமை நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கியிருப்பினும், உரிமை இழந்தோர் எல்லோரும் இந் நீதிமன்றத்தை மட்டுமே அணுகிப் பரிகாரம் பெறலாமென்றிருப்பின், குடிமக்கள் பெருந் துன்பத்திற்குள்ளாகவேண்டியிருக்கும். எனவே, அரசியலமைப்பு இவ்வதிகாரத்தை உயர் நீதிமன்றத்திற்கும் வழங்கிக் குடிமக்களின் அடிப்படையான உரிமைகளை உண்மையானவையாக்கியிருக்கிறது. இவ்வதிகாரத்தைச் செயல்படுத்த உயர் நீதிமன்றம் 32ஆம் பிரிவில் குறிப்பிட்டிருக்கும் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

உயர் நீதிமன்றங்கள் சுயேச்சையுடன் செயலாற்ற அவைகளுக்கான அலுவலர்களேயும் பணியாளர்களேயும் பிரதம நீதிபதி அமர்த்தலாம். இவர்களே அமர்த்துவதுபற்றி நீதிமன்றம் பப்ளிக் செர்வீஸ் கமிஷனேக் கலந்துகொள்ளுமாறு கவர்னர் விரும்பலாம். பிரதம நீதிபதியால் செய்யப்படும் விதிகளில் வகுக்கப்பட்டபடி ஓர் உயர் நீதிமன்றத்தின் அலுவலர்கள், சேவையாளர்கள் இவர்களின் சேவைமுறைகள் இருக்கவேண்டும். எனினும், இவர்களின் சம்பளங்கள், படிகள், லீவு, ஓய்வூதியங்கள் இவைபற்றிச் செய்யப்படும் விதிகள் கவர்னரின் ஒப்புதல் பெறவேண்டும். இவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளங்கள், படிகள், ஓய்வூதியங்கள் முதலியவைகளும், நீதிமன்ற நிர்வாகச் செலவுகளும் அரசின் திரண்ட நிதியின்பேரில் சாட்டப்படவேண்டும். இந் நீதிமன்றம் பெற்றுக்கொள்ளும் கட்டணங்களும், வேறு பணங்களும் இந் நிதியில் ஒரு பாகமாகச் சேரும்.

யூனியன் பாராளுமன்றம், ஒரு சட்டத்தினுல் ஓர் உயர் நீதிமன்றத்தின் விசாரணே அதிகாரத்தை யாதொரு யூனியன் ஆட்சிப் பரப்பிற்கும் நீட்டிக்குமாறு செய்யலாம்; அல்லது இவ்வதிகாரத்தை நீக்கலாம். ஓர் உயர் நீதிமன்றம் யூனியன் ஆட்சிப் பரப்பில் விசாரணே அதிகாரத்தைச் செலுத்துமாளுல், அவ்வரசின் சட்டசபைக்கு இவ்விசாரணே அதிகாரத்தைக் கூட்டவோ, கட்டுப்படுத்தவோ, நீக்கவோ அதிகாரம் கிடையாது. யூனியன் ஆட்சிப் பரப்பின் கீழ் நீதிமன்றங்களுக்கான விதிகள், நமூனுக்கள், அட்டவணேகள்பற்றியவைகளே ஜனுதிபதியைக் கலந்துகொண்டே செய்யவேண்டும்.

பாராளுமன்றம் சட்டத்தினுல் இரண்டு அல்லது பல அரசுகளுக்காகவும், ஒரு யூனியன் ஆட்சிப் பரப்பிற்காகவும் பொதுவான ஓர் உயர் நீதிமன்றத்தை நிறுவலாம். யூனியன் ஆட்சிப் பரப்பில் செயல்படும் சட்டசபை, நீதிமன்றத்தின் அதிகாரவரம்புபற்றிச் சட்டங்கள் இயற்ற முடியாது.

**கீழ் நீதிமன்றங்கள்:** கீழ் நீதிமன்றங்கள்பற்றியும் அரசியலமைப்பின் பிரிவுகள் (233 முதல் 237 முடிய) குறிப்பிடுகின்றன.

பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் அவர்களின் வசதிக்காக நீதி, நிர்வாக அதிகாரங்களேக் கீழ்மட்டத்திலிருந்த அலுவலர்கள் சேர்ந்தே செயல்படுத்திவந்தனர். பிரிட்டிஷார் மாகாணங்களேப் பல மாவட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலேவராகக் கலெக்டர்-மாஜிஸ்ரேட் என ஒருவரை நியமித்தனர்.

இவர் நீதி, நிர்வாக அதிகாரங்களை இணைத்தே செயல்புரிந்தார். இவ்வதிகார இணைப்பின் விளைவாகக் கலெக்டர் ஒரு கொடுங் கோலரெனத் தோன்றினர். அரசியல் விடுதலைக்காகப் பாடு பட்ட தேசிய இயக்கங்களை ஒடுக்க இம் முறை பெரிதும் பயன் பட்டதெனலாம். எனவே, நமது அரசியலமைப்பாளர்கள் நீதி நிர்வாகப் பிரிவினையை வலியுறுத்தினர். இதன்படி, கீழ்மட்டத்தி லிருந்து உயர்மட்டம் வரையுள்ள நீதிநிர்வாகத் துறைகளை, அரசியலமைப்பு பிரித்து அவைகள் தனித்தியங்க வழி செய்தது. சிறப்பாக நீதித்துறை தனித்துச் சுயேச்சையுடன் இயங்கவேண்டு மென்பது அரசியலமைப்பின் கருத்தாகும். மேலும், உயர் நீதி மன்றம் கீழ் நீதிமன்றங்களை மேற்பார்வையிடுவதால், நீதிமன்றங் கள் தனி நிறுவனங்களாய் நிர்வாகத்துறையில் தலையீடின்றி இயங்கமுடிகிறது.

கீழ் நீதிமன்றங்கள், நீதிபற்றியவற்றில் மக்களுடன் மிக நெருங்கிய தொடர்புடையனவாயிருத்தலால், இவைகள் சுயேச்சை யுடன் செயல்பட்டு மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும். இதுபற்றியே அரசியலமைப்பு, கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகள் நியமனம்பற்றியும் விரிவாகக் கூறியிருக்கிறது. மேலும், உயர்நீதி மன்றத்தின் கட்டுப்பாட்டில்தான் சிவில் நீதியனைத்தும் இயங்கி வருகின்றன. ஓர் அரசின் மாவட்ட நீதிபதிகளை, கவர்னர் அந்த அரசின் நீதிமன்றத்துடன் கலந்துகொண்டு நியமனம் செய்கிறார். ஏற்கெனவே யூனியனின் அல்லது அரசின் சேவையில் இல்லாத ஒருவர் ஏழாண்டுகளுக்குக் குறையாமல் அட்வகேட்டாக இருந்து உயர் நீதிமன்றத்தால் சிபார்சு செய்யப்படடிருந்தால் மட்டுமே அவர் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்படுவார். அரசின் பொதுப் பணியாளரைப் பொறுக்கும் ஆணைக்கழகத்துடனும், உயர் நீதி மன்றத்துடனும் கவர்னர் கலந்துகொண்டு செய்யும் விதியை யொட்டி மாவட்ட நீதிபதிகளைத் தவிர மற்ற நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். மூன்றாண்டு அட்வகேட்டாகவோ, பிளீடராகவோ பணியாற்றியவர்கள் இந்நியமனத்திற்குரியவர்கள். ஆனால், நடைமுறையில் பொதுப்பணியாளரைப் பொறுக்கும் ஆணைக்கழகம் ஒரு தேர்வு வாயிலாக இவர்களைத் தேர்ந்தெடுக் கிறது. நியமனம் பெற்றபின் இவர்கள் உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுகின்றனர்.

மாவட்ட நீதிமன்றத்திலும், அதற்குக்கீழுள்ள நீதிமன்றங் களிலும் பணியாற்றும் சேவை வர்க்கத்தினரின் வேலையிடங்களைக் குறுக்கவும், பதவி உயர்வளிக்கவும், லீவு கொடுக்கவும் உயர் நீதி

மன்றம் அதிகாரம் பெற்றிருக்கிறது. அரசின் நீதித்துறை சேவை வர்க்கத்தில் சேராத எல்லா மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் கவர்னர் அரசியலமைப்பின் 235ஆவது பிரிவை நீட்டிக்கலாம்.

சிற்சில மாற்றங்களுடன் இக் கீழ் நீதிமன்றங்கள் நாடெங்கிலும் ஒருபடித்தான முறையில் அமைந்திருத்தலைக் காணலாம்.

# 25. யூனியன் ஆட்சிப் பரப்புகள்

அரசியலமைப்பின் **239, 240, 241**ஆம் பிரிவுகளில் இந்திய யூனியன் ஆட்சிப் பரப்புகளின் நிர்வாகம்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. யூனியனின் A பிரிவு, B பிரிவு (பிரிவு) என்னும் அரசுகள் 1956ஆம் ஆண்டின் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தால் யூனியன் அரசுகளென்றும், ஆட்சிப் பரப்புகளென்றும் மாற்றியமைக்கப்பட்டன. இவைகளில் யூனியன் அரசுகளின் அமைப்பைப் பற்றி முன் அதிகாரங்களில் பார்த்தோம். யூனியனின் நேர்முக ஆட்சியின் கீழுள்ள பிரதேசங்களின் அமைப்பைப்பற்றிய சில செய்திகளை இங்குப் பார்ப்போம்.

யூனியன் ஆட்சிப் பரப்பு ஒவ்வொன்றையும், ஜனுதிபதி தாம் குறிப்பிடலாகும் உத்தியோகப் பெயருடன் தாம் நியமிக்கக்கூடிய நிர்வாகிமூலம், தமக்குத் தகுதியாகத் தோன்றும் அளவுக்குச் செயலாற்றி நிர்வகிக்கவேண்டும். ஜனுதிபதி ஓர் அரசின் கவர்னரை அடுத்துள்ள யூனியன் ஆட்சிப் பரப்பின் நிர்வாகியாக நியமிக்கலாம். இவர், அந்த நிர்வாகியின் அலுவல்களைத் தமது அமைச்சவைக்குச் சம்பந்தமின்றித் தாமே நிறைவேற்ற வேண்டும்.

அந்தமான்-நிக்கோபர் தீவுகள், லக்ஷத்தீவுகள், மினிகாய், அமிந்திவித் தீவுகளாகிய யூனியன் ஆட்சிப் பரப்புகளின் அமைதிக்காகவும், அபிவிருத்திக்காகவும், நல்லாட்சிக்காகவும் ஜனுதிபதி விதிவகுக்கலாம். இவைகள் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தை நீக்கலாம் அல்லது திருத்தலாம். ஜனுதிபதியின் விதிகள் பாராளுமன்றச் சட்டத்தைப்போலவே செயல்திறனும் பயனுமுடையனவாகும். பாராளுமன்றம், சட்டத்தினுல் ஒரு யூனியன் ஆட்சிப் பரப்பிற்காக உயர் நீதிமன்றத்தை அமைக்கலாம்; அல்லது அந்த ஆட்சிப் பரப்பிலுள்ள ஒரு நீதிமன்றத்தை உயர் நீதிமன்றமாக்கலாம். இந்நீதிமன்றம் ஆட்சிப் பரப்புபற்றிய

எல்லா விசாரணை அதிகாரத்தையும் பெற்றிருக்கும். ஓர் ஆட்சிப் பரப்பிலுள்ள உயர் நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரத்தைப் பாராளுமன்றம் சட்டத்தால் முறைப்படுத்தலாம்.

**யூனியன் ஆட்சிப் பரப்புகள் :** (1) டெல்லி, (2) ஹிமாசலப் பிரதேசம், (3) மணிப்பூர், (4) திரிபுரா, (5) அந்தமான்-நிக்கோபர் தீவுகள், (6) லக்ஷத் தீவுகள், மினிகாய், அமந்திவித் தீவுகள், (7) கோவா, டையூ, டாமன், (8) தாதர், நாகர் ஹாவ்லி, (9) பாண்டிச்சேரி, காரைக்கால், (10) சண்டிகட்.

ஆட்சிமுறை

**அந்தமான்-நிக்கோபர் தீவுகள் :** இத் தீவுகளை ஜனாதிபதிக்குப் பொறுப்புடைய ஒரு பிரதம கமிஷனர் ஆட்சி செய்கிறார். இவருக்கு ஆலோசனைதர ஐந்து உறுப்பினரடங்கிய குழு ஒன்றிருக்கிறது.

**தாதர், நாகர் ஹவேலி :** அரசியல் அமைப்பின் பத்தாம் திருத்தத்தால், இதுவரை போர்த்துகீசியரின் ஆட்சியின்கீழிருந்த இப் பகுதிகள், 1961ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11ஆம் நாளிலிருந்து இந்திய யூனியன் ஆட்சிப் பரப்புகளாயின. இந்திய அரசாங்கத்தின் ஆட்சியாளரொருவர் இப் பகுதிகளின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகிறார்.

**டெல்லி :** 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இது யூனியன் ஆட்சிப் பரப்பாயிற்று. இதன் ஆட்சிப் பொறுப்பைத் தலைநகருக்குரிய கவுன்சில் மேற்கொள்ளுகிறது.

**கோவா, டையு, டாமன்:** 1961ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இப் பகுதிகள் இந்திய இராணுவத்தால் போர்த்துகீசியர் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பெற்றன. 1962ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டத்தின்படி இப் பகுதிகள் 1961ஆம் ஆண்டு டிசம்பர் 20ஆந் தேதியிலிருந்தே இந்திய யூனியனில் இணைந்ததாகக் கொள்ளப்பட்டது.

1963இல் இங்குத் தேர்தல்களை நடத்தி, மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு சட்டசபையை இந்திய அரசாங்கம் உருவாக்கியது. இதில் 30 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இச் சபைக்குப் பொறுப்புடைய ஓர் அமைச்சவை இப் பகுதிகளின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறது. இப் பகுதிகளின்

ஆட்சித் தலைவராகிய துணைநிலை கவர்னர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்கிறார்.

இப் பகுதிகள் அணிமையில் உள்ள மாநிலங்களில் இணைய வேண்டுமா அல்லது யூனியன் ஆட்சிப் பகுதியாகவே தனித்திருக்க வேண்டுமா என்பதை அறிய 'ஒரு கருத்தறியும் வாக்கெடுப்பை' யூனியன் அரசாங்கம் 1967ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் நாள் நடத்தியது. இதன்படி மக்கள் தொடர்ந்து யூனியனின் ஆட்சிப் பகுதியாகவே இருக்கக் கருத்துத் தெரிவித்தனர். மக்களின் இக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

**ஹிமாசலப் பிரதேசம்:** இது 1948ஆம் ஆண்டு யூனியன் ஆட்சிப் பகுதியாயிற்று. முன்னர் மலையரசுகளாயிருந்த 30 அரசுகளை இது கொண்டிருக்கிறது. 1954இல் பிலாசபூர் இதனுடன் இணைந்தது. 1966இல் பஞ்சாப் சீரமைக்கப்பெற்றபொழுது மலைப்பகுதிகள் இதில் இணைந்தன.

அறுபது உறுப்பினரைக்கொண்ட சட்டசபையும், சபைக்குப் பொறுப்புடைய ஓர் அமைச்சவையும் இதன் நிருவாகப் பொறுப்பை மேற்கொள்ளுகின்றன.

**லக்ஷத்தீவுகள், மினிகாய், அமிந்திவித் தீவுகள்:** யூனியனின் இந்த ஆட்சிப் பரப்பில் 20 தீவுகள் இருக்கின்றன. இது 1956இல் யூனியன் பரப்பாக அமைக்கப்பட்டது. ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழு இப் பகுதியின் ஆட்சிக்கு உதவுகிறது. ஓர் ஆட்சியாளரை ஜனாதிபதி இதற்கு அமர்த்துகிறார்.

**மணிப்பூர்:** இது 1949ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து மத்திய அரசாங்கத்தால் ஒரு பிரதம கமிஷனரால் ஆட்சி செய்யப்பட்டுவருகிறது. முப்பது உறுப்பினர்களைக்கொண்ட ஒரு சட்டசபையும் ஓர் அமைச்சவையும் இதன் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன.

**திரிபுரா:** இது 1949ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மத்திய அரசாங்கத்தின்கீழ் வந்தது. 1956 நவம்பர் மாதம் இது யூனியன் ஆட்சிப் பரப்பாயிற்று. இதன் ஆட்சிப் பொறுப்பு ஓர் ஆட்சியாளரிடம் விடப்பெற்றது. இவருக்கு உதவியாக ஒரு சிறிய அமைச்சவையும், 30 உறுப்பினர்களைக்கொண்ட சட்டசபையும் 1963ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தால் அமைந்தன.

**பாண்டிச்சேரி :** பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனும் ஆகிய பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த திட்டுப் பகுதிகள் 1954ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய ஆட்சிக்கு மாற்றப் பெற்றன. 1962ஆம் ஆண்டு ஆகஸ்டு 16ஆம் நாள் ஓர் உடன் படிக்கையால் ஃபிரான்சு இவைகளை இந்தியாவிற்கு மாற்றியது. இந்த நாளிலிருந்து இவை யூனியன் ஆட்சிப் பரப்புகளாயின.

யூனியன் ஆட்சிப் பரப்புகளின் பாராளுமன்றச் சட்டத்தை யொட்டி (1963) ஒரு துணைநிலை கவர்னர் ஜனாதிபதியால் அமர்த்தப்பெற்றார். நிருவாகத்தில் இவருக்குதவியாக ஓர் அமைச்சவையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பது உறுப்பினர்களும் இருப்பர்.

அந்தமான்-நிக்கோபர் தீவுகள், தாதர், நாகர் ஹாவலி, லக்ஷத்தீவுகள், பாண்டிச்சேரி ஆகிய யூனியன் ஆட்சிப் பரப்புகள் ஒவ்வொன்றும் மக்கள் சபைக்கு ஒரு பிரதிநிதியை அனுப்புகின்றன.

டெல்லி ஏழு பிரதிநிதிகளையும், இமாலயப் பிரதேசம் அறு வரையும், மணிப்பூரும் திரிபுராவும் கோவாவும் முறையே இரண்டு பிரதிநிதிகளையும் அனுப்புகின்றன.

இராஜ்ய சபைக்கு டெல்லி மூவரையும், இமாலயப் பிரதேசம் இருவரையும், மணிப்பூர், பாண்டிச்சேரி, திரிபுரா முறையே ஒரு வரையும் அனுப்புகின்றன.

# 26. யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையேயுள்ள நிதியுறவுகள்

யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையேயுள்ள நிதியுறவுபற்றி அரசியலமைப்பு மிக விரிவாகக் கூறியிருக்கிறது. கூட்டாட்சி அமைப்பில் மத்திய அரசாங்கத்திற்கும் உறுப்பரசுகளின் அரசாங்கத்திற்கும் நிதிபற்றிய பூசல்கள் இயல்பாகவே இருந்து வந்திருக்கின்றன. எனவே, இப் பூசல்களைத் தவிர்க்கத்தக்க வழிமுறைகளை அரசியலமைப்புத் தெளிவாய்க் கூறியிருக்கிறது. யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே பிரித்துக்கொடுக்கப்பட வேண்டிய அல்லது பிரித்துக் கொடுக்கலாகும் வரிகளின் நிகர வருவாயை அவைகளுக்குப் பங்கீடு செய்யவும், அத்தகைய வருவாயை முறையே அந்த அரசுகளுக்கிடையே பங்கு பிரித்துக் கொடுக்கவும் ஒரு நிதிக் கமிஷனை ஜனாதிபதி அமைக்க இந்த அரசியலமைப்பு வழி செய்திருக்கிறது. நிதித் துறையில் யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே எழும் பூசல்களை இக் கமிஷன் தவிர்க்க உதவும். யூனியனுக்கும் அரசுகளுக்கு மிடையே வருவாய் மூலங்களை விரிவாய் அரசியலமைப்புப் பங்கீடு செய்திருக்கிறது. இதை நுட்பமாகச் செய்யும் பணியை அரசிய லமைப்பு, நிதிக் கமிஷனிடம் விட்டிருக்கிறது. யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே வருவாயை ஒதுக்கியும், அரசுகளுக்கு (நிதி) உதவிக் கொடைகளைப் பகிர்ந்தளித்தும் அரசியலமைப்பு நிதி யுறவினைச் சமன்செய்திருக்கிறதெனலாம்.

## யூனியனின் வருவாய் மூலங்கள்

(1) கார்ப்பொரேஷன் வரி.

(2) பணச் செலாவணியும், நாணயம் செய்முறையும், சட்டம் ஒப்பிய செலாவணியும், அந்நிய நாட்டுச் செலாவணிப் பரிவர்த்தனையும்.

(3) விவசாய வருமானமல்லாத மற்றைய வருமானத்தின் மீது வரிகள்.

(4) ஏற்றுமதித் தீர்வைகள் உட்படச் சுங்கத் தீர்வைகள்.

(5) இந்தியாவில் தயார் செய்யப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் புகையிலை, மற்றப் பண்டங்கள் இவற்றின் மீது கலால் வரிகள்.

(6) தனி மனிதர்களுடையவும் கம்பெனிகளுடையவுமான சொத்துகளின், விவசாய நிலம் நீங்கலாக, மூலதன மதிப்பின்மீது வரிகள்; கம்பெனியின் மூலதனத்தின் மீது வரிகள்.

(7) விவசாய நிலமல்லாத மற்றைய சொத்துப்பற்றிய எஸ்டேட்டு தீர்வை.

(8) வெளிநாட்டுக் கடன்கள்.

(9) தபால் அலுவலகச் சேமிப்பு பாங்க்.

(10) ரயில் பாதைகள்.

(11) யூனியனின் தேசியக் கடன்.

(12) யூனியன் சொத்துகள்.

(13) தபால்தந்தி.

(14) ரிசர்வ் பேங்க்.

(15) இந்திய அரசாங்கத்தால் அல்லது ஓர் அரசின் அரசாங்கத்தால் தொடங்கி நடத்தப்படும் லாட்டரிகள்.

(16) மாற்று உண்டியல்கள், செக்குகள், பிராமிஸரி நோட்டுகள், இவைபோன்ற மற்றவைகளும்.

(17) நீதிமன்றங்கள் வசூலிக்கும் கட்டணங்கள் நீங்கலாக, யூனியன் பட்டியலுக்குட்பட்ட பிற கட்டணங்கள்.

(18) பங்கு மார்கெட்டுகளிலும் வாய்தா மார்க்கெட்டு களிலும் நடைபெறும் காரியங்கள் மீது ஸ்டாம்பு தீர்வைகளல்லாதவையான மற்றைய வரிகள்.

(19) ரெயில், கடல், அல்லது ஆகாய வழியாக ஏற்றிக் கொண்டு போகும் பண்டங்கள் அல்லது பிரயாணி களின்மீதான ஆதி-அந்த வரி.

(20) செய்தித்தாள்களின் விற்றல் அல்லது வாங்குதல் மீதும், அவைகளில் வெளியாகும் விளம்பரங்கள் மீதும் வரிகள்.

அரசின் வருவாய் மூலங்கள்

(1) நிலவருமானம்—வரி விதித்தலும் வசூலித்தலும்.

(2) விவசாய வருமானத்தின்மீது வரிகள்.

(3) விவசாய நிலத்திற்கு வாரிசு பாத்தியம் பற்றிய தீர்வைகள்.

(4) மின்சாரத்தின் உபயோகம் அல்லது விற்பனையின்மீது வரிகள்.

(5) விவசாய நிலம்பற்றிய எஸ்டேட்டு தீர்வை.

(6) நிலங்கள், கட்டடங்கள்மீது வரிகள்.

(7) கனிப்பொருள்கள்பற்றிய உரிமைகள்மீது வரிகள்.

(8) ஸ்தலத்தில் செலவழிப்பதற்கோ, உபயோகிப்பதற்கோ, அல்லது விற்பனை செய்வதற்கோ பண்டங்களைக் கொண்டுவருகையின்மீது வரிகள்.

(9) செய்தித்தாள்கள் அல்லாதனவான மற்றைய பண்டங்களின் விற்றல் அல்லது வாங்குதல்மீது வரிகள்.

(10) செய்தித்தாள்களில் வெளியாகும் விளம்பரங்களல்லாதனவான மற்றைய விளம்பரங்கள்மீது வரிகள்.

(11) மனிதர்கள் உட்கொள்ளும் மதுபானங்கள் மீதும், அபினி, போதை உண்டாக்கும் இதர மருந்துகள், போதைப்பொருள்கள்மீதும் வரிகள்.

(12) ரஸ்தா வழியாக அல்லது உள்நாட்டு நீர்ப்பாதைகள் வழியாக ஏற்றிக்கொண்டுபோகும் பண்டங்கள்மீதும் பிரயாணிகள்மீதும் வரிகள்.

(13) ரஸ்தாவில் உபயோகப்படத்தக்க வாகனங்களின்மீது வரிகள்.

(14) பிரயாணிகள்மீதும் படகுகள்மீதும் வரிகள்.

(15) சுங்கங்கள்.

(16) தலைக்கட்டு வரிகள்.

(17) நீதிமன்றம் வசூலிக்கும் கட்டணங்கள் நீங்கலாக, அரசுப் பட்டியலிலுள்ள அவைபற்றிய கட்டணங்கள்.

(18) யூனியன் பட்டியலில் குறிப்பிட்டுள்ள ஸ்டாம்பு தீர்வை நீங்கலாக மற்றைய ஸ்டாம்பு தீர்வைகள்.

(19) தொழில்கள், அலுவல்கள், வியாபாரங்கள், வேலைகள் இவைகளின்மீது வரிகள்.

(20) போக்கியப் பொருள்களுக்கு வரிகள், வேடிக்கைகள், பந்தயம் கட்டுதல், சூதாட்டம் இவைகளின் மீது விதிக்கப்படும் வரிகள் உட்பட.

யூனியன், அரசுகளுக்கான வருவாய் மூலங்களை அரசியலமைப்பு, யூனியன் பட்டியலிலும் அரசின் பட்டியலிலும் குறிப்பிட்டுள்ள அதிகாரப் பங்கீட்டிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

## யூனியனால் விதித்து வசூலித்து அரசுகளுக்களிக்கும் வரிகள்

(1) விவசாய நிலமல்லாத மற்றைய சொத்துக்கு வாரிசுரிமைபற்றிய தீர்வைகள்.

(2) விவசாய நிலமல்லாத மற்றைய சொத்தைப்பற்றிய எஸ்டேட்டு தீர்வை.

(3) ரயில், கடல், அல்லது ஆகாயம் இவற்றின் வழியாக ஏற்றிச் செல்லப்படும் சாமான்கள் அல்லது பிரயாணிகள் மீதுள்ள எல்லை வரிகள்.

(4) ரயில் பிரயாணக் கட்டணங்கள், கேவுகள் இவைகளின் மீது வரிகள்.

(5) பங்கு மார்க்கெட்டு, வாய்தா மார்க்கெட்டு இவற்றில் நடக்கும் வியாபாரங்களின்மீது முத்திரைத் தீர்வைகளைத் தவிர மற்றைய வரிகள்.

(6) செய்தித்தாள்களை விற்றல் அல்லது வாங்குதல், அவற்றில் வெளியிடப்படும் விளம்பரங்கள் பற்றிய வரிகள்.

(7) செய்தித்தாள் நீங்கலாகப் பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதல், அரசுகளிடையே வியாபாரம் அல்லது வர்த்தகம் நடைபெறுதல் நிகழ்ந்தால், அப்படி விற்றல் அல்லது வாங்குதல்பற்றிய வரிகள்.

இத் தீர்வைகளும் வரிகளும் இந்திய அரசாங்கத்தாரால் விதித்து வசூலிக்கப்படவேண்டும். ஆனால், இத்தகைய தீர்வை அல்லது வரி எந்த அரசுகளுக்குள் விதிக்கப்படலாகுமோ அவற்றிற்கே அளிக்கப்படவேண்டும். மேலும், பாராளுமன்றம் சட்டத்தினால் வகைப்படுத்தும் பங்கீட்டுக் கோட்பாடுகளின்படி அவை அந்த அரசுகளினிடையே பிரித்துக் கொடுக்கப்படவேண்டும்.

யூனியனுல் விதிக்கப்பட்டு அரசுகளால் வசூலித்து உபயோகிக்கப் படும் தீர்வைகள் (பிரிவு 268) :

யூனியன் பட்டியலில் சொல்லப்பட்ட முத்திரைத் தீர்வை களும், மருந்துப் பொருள்கள், வண்ண நறும் பொருள்கள் இவற்றின் மீது கலால் தீர்வைகளும் இந்திய அரசாங்கத்தால் விதிக்கப்படும். ஆனுல், அத்தகைய தீர்வைகள் யாதொரு யூனியன் ஆட்சிப் பரப்பிற்குள்ளாவது விதிக்கக்கூடியனவாயிருந்தால், இந்திய அரசாங்கத்தால் அவை வசூலிக்கப்படவேண்டும். மற்றப்படி எந்த அரசுகளுக்குள் அத்தகைய தீர்வைகள் முறையே விதிக்கப் படக்கூடியனவோ அந்த அரசுகளாலும் அவை வசூலிக்கப்பட வேண்டும். இத்தகைய தீர்வையிலிருந்து கிடைக்கும் வருவாயை அந்த அரசிற்கு அளிக்கவேண்டும்.

யூனியனுல் விதித்து வசூலிக்கப்பட்டு யூனியனுக்கும் அரசுக ளுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும் வரிகள் :

விவசாய வருமானம் அல்லாத மற்றைய வருமானத்தின்மீது வரிகள் இந்திய அரசாங்கத்தால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும். யூனியன் பட்டியலில் கூறப்பட்டிருக்கும் மருந்துப் பொருள்கள், வண்ண நறும் பொருள்கள் இவற்றின்மீது விதிக்கப் படும் கலால் தீர்வைகளைத் தவிர மற்றைய யூனியன் கலால் தீர்வைகள் இந்திய அரசாங்கத்தால் விதித்து வசூலிக்கப்பட வேண்டும். ஆனுல், இவை யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே பிரித்துக் கொடுக்கப்படவேண்டும். வரியிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயில் நிர்ணயிக்கப்படும் சதவீதமானது இந்தியாவின் திரண்ட நிதியில் சேராது. ஆனுல், இச் சதவீதம், இவ் வரி எந்த ஆண்டில் எந்த அரசுகளுக்குள் விதிக்கப்படுகிறதோ அந்த அரசு களுக்கே அளிக்கப்படவேண்டும்; மேலும், இது அந்த அரசு களினிடையே வசூலிக்கப்படும் விதத்திலும், காலத்திருந்தும் பிரித்துக்கொடுக்கப்படவேண்டும்.

வருமான வரியென்பதில் கார்ப்பொரேஷன் வரி அடங்காதென அரசியல் அமைப்பு விளக்கியிருக்கிறது. வருமான வரியின் வருவாய், நிதிக்கமிஷனின் சிபார்சுகளை யொட்டி யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே பிரித்துக் கொடுக்கப்படுகிறது. 1957ஆம் ஆண்டின் நிதிக்கமிஷன் அரசுகளின் பங்கை அறுபது சதவீத மாக்கிற்று.

269, 270ஆம் பிரிவுகளில் எவ்வாறிருப்பினும், யூனியன் இப் பிரிவுகளில் குறிப்பிட்ட தீர்வைகளில் அல்லது வரிகளில் எதை

யேனும் பாராளுமன்றம் மேல்வரிமூலமாக எச் சமயத்திலும் அதிகப்படுத்தலாம். அத்தகைய வரியிலிருந்து கிடைக்கும் வருவாய் முழுதும் இந்தியாவின் திரண்ட நிதியின் பாகமாகும்.

வருமான வரியை விதித்து வசூலிப்பது யூனியனின் அதிகார வரம்பிற்குட்பட்டதாயினும், அரசுகளும் தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள், வேலைகள்மீது வரிகள் விதிக்கின்றன. இவ் வரிகள் வருமானத்தின்மீதான வரிகளென்பதால் செல்லுபடியற்றனவாகா. தல ஆட்சி நிறுவனங்களின் நலன் கருதியே இவ் வரிகள் விதிக்கப்படுகின்றன. ஆனால், தல நிறுவனங்கள் ஒருவருக்கு ஆண்டிற்கு ரூ. 250-க்குமேல் இவ் வரியை விதிக்கலாகாது.

**யூனியனிலிருந்து அரசுகளுக்கு நன்கொடைகள் (பிரிவு-275):** யூனியன் உறுப்பரசுகளில் சில முன்னேற்றமுடையனவாகவும், பல அரசுகள் வளர்ச்சியுறு நிலையிலும், பின்தங்கிய நிலையிலும் இருக்கின்றன. ஒரு கூட்டாட்சியமைப்பில் இந் நிலை இருக்கலாகாது. சமூகப் பொருளாதாரத் துறைகளில் பின்தங்கிய அரசுகள் முன்னேற்றம் காணக் கூட்டாட்சி வாய்ப்பளிக்கவேண்டும். எனவே, தன்னிறைவு பெறாத அரசுகளுக்கு யூனியன் நன்கொடைகள் வழங்கி, அவைகளின் தரத்தை மற்ற உறுப்பரசுகளின் நிலைக்கு உயர்த்தவேண்டும். இக் கருத்தின் அடிப்படையில்தான் அரசியல் அமைப்பின் 275ஆம் பிரிவு அமைந்திருக்கிறது. இதன்படி, இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து நிதியுதவி கோரும் அரசுகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட நிதியுதவியைப் பாராளுமன்றம் சட்டத்தால் வழங்க அரசியலமைப்பு அதிகாரமளித்திருக்கிறது. இந் நன்கொடைத் தொகையை நிதிக் கமிஷன் நிர்ணயம் செய்கிறது. வெவ்வேறு அரசுகளுக்கு வெவ்வேறு தொகைகள் நிர்ணயிக்கப்படலாம். எனினும், ஓர் அரசிலுள்ள அனுபந்த மலைச் சாதியார்களின் நலத்தைப் பேணி வளர்க்கும்பொருட்டு யூனியன் அரசாங்கம் நிதிக்கொடையளிக்கவேண்டும். அனுபந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவுகளை அந்த அரசு செய்வதற்கு இயலும்வண்ணம், தேவையான மூலதனத் தொகைகளை அந்த அரசின் வருவாய்களுக்கு உதவி நன்கொடைகளாக இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

சணல், சணற் பொருள்கள் இவற்றின்மீது யூனியன் ஏற்றுமதித் தீர்வை விதித்து வசூலிக்கிறது. இப் பொருள்களை உற்பத்தி செய்யும் அஸ்ஸாம், பீகார், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம்

ஆகியவை தம் அரசின் இறையில் ஒரு தொகையை இழக்கின்றன. யூனியன் அரசாங்கம், ஏற்றுமதித் தீர்வையிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயில் ஒரு பங்கு கொடுப்பதற்குப் பதிலாக, இந்த அரசுகளின் அரசின் இறைக்கு உதவி நன்கொடைகளாக வகுக்கப்படும் தொகைகள் ஒவ்வோர் ஆண்டிலும் இந்தியாவின் திரண்ட நிதியில் சாட்டப்பட வேண்டும். அதாவது, இவ்வரசுகளுக்கு யூனியன் இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து உதவி நன்கொடை வழங்க வேண்டுமென்பது பொருள்.

இந்திய அரசாங்கம், சணல் அல்லது சணற் பொருள்கள்மீது ஏற்றுமதித் தீர்வை ஒன்றைத் தொடர்ச்சியாக விதித்துவரும் காலம் அல்லது, இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்து ஆண்டு முடிவடையும் காலம் இவற்றில் எது முந்துகிறதோ அதுவரையில், இவ்வுதவி நன்கொடைத் தொகைகளை முன் குறிப்பிட்ட அரசுகளுக்கு வழங்கவேண்டும்.

அரசுகளுக்குச் சம்பந்தமுள்ள வரிவிதிப்பைப் பொறுத்த மசோதாக்களுக்கு ஜனாதிபதியின் முன்னிசைவைப் பெற்றபின்னரே பாராளுமன்றத்தில் இம் மசோதாக்களைக் கொணரலாம். ஜனாதிபதி யூனியன் உறுப்பரசுகளைக் கலந்துகொண்டபின்தான் இம் மசோதாக்கள் பாராளுமன்றத்திற்கு வரும். அரசுகளின் நலனைக் காக்கும்பொருட்டே இத்தகைய ஏற்பாட்டை அரசியலமைப்புச் செய்கிறது (பிரிவு 274).

### நிதிக் கமிஷன்

ஒரு தலைவரையும் நான்கு உறுப்பினர்களையும் கொண்ட ஒரு நிதிக் கமிஷனை ஜனாதிபதி அமைக்கிறார். இக் கமிஷனை ஜனாதிபதி இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து இரண்டாண்டிற்குள்ளும், அதற்குப் பிறகு ஒவ்வோர் ஐந்தாண்டு முடிவடைந்த பிறகும் அமைக்கலாம். ஜனாதிபதி அவசியமெனக் கருதினால் இக் கமிஷனை எக் காலத்திலும் அமைக்கலாம்.

இக் கமிஷனின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு அவசியமான தகுதிகளையும், அவர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய முறைகளையும் பாராளுமன்றம் சட்டத்தினால் நிர்ணயம் செய்யலாம். இதையொட்டிப் பாராளுமன்றம் 1951ஆம் ஆண்டில் நிதிக் கமிஷன் சட்டமொன்றை நிறைவேற்றியது. இச் சட்டத்தைப் பாராளுமன்றம் 1952-ல் திருத்தியது. இத் திருத்தச் சட்டப்படி, கமிஷனின் தலைவர் பதவிக்கான தகுதிகளும், உறுப்பினருக்கான தகுதிகளும் வரையறை செய்யப்

பட்டிருக்கின்றன. கமிஷனின் தலைவர் பொதுக் காரியங்களில் நல்ல அனுபவமுள்ளவராக இருக்கவேண்டும்.

(1) மற்றைய நான்கு உறுப்பினர்களும் உயர் நீதிமன்ற நீதிபதிகளாகவோ, அல்லது நீதிபதிகளாய் இருந்தவர்களாகவோ அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளாய் நியமனமாவதற்குரியவர் களாகவோ இருக்கவேண்டும்.

(2) அரசாங்கத்தின் நிதி பற்றியும் கணக்குகள்பற்றியும் சிறப்பறிவுடையவராகவும் இருக்கவேண்டும்.

(3) நிதி பற்றியும் ஆட்சியியல்பற்றியும் நல்ல பரந்த அனுபவ அறிவுடையவராகவும் இருக்கவேண்டும்.

(4) பொருளாதாரத்தில் சிறப்பு அறிவுடையவராகவும் இருக்கவேண்டும். இந் நான்கு தகுதிகளில் ஏதொன்றைப் பெற்றிருந்தாலும், ஒருவர் நிதிக் கமிஷனின் உறுப்பினராவதற்குத் தகுதி யுடையவராவார்.

இத் தகுதிகளையொட்டி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பினும், அவரது சொந்த நிதி நலங்கள் கமிஷனின் செயற்பாடுகளைப் பாதிக்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு ஜனாதிபதி அவரை நியமனம் செய்யவேண்டும்.

கமிஷன் தனது நடைமுறைகளை வகுத்துக்கொண்டு செயலாற்றும்பொழுது ஒரு சிவில் நீதிமன்றத்திற்குரிய எல்லா அதிகாரங்களையும் பெற்றிருக்கும்.

கமிஷன் தனது வேலைக்குப் பயனுள்ளதெனக் கருதும் தகவல்களைக் கொடுக்குமாறு எவரையும் அழைக்கலாம். இவற்றைக்கொண்டு நிதிக் கமிஷனின் சிறப்பு நிலையை நன்குணர முடியும்.

**கமிஷனின் கடமைகள் :** யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே பிரித்துக்கொடுக்கப்படவேண்டிய அல்லது பிரித்துக்கொடுக்கப் படலாகும் வரிகளின் நிகர வருவாயை அவைகளுக்குப் பங்கீடு செய்தலும், அத்தகைய வருவாயை முறையே அந்த அரசுகளுக்குப் பங்கு பிரித்துக் கொடுத்தலும் கமிஷனின் கடமையாகும்.

இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து அரசுகளின் அரசிறை களுக்கு உதவி நன்கொடைகள் அளிப்பதுபற்றிய கோட்பாடுகளைக்

கமிஷன் வரையறை செய்யும். மேலும், நல்ல நிதிநிலையைக் குறித்து ஜனாதிபதி வேறெப் பொருள்பற்றியும் கமிஷனின் கருத்தைக் கேட்கலாம்.

அரசியலமைப்பின் 270ஆம் பிரிவு விவசாய வருமானமல்லாத மற்றைய வருமானத்தின்மீதான வரிகளிலிருந்து கிடைக்கும் நிகர வருமானத்தை யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறது. இந் நிகர வருவாயை எந்தச் சதவீதத்தில் பிரித்துக்கொடுக்கவேண்டுமென்பதை நிதிக் கமிஷன் நிர்ணயம் செய்யும்.

நிதிக் கமிஷனின் சிபார்சுகளை ஆராய்ந்தபின் ஜனாதிபதி ஓர் உத்தரவால் பகிர்வு வீதத்தையும் சதவீதத்தையும் குறிப்பிட வேண்டும். வருமான வரியைப் பகிர்ந்து வழங்குவதில் பாராளு மன்றம் பங்கு பெறுவதில்லை.

சீரான நிதிநிலையின்பொருட்டு ஜனாதிபதி, வேறெப் பொருள் பற்றியும் கமிஷனின் கருத்தை அறியலாம். (1) விவசாய நிலம் நீங்கலாக மற்றைய சொத்துகளின்மீது எஸ்டேட்டு தீர்வை விதிப்பு; (2) ரயில் கட்டணங்களின்மீதான வரிகள்; (3) விற்பனை வரிகளுக்குப் பதிலாக ஆலைத்துணிகள், சர்க்கரை, புகையிலை இவற்றின்மீது விதிக்கப்படும் அதிகப்படியான கலால் தீர்வைகளைப் பிரித்துக் கொடுப்பதுபற்றிக் கமிஷன் தனது சிபார்சுகளை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கவேண்டும். இம் மூன்று இனங்கள் பற்றிய வரிவிதிப்புகளைப் பாராளுமன்றம் சட்டத்தால் செய்ய வேண்டும்.

நிதிக்கமிஷனின் சிபார்சுகளை நான்கு வகைகளில் செயல் படுத்தலாம்.

(1) வருமான வரியிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பங்கு பிரித்துக்கொள்வதுபற்றியும்; சணல், சணற் பொருள்கள்மீது விதிக்கப்படும் ஏற்றுமதித் தீர்வைக்குப் பதிலாக உதவி நன்கொடை யாக வழங்கப்படும் தொகைபற்றியும் ஜனாதிபதி ஆணையிடலாம்.

(2) 275ஆம் பிரிவையொட்டி அரசுகளுக்கு யூனியன் வழங்கும் உதவி நன்கொடைகள்பற்றிப் பாராளுமன்றம் சட்டமியற்றி நிறைவேற்றலாம். அப்படியொரு சட்டம் நிறை வேறவில்லையெனில், ஜனாதிபதியின் ஆணையால் இதை நிறை வேற்றலாம்.

(3) கலால் தீர்வைகளையும், எஸ்டேட் தீர்வையையும், ரயில் கட்டணங்கள்மீதான வரியையும், அதிகப்படியான கலால் தீர்வையையும் பகிர்ந்தளிக்கப் பாராளுமன்றச் சட்டத்தால்மட்டுமே முடியும்.

(4) கடன்களின்மீதான வட்டி வீதங்களில் மாற்றம் செய்யவும், கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கான முறைகளில் மாற்றம் காணவும் நிர்வாகத்துறை உத்தரவு பிறப்பிக்கலாம்.

## யூனியன் சொத்துக்கு உறுப்பரசுகள் வரிவிதிப்பினின்றும் விலக்கு

பாராளுமன்றம் சட்டத்தினால் வேறுவிதமாய் ஏற்பாடு செய்யும் அளவுக்கன்றி, யூனியன் சொத்து ஓர் அரசினால் விதிக்கப் படும் எல்லா வரிகளினின்றும் விலக்குப் பெற்றதாயிருக்கும். ஆனால், இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்குமுன் யூனியன் சொத்து ஓர் அரசின் வரிவிதிப்பிற்குட்பட்டிருந்தால், அவ்வரசு தொடர்ந்து அவ் வரியை விதிக்கலாம்.

பாராளுமன்றம் சட்டத்தினால் வேறுவிதமாக ஏற்பாடு செய்யும் அளவுகளில் இந்திய அரசாங்கத்தால் பயன்படுத்தப் படும் மின்சாரத்தின்மீது ஓர் அரசு எவ்வித வரியும் விதிக்க லாகாது.

பல அரசுகளில் உள்ள ஓர் ஆற்றையாவது அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கையாவது அபிவிருத்தி செய்ய அல்லது முறைப்படுத்த பாராளுமன்றம் சட்டத்தால் ஓர் அதிகார நிலையத்தை நிறுவலாம். இவ்வதிகார நிலையத்தால் சேகரித்துவைக்கப்படும், உற்பத்தி செய்யப்படும், உபயோகிக்கப்படும், வழங்கப்படும், அல்லது விற்கப்படும் தண்ணீர் அல்லது மின்சாரம்பற்றிய வரியை விதிக்க அரசுகளுக்கு அதிகாரம் கிடையாது. இருப்பினும், அரசுகள் இதுபோன்ற வரியை விதிக்கச் சட்டமியற்றலாம். ஆனால், இச் சட்டம் ஜனாதிபதியின் ஆலோசனைக்கென்று ஒதுக்கி வைத்த பிறகு அவருடைய சம்மதம் பெற்றிருந்தாலன்றிப பயனுள்ளதாகாது.

அரசியலமைப்பு ஓர் அரசின் சொத்திற்கும் வருமானத்திற்கும் யூனியன் வரிவிதிப்பினின்று விலக்களித்திருக்கிறது. இதையே அரசியலமைப்பின் 289ஆம் பிரிவின் 1ஆம் பகுதி குறிப்பிடுகிறது. ஆனால், ஓர் அரசு நடத்தும் வியாபாரம் அல்லது தொழில்பற்றிப்

பாராளுமன்றம் சட்டத்தினுல் ஏற்பாடு செய்யுமாஞல், அந்த அளவுக்கு யூனியன் ஒரு வரியை விதிக்கலாம். இருப்பினும், இவ் வியாபாரம் அல்லது தொழில் ஓர் அரசாங்கத்தின் அலுவல் களுடன் சார்ந்தவை என்று பாராளுமன்றம் சட்டத்தினுல் அறிவிக்குமாஞல், யூனியன் வரிவிதிக்க இயலாது.

**கடன் வாங்க அதிகாரம் :** யூனியனும் அரசுகளும் கடன் வாங்க அரசியலமைப்பு அதிகாரமளித்திருக்கிறது. இந்தியாவின் திரண்ட நிதியின் ஜாமீனின்மேல் யூனியன் கடன் வாங்கலாம். பாராளுமன்றம் அவ்வப்போது வரம்புகளை ஏற்படுத்தலாம். இந்திய அரசாங்கம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் கடன் வாங்கலாம். உறுப்பரசுகளின் அரசாங்கங்கள் எழுப்புகின்ற கடன்களுக்கு யூனியன் உத்தரவாதம் செய்யலாம். இவ்வாறு எழுப்பப்படும் கடன்களுக்குப் பாராளுமன்றம் வரம்புகளை ஏற்படுத்தலாம். யூனியன் அரசுகளுக்குக் கடன் கொடுக்கலாம்.

இதைப்போன்றே அரசுகளும் சட்டசபைகள் ஏற்படுத்து கின்ற வரம்பிற்குட்பட்டு இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள் கடன் வாங்கலாம். ஓர் அரசின் திரண்ட நிதியின் ஜாமீன் மீதுதான் கடன்கள் வாங்கவேண்டும். ஓர் அரசின் கடனுக்கு யூனியன் உத்தரவாதம் செய்திருப்பினும், அல்லது ஓர் அரசு யூனியனுக்குச் செலுத்தவேண்டிய கடனில் பாக்கியிருப்பினும் புதிய கடன் எழுப்ப யூனியனின் முன்சம்மதம் பெறவேண்டும். இதன் பயனுக யூனியன் அரசாங்கம் கடன்கள்பற்றிய கொள்கை களை நிர்ணயம் செய்யமுடிகிறது.

## பிற வருவாய்கள்

வரிவிதிப்பினின்று பெறப்படுவதல்லாத பிற வருவாய்களையும் யூனியனும் அரசுகளும் பெற்றிருக்கின்றன. யூனியன், ரயில் பாதைகள், தபால்தந்தி, பாங்க் தொழில், இன்சூரன்ஸ், உப்பு, அபினிபோன்ற தொழில்களிலிருந்து வருவாய்களைப் பெறுகிறது. மேலும், அரசாங்கத்தின் வாணிகத் திட்டங்கள், செலாவணி, நாணயம் செய்தல் போன்றவைகளிலிருந்தும் யூனியனுக்கு வருவாய் கிடைக்கிறது.

அரசுகளும், நீர்ப்பாசனம், காடுகள், மீன்பண்ணைகள், சிவில் வேலைகள், ஆலைகள், மின்சாரத் திட்டங்கள், போக்குவரத்து, அரசு வாணிகம், பொதுப்பயன் கருதிய தொழில்கள், யூனியன் நன்கொடைகள் முதலிய இனங்களிலிருந்து வருவாய்களைப்

பெறுகின்றன. இவ்வினங்கள் வளர்ந்து பெருகின், அரசுகளின் வருவாய் விரிவடையும்.

## யூனியன் வாரிசுரிமை

நாட்டுப் பிரிவினைக்கும், இந்திய அரசுகளின் இணைப்பிற்கும் உட்பட்டு இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து இந்தியக் குடியரசு சொத்துகள், ஆஸ்திகள், உரிமைகள், கடப்பாடுகள், ஆகியவற்றிற்கு வாரிசுரிமை பெறுதலை அரசியலமைப்பின் 294ஆம் பிரிவு உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்தியாவின் அதிகார வரம்பு நீட்சி பெறும், கடலுக்குக் கீழுள்ள எல்லா நிலங்களும், கனிப்பொருள்களும் விலை மதிப்புள்ள மற்றைய பொருள்களும் யூனியனிடம் நிலைபெறுமென்று 297ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. அதாவது, கடலாதிக்கமுடைய இந்திய அரசுகள் யூனியனில் இணைந்த பின்னர், இவைகளின் கடலாதிக்க உரிமை இந்திய யூனியனில் நிலைபெறும். இதுபற்றிய எவ்வித வழக்குகளும் எழலாகாது.

## யூனியனும் அரசுகளும் வியாபாரம் முதலியன செய்ய அதிகாரம்

யூனியன் நிர்வாக அதிகாரமும், ஒவ்வோர் அரசின் நிர்வாக அதிகாரமும் ஒரு வியாபாரம் அல்லது வேலையை நடத்துவதற்கும், சொத்தைப் பெறுவது, வைத்திருப்பது, ஒரு வகை செய்வதற்கும் எக் காரியத்திற்காகவும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கும் செல்திறனும் நீட்சியும் பெறும். அரசியலமைப்பின் இப் பிரிவு (298) ஏழாம் திருத்தச் சட்டத்தால் (1956) அமைத்துக்கொள்ளப் பட்டது.

## ஒப்பந்தங்கள்

யூனியன் அல்லது ஓர் அரசின் நிர்வாக அதிகாரத்தைச் செலுத்துகையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் ஜனாதிபதியால் அல்லது கவர்னரால் செய்யப்பட்டனவாகக் கூறப்பட வேண்டும். இவ் வொப்பந்தங்கள் இவர்கள் சொந்தப் பொறுப்பில் செய்துகொண்டதாகக் கருதலாகாது (பிரிவு 299).

## வழக்குகள்

இந்திய யூனியன் பெயரால் இந்திய அரசாங்கம் வழக்குத் தொடரலாம் அல்லது அதன்மீது வழக்குத் தொடரப்படலாம்;

மேலும், அரசின் பெயரால் அதன் அரசாங்கம் வழக்குத் தொடரலாம் அல்லது அதன்மீது வழக்குத் தொடரப்படலாம்.

இதுவரை இவ்வதிகாரத்தில் நாம் பார்த்தவைகளிலிருந்து யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையேயுள்ள உறவினை ஒருவாறு அறியலாம். அரசியலமைப்பின் இப் பாகத்தில் காணப்படும் பிரிவுகள் நீண்டனவாகவும், விலக்குகளையுடையனவாகவும், விளக்கங்களுடனும் இருக்கின்றன. ஏனெனில், கூட்டாட்சி யமைப்பில் காணப்படும் வழக்காடும் போக்கைத் தடை செய்யவும் தவிர்க்கவும் அரசியலமைப்பு முயன்றிருக்கிறது. நிதியுறவுபற்றி யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே ஏற்பட்ட வழக்குகள் மிகக் குறைவாம்.

கூட்டாட்சியில் காணப்படும் பேரிடர் இங்குத் தவிர்க்கப் பட்டிருக்கிறது. யூனியன், அரசுகள் இவைகளின் வரி விதிப்பு வரம்பை அரசியலமைப்பு, சரிநுட்பமாக வரையறை செய்து இடர் நீக்கியிருக்கிறது.

யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே நிலவும் நிதியுறவை மதிப்பிடும்பொழுது யூனியன் நிலையான பலம் பெற்றிருப்பதைக் காணலாம். நாடு முழுவதும் முன்னேறவும், பிளவு சக்திகளை ஒடுக்கவும், உறுப்பரசுகளின் பொருளாதார நிலையை உயர்த்த வும் யூனியன் நிதிப்பலமுடையதாய் இருப்பது நலமாகும். இதன் விளைவுகள் எவ்வாறாயினும், இன்றைய பொருளாதார நிலையில் அரசுகள் யூனியனை எதிர்நோக்கியே இருக்கின்றன.

இந்தியப் பொருளாதாரத் துறையில் காணும் மாறுதல்களால் வருங்காலத்தில் யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையேயுள்ள உறவு முறையில் மாற்றங்கள் ஏற்படலாம்.

# 27. இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள் வியாபாரமும் வாணிபமும்

ஒரு குடியாட்சியமைப்பில் நாட்டின் நலனைக் கருதியே வாணிப, வியாபார சுயேச்சை வழங்கப்படுகிறது. இதன் பொருட்டு நாட்டின் ஒரு பகுதியின் நலனையும் புறக்கணித்த லாகாது. மேலும், இவைபற்றிய ஒரு நெருக்கடி நாட்டின் எப் பகுதியில் ஏற்பட்டாலும், அதைத் தீர்க்க மத்திய அரசாங்கம் அதிகாரமுடையதாய் இருக்கவேண்டும். இக் கருத்துகளின் அடிப்படையில்தான் வியாபாரமும் வாணிபமும் தடையின்றி நடைபெற நமது அரசியலமைப்புச் சில கோட்பாடுகளை வலியுறுத்தி யிருக்கிறது. இவற்றை அரசியலமைப்பின் பிரிவுகள் (301 முதல் 307 முடிய) முறைப்படுத்திக் கூறுகின்றன.

இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுவதிலும் வியாபாரமும், வாணிபமும், போக்குவரத்தும் தடையற்றனவாய் இருத்தல் வேண்டும். இருப்பினும், இவை சுயேச்சையாய் நடைபெறுவதில் பொதுநலத்திற்கு அவசியமாயுள்ள தடைகளைப் பாராளுமன்றம் சட்டத்தினுல் விதிக்கலாம். வியாபாரம் வாணிபம்பற்றி ஓர் அரசிற்கு மற்றொன்றைக் காட்டிலும் அதிகச் சலுகை காட்டவும் அல்லது ஓர் அரசிற்கும் மற்றொன்றிற்கும் வேற்றுமை பாராட்ட வும் யூனியனுக்கோ அரசுகளுக்கோ சட்டமியற்ற அதிகாரமில்லை.

ஓர் அரசின் சட்டசபைச் சட்டத்தினுல் அந்த அரசில் உண்டாக்கப்படும் அதேமாதிரியான பண்டங்களுக்கு விதிக்கப்படும் வரியை, மற்ற அரசுகளிலிருந்தும் யூனியன் ஆட்சிப் பரப்புகளி லிருந்தும் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள்மீது விதிக்கலாம். ஆனுல், இப்படி இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்கும் அரசில் உண்டாக்கப்படும் பண்டங்களுக்கும் வேற்றுமை பாராட் டும் வகையில் வரி விதிக்கலாகாது. இருப்பினும், வியாபாரம்,

வாணிபம் அல்லது போக்குவரத்து, சுயேச்சையாய் நடைபெறுவதில் பொதுநலனைக் கருதிச் சில நியாயமான தடைகளை விதிக்கலாம். இத் தடை விதிப்பிற்கான சட்டத்தையோ, திருத்தத்தையோ ஓர் அரசின் சட்டசபை கொணருமுன் ஜனாதிபதியின் முன்னனுமதியைப் பெறவேண்டும். தல, மாகாணப் பற்றினால் இந்தியாவின் பொதுநலனைப் பாதிக்கும் வகையில் அரசுகள் சட்டமியற்றுவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும். மேலும், இச் சட்டம் பொதுநன்மைக்குகந்ததுதானாவென்பதையும் இது விதிக்கும் தடைகள் நியாயமானவைதாமா என்பதையும் ஜனாதிபதி அறிந்துகொள்ளமுடிகிறது.

அரசியலமைப்பின் **305**ஆம் பிரிவுப்படி, அரசியலமைப்பின் தொடக்கத்திற்குமுன் இருந்த வரிவிதிப்புச் சட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டுவரும். இச் சட்டங்கள், வியாபார வாணிப சுயேச்சைக்கு முரணாகவிருப்பினும், செயல்திறனுடையதாக இருக்கும். ஜனாதிபதி, இச் சட்டங்களில் சில மாற்றங்களைச் செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார். இப் பிரிவு, அரசியலமைப்பின் நான்காம் திருத்தத்தால் (1955) அமைத்துக்கொள்ளப்பட்டதாகும். இத் திருத்தத்திற்குமுன் நிறைவேறிய அரசுகளின் தனியுரிமைபற்றிய சட்டங்களைக் காப்பதற்காக இப் பிரிவு அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. சட்டத்தினால் விதிக்கப்படும் தடைகள் நியாயமானவைதாமாவென்பதை முடிவு செய்யத் தலைமை நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருக்கிறது.

அரசுகளுக்கிடையே நடைபெறும் வியாபாரம், வாணிபம், போக்குவரத்து இவைகளை ஒழுங்குபடுத்தப் பாராளுமன்றம் தக்கதெனக் கருதும் ஒரு நிறுவனத்தைச் சட்டத்தால் அமைக்கலாம்; இதற்கு அவசியமெனக் கருதும் அதிகாரங்களையும் கடமைகளையும் பாராளுமன்றம் வழங்கலாம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில், அவைகளுக்கிடையே நடைபெறும் வாணிபம், வியாபாரம் இவற்றை ஒழுங்குபடுத்த அனைத்தரசுக் கமிஷன் எனவொரு நிறுவனம் இருந்துவருகிறது. இதைப்போன்றதொன்றை இந்தியப் பாராளுமன்றம் நிறுவலாம் என்பதைத்தான் அரசியலமைப்பின் 307ஆம் பிரிவு குறிப்பிட்டிருக்கிறது.

**பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதலின்மேல் வரிவிதிப்புப் பற்றிய வரையறைகள் :** பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதலின்பேரில் அரசுகள் வரி விதிக்கலாம். எனினும், இவ் வரிவிதிப்புகள் அரசுகளுக்கிடையே நிகழும் வியாபாரம்,

வாணிபம் முதலியவற்றைப் பாதிக்கும் வகையில் இருக்கலாகாது. அதாவது, ஓர் அரசிற்கு வெளியே பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதலின்பேரில் ஒரு வரியை அந்த அரசின் எந்தச் சட்டமும் விதிக்கலாகாது. இதைப்போன்றே இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள்ளே இறக்குமதி செய்யும் பண்டங்களின் மேலும் இந்தியாவின் ஆட்சிப்பரப்பிற்கு வெளியே ஏற்றுமதி செய்யும் பண்டங்களின் மேலும் ஒரு வரியை அந்த அரசின் எந்தச் சட்டமும் விதிக்கலாகாது.

பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதல் அவ்வப்பொழுது நிகழ்கின்றதென்பதைப் பாராளுமன்றம் சட்டத்தினால் நிர்ணயிக்கலாம். அரசுகளிடையே வியாபாரம் அல்லது வாணிபத்தில் தனிச்சிறப்பு வாய்ந்தவையெனப் பாராளுமன்றம் சட்டத்தினால் அறிவித்த பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதலின்பேரில் எந்த அரசும் வரிவிதிக்கலாகாது. இவ் வரிவிதிப்பிற்கான ஓர் அரசின் சட்டம் ஜனாதிபதியின் இசைவைப் பெறவேண்டும் [பிரிவு 286 (3)].

பண்டங்களை விற்றல் வாங்குதலின்பேரில் ஏற்பட்ட அரசுகளின் விற்பனைவரிச் சட்டங்களினால் பல இன்னல்கள் விளைந்தன. இவ்வின்னல்களைத் தவிர்க்க அரசியலமைப்பின் ஆறும் திருத்தச் சட்டம் 1956-ல் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, அரசுகளுக்கிடையே நிகழும் வியாபாரம் அல்லது வாணிபத்தில் பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதலின்பேரில் வரிவிதிப்பு அதிகாரத்தை அரசியலமைப்பு திட்டவட்டமாகப் பாராளுமன்றத்திற்கு அளித்திருக்கிறது. மேலும், அரசுகளுக்கிடையே நிகழும் வியாபாரம் அல்லது வாணிபத்தில் சில பண்டங்கள் தனிச் சிறப்புடையனவென்றால், அப் பண்டங்களின் விற்றல் அல்லது வாங்குதலின்பேரில் அந்த அரசுகள் வரிவிதிப்பதைப் பாராளுமன்றம் கட்டுப்படுத்தலாம்.

நாடு முழுவதிலும் வியாபாரமும் வாணிபமும் செழித்தோங்கவும், அரசுகளுக்கிடையே தடையற்ற வாணிபம் வளரவும் அரசியலமைப்பு வழி செய்திருக்கிறது.

# 28. யூனியன், அரசுகள் இவற்றின் கீழ்ச் சேவை வர்க்கங்கள்

## சேவை வர்க்கங்கள்

ஒரு நாட்டின் நல்லாட்சிக்கு, அந் நாட்டின் திறமை மிக்க சேவை வர்க்கங்களின் உறுப்பினர்களின் மதிநுட்பமும், தேர்ச்சியும் காரணமாகும். அரசாட்சி நடைபெறவும், அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு வலுவூட்டிச் செயல்படுத்தவும் ஒரு நாட்டின் சிவில் சேவை வர்க்கம் பெரிதும் உதவுகிறது. அரசாங்கத்தின் ஆட்சியில் சிவில் சேவை வர்க்கம் ஒரு தொடர்பேற்படுத்திக் கொடுக்கிறது. இத் தொடர்பின்றேல் ஆட்சிமுறையில் குழப்பம் உண்டாகலாம். எனவேதான், சிவில் சேவை வர்க்கத்தினர்கள் மனநிறைவுடன் பணியாற்ற அரசியலமைப்பு இவர்களுக்குச் சில உரிமைகளையும் சலுகைகளையும் அளித்திருக்கிறது.

மக்களாட்சி அரசாங்கத்தில் அரசியல் பிரிவு, சிவில் பிரிவு என இருவகைச் சேவையினர் இருப்பர். மக்கள் பிரதிநிதிகளால் மக்கள் விருப்பிற்கிசைந்து பதவியேற்றும், பதவி துறந்தும் வாழ்கின்றோரையே நாம் அரசியல் பிரிவினர் என்கின்றோம். ஆனால், சிவில் பிரிவினர்கள் நிரந்தரமாய்ப் பதவியில் இருப்பவர்கள். இவர்கள் அவ்வப்போது பதவிக்கு வருகின்ற அரசியல் தலைவர்களிடம் சேவை செய்வதுடன், இவர்கள் வகுத்துக்கொடுக்கும் கொள்கைகளை நிறைவேற்றவேண்டியவர்களுமாவர். இவர்கள் கட்சி மனப்பான்மையின்றி அரசியலிலிருந்து விலகிச் செயல்பட வேண்டியவர்கள். மேலும், இவர்கள் அப்பொழுது இயங்கிவரும் அரசாங்கத்திடம் பற்றுறுதி கொண்டிருக்கவேண்டும்.

பாராளுமன்றமும் அரசின் சட்டசபைகளும் சட்டத்தினால் யூனியன் அல்லது அரசின் பொதுச்சேவை வர்க்கங்களுக்கும்

பதவிகளுக்கும் நியமிக்கப்படவேண்டியவர்களைத் தெரிந்தெடுக்கலாம்; இவர்களின் சேவை முறைகளை ஒழுங்குபடுத்தலாம். பாதுகாப்புச் சேவை வர்க்கத்தின் அல்லது யூனியன் சேவை வர்க்கத்தின் அல்லது ஓர் அனைத்திந்தியச் சேவை வர்க்கத்தின் உறுப்பினராய் இருக்கும் ஒவ்வொருவரும் ஜனாதிபதிக்கு விருப்பம் உள்ள காலம்வரை பணியாற்றலாம். இதுபோன்றே அரசின் சிவில் சர்வீஸ் உறுப்பினர்களும் கவர்னருக்கு விருப்பமுள்ள காலம்வரைதான் பதவி வகிக்கலாம். ஜனாதிபதியும் கவர்னரும் பெயரளவிற்கே அதிகாரம் பெற்றிருக்க, யூனியன் கேபினெட்டும் அரசின் கேபினெட்டும் உண்மையதிகாரத்துடன் எல்லா சிவில் சேவை வர்க்கங்களையும் கட்டுப்படுத்துகின்றன. ஒரு பொறுப்புடைய அரசாங்க அமைப்பில் நிர்வாகத்துறை சட்டசபைக்குப் பொறுப்பேற்கின்ற தன்மையால் நிர்வாகம் சிவில் சேவை வர்க்கங்களைக் கட்டுப்படுத்துதல் இயல்பாகியிருக்கிறது. ஜனாதிபதிக்கோ கவர்னருக்கோ 'விருப்பமுள்ளவரைதான் பதவி வகிக்கலாம்' என்பதிலிருந்து இவர்கள் யாரையும் தம் விருப்பப்படி பதவி நீக்கம் செய்யலாம் எனக் கருதலாகாது. சிவில் சேவை வர்க்கத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்க அரசியலமைப்பு வகை செய்திருக்கிறது.

யூனியன் சேவை வர்க்கத்தின் அல்லது அனைத்திந்திய சேவை வர்க்கத்தின் அல்லது அரசின் சேவை வர்க்கத்தின்கீழ்ப் பணியாற்றி வரும் எவரும், எந்த அதிகாரியால் அவர் நியமிக்கப்பட்டாரோ அவருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரி எவராலும் வேலையிலிருந்து நீக்கப்படக்கூடாது (பிரிவு 311).

மேற்சொன்ன எவரும், அவர்மீது எடுக்க உத்தேசித்த நடவடிக்கையை எடுக்கலாகாது என்பதற்குக் காரணம் காட்ட அவருக்கு நியாயமான வாய்ப்புக் கொடுக்கப்படும்வரை, வேலையிலிருந்து நீக்கப்படவோ அல்லது நிலையில் குறைக்கப்படவோ கூடாது.

எனினும், எந் நடவடிக்கையால் ஒருவருக்குக் குற்றச்சாட்டின்பேரில் குற்றவாளித் தீர்ப்பு ஏற்பட்டதோ அந் நடவடிக்கையின் காரணமாக அவரை வேலையிலிருந்து நீக்கலாம்.

ஒருவரை வேலையிலிருந்து நீக்குவதற்குக் காரணம் காட்டுவதற்கு வாய்ப்புக் கொடுத்தல் அனுபவ சாத்தியமில்லையென்று தெளிவாய்த் தோன்றினாலும், அரசின் பாதுகாப்பு நிலையை முன்னிட்டு அத்தகைய வாய்ப்பை ஒருவருக்குக் கொடுத்தல்

உசிதமன்று என்று ஜனாதிபதிக்கோ கவர்னருக்கோ தோன்றினாலும், காரணம் கேட்காமலே அவரைப் பதவியினின்றும் நீக்கலாம்.

**அனைத்திந்திய சேவை வர்க்கம்:** அனைத்திந்தியச் சேவை வர்க்கத்தை உண்டாக்க ராஜ்ய சபை, அதன் உறுப்பினர்களில் வந்திருந்து வாக்களித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றவேண்டும். அத் தீர்மானத்தில் தேச சமுதாய நலங்கருதிச் சேவை வர்க்கத்தை உண்டாக்கவேண்டுமென்று அறிவித்திருந்தால், பாராளுமன்றம் சட்டத்தால் அனைத்திந்திய சேவை வர்க்கத்தைப் படைக்கலாம். இத்தகைய சேவை வர்க்கத்திற்கு நியமிக்கப்படவேண்டியவர்களைத் தெரிந்தெடுத்தலையும் சேவை முறைகளையும் பாராளுமன்றம் சட்டத்தால் ஒழுங்குபடுத்தலாம்.

இந்திய ஆட்சிப் பணியும் (சர்வீஸ்) இந்தியப் போலீஸ் பணியும் அரசியலமைப்பின் பிரிவால் [312 (1)] உண்டாக்கப்பட்டனவாகக் கருதவேண்டும். இவ்வித சர்வீஸ்கள் அரசுகளின் தன்னாட்சியுரிமையைப் பாதிப்பதால், அரசுகளின் பிரதிநிதிகளடங்கிய ராஜ்ய சபையில் இச் சர்வீஸ்கள்பற்றிய தீர்மானம் முதலில் வரவேண்டும். அதன்பின்னரே பாராளுமன்றம் சட்டமியற்றத் தகுதி பெறுகிறது.

இவ்வனைத்திந்தியப் பணிகள் வாயிலாக இந்திய ஒருமைப்பாடு வலியுறுத்தப்பெறுகிறது. இந்தியா முழுவதும் குறிப்பிட்ட சில முக்கிய ஆட்சித் துறைகளில் பொதுவான தரத்தை ஏற்படுத்த இப் பணிகள் உதவுகின்றன. தேசிய நலத்திற்காகத் தேசிய நோக்குடன் இப் பணியாளர்கள் செயல்படமுடியும். இந்திய விடுதலைக்கு முன்பிருந்த இந்திய சிவில் சர்வீஸ் அடிப்படையில் தான் இவைகள் அமைக்கப்பட்டன. இந்திய சிவில் சர்வீசைச் சேர்ந்தவர்களுடன் இப்பொழுது இந்திய ஆட்சி சர்வீசும் இந்திய போலீஸ் சர்வீசும் அனைத்திந்திய சர்வீசுகளாக இருக்கின்றன. யூனியன், 'மத்திய சர்வீசுகள்' என்று பலவற்றை உண்டாக்கி இருக்கிறது.

இந்திய சிவில் சர்வீசைச் சேர்ந்தவர்கள், இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்குமுன் பெற்றிருந்த உரிமைகளையும் சலுகைகளையும் பெற 314ஆம் பிரிவு வழி செய்திருக்கிறது.

# 29. பப்ளிக் சர்வீஸ் கமிஷன்கள்- பொதுப்பணியாளர் பொறுக்குக் குழு

யூனியனுக்குப் பொதுப்பணியாளரைப் பொறுக்க ஒரு குழுவும், ஒவ்வோர் அரசிற்கும் ஒரு குழுவும் இருக்கவேண்டுமென்று அரசியலமைப்பின் 315ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் தலைவரையும் உறுப்பினர்களையும் ஜனாதிபதி நியமனம் செய்கிறார். இவர்கள் ஆறு ஆண்டுகள் பதவியில் இருக்கலாம் அல்லது இவர்கள் அறுபத்தைந்து வயது நிரம்பும்வரை பதவியில் இருக்கலாம். இவற்றில் எது முந்துகிறதோ அதுவரை பதவியிலிருக்கலாம். கமிஷனின் உறுப்பினர்களில் பாதிப் பேராவது குறைந்தது பத்தாண்டுகளாவது அரசாங்கச் சேவையில் இருந்தவர்களாக இருக்கவேண்டும். அதாவது, இக் கமிஷன் சிவில் சர்வீஸ் அனுபவமுள்ள ஒரு நிபுணர் குழுவாக இருக்கவேண்டுமென்பது அரசியலமைப்பின் நோக்கமாகும். இக் கமிஷனின் உறுப்பினர்த் தொகையை ஜனாதிபதி நிர்ணயம் செய்வார்.

கமிஷனின் உறுப்பினரொருவர் இரண்டாம் முறை உறுப்பினராக அமர்த்தப்படமாட்டார். உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிந்தபின் இவர்கள் வேறெந்தப் பதவியையும் வகிக்கலாகாது. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் தலைவராய் இருந்த ஒருவர் இந்திய அரசாங்கத்திலோ அல்லது ஓர் அரசின் அரசாங்கத்திலோ பதவி ஏற்கலாகாது. ஆனால், கமிஷனின் உறுப்பினரொருவர் யூனியன் கமிஷன் அல்லது அரசின் கமிஷனின் தலைவராக நியமனம் பெறலாம். இவ்விரண்டு பதவிகளன்றி ஓர் உறுப்பினர் வேறெந்த அரசாங்கப் பதவியும் வகிக்கலாகாது.

கமிஷன் உறுப்பினர்களின் சம்பளத்தையும் சேவை முறைகளையும் ஜனாதிபதி நிர்ணயம் செய்வார். கமிஷன் ஒன்றின் உறுப்பினருடைய சேவை முறைகளை அவருடைய நியமனத்

திற்குப் பிறகு பாதகமாக மாற்றலாகாது. தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் மாதமொன்றிற்கு முறையே ரூ. 4,000 3,500 சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. கமிஷன் உறுப்பினர்களின் சம்பளம், படிகள், இன்னும் மற்றெல்லாச் செலவுகளும் இந்தியாவின் திரண்ட நிதியில் சாட்டப்படுகின்றன.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினரொருவரை அவருடைய நடத்தைத் தவறு காரணமாக ஜனாதிபதி பதவிநீக்கம் செய்யலாம். இதற்கான நடைமுறைபற்றிய விதியை அரசியலமைப்பு குறிப்பிட்டிருக்கிறது. அதாவது, தலைமை நீதிமன்றம், ஜனாதிபதி கேட்டுக்கொண்டதன்பேரில், ஒரு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவரோ, மற்றைய உறுப்பினரோ அவருடைய நடத்தைத் தவறுகாரணமாக நீக்கப்படவேண்டுமென்று அறிக்கை செய்த பிறகே, அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும். தலைமை நீதிமன்றம் விசாரணை முடியும்வரை ஜனாதிபதி ஒருவரைத் தற்காலிகமாகப் பதவியிலிருந்து நீக்கிவைக்கலாம்.

பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஒன்றின் தலைவராவது, மற்றோர் அங்கத்தினராவது

(1) திவால் ஆனார் என்று தீர்ப்பளிக்கப்பட்டால், அல்லது

(2) அவருடைய பதவிக்காலத்தில் அப் பதவியின் கடமைகளுக்குப் புறம்பாக ஊதியமுள்ள எவ் வேலையிலாவது ஈடுபட்டால், அல்லது

(3) மனத்தின் அல்லது உடலின் தளர்ச்சி காரணமாகத் தொடர்ந்து பதவியிலிருந்துவரத் தகுதியற்றவர் என்று ஜனாதிபதி கருதினால் தமது உத்தரவினால் அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவராவது மற்றைய உறுப்பினராவது இந்திய அரசாங்கத்தாரால் அல்லது ஓர் அரசின் சர்க்காரால் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தில் தொடர்போ, பற்றோ உள்ளவராய் இருந்தால் அவர் நடத்தை தவறியவராகக் கருதப்படுவார் [பிரிவு, 317 (4)].

**அரசின் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்:** யூனியன் உறுப்பரசுகள் ஒவ்வொன்றிலும் ஒரு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இருக்க வேண்டும். ஓர் அரசிற்கு மேற்பட்ட அரசுகளுக்கென ஒரு கூட்டுப் பப்ளிக் சர்வீஸ் கமிஷனை ஜனாதிபதி நியமிக்கலாம். இக்

கமிஷனை அமைக்கப் பாராளுமன்றம் சட்டமியற்றவேண்டும். ஜனாதிபதியின் ஒப்புதலின்பேரில் ஓர் அரசின் தேவைகளில் எல்லா வற்றையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றும் படி அந்த அரசின் கவர்னர் கேட்டுக்கொண்டால் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அவ்வாறே நிறைவேற்ற உடன்படலாம்.

அரசின் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினர்கள் கவர்னரால் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் பதவியேற்கும் நாளிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பர். ஆனால், ஓர் உறுப்பினர் பதவியிலிருக்கும்போது அவருக்கு அறுபது வயது நிரம்பிவிட்டால் அவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும். அரசின் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினரெவரும் யூனியனின் கீழோ அரசின் கீழோ எவ்விதப் பதவியும் வகிக்கலாகாது. எனினும் ஒரு கமிஷன் தலைவர் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் தலைவராகவோ உறுப்பினராகவோ பதவி பெறலாம். அன்றியும் ஒருவர் தாம் உறுப்பினராயிருக்கும் ஒரு கமிஷன் தலைவராகவும் பதவி பெறலாம்.

இக் கமிஷன் உறுப்பினர்களின் சேவை முறைகள், யூனியன் கமிஷனுக்குள்ளன போன்றவையேயாம். ஆனால் இவர்களின் சம்பளம் அரசிற்கரசு மாறுபட்டுக் காணப்படுகிறது. இவர்களின் சேவை முறைகளை இவர்களின் நியமனத்திற்குப் பிறகு இவர்களுக்குப் பாதகமாக மாற்றலாகாது. அரசுகளின் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினர் எண்ணிக்கை அரசிற்கரசு மாறியே காணப்படுகிறது. இவர்களைப் பதவி நீக்கம் செய்யும் நடைமுறை விதிகள் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குள்ளன போன்றவையே.

**பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் வேலைகள் :** யூனியன் சேவை வர்க்கங்களுக்கும் அரசின் சேவை வர்க்கங்களுக்கும் நியமனம் செய்வதற்காகத் தேர்வுகள் நடத்துதல் முறையே யூனியன், அரசு இவற்றின் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் கடமையாகும்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகள் வேண்டிக் கொண்டால், சிறப்புத் தகுதிகள் வாய்ந்த வேட்பாளர்கள் தேவையாயிருக்கும் சேவை வர்க்கங்களுக்குக் கூட்டுத் தெரிந்தெடுப்புத் திட்டங்களை அமைத்துச் செயல்படுத்துவதில் அந்த அரசுகளுக்கு உதவிபுரிதலும் யூனியன் கமிஷனின் கடமையாகும் [பிரிவு 320 (1) (2)].

பப்ளிக் சர்வீஸ் கமிஷன் யூனியன் அரசாங்கத்திற்கோ அல்லது அரசின் அரசாங்கத்திற்கோ சேவை வர்க்கங்கள்பற்றி அறிவுரை வழங்கலாம்.

1. சிவில் சேவை வர்க்கங்களுக்கும் பதவிகளுக்கும் தெரிந்தெடுக்கும் முறைகளைப்பற்றியும்,

2. சிவில் சேவை வர்க்கங்களுக்கும் பதவிகளுக்கும் நியமனம் செய்யும்போதும், ஒரு சேவை வர்க்கத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றும்போதும் உயர்த்தும்போதும் அனுசரிக்கப்படவேண்டிய கோட்பாடுகள் பற்றியும் தகுதிகள்பற்றியும்,

3. அரசாங்க உத்தியோகஸ்தர்களின் ஒழுங்குமுறை பற்றியும்,

4. யூனியன் அல்லது அரசு உத்தியோகஸ்தரின் பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் எதிர்வாதம் செய்தலில் ஏற்படும் செலவுகள்பற்றியும்,

5. யூனியன் அல்லது அரசின்கீழ் வேலை செய்துகொண்டிருக்கையில் நேர்ந்த உடற்சேதங்கள்பற்றிய ஓய்வூதியங்கள் கொடுப்பதுபற்றியும்,

6. ஜனாதிபதியாலோ, கவர்னராலோ குறிப்பிடப்பட்ட மற்றெதுபற்றியும்,

ஆலோசனை கூறுதல் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் கடமையாகும். எனினும், ஜனாதிபதியோ கவர்னரோ குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் எவைகளிலாவது பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடன் கலந்தாலோசித்தல் அவசியமில்லையென்று வரையறுக்கும் விதிகளைச் செய்யலாம்.

ஓர் அரசின் சேவை வர்க்கங்களில் போதிய அளவிற்கு இடம் பெறாத பிற்பட்ட வகுப்புக் குடிகளுக்குப் பதவிகளை ஒதுக்குவதற்கான ஏற்பாட்டை இன்ன விதமாய்ச் செய்யலாம் என்பதைப் பற்றிக் கமிஷனைக் கலந்தாலோசித்தல் அவசியமில்லை.

ஜனாதிபதியும் கவர்னரும் சர்வீஸ் கமிஷனைக் கலந்தாலோசித்தல் அவசியமில்லையெனக் கருதி வரையறுக்கும் விதிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்பப் பாராளுமன்றத்திற்கு முன்னே, சட்ட

சபைக்கு முன்னே பதினான்கு நாள்களுக்குள் வைக்கவேண்டும். இவைகள் செய்யும் மாறுதல்களுடனே, இன்றியோ இவ் விதிகள் செயற்படும்.

பாராளுமன்றமோ சட்டசபையோ சட்டமியற்றி சர்வீஸ் கமிஷனின் வேலைகளை விரிவுபடுத்தலாம். இதன்படி ஸ்தல, இணைக்கப்பட்ட நிலையங்கள், பொது நிறுவனங்கள் இவற்றிற்கான சேவை வர்க்கங்களைக் கமிஷன் தெரிந்தெடுக்கலாம்.

ஓர் அரசின் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு ஆகும் செலவு களனைத்தும் அரசின் திரண்ட நிதியில் சாட்டப்படவேண்டும்.

**கமிஷன்களின் அறிக்கை:** யூனியன் கமிஷன் செய்த வேலையைக் குறித்து ஓர் அறிக்கையை ஆண்டுதோறும் ஜனாதிபதி யிடம் இக் கமிஷன் சமர்ப்பிக்கவேண்டும். இவ்வறிக்கையுடன் கமிஷனின் சிபார்சுகளையொட்டி அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் விளக்கத்துடன், ஜனாதிபதி ஓர் அறிக்கையைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஓர் அரசின் கமிஷன் அறிக்கையை இதைப்போன்றே கவர்னர் சட்டசபைமுன் வைக்கவேண்டும். அரசாங்கத்தின் இவ் விளக்க அறிக்கைகள், கமிஷன் சிபார்சுகளை ஏற்கவில்லை யெனில், இதற்கான காரணங்களைச் சபைக்கு விளக்கவேண்டும்.

அரசியலமைப்பில், இக் கமிஷன்கள் ஆலோசனைக் குழுக்களாக மட்டுமே செயல்படவிருப்பதை இங்கு நோக்குதல் வேண்டும். இக் கமிஷன்களின் சிபார்சுகள் செயல்திறனுடையன அல்ல. ஏனெனில், அரசாங்கத்திற்கும் கமிஷனுக்கும் சிபார்சுகளை யொட்டிக் கருத்து வேற்றுமையால் பூசல்கள்; உண்டாகலாம் இவைகளால் நாட்டின் நலன்கள் பாதிக்கப்படலாம். இதனால் அரசாங்கம் கமிஷன் சிபார்சுகளை ஏற்க மறுக்கலாம் என்று கருதலாகாது. கமிஷன் சிபார்சுகளையொட்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்றம் அரசாங்கத்தை வற்புறுத்தலாம்.

இக் கமிஷன்கள், நம் நாட்டில் அரசியலமைப்புச் சார்ந்த நிறுவனங்களாய் இயங்கிவருகின்றன. நிர்வாகம், சட்டசபை, நீதிமன்றம் முதலியன அமைந்திருக்கும் முறையில்தான் இவை களுமிருக்கின்றன. இவைகள் அரசியலமைப்பால் ஏற்பட்டவை. பாராளுமன்றச் சட்டத்தால் இவைகள் உருவாகிச் செயல் படுவன அல்ல.

அரசியலமைப்பாளர்கள், சேவை வர்க்கங்கள் நடுநிலை நின்று மனத்தூய்மையுடனும் சுயேச்சையுடனும் பணியாற்றுபவரைப் பாதுகாக்க இக் கமிஷன்களை நிறுவினார்கள்.

இக் கமிஷன்களின் ஆண்டறிக்கையைப் பார்த்தால், இவைகள் நிறைவேற்றியுள்ள மிகக் கடினமான பலதரப்பட்ட கடமைகள் தெளிவாகும். அமைச்சவைகளும் அரசாங்கத் துறைகளும் ஒரு சில நீங்கலாக மற்றைய சிபார்சுகளை ஏற்றுச் செயல்படுத்தியிருத்தலைக் கமிஷனின் அறிக்கைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

# 30. தேர்தல்கள்

தேர்தல்கள்பற்றிய நடைமுறை விதிகளை அரசியலமைப்பு ஒரு தனி அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறது. இயல்பாக, இவை பற்றிய நடைமுறை விதிகளைப் பாராளுமன்றம் இயற்றிச் செயல் படுத்துவதே வழக்கமாகும். ஆனால், தேர்தல்கள்பற்றிய நடை முறைகளை அரசியலமைப்புத் தொகுத்துக் கூறி, இவைகளை இந்திய அரசியல் வாழ்க்கையில் சிறப்புக் கூறுகளாக்கியிருக்கிறது.

ஜனாதிபதி, தேர்தல் கமிஷனரென்று ஒருவரை நியமிக்க வேண்டும். தேர்தல்கள் ஐந்தாண்டு நிரம்பிய பின்னரே நடை பெறுமென்றாலும், இடைத்தேர்தல்கள் எந்த நேரத்திலும் நடை பெறலாம். மேலும், மக்கள்சபை அல்லது அரசின் கீழ்ச்சபைகள் பதவிக் காலம் முடியு முன்னரே கலைக்கப்படலாம். காலதாமத மின்றித் தேர்தல்கள் நடைபெற வாக்காளர் பட்டியல் ஆண்டு தோறும் புதுப்பிக்கப்படவேண்டும். எனவே, தலைமைத் தேர்தல் கமிஷனர் பதவி நிரந்தரமானதாக இருக்கவேண்டும்.

தேர்தல் கமிஷனுக்குக் கீழ்க்காணும் வேலைகளை அரசிய லமைப்பு ஒப்படைத்திருக்கிறது :

*(1)* இந்தியாவின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல்;

*(2)* உபஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல்;

*(3)* யூனியன் பாராளுமன்ற இருசபைகளையும் அமைத்தல்;

*(4)* பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள்;

*(5)* அரசு சட்டசபைகளை அமைத்தல்;

*(6)* அரசு சட்டசபைகளில் உறுப்பினர் தகுதிகள்;

*(7)* பாராளுமன்றம், அரசு சட்டசபைகளின் பதவிக் காலம்;

(8) பாராளுமன்றம், அரசு சட்டசபைகளுக்கான தேர்தல்;

(9) மக்கள் சபையிலும், அரசின் கீழ்ச் சபையிலும் அனுபந்த சாதியினருக்கும், மலைச்சாதியினருக்கும் இடங்கள் ஒதுக்குதல்;

(10) தேர்தலுக்காக மக்கள்தொகையை நிர்ணயம் செய்தல்.

தேர்தல்பற்றிய எல்லாக் காரியங்களுக்காகவும், அரசின் சட்டசபைக்கான தேர்தலை நடத்தவும் பாராளுமன்றம் சட்டமியற்ற அதிகாரம் பெற்றிருக்கிறது (பிரிவு 327). அரசியலமைப்பின் 328ஆம் பிரிவால் அரசுகளும் குறிப்பிட்ட சில சட்டங்களை இயற்றலாம். ஆனால், இச் சட்டங்கள் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு முரணாக அமைதலாகா.

அரசியலமைப்பின் இப் பிரிவையொட்டிப் பாராளுமன்றம் இருசட்டங்களை இயற்றியிருக்கிறது. இச் சட்டங்களின் அடிப்படையில் நான்கு பொதுத்தேர்தல்கள் நடந்திருக்கின்றன. வாக்காளர்களின் தகுதிகளையும், வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கான முறைகளையும் நிர்ணயம் செய்ய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1950) பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது, இச் சட்டம் தொகுதிகளை வரையறுப்பதற்கான நடைமுறை விதிகளை வகுத்தது; பாராளுமன்றத்தில் அரசுகளுக்கான இடங்களை ஒதுக்கியது; ஒவ்வோர் அரசின் கீழ்ச்சபைக்கான இடங்களையும் நிர்ணயித்தது.

1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், தேர்தலை நடத்துவதற்கான முறைகளை வகுத்தது. இச் சட்டம் தேர்தலை நடத்துவதற்கான நிறுவனம்பற்றியும், வாக்களிப்பு, தேர்தல் தகராறு, இடைத்தேர்தல்கள் முதலியன பற்றியும் வழிமுறைகளைக் கூறுகிறது. இவ்விரு சட்டங்களையும் பாராளுமன்றம் திருத்தியிருக்கிறது. வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் எளிமை காணும்பொருட்டே இத் திருத்தம் செய்யப்பட்டது.

**பொதுவான ஒரே வாக்காளர் பட்டியல்:** இன அடிப்படையில் உள்ள வாக்காளர் பட்டியலை அரசியலமைப்பு நீக்கிற்று. அதற்குப் பதிலாகச் சமயம், இனம், சாதி, அல்லது பால் வேற்றுமைகளுக்கு உட்படாத ஒரே பட்டியலை அமைத்தது.

பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் இன அடிப்படையில் வாக்காளர் தொகுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இதன்படி

ஒரு தொகுதியில் எத்தனை இனங்கள் இருந்தனவோ அத்தனை வாக்காளர் பட்டியல்கள் இருந்தன. எனவே, முஸ்லீம்களுக்கு என ஒதுக்கப்பட்டிருந்த தொகுதிகளில் முஸ்லீம் வாக்காளர்களே வாக்களித்தனர். இம் முறையின் இயல்பு திரிந்த நிலையைக் கண்ட அரசியலமைப்பாளர்கள், தனிப்பட்ட வாக்காளர் முறையை 325ஆம் பிரிவால் நீக்கினர். இப்பொழுது ஒரு தேர்தல் தொகுதியில் வசிக்கும் வாக்காளர்கள் சமயம், இனம், சாதி, அல்லது பால் வேற்றுமை கருதாது ஒரே பட்டியலாய் அமைந்து தேர்தலில் வாக்களிக்கின்றனர். இதன் பயனாக இனவேற்றுமை யற்ற ஒரு புதிய அரசியற் சமுதாயம் ஏற்பட அரசியலமைப்பு வழி செய்திருக்கிறது.

**வயது வந்தோருக்கு வாக்குரிமை:** இருபத்தொரு வயதிற்குக் குறையாத ஒவ்வோர் ஆணும் பெண்ணும் மக்கள் சபைக்கும் சட்ட சபைக்கும் நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க உரிமை யுடையவராவர். குடியிருப்பின்மை, சித்த விகாரம், குற்றமான அல்லது இலஞ்ச சம்பந்தமான அல்லது சட்ட விரோதமான செய்கை காரணத்தால் தகுதியற்றவராக ஆக்கப்பட்டவர்கள் தேர்தலில் வாக்காளராகப் பதிவுபெறத் தகுதியற்றவராவர். எனவேதான், வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கும் இப் பிரிவை (326) மக்களாட்சியின் உயிர்நிலையெனச் சிலர் போற்றுகின்றனர்.

அரசியலமைப்பின் இப்பிரிவால் ஏற்பட்ட மாறுதல்கள் மதிப் பிடற்கரியன. 1919ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டப்படி நூற்றுக்கு மூன்று பேர்களே வாக்குரிமை பெற்றிருந்தனர். மிகத் தாராளமாய் வாக்குரிமை வழங்கிவிட்டதாகக் கருதப்பட்ட 1935ஆம் ஆண்டுச் சட்டம் நூற்றுக்குப் பத்துப் பேருக்கு வாக்குரிமை அளித்தது. ஒருவருக்கு ஒரு வாக்கு, அதற்கும் ஒரு மதிப்பு என்னும் அரசியலுரிமையின் தனிச் சிறப்புடன் மக்களாட்சி முறைக்கு அரசியலமைப்பு வாழ்வளித்திருக்கிறது. இன்று, இந்தி யக் குடிமக்கள் சமய, இன அடிப்படையின்றி இந்தியன் என்ற முறையில் வாக்களிக்க முடிகிறது.

வயது வந்தோருக்கு வாக்குரிமையளிக்கப்பட்டதைச் சில அரசியல் வல்லுநர்கள் ஐயத்தொடும் அச்சத்தொடும் நோக்கினர். அரசியற் பக்குவம் பெறாத இந்திய மக்களுக்கு வயது (21 வயது) அடிப்படையில் அரசியலமைப்பு வாக்குரிமை அளித்தது அறிவுடைமையாகாதெனச் சிலர் கருதினர். எனினும், கடந்த நான்கு பொதுத் தேர்தல்களையும் நடுநிலை நின்று ஆய்வோருக்கு,

அரசியலமைப்பாளர்கள் இந்திய மக்களிடம் கொண்டிருந்த நம்பிக்கை வீண்போகவில்லையென்பது தெளிவாகும்.

**தேர்தலை நடத்தற்குரிய சாதனம்:** இந்த அரசியலமைப்பின் கீழ் நடத்தப்படும் தேர்தல்கள்பற்றிய மேற்பார்வை, மேல்-அதிகாரம், மேல்-ஆதிக்கம் இவைகளனைத்தும் ஒரு தேர்தல் கமிஷனிடம் நிலைபெற்றிருக்கும். இக் கமிஷன் தேர்தல்பற்றி எழும் சந்தேகங்களையும் கருத்து வேற்றுமைகளையும் தீர்ப்பதற்கான தேர்தல் நியாய சபைகளையும் நியமிக்க அதிகாரமுடையதாகும். உண்மையான மக்களாட்சி நடைபெறுதற்குச் சுயேச்சையாகவும் நேர்மையாகவும் தேர்தல்கள் நடக்கவேண்டும். இவைகள் கட்சிச் சார்பற்று, ஆளுங் கட்சியின் செல்வாக்குச் சாயல்களினின்று விலகி நடைபெறவேண்டும். இதற்கான முறைகளை அரசியலமைப்புச் செய்தளித்திருக்கிறது.

தேர்தல் கமிஷனில் ஒரு தலைமைத் தேர்தல் கமிஷனரும், ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்படும் பல தேர்தல் கமிஷனர்களும் இருப்பர். இவர்களை ஜனாதிபதி நியமிக்கிறார். ஜனாதிபதி உசிதம் போல் பிராந்தியக் கமிஷனர்களையும், உதவித் தேர்தல் கமிஷனர்களையும் நியமிக்கலாம்.

இக் கமிஷன் ஒரு சுயேச்சையான நிறுவனமாகும். தலைமைத் தேர்தல் கமிஷனரைப் பதவிநீக்கம் செய்யச் சிறப்பு முறைகளைக் கையாள வேண்டும். அதாவது, தலைமை நீதிமன்றத்தின் நீதிபதியொருவரை எவ்விதமாக அல்லது எக் காரணங்களுக்காக நீக்கலாமோ, அவ்விதமாகவும் அக் காரணங்களுக்காகவுமன்றித் தலைமைத் தேர்தல் கமிஷனர் தம்முடைய பதவியிலிருந்து நீக்கப்படலாகாது. அவரது சேவை முறைகளை அவருடைய நியமனத்திற்குப் பிறகு அவருக்குப் பாதகமாக மாற்றலாகாது. மற்றெந்தத் தேர்தல் கமிஷனரும் தலைமைத் தேர்தல் கமிஷனரின் சிபார்சின்பேரிலன்றி நீக்கப்படலாகாது. தலைமைத் தேர்தல் கமிஷனர் நீதிபதிகளைப் போலன்றிக் குறிப்பிட்ட காலத்திற்கே நியமிக்கப்படுகிறார். கமிஷன் தனது கடமைகளைச் செய்துமுடிக்கப் போதிய பணியாளர்களைப் பெற அரசியலமைப்பு வழிசெய்திருக்கிறது.

ஒவ்வோர் அரசிலும் தலைமைத் தேர்தல் அலுவலர் என்று ஒருவர் இருந்து செயலாற்றுவார். தலைமைத் தேர்தல் கமிஷனரின் கடமைகளை நிறைவேற்ற ஓர் அரசின் அரசாங்கம், தலைமைத் தேர்தல் அலுவலரென ஒருவரை நியமிக்கலாம்.

மாவட்ட நிலையில் தேர்தல் அலுவலர்கள் அரசிற்கரசு மாறுபட்ட அமைப்பைக் கொண்டிருக்கின்றார்கள். சில அரசு களின் மாவட்டங்களில் முழுநேர அலுவலர்கள் இருக்கின்றார்கள்.

ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க அத் தொகுதியின் தேர்தல் பதிவு அலுவலர் என்றொருவர் இருப்பார். இப் பணியைச் செய்ய நிரந்தரமான நிறுவனமாகத் தேர்தல் கமிஷன் இருந்துவருகிறது.

ஒவ்வொரு பாராளுமன்ற அல்லது அசெம்பளித் தொகுதிக்கும் ஒரு ரிட்டர்னிங் ஆஃபீசரையும், அவருக்கு உதவச் சிலரையும் தேர்தல் கமிஷன் நியமனம் செய்யும். இவர்களனைவரும் அரசாங்க அலுவலர்களாய் இருப்பர்.

வாக்கெடுப்பு தினத்தன்று, தலைமை வாக்கெடுப்பு அலுவலர் களையும் உதவியாளர்களையும் கமிஷன் சார்பில் நியமிப்பார்கள். பாராளுமன்றத் தேர்தலுக்கென்றும், சட்டசபைத் தேர்தலுக் கென்றும் தனித்தனியே அலுவலர்கள் இருப்பர். இவர்களுக்கு உதவக் காவற்படையினர் இருப்பர்.

இராஜ்ஜிய சபை, அரசின் மேல்சபைக்கான தேர்தல்களை ஒவ்வோர் ஈராண்டின் முடிவிலும் தேர்தல் விதிகளை யொட்டித் தேர்தல் கமிஷன் நடத்தும்.

# 31. சில குறிப்பிட்ட வகுப்பினர்பற்றிய சிறப்பு ஏற்பாடுகள்

இந்திய விடுதலைக்குமுன், அரசியல் வாழ்க்கை இன அடிப்படையில் இயங்கிவந்தது. இந்தியாவின் சமயச் சிறுபான்மை யினராகிய முஸ்லீம்கள், சீக்கியர்கள், இந்தியக் கிறிஸ்துவர்கள் போன்றோருக்கு பிரிட்டிஷார் குறிப்பிட்ட சில இடங்களைச் சட்டசபையில் ஒதுக்கிக்கொடுத்திருந்தனர். இச் சிறப்புரிமையை ஆங்கிலோ-இந்தியர்களும் ஐரோப்பியர்களும் பெற்றனர். 1935ஆம் ஆண்டுச் சட்டப்படி அனுபந்த சாதியினர் ஒரு தனி இனமாகக் கருதப்பட்டதுடன் தனிப் பிரதிநிதித்துவமும் பெற்றனர்.

பூனா உடன்பாட்டிற்குப் பிறகு இதில் சில மாற்றம் செய்யப் பட்டது.

சமய அடிப்படையில் நாடு துண்டாடப்பட்ட பின்னரும், சமயச் சிறுபான்மையினர் சிக்கல் தீரவில்லை. பிரிவினைக்குமுன் இந்தியாவில் இருந்த முஸ்லீம்கள் எல்லோரும் இஸ்லாமியக் குடியரசாகிய பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்து சென்றுவிட வில்லை. ஐந்து கோடி முஸ்லீம்கள் இந்தியாவில் இருக்கின்றனர். இவர்களுடன் மற்றச் சமயச் சிறுபான்மையினராகிய கிறிஸ் துவர்கள், சீக்கியர்கள், ஆங்கிலோ-இந்தியர்களுமிருக்கின்றனர். இவர்களுடன் அனுபந்த வகுப்பினரையும் சிறுபான்மையினராக ஏற்றுக்கொண்டு சில சலுகைகளை அரசாங்கம் அளித்தது.

இச் சமயச் சிறுபான்மையினர்பற்றிய நீண்டதோர் ஆய்விற்குப் பின், அரசியல் நிர்ணய சபை, தனி வாக்காளர் தொகுதியையும், சட்டசபைகளில் இடம் ஒதுக்குவதையும், சிறுபான்மையினருக் கான சிறப்புப் பாதுகாப்புகளையும் நீக்குவதென்ற முடிவிற்கு வந்தது. ஆனால், இம் முடிவிலிருந்து அனுபந்த வகுப்பினர், மலைச்

சாதியினர், ஆங்கிலோ - இந்தியர் ஆகிய இவர்களுக்கு விலக்களிப்ப தாகச் சபை தீர்மானித்தது.

## ஆங்கிலோ - இந்தியர்

மக்கள் சபையில் ஆங்கிலோ-இந்தியச் சமுதாயம் போதுமான அளவில் இடம் பெறவில்லை என்று ஜனாதிபதி கருதினால், அச் சமுதாயத்திலிருந்து இருவருக்கு மேற்படாத உறுப்பினர்களை மக்கள் சபைக்கு நியமனம் செய்யலாம். ஆனால், ஆங்கிலோ - இந்தியர் ஒருவரேனும் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வில்லையென்றால்தான் ஜனாதிபதி மேற்குறிப்பிட்டபடி நியமனம் செய்வார்.

ஓர் அரசின் சட்டசபையில் (கீழ்ச்சபையில்) ஆங்கிலோ-இந்தியச் சமுதாயம் இடம் பெற்றிருத்தல் அவசியமென்றும், அச் சபையில் போதுமான அளவில் இடம்பெறவில்லையென்றும் அந்த அரசின் கவர்னர் கருதினால், தமக்கு உசிதம் என்று தோன்றும் தொகையினரான உறுப்பினர்களை இச் சமுதாயத்தி லிருந்து சட்டசபைக்கு நியமனம் செய்யலாம். அரசியலமைப் பின் இப் பிரிவை (333) யொட்டி ஆங்கிலோ-இந்தியச் சமுதாயத் தின் நான்கு பிரதிநிதிகளை மேற்கு வங்காளத்தின் சட்டசபைக்கு கவர்னர் நியமனம் செய்கிறார். ஆந்திரப் பிரதேசம், பீகார், மகாராஷ்டிரம், கேரளம், மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், உத்தரப் பிரதேசம் முதலிய அரசுகளின் சட்டசபை ஒவ்வொன் றிற்கும் கவர்னர் ஓர் ஆங்கிலோ-இந்தியப் பிரதிநிதியை நியமனம் செய்கிறார். இச் சமுதாயத்தினர் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் வாழ்கின்ற அரசுகளின் சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார்கள்.

ஆங்கிலோ-இந்தியச் சமுதாயத்தினருக்கு வேலைவாய்ப்புகளில் சில சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன்படி, இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்குப் பிறகு முதல் இரண்டு ஆண்டுகளில் யூனியனைச் சேர்ந்த ரெயில்வே, சுங்கம், தபால், தந்தி ஆகிய சேவை வர்க்கங்களிலுள்ள பதவிகளுக்கு ஆங்கிலோ-இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை நியமித்தல் 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதிக்கு அடுத்து முன்ன தாகச் செயலில் இருந்த முறைப்படியே இருத்தல் வேண்டும் (பிரிவு 336). அதாவது, இவர்களுக்கு மேற்குறிப்பிட்ட சேவை வர்க்கங்களில் பதவிகளை ஒதுக்கிவைக்கவேண்டும். இவ்வாறு ஒதுக்கிவைக்கப்படும் இடங்களின் எண்ணிக்கை அடுத்து முந்திய

ஈராண்டுக் காலத்தில் ஒதுக்கிவைக்கப்பட்ட எண்ணிக்கைகளை விடப் பத்து சதவீதம் குறைந்திருத்தல்வேண்டும். இச் சலுகைகள், அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்தாவதாண்டு இறுதியில் அற்றுப்போகும் எனினும், இச் சலுகைகளை அரசியலமைப்பு இச் சமுதாயத்தினருக்கு 1970ஆம் ஆண்டு ஜனவரி 26ஆந் தேதி வரை நீட்டித்திருக்கிறது.

இச் சமுதாயத்தினர் மற்றைய சமுதாயத்தினரை ஒத்த தகுதிகளைப் பெற்றிருந்தால் அரசாங்கப் பதவிகளுக்கு அமர்த்தப் படலாம்.

**கல்விக்காக நன்கொடைகள் :** இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்குப் பிறகு, முதல் மூன்று ஆண்டுகளில், கல்விக்காக ஆங்கிலோ-இந்தியச் சமுதாயத்திற்கு நன்கொடைகள் கொடுக்கப் பட்டிருந்தால், அவைகளை யூனியனும் அரசுகளும் கொடுத்தல் வேண்டும் (பிரிவு 337).

பின்வரும் ஒவ்வொரு மூவாண்டுக் காலத்திலும், அந்த நன்கொடை அதற்கு அடுத்து முந்திய மூவாண்டுக் காலத்தில் கொடுக்கப்பட்டதைவிடப் பத்து சதவீதம் குறைந்திருக்கலாம். இச் சமுதாயத்தினர் கல்விக்காகப் பெற்றுவரும் நன்கொடைகள் இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்தாண்டுக் கால இறுதியில் அற்றுப்போகும்.

நன்கொடைகள் பெறும் ஆங்கிலோ - இந்தியக் கல்வி நிலையங்கள் அவைகளில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கையில் நாற்பது சதவீதம் மற்றைய சமுதாயத்தினருக்குக் கிடைக்க வசதிசெய்தாலன்றி, எந்த நன்கொடையையும் பெறுவதற்கு உரிமையுள்ளனவாகா.

இவ்விதச் சலுகைகளை அரசியலமைப்பு அதன் இரண்டாவது பத்தாண்டு இறுதிவரை நீட்டித்திருக்கிறது.

## அனுபந்த சாதியினரும் மலைச்சாதியினரும்

அரசியலமைப்பின் சிறப்பு ஏற்பாடுகளால் நன்மையடைய உரிமையுள்ள அனுபந்த சாதியினரும் மலைச்சாதியினரும் எட்டுக் கோடி மக்களுக்குமேல் இருக்கின்றனர். இவர்கள் பல கூட்டங்களாய்ப் பிரிந்து இந்தியாவில் பரவலாய் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் பீகார், அஸ்ஸாம், மத்தியப் பிரதேசம் போன்ற அரசுகளில் வசிக்கின்றனர். இவர்களின்

நலனிற்காக இந்திய அரசியலமைப்புச் சில சிறப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

சட்டசபைகளில் இவர்களுக்கு இடங்கள் ஒதுக்கிவைக்கப் படவேண்டுமென்று அரசியலமைப்பின் 330ஆம் பிரிவு வலியுறுத்துகிறது. இதையொட்டி மக்கள் சபையின் அனுபந்த சாதியினருக்கென்றும், அனுபந்த மலைச்சாதியினருக்கென்றும் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விடங்களுக்கான பிரதிநிதிகள் தனித்தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுத்தனுப்பப் படுகிறார்கள். மக்கள் சபையில் இவர்களுக்கென 107 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் 76 இடங்களை அனுபந்த சாதியினரும், எஞ்சிய 31 இடங்களை அனுபந்த மலைச்சாதியினரும் பெறுகிறார்கள். மக்கள் சபையின் மொத்த இடங்கள் 494 ஆகும்.

அரசுகளின் சட்டசபைகளிலும் இவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவர்களின் அரசியல் நலன்களைக் காப்பதற்காகவே அரசியலமைப்பு இவ்வேற்பாட்டைச் செய் திருக்கிறது. சட்டசபைக்கான தேர்தல்களில் இவர்கள் தனித் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுத்தனுப்பப்படுகின்றனர். யூனியன் உறுப்பரசுகளின் சட்டசபைக்காக 3102 இடங்களில் இவர்களுக் கென 691 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவைகளிலிருந்து, இவர்களுக்கான இடங்களை அரசியலமைப்பு நிர்ணயம் செய்து விட்டதாகக் கருதலாகாது. ஏனெனில், இவர்கள் எத்தனை பொதுத் தொகுதிகளில் வேண்டுமானாலும் போட்டியிட்டு வெற்றி பெறலாம்.

**சேவை வர்க்கங்களில் சலுகை :** யூனியன் அல்லது ஓர் அரசின் காரியங்கள்பற்றிய சேவை வர்க்கங்களுக்கும் பதவிகளுக்கும் நியமனம் செய்கையில், நிர்வாகத் திறனின் சீர்நிலைக்கு ஏற்றவாறு அனுபந்த சாதி, மலைச்சாதியினர்களின் உரிமைகள்பற்றிக் கவனம் செலுத்த வேண்டுமென அரசியலமைப்பின் 335ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. சேவை வர்க்கங்களுக்குட்பட்ட பதவிகளுக்கான குறைந்தபட்சத் தகுதிகளை இவ் வகுப்பினர் நிறைவு செய்தால் போதுமானது. இவர்களுக்குக் குறிப்பிட்ட சதவீதம் பதவிகளை அரசியலமைப்பு ஒதுக்கவில்லை. எவ்வளவு காலத்திற்கு இத் தனிக் கவனம் செலுத்தவேண்டுமென்பதும் குறிப்பிடவில்லை. அதாவது, இவ் வகுப்பினர் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மற்றைய வகுப்பினரது நிலைக்கு உயரும்வரை இத் தனிச் சலுகைகள் நிலைபெறலாம்.

இவ் வகுப்பினரின் நிலையை ஆய்ந்த அரசாங்கம் ஒரு கொள்கையை உருவாக்கிச் செயல்படுத்துகிறது. இதன்படி தேர்வுகள் நடத்தித் தெரிந்தெடுக்கும் அனைத்திந்திய சர்வீஸ்களில் இவ் வகுப்பினருக்கான பங்கினை $12\frac{1}{2}$ சதவீதமாகவும், நேர்முகத் தெரிவுகளில் $16\frac{2}{3}$ சதவீதமாகவும் அரசாங்கம் நிர்ணயம் செய்தது. இவ் வகுப்பினர்கள் பதவிகளை அடைவதற்கான பெருமளவு வயதுத் தகுதியை மற்றைய வகுப்பினருக்கான இத் தகுதியைவிட ஐந்தாண்டுகள் அதிகமாக அரசாங்கம் உயர்த்தியது.

இவ் வகுப்பினர்களின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்த பீகார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா போன்ற அரசுகள் ஒவ்வொன்றிலும் ஓர் அமைச்சர் இருக்கவேண்டியதை அரசியலமைப்பு வலியுறுத்தியிருக்கிறது. இவ் வகுப்பினர்களின் பொது நலனைக் கவனிக்க இப்பொழுது எல்லா அரசுகளிலும் அமைச்சர்கள் இருக்கின்றனர். யூனியன் அமைச்சவையிலும் இவ் வகுப்பினரின் பிரதிநிதிகளாக ஓரிரு அமைச்சர்கள் இருக்கின்றனர்.

**தனி அலுவலர் :** அனுபந்த சாதியினருக்காகவும், அனுபந்த மலைச்சாதியினருக்காகவும் ஜனாதிபதி ஒரு தனி அலுவலரை நியமிக்கவேண்டும். அரசியலமைப்பு இவ் வகுப்பினருக்கு அளித்திருக்கும் பாதுகாப்புகள்பற்றிய எல்லாவற்றையும் இவர் ஆய்ந்துபார்த்து, இப் பாதுகாப்புகள் செயல்படும் முறைபற்றி ஜனாதிபதிக்கு அறிவிக்கவேண்டும். அதாவது, இவ் வகுப்பினர் சட்டசபைகளில் பெற்றிருக்கும் இடங்கள்பற்றியும், சேவை வர்க்கங்களில் இவர்களுக்கான உரிமைபற்றியும், அடிப்படையான உரிமைகளின் செயற்பாடுபற்றியும் ஜனாதிபதிக்கு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். இவ்வலுவலர் பின்தங்கிய வகுப்பினர்கள் பற்றியும், ஆங்கிலோ-இந்தியர்பற்றியும் ஜனாதிபதிக்கு அறிவிக்கக் கடமைப்பட்டவர். ஜனாதிபதி, தனி அலுவலரின் அறிக்கைகளையெல்லாம் பாராளுமன்றச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கும்படி செய்யவேண்டும்.

இத் தனி அலுவலர் இப்பொழுது அனுபந்த சாதியினர் கமிஷனர் என்ற பெயருடன் செயல்பட்டுவருகிறார். இவருக்கு உதவியாகப் பல மண்டலக் கமிஷனர்கள் இருக்கின்றனர்.

இக் கமிஷனர் 1960-61ஆம் ஆண்டிற்கான தமது பத்தாவது அறிக்கையில், தீண்டாமை படிப்படியாகக் குறைந்துகொண்டு வருவதாகக் கூறியிருக்கிறார். இருப்பினும், இவ் வகுப்பினருக்கு அரசியலமைப்பு வழங்கியிருக்கும் பாதுகாப்புகள் 1970ஆம்

ஆண்டில் செயலற்றுப்போகு முன்னர்த் தீண்டாமை ஒழிக்கப் படவேண்டுமென்று கூறியிருக்கிறுர்; தீண்டாமையை முழுமை யாக ஆராய்ந்தறிய ஒரு நிபுணர் குழுவை அமைக்கவேண்டு மென்ற கருத்தை வெளியிட்டிக்கிறுர்.

கமிஷனர் தமது பத்தாவது அறிக்கையில், அனுபந்த சாதியின ரும் மலேச்சாதியினரும் கல்வியில் பல நிலேகளிலும் பெருமளவு முன்னேறியிருக்கின்றனரென்றும், ஆனுல், பொருளாதாரத் துறையில் குறிப்பிட்ட அளவு இவ் வகுப்பினர்கள் முன்னேறவில்லே என்றும் கூறியிருக்கிறுர்.

அரசியலமைப்பின் 340ஆம் பிரிவின்படி ஜனுதிபதி இரண்டு ஆய்வுக் கமிஷன்களே நியமிக்கவேண்டும். இவற்றில் ஒன்று அனுபந்த மலேப்பிரதேசங்களின் ஆட்சிபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், அனுபந்த சாதியினர், அனுபந்த மலேச்சாதியினர் பொதுநலத்தை ஆராயவும், மற்ருெரு கமிஷன் சமூக, கல்வி நிலேகளில் பின்தங்கியவர்களின் நிலேயுயர சிபார்சுகளேக் கூறவும் அமர்த்தப்படவேண்டும். கமிஷன் பின்பற்றவேண்டிய நடை முறையை ஜனுதிபதி ஓர் உத்தரவால் வரையறை செய்யவேண்டும். கமிஷ்ன் தனது சிபார்சுகளடங்கிய அறிக்கையை, ஜனுதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் நகல் ஒன்றை, அதன்பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை விளக்கத்துடன் ஜனுதிபதி பாராளுமன்றச் சபை ஒவ்வொன்றின் முன்னிலேயிலும் வைக்கும்படி செய்யவேண்டும்.

இவ் வகுப்பினரின் நலத்திற்குகந்ததென்று தயாரித்த திட்டங்களே நிறைவேற்ற ஓர் அரசிற்குக் கட்டளேயிட யூனியன், நிர்வாக அதிகாரம் பெற்றிருக்கிறது.

பின்தங்கிய வகுப்பினரைப்பற்றிய கமிஷனின் சிபார்சுகளேச் செயல்படுத்த யூனியன் அரசாங்கம் அரசுகளுக்கு அறிவுரை வழங்கலாம்.

ஜனுதிபதி, பொது விளம்பரத்திஞல் இன்ன சாதியினர், இனத்தினர் அல்லது மலேச்சாதியினர், அனுபந்த சாதியினர் என்று கருதப்படவேண்டுமெனக் குறிப்பிடலாம். ஆஞல், ஜனுதிபதி இவ் விளம்பரத்தை மாற்றியமைக்கவோ, நீக்கவோ முடியாது. பாராளுமன்றம் இவற்றைச் செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறது.

பத்தாண்டுக் காலத்திற்கு இவ் வகுப்பினருக்குக் கொடுக்கப் பட்டிருந்த பாதுகாப்புகள் அரசியலமைப்பின் இரண்டாவது பத்தாண்டு இறுதிவரை அளிக்கப்பட்டிருக்கின்றன.

# 32. யூனியன் ஆட்சி மொழி

ஆட்சி மொழிபற்றிய ஏற்பாடுகளை விரிவாக எந்த அரசியலமைப்பும் குறிப்பிடுதல் வழக்கமில்லை. பல மொழிகள் நிலவும் நாடுகளின் ஆட்சி மொழிபற்றிய ஏற்பாடுகளைக் குறிப்பிட்ட மொழியினர் உடன்பாடுகள் வாயிலாகச் செய்துகொள்கிறார்கள். மொழிச்சிக்கலைக் தவிர்க்க இன்னும் சில நாடுகளில் மக்கள் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

இந்தியாவில் 179 மொழிகளும், 544 பேச்சு வழக்கிலுள்ள மொழிகளும் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். இவைகளை இந்தோ - ஆரிய மொழியினமென்றும், திராவிட மொழியினமென்றும் இருபெரும் பிரிவுகளாய்ப் பிரித்துள்ளனர். தென்னிந்தியாவில் திராவிட மொழிகளும், வடஇந்தியாவில் இந்தோ - ஆரிய மொழிகளும் நிலவிவருகின்றன. இவைகளில் பதினான்கு மொழிகளை அரசியலமைப்புத் தேசிய மொழிகளாக நிர்ணயம் செய்தது.

முகலாயர் வருகையால் இந்தியாவில் பார்சிய மொழியும், பிரிட்டிஷார் ஆதிக்கத்தால் ஆங்கிலமும் நுழைந்தன. பிரிட்டிஷார் வசதி கருதி ஆங்கிலத்தை இந் நாட்டிற்குள் புகுத்தினர். இந்தியர்களும் ஆங்கில மொழியைக் கற்றுப் பெரும் பேறெய்தினர். ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை ஒழிக்க இந்திய விடுதலை இயக்கத்தினர் ஆங்கிலத்தையே பயன்படுத்தினர். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து மக்கள் ஆங்கிலத்தைப் பொது மொழியாகக் கருதித் தம் கருத்துகளை அம் மொழி வாயிலாக வெளியிட்டனர்.

இந்தியா விடுதலையடைந்தபின் தேசிய ஒருமை கருதியும், ஒரே தேசிய இனத்தை உருவாக்கக் கருதியும் இந்திய மொழிகளிலொன்றை ஆட்சி மொழியாக்க விரும்பினர். இதுபற்றி அரசியல்

நிர்ணய சபை நீண்ட விவாதங்கள் செய்தபின் முடிவிற்கு வந்தது.

இம் முடிவையே அரசியலமைப்பின் 343ஆம் பிரிவு, யூனியன் ஆட்சி மொழி தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட இந்தியாக இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடுகிறது.

இந்திய மொழிகளில் பெருமளவு மக்களால் பேசப்படுகிற மொழியென்பது பற்றியே அரசியலமைப்பாளர்கள் இந்தியை யூனியன் ஆட்சி மொழியெனக் குறிப்பிட்டனர். ஆயினும், இந்திய மக்கள்தொகைப்படி பார்க்கும்பொழுது, இம் மொழி 42 சதவீதத்தினரால்தான் பேசப்படுகிறது. மற்றைய மொழியினர் தனித் தனியே சிறுபான்மையினராயினும், ஒன்றுபட்டால் இம் மொழியினர் பெரும்பான்மையினராவர். இதன்படி இந்தி மொழி பெருமளவு மக்களால் பேசப்படுவதாயினும், இந்திய மக்கள் தொகையால் சிறுபான்மையினர் மொழியேயாகும். எனவேதான், இந்தி மொழியினர் மற்ற மொழியினரின் இசைவையும் நல்லெண்ணத்தையும் நாட்டின் ஒருமையுணர்வு கருதிப் பெற வேண்டும். இந்த ஆட்சி மொழி ஏற்பாடு, இக் காலத்தினரால் இனி வரும் காலத்தினருக்காகச் செய்ததென்பதை எவரும் மறக்கலாகாது. இவ் வேறுபாட்டை நிறைவேற்றுவதில் இந்தி மொழியினருக்குள்ள பொறுப்பைக் குறைத்துக் கூறமுடியாது.

யூனியன் அரசாங்கக் காரியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டிய இலக்கங்களின் வடிவம், இந்திய இலக்கங்களின் சர்வதேச வடிவமாக இருக்கவேண்டும்.

இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து பதினைந்தாண்டுக் காலத்திற்கு ஆங்கில மொழியே தொடர்ந்து உபயோகிக்கப்படவேண்டும். எனினும், மேற்சொன்ன காலத்தில் யூனியன் அரசாங்கக் காரியங்களில் எவைகளுக்கேனும் ஆங்கில மொழியோடு இந்தி மொழியையும் உபயோகப்படுத்த ஜனாதிபதி உத்தரவிடலாம். இப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் பாராளுமன்றம், சட்டத்தினால் ஆங்கில மொழியை இச் சட்டத்தில் குறிப்பிடப்படும் காரியங்களுக்காக உபயோகிக்க ஏற்பாடு செய்யலாம்.

இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து ஐந்து ஆண்டு முடிவடைந்ததும், ஜனாதிபதி ஒரு கமிஷனை நியமிக்கவேண்டும். இக் கமிஷன் இந்தி மொழியை மேன்மேலும் உபயோகித்தல்,

ஆங்கில மொழியின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தல்பற்றிய சிபார்சுகளைச் செய்யவேண்டும்.

இக் கமிஷனை ஜனாதிபதி, அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்தாவது ஆண்டு இறுதியில் நியமிக்கவேண்டும். இக் கமிஷனில் இந்திய மொழிகளின் பிரதிநிதிகளும் இருப்பர். கமிஷன் தன்னுடைய சிபார்சுகளைச் செய்கையில், கைத்தொழில், பண்பாடு அறிவியல் ஆகிய துறைகளில் இந்தியாவின் முன்னேற்றத்தைப் பற்றிக் கவனம் செலுத்தவேண்டும். அரசாங்கச் சேவை வர்க்கங்கள் சம்பந்தமாக இந்தி பேசும் பிரதேசங்களல்லாத மற்றவர்களின் நியாயமான உரிமைகளைப்பற்றிய உரிய அளவிற்குக் கவனம் செலுத்தவேண்டும்.

கமிஷன் சிபார்சுகளை ஆராய 30 பாராளுமன்ற உறுப்பினர்களடங்கிய கமிட்டி ஒன்று அமைக்கப்படவேண்டும். இவர்களில் 20 பேரை மக்கள் சபை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி தேர்ந்தெடுக்கும். இதே முறையில் இராஜ்ய சபையும் 10 பேரைத் தேர்ந்தெடுக்கும். இக் கமிட்டி, மொழிக் கமிஷன் சிபார்சுகளை ஆய்ந்து தனது கருத்தை ஜனாதிபதிக்கு அறிவிக்கும். ஜனாதிபதி கமிட்டியின் அறிக்கையையொட்டிக் கட்டளைகள் பிறப்பிக்கலாம்.

அரசியலமைப்பின் பிரிவுகளை யொட்டி ஜனாதிபதி முதல் மொழிக் கமிஷனை 1955ஆம் ஆண்டு அமைத்தார். இக் கமிஷன் யூனியன் ஆட்சி மொழியைப்பற்றி ஆராய்ந்தபின், விளக்கமானதோர் அறிக்கையை வெளியிட்டது. இதில், இந்தியப் பொது வாழ்க்கையில் ஆங்கிலம் பெற்றிருக்கும் தனிச்சிறப்பு நிலையை ஆய்ந்த பின்னர், தொடர்ந்து இம் மொழியைப் பொது மொழியாக வைத்துக்கொள்ளுதல் விரும்பத்தக்கதன்று என்னும் கருத்தைக் கமிஷன் வெளியிட்டது. இக் கமிஷன் அறிக்கையைப் பாராளுமன்றக் கமிட்டி ஆராய்ந்தது. யூனியன் காரியங்களுக்காக ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியை ஏற்பதே அறிவுடைமையெனினும், இம் மொழி மாற்றத்தால் இடரெதுவும் உண்டாகலாகாதெனும் கருத்தைக் கமிட்டி வெளியிட்டது.

## பிரதேச மொழிகள்

ஓர் அரசின் சட்டசபை அந்த அரசில் வழங்கிவரும் மொழிகளில் ஒன்றையோ பலவற்றையோ அல்லது இந்தியையோ சட்டத்தினால் அந்த அரசின் ஆட்சி மொழியாகக் கொள்ளலாம். எனினும், அந்த அரசின் சட்டசபை சட்டத்தினால் வேறுவிதமாய் ஏற்பாடு செய்யும்வரை அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு

முன்பிருந்த ஆங்கில மொழி தொடர்ந்து வழங்கிவரவேண்டும். ஆனால், ஓர் அரசிற்கும் மற்றோர் அரசிற்கும் இடையேயும், ஓர் அரசிற்கும் யூனியனுக்குமிடையேயும் வழங்கிவரவேண்டிய மொழி, அவ்வப்போது சட்டத்தால் நிர்ணயிக்கப்படும் மொழியேயாகும். எனினும், இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அரசுகள் தமக்கிடையே இந்தி மொழி ஆட்சி மொழியாகவேண்டுமென்று ஒத்துக்கொண்டால், அம் மொழி அவ்வாறு ஆட்சி மொழியாக வழங்கப்படலாம்.

ஓர் அரசின் மக்களில் கணிசமான விகிதத்தினர் தாங்கள் பேசும் மொழியின் வழக்காற்றை அந்த அரசு அங்கீகரிக்கவேண்டு மென விரும்பலாம். இதை இவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவிக்க லாம். ஜனாதிபதி மக்களின் வேண்டுகோளின்பேரில், ஓர் உத்தரவால் இம் மொழியை அந்த அரசு முழுவதிலுமோ அல்லது அதன் ஒரு பாகத்திலோ அங்கீகரிக்கவேண்டுமென உத்தர விடலாம். அரசுகளின் பெரும்பான்மை மொழியினர் மொழிச் சிறுபான்மையினரை மொழிவெறியால் ஆதிக்கம் செய்வதைத் தவிர்க்கவே ஜனாதிபதிக்கு இவ்வதிகாரம் கொடுக்கப்பட்டிருக் கிறது.

## நீதிமன்ற மொழி

பாராளுமன்றம் சட்டத்தினால் வேறுவிதமாக ஏற்பாடு செய்யும்வரை, தலைமை நீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றத்திலும் நிகழும் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கில மொழியில் இருக்க வேண்டும். இந்த அரசியலமைப்பின்கீழ் பிறப்பிக்கப்பட்ட எல்லா உத்தரவுகளும், விதிகளும், துணைவிதிகளும், அவற்றின் அதிகார ரீதியான வாசகங்களும் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும்.

பதினைந்தாண்டுக் காலம் முடிவடைந்ததும் பாராளுமன்றம் சட்டத்தினால் நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து ஆங்கிலத்தை அகற்றிவிடலாம். இக் கால இறுதிக்கு முன் ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்ற சட்டத்தினால் உயர் நீதிமன்ற நடவடிக்கைகளை இந்தியிலோ அல்லது பிரதேச மொழியிலோ நடத்த ஏற்பாடு செய்யலாம்.

## சட்டசபைகளின் மொழி

சட்டசபைகளின் நடைமுறைகளும் விவாதங்களும் இந்தியிலோ அல்லது பிரதேச மொழியிலோ இருக்கலாம். ஆனால்,

ஒரு மசோதா சட்டமாக நிறைவேறும்போது அதன் வாசகம் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும்.

அரசியலமைப்பு குறிப்பிட்டுள்ள பதினைந்தாண்டுக் காலம் முடிவடைந்த பின்னரும் சட்டசபை உறுப்பினர்கள் இந்தியிலோ, பிரதேச மொழியிலோ தம் கருத்துகளைத் தெளிவாக்க முடியவில்லையென்றால் ஆங்கிலத்தைப் பயன்படுத்தச் சபாநாயகர்கள் அனுமதிக்கவேண்டும் என்பது மொழிக் கமிஷன் கருத்தாகும்.

பாராளுமன்றத்திலும் சட்டசபைகளிலும் கொணரப்படும் மசோதாக்களும், நிறைவேற்றப்படும் எல்லாச் சட்டங்களும் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும். இதைப்போன்றே ஜனாதிபதியால் அல்லது கவர்னரால் பிறப்பிக்கப்படும் எல்லா அவசரச் சட்டங்களும் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும்.

பிரதேச மொழிகளை ஆட்சி மொழிகளாய் ஏற்றுக்கொண்ட அரசுகளின் சட்டசபைகள் நிறைவேற்றும் சட்டங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பே அதிகார ரீதியான வாசகமாகக் கருதப்படும்.

### சிறப்புக் கட்டளைகள்

மொழிச் சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாக்க ஜனாதிபதி சில கட்டளைகளைப் பிறப்பிக்கலாம். ஒவ்வொருவரும் தம் மனக் குறையைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு ஓர் அதிகாரிக்கு விண்ணப்பித்துக்கொள்ள யூனியன் அல்லது ஓர் அரசின் ஆட்சி மொழியைப் பயன்படுத்த உரிமையுள்ளவராவார்.

மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி நிலையில் தாய்மொழியில் போதிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ஒவ்வொரு ஸ்தல நிறுவனமும் முயல வேண்டும்; அவ் வசதிகளைச் செய்துகொடுப்பதற்கான கட்டளைகளை ஜனாதிபதி ஓர் அரசிற்குப் பிறப்பிக்கலாம்.

மொழிச் சிறுபான்மையினருக்காக ஜனாதிபதி ஒரு தனி அதிகாரியை நியமிப்பார். அவர் சிறுபான்மையினருக்கு அரசியலமைப்பு அளித்திருக்கும் பாதுகாப்புகள்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பார்.

அரசியலமைப்பின் 351ஆம் பிரிவு, இந்தி மொழி பரவுவதற்கு ஆவன செய்தலும் செழிப்புறச் செய்தலும் யூனியன் கடமையாகுமென்ற கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறது.

எட்டாவது தப்சீல் பிரிவுகள்

344 (1). 351. மொழிகள்

1. அஸ்ஸாமியம்
2. வங்காளி
3. குஜராத்தி
4. இந்தி
5. கன்னடம்
6. காஷ்மீரி
7. மலையாளம்
8. மராத்தி
9. ஒரியா
10. பஞ்சாபி
11. சமஸ்கிருதம்
12. தமிழ்
13. தெலுங்கு
14. உருது
15. சிந்தி

# 33. நெருக்கடி நிலைக்கான ஏற்பாடுகள்

அரசியலமைப்பு மூன்று வகை நெருக்கடிநிலை ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. நெருக்கடிநிலைப் பிரகடனம் செய்ய அரசியலமைப்பு ஜனாதிபதிக்கு அதிகாரம் அளித்திருக்கிறது.

**போர் நெருக்கடி நிலை:** போரினால், வெளியார்த் தாக்குதலால், அல்லது உட்குழப்பத்தால் பேரிடர் நிலையொன்று ஏற்படலாம். இப் பேரிடர் நிலையால் இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிப் பரப்பிலுள்ள ஒரு பாகத்தின் பாதுகாப்பிற்கு அபாயம் நேரும் என்று ஜனாதிபதிக்கு நன்கு விளங்கினால், அவர் அந் நிலை வந்துள்ளதென்று பிரகடனத்தினால் அறிவிக்கலாம்.

ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட ஒரு பிரகடனம் பின் செய்த பிரகடனம் ஒன்றால் ரத்து செய்யப்படலாம்.

ஜனாதிபதியின் ஒரு பிரகடனம் பாராளுமன்றச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கப்படவேண்டும்.

இரண்டு மாதம் முடிவடைவதற்குமுன் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் தீர்மானங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டாலன்றி, இக் காலம் முடிவடைந்ததும் இப் பிரகடனம் செயலற்றுப் போகும்.

ஒரு பிரகடனம் பிறப்பிக்கப்பட்டபொழுது மக்கள் சபை கலைக்கப்பட்டிருக்கலாம் அல்லது குறிப்பிட்ட இரண்டு மாத காலத்திற்குள் இச் சபையின் கலைப்பு நேரிட்டிருக்கலாம். இது போன்ற சமயங்களில் இப் பிரகடனம் ராஜ்ய சபைமுன் வைக்கப் படவேண்டும். இதை ராஜ்ய சபை ஒப்புக்கொண்டாலும், மக்கள் சபை மறுபடியும் அமைக்கப்பட்ட பிறகு முதலில் கூடும் தேதியி

லிருந்து முப்பது நாள்கள் முடிவடையுமுன் இப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அக் காலம் முடிவடைந்ததும் இப் பிரகடனம் செயலற்றுப்போகும். இதுவன்றி ராஜ்யசபையே பிரகடனத்தை ஏற்கவில்லையென்றாலும் இது செயலற்றுப்போகும். அபாயம் மிக நெருங்கிவிட்டது என்று ஜனாதிபதிக்கு நன்கு விளங்கினால், நெருக்கடி நிலைப் பிரகடனம் பிறப்பிக்கலாம்.

**நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் விளைவு:** நெருக்கடி நிலைப் பிரகடனம் பிறப்பிக்கப்பட்டவுடன், இந் நிலை உண்டான பகுதிகளில் கூட்டாட்சி ஏற்பாடு மறைந்துவிடும். அதாவது, யூனியனின் அதிகாரம் இப் பகுதிக்கு நீட்சி பெறும். அரசியலமைப்பில் எவ்வாறிருப்பினும், ஓர் அரசின் நிர்வாக அதிகாரம் செலுத்தப்பட வேண்டிய விதத்தைப்பற்றி இதற்குக் கட்டளைகள் இடுவதற்கும் யூனியனின் நிர்வாக அதிகாரம் நீளும். அரசு பட்டியலில் குறிப்பிட்ட பொருள்கள்பற்றிப் பாராளுமன்றம் சட்டமியற்ற அதிகாரம் பெறும்.

நெருக்கடி நிலைப் பிரகடனமொன்று அமலிலிருக்கையில், அரசுகளின் வருவாய்ப் பங்கீடுபற்றிய அரசியலமைப்பின் பிரிவுகளை ஜனாதிபதி தமக்குத் தகுதியாகத் தோன்றும் விலக்குகள் அல்லது மாறுதல்களுக்குட்பட்டுச் செயல்படவேண்டுமென்று கட்டளையிடலாம். எனினும், இக் கட்டளைகளனைத்தும் பாராளுமன்றச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கப்பட வேண்டும். இந் நெருக்கடி நிலைப் பிரகடனம் ஓர் ஒருமுக அரசை உருவாக்கிவிடுகிறது.

## அரசுகளின் அரசியலமைப்புச் சார்ந்த நெருக்கடி

ஓர் அரசின் கவர்னரிடமிருந்து அறிக்கை ஒன்றைப் பெற்றதன் பேரில் அல்லது வேறு வகையில் இந்த அரசியலமைப்பின் பிரிவுகளின்படி இந்த அரசின் ஆட்சியை நடத்தமுடியாத நிலையொன்று ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதிக்கு நன்கு விளங்கினால், ஒரு பிரகடனம் பிறப்பிக்கலாம்.

இப் பிரகடனத்தினால் ஜனாதிபதி ஓர் அரசின் எல்லாக் கடமைகளையும் தாம் ஏற்கலாம் அல்லது இக் கடமைகளனைத்தையும் கவர்னரிடம் நிலைபெறச் செய்யலாம் அல்லது வேறெந்த நிர்வாக நிலையத்திற்கும் அளிக்கலாம். அரசின் சட்டசபைக்கான எல்லா அதிகாரங்களையும் பாராளுமன்றம் செயலாற்றுமென ஜனாதிபதி அறிவிக்கலாம். பிரகடனத்தின் நோக்கங்களை நிறைவேற்றற்குரிய விதிகளை ஜனாதிபதி செய்யலாம். இருப்பினும், உயர்நீதி

மன்றத்திடம் நிலைபெற்றிருக்கும் அதிகாரமெதனையும் ஜனாதிபதி மேற்கொள்ளலாகாது.

போர்நெருக்கடிப் பிரகடனங்களைப்போலவே பாராளுமன்றம் இதனையும் ஏற்கவேண்டும். பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றாலும், ஒப்புதல் பெற்ற தேதியிலிருந்து ஆறு மாத இறுதியில் இப் பிரகடனம் செயலிழந்துபோகும். இந் நெருக்கடி நிலை தொடரவேண்டுமென்றால் பிரகடனத்தை ஒவ்வோர் ஆறு மாத இறுதியிலும் இதை உயிர்ப்பிக்கலாம். இந் நிலை மூன்றாண்டுகள் தாம் நீடிக்க முடியும்.

பாராளுமன்றம் அதிகப்படியான வேலைகளைச் செய்ய முடியவில்லையென்றால், சட்டமியற்றும் அதிகாரங்களை ஜனாதிபதியிடம் விடலாம் அல்லது வேறொரு பொருத்தமான நிறுவனத்திடம் அவைகளை அளிக்கப் பாராளுமன்றம் ஜனாதிபதிக்கு அதிகாரம் கொடுக்கலாம். அரசின் திரண்ட நிதியிலிருந்து செலவிட ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு.

பிரகடனம் செயலிழக்கும ஆண்டின் இறுதிக்குப்பின் நெருக்கடி காலத்தில் செய்யப்பட்ட சட்டங்களனைத்தும் செயல்திறனற்றுப் போகும்.

அடிப்படையான உரிமைகளை நிறுத்திவைத்தல் (பிரிவுகள் 358, 359) : அரசியலமைப்பின் 19ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள அடிப்படையான உரிமைகளை இந் நெருக்கடி காலத்தில் 'அரசு' நிறுத்திவைக்க 358ஆம் பிரிவு அதிகாரமளித்திருக்கிறது. இங்கு 'அரசு' என்பது இந்திய அரசாங்கத்தையும், பாராளுமன்றத்தையும், ஒவ்வோர் அரசின் அரசாங்கத்தையும், சட்ட சபையையும், இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள இந்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழுள்ள எல்லா ஸ்தல அல்லது மற்றைய அதிகார நிலையங்களையும் கொண்டதாகும். இதிலிருந்து அடிப்படையான உரிமைகளை நிறுத்திவைக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்குமட்டுமன்றி யூனியன் நிர்வாகத்துறைக்கும் இருப்பது தெளிவாகிறது. இவைகளுக்கும் கீழான நிறுவனத்திடமும் நெருக்கடி காலத்தில் இவ்வதிகாரம் இருக்கும்.

நெருக்கடிநிலையின்போது ஜனாதிபதி ஓர் உத்தரவால் அடிப்படையான உரிமைகளை நீதிமன்றம் நிறைவேற்றுதலை நிறுத்திவைக்க அரசியலமைப்பு அவருக்கும் அதிகாரமளித்திருக்கிறது [பிரிவு 350 (1)]. நெருக்கடி காலத்தில் அடிப்படையான

உரிமைகள்பற்றிய பாகம் முழுதுமே நிறுத்திவைக்கப்படலாம். இதன்படி செய்யப்பட்ட ஜனதிபதியின் உத்தரவு ஒவ்வொன்றும், இயன்ற விரைவில், பாராளுமன்றச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கப்படவேண்டும்.

**நிதி நெருக்கடிபற்றிய ஏற்பாடுகள் :** இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிப் பரப்பிலுள்ள ஒரு பாகத்தின் நிதிபற்றிய உறுதிப் பாடு அல்லது உயர்ந்த மதிப்பிற்கு அபாயம் ஏற்படலாகும் நிலை ஏற்பட்டிருக்கிறதென்று ஜனதிபதிக்கு நன்கு விளங்கினல், அவர் ஒரு பிரகடனத்தால் அந் நிலை ஏற்பட்டுள்ளதென அறிக்கை செய்ய லாம் (பிரிவு 360). மற்றிரு நெருக்கடிநிலைப் பிரகடனங்களைப் போலவே இதற்கும் பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

நிதி நெருக்கடி காலங்களில் குறிப்பிட்ட நிதி முறையைப் பற்றிய கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறு ஜனதிபதி ஓர் அரசிற்குக் கட்டளை பிறப்பிக்கலாம். இதுபற்றிய அவசியமான வும் போதுமானவுமான கட்டளைகளைப் பிறப்பிக்க யூனியன் அதிகாரம் நீட்டிக்கும்.

ஜனதிபதி, ஓர் அரசின் காரியங்கள் சம்பந்தமாகச் சேவை செய்பவர்களின் சம்பளங்களையும் படிகளையும் குறைக்க வேண்டு மென்று கட்டளை பிறப்பிக்கலாம்.

எல்லா நிதி மசோதாக்களும் ஓர் அரசின் சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட பிறகு இவைகள் ஜனதிபதி கவனித்து ஆராய் வதற்காக ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென்று நிதி நெருக்கடி காலத்தில் கட்டளையிடலாம். மேலும், இந் நெருக்கடிநிலையின் போது தலைமை நீதிமன்றம் உயர் நீதிமன்றங்கள் இவற்றின் நீதி பதிகள் உட்பட யூனியன் காரியங்கள் சம்பந்தமாகச் சேவை செய் பவர்கள் சம்பளங்களையும் படிகளையும் குறைப்பதற்காகக் கட்டளை கள் பிறப்பிக்க ஜனதிபதி அதிகாரமுடையவராவார்.

# 34. அரசியலமைப்பின் திருத்தங்கள்

ஒரு நாட்டின் அரசியலமைப்பு அந் நாட்டின் தலையாய சட்டமாகும். ஓர் அரசின் உறுப்புகளாகிய நிர்வாக, நீதி, சட்ட சபைத் துறைகளின் கடமைகள், அதிகாரங்கள் ஆகியவற்றிற்கு இலக்கணம் கூறி வரையறை செய்வது அரசியலமைப்பாகும். எனவே, இதை அடிக்கடி திருத்தி மாற்றம் காண்பது மக்களின் மனவுறுதியைக் குலைக்கலாம்.

ஒரு கூட்டாட்சியமைப்பில் அதிகாரங்கள் யூனியனுக்கும் உறுப்பரசுகளுக்குமிடையே பங்கீடு செய்து கொடுக்கப்படுகின்றன. இப் பங்கீட்டினால் யூனியனும் உறுப்பரசுகளும் நுட்பமானதொரு சமன் செய்யப்பட்ட உறவு நிலையைப் பெற்று வாழ்கின்றன. எனவேதான், மிக இன்றியமையாத காரணங்களுக்காகமட்டுமே அரசியலமைப்பைத் திருத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஓர் அரசியலமைப்பு, வளரும் நாட்டுடன் வளர்ந்து, மாற்ற முறும் தேவைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் இயைந்து செல்லவும் வேண்டும். சமூகப் பொருளாதார மாற்றங்கள் ஓர் அரசியலமைப் பில் பெரிய மாற்றங்களை வற்புறுத்தலாம். விரும்பத்தக்க திருத்தங்களை ஓர் அரசியலமைப்பு ஏற்க மறுக்குமாயின் பெரு நெருக்கடிக்குள்ளாகி அழிந்துவிடலாம். எனவே, அரசிய லமைப்பு, திருத்தங்களை எளிதாக ஏற்றுச் செயல்பட வேண்டும். இதற்கென அரசியலமைப்பின் பிரிவுகளை மூன்று வகையாகப் பிரித்துக்கொண்டு, அவைகளின் சிறப்பிற்கேற்பக் கடினமான முறைகளாலும் எளிதான முறைகளாலும் அரசியலமைப்பைத் திருத்தம் செய்ய அரசியலமைப்பு வழிமுறைகளைக் குறிப்பிட்டிருக் கிறது.

அதாவது, அரசியலமைப்பின் குறிப்பிட்ட சில பிரிவுகளைப் பாராளுமன்றம் இயல்பான பெரும்பான்மை வாக்குகளால்

திருத்தம் செய்யலாம். இம் முறைப்படி, அரசுகளின் மேல்சபைகளை உண்டாக்கவும் நீக்கவும் பாராளுமன்றம் சட்டத்தால் அரசியலமைப்பைத் திருத்தலாம்.

இரண்டாம் வகைத் திருத்தங்களுக்குப் பாராளுமன்றத்தின் மூன்றிலிரு பெரும்பான்மை வேண்டும். இதன்படி அடிப்படையான உரிமைகள்பற்றிய பிரிவுகளையும், நெறிசெய் கோட்பாடுகள்பற்றிய பிரிவுகளையும் திருத்தம் செய்யலாம்.

மூன்றும் வகைத் திருத்தங்களுக்குப் பாராளுமன்றத்தின் மூன்றிலிரு பெரும்பான்மையும், அரசுகளின் ஒப்புதலும் வேண்டும். யூனியனுக்கும் அரசுகளுக்குமான சட்டமியற்றும் அதிகாரங்கள் பற்றிய அரசியலமைப்பின் பிரிவுகளை இம் முறையில் திருத்தம் செய்யலாம்.

அரசியலமைப்பின் திருத்தத்திற்கான நடைமுறைகளை 368ஆம் பிரிவு கூறியுள்ளது. இதன்படி, அரசியலமைப்பின் திருத்தம் பாராளுமன்றச் சபை ஒன்றில் ஒரு மசோதாவாகக் கொண்டுவரப் படலாம். இச் சபை ஒவ்வொன்றிலும் இம் மசோதா, சபையின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையோராலும், வந்திருந்து வாக்குச் செய்யும் இச் சபையின் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையோராலும் நிறைவேற்றப்படவேண்டும். பின் இத் திருத்த மசோதாவை ஜனாதிபதியின் இசைவைப் பெறச் சமர்ப்பிக்கவேண்டும். ஜனாதிபதி இம் மசோதாவிற்கு இசைவு அளித்ததும், இந்த அரசியலமைப்பு இம் மசோதாவின்படி திருத்தம் பெற்றதாகும்.

எனினும், இத்தகைய திருத்தம் :

(1) 54ஆம் பிரிவு (ஜனாதிபதியின் தேர்தல்); (அல்லது)
55ஆம் பிரிவு (ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் விதம்); (அல்லது)

73ஆம் பிரிவு (யூனியன் நிர்வாக அதிகாரத்தின் நீட்சி); (அல்லது)

162ஆம் பிரிவு (அரசின் நிர்வாக அதிகாரத்தின் அளவு); (அல்லது)

241ஆம் பிரிவு (யூனியன் ஆட்சிப் பரப்புகளுக்கான உயர் நீதிமன்றங்கள்); (அல்லது)

(2) 5ஆம் பாகத்தின் 4ஆம் அத்தியாயம் (யூனியன் நீதி மன்றம்) ; (அல்லது)

6ஆம் பாகத்தின் 5ஆம் அத்தியாயம் (அரசுகளின் உயர் நீதிமன்றங்கள்); (அல்லது)

11ஆம் பாகத்தின் 1ஆம் அத்தியாயம் (யூனியனுக்கும் அரசுகளுக்குமிடையே சட்டமியற்றற்குரிய உறவுகள்); (அல்லது)

(3) ஏழாவது தப்சிலில் உள்ள பட்டியல்களில் எதுவேனும் ; (அல்லது)

(4) பாராளுமன்றத்தில் அரசுகளுக்குள்ள பிரதிநிதித்துவம் ; (அல்லது)

(5) இப் பிரிவின் வாசகங்கள்.

இவற்றில் மாறுதல் செய்வதாய் இருந்தால், இத் திருத்தத்தைச் செய்வதற்கான மசோதா ஜனுதிபதியிடம் இசைவிற்காகச் சமர்ப்பிக்கப்படுமுன் அரசுகளில் பாதிக்குக் குறையாத சட்டசபைகளால் நிறைவேற்றப்பட்டவையும் இப் பயன் கொண்டவையுமான தீர்மானங்களின்மூலமாக இச் சட்டசபைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்.

இதைப்போன்ற திருத்த நடைமுறையை வேறெந்தக் கூட்டாட்சி அரசியலமைப்பிலும் காண்பதரிது. இந் நடைமுறையில் கடினமும் எளிமையும் கலந்து காணப்படுகின்றன.

அரசியல் நிர்ணய சபை தான் படைத்த அரசியலமைப்பைக் குறையற்றதாகவும் இறுதியானதாகவும் கருதவில்லை என்பதற்கு இதன் திருத்த நடைமுறைகள் சான்று கூறும்.

அமெரிக்க, ஆஸ்திரேலிய அரசியலமைப்புகளைத் திருத்தச் சிறப்பு முறைகளை மேற்கொண்டு நிறைவேற்றுவதுபோல் இல்லாமல், இந்திய அரசியலமைப்பைத் திருத்த மிக நெகிழ்ச்சியானதொரு நடைமுறையை அரசியலமைப்பு மக்களுக்கு அளித்திருக்கிறது.

## இந்திய அரசியலமைப்பு

இதுவரை பன்னிரண்டு முறை திருத்தப்பட்டிருக்கிறது.

**முதல் திருத்தம் :** 1951-ல் அரசியலமைப்பு முதல் முறையாகத் திருத்தப்பட்டது. இத் திருத்தத்தின் வாயிலாக ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டங்கள் பாதுகாக்கப்பட்டன. இச் சட்டங்கள் செல்லுபடியாகாதென நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. இதற்கென அரசியலமைப்பின் பிரிவுகள் 15, 19, 31, 85, 87, 174, 176, 341, 342, 372, 376 திருத்தப்பட்டன. புதியதொரு தப்சிலையும் (ஒன்பதாவது தப்சில்) அரசியலமைப்பில் இத்

திருத்தம் சேர்த்தது. அடிப்படையான உரிமைகளாகிய சட்டத்தின்முன் சமத்துவ உரிமை, பேச்சுரிமை, சொத்துரிமை இவைகளை மக்கள் துய்ப்பதில் இருந்துவந்த சிரமங்களைத் தவிர்க்கும்பொருட்டே இத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

**இரண்டாவது திருத்தம்:** *1952*-ல் நிறைவேறியது. இதன்படி ஒவ்வொரு *750,000* மக்களுக்கும் மக்கள்சபையில் ஓர் இடத்திற்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்ற வரம்பு நீக்கப்பட்டது. இதனுடன், மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர் எண்ணிக்கை 500-க்கு மேல் இருக்கலாகாதெனவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

**மூன்றாவது திருத்தம் (*1954*):** அரசியலமைப்பின் ஏழாவது தப்சிலில் குறிப்பிட்டுள்ள மூன்று பட்டியல்களிலும் சில மாற்றங்களைச் செய்தது.

*1955*ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *25*ஆம் தேதிவரை இந்தியப் பாராளுமன்றம் சில அவசியமான பண்டங்கள்பற்றிச் சட்டமியற்றலாமென்று அரசியலமைப்புக் கூறியிருந்தது. இக் காலவரையறை முடிந்தபின்னரும் பாராளுமன்றம் தொடர்ந்து இவ்வதிகாரத்தைப் பெற இத் திருத்தம் வழிசெய்கிறது.

**நான்காவது திருத்தம (*1955*):** அரசியலமைப்பின் *31*, *31*-அ பிரிவுகள் திருத்தப்பட்டன. *31*ஆம் பிரிவு திருத்தப்பட்டதன் விளைவாக அரசியலமைப்பின் ஒன்பதாவது தப்சிலில் ஏழு சட்டங்கள் புதியவாகச் சேர்க்கப்பட்டன. இதைப்போல் *305*ஆம் பிரிவும் திருத்தப்பட்டது. இதன்படி, ஏதாவது தொழில் அல்லது வியாபாரத்தை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்குப் பாராளுமன்றமோ, அரசுகளின் சட்டசபைகளோ சட்டமியற்றலாம் என்று தெளிவாக்கப்பட்டது.

**ஐந்தாவது திருத்தம் (*1955*):** அரசியலமைப்பின் *3*ஆவது பிரிவை மாற்றியமைத்தது. ஒரு புதிய அரசை அமைக்கவோ, ஓர் அரசின் பரப்பு, பெயர், எல்லைகளை மாற்றவோ முயலும் மசோதா குறித்து அரசு சட்டசபைகளின் கருத்தை ஜனாதிபதி பெறுவதற்குமுன் பாராளுமன்றத்தில் மசோதாவைக் கொணரலாகாதென அரசியலமைப்பின் *3*ஆம் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இதை இத் திருத்தம் மாற்றியது. இதன்படி, அரசுகளின் சட்டசபைகள் கருத்துத் தெரிவிப்பதற்கு ஒரு காலவரம்பை ஜனாதிபதி குறிப்பிடலாம். இக் காலவரம்பு கடந்தபின் பாராளுமன்றத்தில் மசோதாவைக் கொணரலாம்.

**ஆருவது திருத்தம்** *(1956):* அரசியலமைப்பின் ஏழாவது தப்சிலில் இன்னும் சில மாற்றங்களைச் செய்தது. பத்திரிகைகள் தவிர மற்றப் பண்டங்கள் சம்பந்தமாக அரசுகளிடையே நடக்கும் கொள்முதல்—விற்பனைகளுக்கு வரிவிதிப்பது குறித்து மத்திய அரசாங்கம் மட்டுமே சட்டமியற்றலாமென்று இத் திருத்தம் கூறுகிறது. இதையொட்டிப் பிரிவுகள் 269-ம் 286-ம் திருத்தப்பட்டன.

**ஏழாவது திருத்தம்** *(1956):* அரசியலமைப்பில் பல பெரிய மாற்றங்களை இது செய்ததெனலாம். இத் திருத்தம் அரசுகளின் சீரமைப்புப்பற்றியதாகும். அரசுகளின் பரப்பளவையும் எல்லைகளையும் மாற்றுவது, புதிய அரசுகளை அமைப்பது, ஏ, பி, சி என்ற அரசுப் பாகுபாடுகளை நீக்குவது, சில பகுதிகளை 'யூனியன் பிரதேசங்கள்' ஆக்குவது போன்ற ஏற்பாடுகளைச் செய்ய இத் திருத்தம் அவசியமாயிற்று. இதற்கேற்ப அரசியலமைப்பின் '1' ஆவது பிரிவும் முதலாவது தப்சிலும் மாற்றப்பட்டன.

அரசுகளின் சீரமைப்பைத் தொடர்ந்து ராஜ்யசபை, அரசுகள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றிற்குரிய இடங்களில் மாறுதல் செய்யவேண்டியிருந்தது. இதையொட்டி, அரசியலமைப்பின் நான்காவது தப்சில் மாற்றியமைக்கப்பட்டது.

மக்கள் சபையின் அமைப்புப்பற்றிய 81, 82ஆம் பிரிவுகளும் திருத்தப்பட்டன. யூனியன் பிரதேசங்களுக்காகப் பாராளுமன்றம் 20 இடங்களை ஒதுக்கலாம்.

இரண்டிற்கு மேற்பட்ட அரசுகளுக்கு ஒரே கவர்னரை நியமிக்க வசதி செய்யும்பொருட்டு 153ஆம் பிரிவு திருத்தப்பட்டது. அரசுகளின் அசெம்பிளி அமைப்புப்பற்றிய 170ஆம் பிரிவும் திருத்தப்பட்டது. அரசுகளின் மேல்சபை உறுப்பினர் தொகைபற்றிய 171 ஆம் பிரிவும் திருத்தப்பட்டது. இதன்படி, மேல்சபையின் உறுப்பினர் தொகை, ஓர் அரசின் அசெம்பிளியின் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கு என்ருகியிருக்கிறது.

உயர் நீதிமன்றங்கள்பற்றிய 216, 220, 224, 230, 231ஆம் பிரிவுகளும் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றன.

யூனியன் பிரதேசங்களின் நிர்வாக அமைப்பிற்கென அரசியலமைப்பின் 8ஆம் பாகம் திருத்தப்பட்டிருக்கிறது.

ஓர் அரசின் அலுவல்களை மத்திய அரசாங்கத்திடமோ, அதன் அலுவலர்களிடமோ கவர்னரிடமோ, ஒப்படைப்பதற்கு வசதியாக 258ஆம் பிரிவு திருத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு, கேரள அரசுகளின் தேவஸ்வம் நிதி பற்றிய பங்கை நிர்ணயிக்க 290-அ என்ற புதிய பிரிவை இத் திருத்தம் சேர்த்தது.

அரசுகள் ஒரு வியாபாரம் அல்லது ஒரு தொழிலை ஏற்று நடத்துவதற்கு வகை செய்ய வசதியாக அரசியலமைப்பின் 298ஆம் பிரிவு விரிவாக்கப்பட்டிருக்கிறது.

மொழிச்சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு 350-அ, 350-ஆ பிரிவுகள் புதியவாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

பிராந்தியக் கமிட்டிகளை நிறுவி அவற்றைச் சரிவர இயக்கு வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்க 371ஆம் பிரிவு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

அரசியலமைப்பின் ஏழாவது தப்சிலில் உள்ள இனங்களில் சில மாற்றங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இத் திருத்தத்தின் விளைவாக எழுந்த வேறு சில மாற்றங்களும் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

1956ஆம் ஆண்டிற்குப்பின் 1962 வரை ஐந்து தடவைகள் அரசியலமைப்புத் திருத்தம் செய்யப்பட்டது. இவைகளால் அரசிய லமைப்பில் பெரு மாறுதல்கள் ஏற்படவில்லை. பம்பாய் அரசு குஜராத், மகாராஷ்டிரமென அமைந்தபொழுதும், தாதர் ஹவாலி இந்தியாவுடன் சேர்ந்தபொழுதும் அரசியலமைப்பில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. நாகர்கள் வாழ்கின்ற மலைப்பகுதி களில் ஒரு தனி அரசை நிறுவுவதற்காகச் சில மாற்றங்கள் செய்யப் பட்டன. ஜனாதிபதி, உபஜனாதிபதி இவர்களின் தேர்தல்பற்றிய விதிமுறைகளில் மாற்றம் செய்ய அரசியலமைப்புத் திருத்தப் பட்டது. 1962ஆம் ஆண்டில் கோவா, டையூ, டாமன் முதலிய பகுதிகளை இந்தியாவுடன் இணைக்கும் வகையில் அவைகள் யூனியன் பிரதேசங்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இதற்கென முதலாவது தப்சில் திருத்தப்பட்டது.

அரசியலமைப்பின் பதின்மூன்றும் திருத்தத்தால் அரசிய லமைப்பின் 21ஆவது பாகம் திருத்தியமைக்கப்பெற்று நாகாலாந்திற்கெனச் சில சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பெற்றன (டிசம்பர் 28, 1962).

பதினான்காம் திருத்தத்தால் பிரிவுகள் 81, 239-A, 240 திருத்தி யமைக்கப்பட்டன. யூனியன் ஆட்சிப் பரப்புகள் தல சட்டசபை,

அமைச்சவை அல்லது இரண்டையும் பெற இத் திருத்தம் வழி செய்தது (டிசம்பர் 28, 1962).

அரசியலமைப்பின் பதினைந்தாம் திருத்தம் மாநில உயர் நீதி மன்ற நீதிபதிகள் ஓய்வுபெறும் வயதை 60-லிருந்து 62-க்கு உயர்த்தியது. ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு மாற்றப்படும் நீதிபதி சில சலுகைகளைப் பெறவும் இத் திருத்தம் வழிசெய்தது (அக்டோபர் 5, 1963).

பதினாறும் திருத்தம் 19ஆம் பிரிவின் உட்பிரிவுகளாகிய (2), (3), (4)-ஐயுப் திருத்தி, (1)ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ) ஆகிய உட்பிரிவுகள் அளிக்கும் உரிமைகள்மீது தக்க கட்டுப்பாடுகளை, அரசின் இறைமை, ஒருமைப்பாடு ஆகியவை கருதி, அரசு சட்டமியற்றி விதிக்கலாம். பிரிவுகள் 84, 173-ம், உறுதிமொழிபற்றிய மூன்றாவது ஷெட்யூலும் இதனால் திருத்தப்பெற்றன. பாராளுமன்ற, மாநிலச் சட்டமன்ற உறுப்பினரும், தலைமை, உயர் நீதி மன்ற நீதிபதிகளும், இந்தியாவின் தலைமைக் கணக்கர், பரிசோதகர் ஆகியோரும் இந்தியாவின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைபெறுத்துவதாக உறுதிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பதினேழாவது திருத்தம் (1964): இது அரசியலமைப்பின் 31ஆவது பிரிவைத் திருத்துகிறது. இதன்படி, ஒருவரின் சொந்தச் சாகுபடியிலிருக்கும் நிலத்தின் ஒரு பகுதியை (நில உச்சவரம்பிற்குட்பட்ட பகுதியை) அன்றைய நிலவரத்தில் உள்ள மார்க்கெட் மதிப்பின்படி இழப்பீடு அளிக்காமல் அரசு சட்டப்படி மேற்கொள்ள முடியாது. இது எஸ்டேட் (Estate) என்ற சொல்லை வரையறை செய்து, 64 நிலச் சீர்திருத்தச் சட்டங்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது.

தேர்தல் நீதிமன்றங்களை நீக்கவும், உத்தரப் பிரதேசத்தின் சில நீதிபதிகளின் பதவி நியமனங்களைச் செல்திறமுடையதாக்கவும், பஞ்சாப் மாநிலத்தைப் பஞ்சாப், ஹரியானா என இரண்டு அரசுகளாகச் சீரமைக்கவும், சண்டிகட் என்னும் மாநகரை யூனியன் ஆட்சிப் பரப்பிற்குட்படுத்தவும், சிந்தி மொழியை எட்டாவது ஷெட்யூலில் ஒரு தேசிய மொழியாகச் சேர்க்கவும் அரசியலமைப்பு திருத்தப்பெற்றது.

# அதிகாரப் பங்கீடு: ஏழாவது ஷெட்யூல்

## (பிரிவு 246)

### பட்டியல் ஒன்று

யூனியன் பட்டியல்

*1.* இந்தியாவின் பாதுகாப்பும், அதன் ஒவ்வொரு பாகத்தின் பாதுகாப்பும், பாதுகாப்பிற்கு ஆயத்தம் செய்தலும், போர்க் காலங்களில் போரை நடத்துவதற்கும், போர் முடிந்தபிறகு படைகளைக் கலைப்பதற்கும் வசதியாயுள்ள எல்லாக் காரியங்களும் உட்பட.

*2.* கடற் படைகள், இராணுவப் படைகள், விமானப் படைகள், யூனியனின் மற்றெந்த ஆயுதப் படைகளும்.

*3.* கன்டோன்மென்டு பிரதேசங்களின் எல்லைகளை வரையறுத்தலும், அத்தகைய பிரதேசங்களில் ஸ்தல சுய ஆட்சியும், அத்தகைய பிரதேசங்களில் கன்டோன்மென்டு அதிகார நிலையங்களின் அமைப்பும் அதிகாரங்களும், அத்தகைய பிரதேசங்களில் (வாடகைகளின் கட்டுப்பாடு உட்பட) வீட்டு வசதியை முறைப் படுத்தலும்.

*4.* கடற் படை, இராணுவப் படை, ஆகாயவிமானப் படை இவற்றின் மராமத்து வேலைகள்.

*5.* ஆயுதங்கள், சுடுபடைக்கலங்கள், வெடிமருந்து, வெடி குண்டுகள்.

*6.* அணுவின் சக்தியும், அதை உற்பத்தி செய்வதற்கு அவசியமாயுள்ள கனிப்பொருட் சாதனங்களும்.

7. பாதுகாப்பின் பொருட்டு அல்லது போரை நடத்துவதற்காக அவசியமெனச் சட்டத்திஞல் பாராளுமன்றம் அறிவித்த தொழில்கள்.

8. துப்பறிதல், துப்பாராய்ச்சி இவற்றிற்கான மத்தியக் காரியாலயம்.

9. பாதுகாப்பு, அந்நிய நாட்டு விவகாரங்கள், அல்லது இந்தியாவின் பந்தோபஸ்து இவைபற்றிய காரியங்களுக்காகத் தடுப்புக் காவல்; அத்தகைய பாதுகாவலுக்கு உட்பட்டவர்கள்.

(8, 9ஆவது பிரிவுகள் ஜம்மு-காஷ்மீர் அரசிற்குப் பிரயோகிக்கப்பட மாட்டா.)

10. அந்நிய நாட்டு விவகாரங்களும், ஓர் அந்நிய நாட்டுடன் யூனியனைச் சம்பந்தப்படுத்தும் எல்லாக் காரியங்களும்.

11. இராஜதந்திரம், இராஜரீகம், வியாபாரம் இவைபற்றிய பிரதிநிதித்துவம்.

12. ஐக்கிய நாட்டு ஸ்தாபனம்.

13 சர்வதேச மாநாடுகளிலும், கழகங்களிலும், இதர நிலையங்களிலும் கலந்துகொள்ளுதலும், அவைகளில் செய்யப்பட்ட தீர்மானங்களைச் செயல்படுத்துதலும்.

14. அந்நிய நாடுகளுடன் சமாதான ஒப்பந்தங்களையும் உடன்பாடுகளையும் செய்துகொள்ளுதலும், அந்நிய நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களையும் உடன்பாடுகளையும் செயல் படுத்துதலும்.

15. போரும் சமாதானமும்.

16. அயல் நாட்டில் விசாரணை அதிகாரம்.

17. குடிமையும், குடியாதலும், அந்நியர்களும்.

18. எக்ஸ்டிரடீஷன் (மீட்டொப்படைப்பு).

19. இந்தியாவிற்குள் வர அனுமதித்தலும், இந்தியாவிலிருந்து குடியேறுதலும், வெளியேற்றுதலும்; பாஸ்போர்ட்டுகள், விசாக்கள்.

20. இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங்களுக்கு யாத்திரைகள்.

21. மகாசமுத்திரங்களில் அல்லது ஆகாயத்தில் நிகழும் கொள்ளைகளும் குற்றங்களும்; நிலத்தில் அல்லது மகாசமுத்திரங்களில் அல்லது ஆகாயத்தில் சர்வதேசச் சட்டத்திற்கு விரோதமாக நிகழும் குற்றங்கள்.

22. ரயில்வேக்கள் (இருப்புப்பாதை).

23. தேசிய நெடுஞ்சாலைகள் என்று பாராளுமன்றத்தால் செய்த சட்டத்திலோ அல்லது அதன் கீழோ அறிவிக்கப்படும் நெடுஞ்சாலைகள்.

24. இயந்திர சக்தியினால் ஓட்டப்படும் மரக்கலங்கள் சம்பந்தமாகத் தேசிய நீர்ப்பாதைகள் என்று பாராளுமன்றத்தால் அறிவிக்கப்பட்ட உள்நாட்டு நீர்ப்பாதைகளில் செல்லும் கப்பல்களும் அவற்றைச் செலுத்தலும்; அத்தகைய பாதைகளின் வழியைப் பற்றிய விதி.

25. ஏற்றவற்ற நீர்களில் செல்லும் கப்பல்களும் அவற்றைச் செலுத்தலும் உட்பட சமுத்திரங்களில் செல்லும் கப்பல்களும் அவற்றைச் செலுத்தலும்; வியாபாரக் கப்பல்களை ஓட்டுபவர்களின் கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்தலும், அரசுகளாலும் மற்றைய நிறுவனங்களாலும் ஏற்படுத்தப்பட்ட அத்தகைய கல்வியையும் பயிற்சியையும் முறைப்படுத்தலும்.

26. கலங்கரை விளக்குக் கப்பல்கள் உட்பட எச்சரிக்கை ஒளிகள், கப்பல்கள், விமானங்கள் இவற்றின் பாதுகாப்பிற்கான மற்றைய ஏற்பாடுகள்.

27. பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தினால் அல்லது ஏற்கெனவே உள்ள சட்டத்தினால் அல்லது அதன்கீழ்ப் பெருந்துறைமுகங்கள் என்று அறிவிக்கப்படும் துறைமுகங்கள்—அவைகளின் எல்லைகளை வரையறுத்தலும், அவற்றில் துறைமுக அதிகாரிகளை அமைத்தலும், அந்த அதிகாரிகளின் அதிகாரங்களும் உட்பட.

28. துறைமுகத் தொத்துநோய் ஒதுக்கம், அதுபற்றிய வைத்தியசாலைகள் உட்பட; கப்பலோட்டிகளின் வைத்தியசாலைகள், கடற்கரை வைத்தியசாலைகள்.

**29.** ஆகாயப் பாதைகள்; விமானங்களும் விமானங்களைச் செலுத்தலும்; விமான நிலையங்களை ஏற்படுத்தல்; விமானப் போக்குவரத்தையும் விமான நிலையங்களையும் முறைப்படுத்தலும் ஏற்படுத்தலும்; விமானம் செலுத்துவதற்கான கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்தலும், அரசுகளாலும் மற்றைய நிறுவனங்களாலும் ஏற்படுத்தப்பட்ட அத்தகைய கல்வியையும் பயிற்சியையும் முறைப்படுத்தலும்.

**30.** ரயில், கடல் அல்லது ஆகாய வழியே அல்லது இயந்திர சக்தியினால் செலுத்தப்படும் மரக்கலங்களில் தேசிய நீர்ப்பாதைகளின் வழியே பிரயாணிகளையும் பண்டங்களையும் ஏற்றிச் செல்லல்.

**31.** தபால்கள், தந்திகள், டெலிஃபோன்கள், கம்பியில்லாத் தந்தி, ஒலிபரப்பு இவைபோன்ற மற்றைய செய்திப் போக்குவரத்துச் சாதனங்கள்.

**32.** யூனியனின் சொத்தும், அதிலிருந்து கிடைக்கும் வருவாயும்—ஆனால், ஓர் அரசிலுள்ள சொத்தைப்பற்றிப் பாராளுமன்றம் சட்டத்தினால் வேறு விதமாய் ஏற்பாடு செய்யும் வரையன்றி, அந்த அரசு சட்டம் செய்வதற்கு உட்பட்டு.

**33.** இப் பிரிவு, அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தால் விட்டுவிடப்பட்டது.

**34.** இந்தியச் சமஸ்தானங்களின் அதிபதிகளுடைய எஸ்டேட்டுகளுக்கான பரிபாலன நிலையங்கள். (இப் பிரிவு ஜம்மு-காஷ்மீர் அரசிற்குப் பிரயோகப்படாது.)

**35.** யூனியனின் தேசியக் கடன்கள்.

**36.** பணச் செலாவணியும், நாணயம் செய்யும் முறையும், சட்டம் ஒப்பிய செலாவணியும்; அந்நிய நாட்டுச் செலாவணிப் பரிவர்த்தனை.

**37.** அந்நியக் கடன்கள்.

**38.** இந்தியாவின் ரிசர்வ் பாங்கு.

**39.** தபால் அலுவலகச் சேமிப்பு பாங்கு.

**40.** இந்திய அரசாங்கத்தால் அல்லது ஓர் அரசின் அரசாங்கத்தால் தொடங்கி நடத்தப்படும் லாட்டரிகள்.

41. அந்நிய நாடுகளுடன் வியாபாரமும் வாணிபமும், சுங்க எல்லைகளைக் கடக்கும் இறக்குமதியும் ஏற்றுமதியும்; சுங்க எல்லைகளை வரையறுத்தல்.

42. அரசுகளிடையே வியாபாரமும் வாணிபமும்.

43. வியாபாரக் கம்பெனிகளைச் சட்டப்படி இணைத்தலும், முறைப்படுத்தலும், கலைத்தலும்—பாங்கிங் இன்சூரன்ஸ், நிதிக் கம்பெனிகள் உட்படவும், ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாகவும்.

ஜம்மு-காஷ்மீர் அரசிற்குப் பிரயோகிக்கையில் இவ்வினத்தைக் (43) கீழ்க்காணும் முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும். '43. கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக பாங்கிங், இன்சூரன்ஸ், நிதிக் கம்பெனிகளைச் சட்டப்படி இணைத்தலும் முறைப்படி கலைத்தலும்.'

44. ஓர் அரசிற்குமட்டுமே பிரயோகப்படாதவையான நோக்கங்களையுடைய — வியாபாரம் செய்யும் அல்லது செய்யாதவையான —கம்பெனிகளைச் சட்டப்படி இணைத்தலும், முறைப்படுத்தலும், கலைத்தலும்; பல்கலைக்கழகங்கள் நீங்கலாக.

ஜம்மு-காஷ்மீர் அரசிற்கு இது பிரயோகப்படாது.

45. பாங்கு நடவடிக்கைகள்.

46. மாற்று உண்டியல்கள், செக்குகள், பிராமிஸரி நோட்டுகள் இவைபோன்ற மற்றச் சாசனங்கள்.

47. இன்சூரன்ஸ்.

48. பங்கு மார்க்கெட்டுகள், வாய்தா மார்க்கெட்டுகள்.

49. பேடென்டுகளும், இன்சூரன்சுகளும், டிசைன்களும்; காப்பிரைட்; வியாபார அடையாளங்களும் வர்த்தகப் பண்ட அடையாளங்களும்.

50. எடைகளுக்கும் அளவைகளுக்கும் அலகுகளை ஏற்படுத்தல். (ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படாது.)

51. இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்வதற்கான அல்லது ஓர் அரசிலிருந்து மற்றோர் அரசிற்கு அனுப்புவதற்கான பண்டங்களின் தரத்தின் அலகுகளை ஏற்படுத்தல்.

52. பொதுநலத்திற்காக எக் கைத்தொழில்களை யூனியனின் மேலதிகாரத்திற்கு உட்படுத்துதல் உசிதமாய் இருக்குமெனப் பாராளுமன்றம் சட்டத்தினுல் அறிவிக்கிறதோ, அக் கைத் தொழில்கள்.

(ஜம்மு - காஷ்மீருக்குப் பிரயோகப்படாது).

53. எண்ணெய்ப் புலங்கள், கனி எண்ணெய்ப் பொருட் சாதனங்கள் இவற்றை முறைப்படுத்தலும் விருத்தி செய்தலும்; பெட்ரோலியமும் பெட்ரோலியப் பொருள்களும், அபாயகரமாகத் தீப்பற்றக்கூடியவை எனப் பாராளுமன்றத்தால் சட்டத்தினுல் அறிவிக்கப்பட்ட மற்றைய திரவங்களும் பொருள்களும்.

54. யூனியனின் மேலதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டுப் பொது நலனின்பொருட்டு உசிதம் எனப் பாராளுமன்றத்தால் சட்டத் தினுல் அறிவிக்கப்படும் அளவிற்குச் சுரங்கங்களை முறைப் படுத்தலும் கனிப்பொருள்களை அபிவிருத்தி செய்தலும்.

55. சுரங்கங்களிலும் எண்ணெய்ப் புலங்களிலும் வேலை செய்தலையும் பாதுகாப்பையும் முறைப்படுத்தல். (ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படாது).

56. யூனியனின் மேலதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டுப் பொது நலத்தின்பொருட்டு உசிதம் எனப் பாராளுமன்றத்தால் சட்டத் தினுல் அறிவிக்கப்படும் அளவிற்குப் பல அரசுகளிலுள்ள ஆறு களையும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் முறைப்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்.

57. ஆட்சிப் பரப்பின் நீர்களுக்கு அப்பால் மீன்பிடித்தலும் மீன்பண்ணைகளும்.

58. யூனியன் அதிகாரத்திற்குட்பட்ட நிலையங்கள் உப்பை உற்பத்தி செய்தலும், சப்ளை செய்தலும், வினியோகித்தலும்; மற்ற நிலையங்கள் உப்பை உற்பத்தி செய்தல், சப்ளை செய்தல், வினியோகித்தல் இவற்றை முறைப்படுத்தலும் மேலதிகாரத் திற்கு உட்படுத்தலும்.

59. அபினியின் சாகுபடியும், உற்பத்தியும், ஏற்றுமதிக்கான விற்பனையும்.

60. சினிமாப் படங்களைக் காட்டுவதற்கு அனுமதி கொடுத்தல். (ஜம்மு - காஷ்மீருக்குப் பிரயோகப்படாது.)

61. யூனியனின் வேலையாள்களைப்பற்றிய தொழில் தகராறுகள்.

62. இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் தேசிய நூல் நிலையம், இந்திய மியூசியம், இம்பீரியல் யுத்த மியூசியம், விக்டோரியா மெமோரியல், இந்திய யுத்த மெமோரியல் என வழங்கும் ஸ்தாபனங்களும் முழுவதுமோ ஒரு பாகமோ இந்திய அரசாங்கத்தின் செலவில் நடைபெறுவனவும், தேசிய முக்கியத் துவம் வாய்ந்த ஸ்தாபனம் எனப் பாராளுமன்றத்தால் சட்டத்தினுல் அறிவிக்கப்படுவனவுமான அவை போன்ற மற்றெந்த ஸ்தாபனமும்.

63. இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் பெனுரஸ் இந்து பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம் என வழங்கும் ஸ்தாபனங்களும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது எனப் பாராளுமன்றத்தால் சட்டத் தினுல் அறிவிக்கப்பட்ட மற்றெந்த ஸ்தாபனமும்.

64. விஞ்ஞான அல்லது கைத்தொழிற் பயிற்சிக் கல்விக்காக என்று ஏற்படுத்தப்பட்டவையும், முழுவதுமோ ஒரு பாகமோ இந்திய அரசாங்கத்தின் செலவில் நடைபெறுபவையும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தாபனங்கள் எனப் பாராளுமன்றத்தால் சட்டத்திலுல் அறிவிக்கப்படுபவையுமான ஸ்தாபனங்கள்.

65. (அ) உத்தியோகம், வேலை அல்லது கைத்தொழில் இவைபற்றிய பயிற்சி—போலீஸ் உத்தியோகஸ்தர்களின் பயிற்சி உட்பட; அல்லது

(ஆ) விசேஷப் படிப்புகளை அல்லது ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தல்; அல்லது

(இ) குற்றத்தை ஆராய்தல் அல்லது கண்டுபிடித்தல், இவற்றில் விஞ்ஞான அல்லது தொழில் முறையில் உதவி புரிதல் இவற்றிற்கான யூனியன் நிலையங்களும் ஸ்தாபனங்களும்.

66. உயர்தரக் கல்வி அல்லது ஆராய்ச்சிக்கான ஸ்தாபனங் கள், விஞ்ஞான ஸ்தாபனங்கள், தொழிற் பயிற்சி ஸ்தாபனங்கள் இவற்றின் தரங்களை ஒருமைப்படுத்தலும் நிர்ணயித்தலும்.

67. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பாராளு மன்றச் சட்டத்தினுல் (அல்லது அதன்கீழ்) அறிவிக்கும் புராதன மானவையும் சரித்திர சம்பந்தமானவையுமான ஞாபகச் சின்னங் களும், தஸ்தாவேஜுகளும், பழம் பொருள் இடங்களும் சிதைவு களும்.

ஜம்மு - காஷ்மீருக்குப் பிரயோகப்படுகையில் 67ஆம் பதிவிற்குப் பதிலாகக் கீழ்க்கண்ட பதிவை அமைத்துக்கொள்ள வேண்டும் :

'67. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பாராளு மன்றம் சட்டத்தினுல் அறிவிக்கும் புராதனமானவையும் சரித்திர சம்பந்தமானவையுமான ஞாபகச் சின்னங்களும் பழம்பொருட் சிதைவுகளும்.'

**68.** இந்தியாவின் சர்வே இலாகா, இந்தியாவின் நிலநூல், தாவர நூல், விலங்கு நூல், மானிட நூல் இவைபற்றிய இந்தியாவின் சர்வே இலாகாக்கள் ; வானிலை ஆராய்ச்சி ஸ்தாபனங்கள்.

**69.** ஜனசங்கியை.

(ஜம்மு - காஷ்மீருக்குப் பிரயோகப்படாது.)

**70.** யூனியன் பொதுச் சேவை வர்க்கங்கள் ; அகில இந்திய சேவை வர்க்கங்கள், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்.

**71.** யூனியன் பென்ஷன்கள், இந்திய அரசாங்கத்தால் அல்லது இந்தியாவின் திரண்ட நிதியிலிருந்து கொடுக்கலாகும் பென்ஷன்கள்.

**72.** பாராளுமன்றத்திற்கும் அரசுகளின் சட்டசபைகளுக்கும் ஜனுதிபதி, உபஜனுதிபதி இவர்களின் பதவிகளுக்குத் தேர்தல்கள் ; தேர்தல் கமிஷன்.

**73.** பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள், ராஜ்யசபையின் தலைவர், உபதலைவர், மக்கட் சபையின் சபாநாயகர், உப சபாநாயகர் இவர்களின் சம்பளங்களும் படிகளும்.

**74.** ஒவ்வொரு பாராளுமன்றச் சபை, ஒவ்வொரு சபையின் உறுப்பினர்கள், கமிட்டிகள் இவற்றின் அதிகாரங்களும், சிறப்புரிமைகளும், பாதுகாப்புகளும் ; பாராளுமன்றக் கமிட்டிகளின் முன்னிலையிலோ, பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட கமிஷன்களின் முன்னிலையிலோ சாட்சியம் கொடுப்பதற்கோ, தஸ்தாவேஜுகள் கொணருதற்கோ நபர்கள் வந்திருக்கும்படி செய்தல்.

**75.** ஜனுதிபதி, கவர்னர்கள் இவர்களின் ஊதியங்களும், படிகளும், சிறப்புரிமைகளும், லீவுபற்றிய உரிமைகளும் ; யூனியன்

அமைச்சர்களுடைய சம்பளங்களும் படிகளும்; மாபெருங் கணக்கர்-பரிசோதகருடைய சம்பளங்களும், படிகளும் லீவு உரிமைகளும், மற்றைய சேவை நிபந்தனைகளும்.

76. யூனியன், அரசுகள் இவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்தல்.

77. தலைமை நீதிமன்றத்தின் அமைப்பும், ஒழுங்கும் விசாரணை அதிகாரமும் (அம் மன்றத்தின் அவமதிப்பு உட்பட), அங்கே வாங்கப்படும் கட்டணங்களும்; தலைமை நீதிமன்றத்தின் முன்னிலையில் வாதம் செய்ய உரிமையுடையவர்கள்.

78. உயர்நீதிமன்ற அலுவலர்களைப்பற்றியும் சேவையாளர் களைப்பற்றியுமானவை நீங்கலாக, உயர் நீதிமன்றங்களின் அமைப் பும் ஒழுங்கும். உயர்நீதிமன்றங்களின் முன்னிலையில் வாதம் செய்ய உரிமையுடையவர்கள்.

(ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகிக்கப்படாது).

79. ஓர் உயர்நீதிமன்றத்தின் விசாரணை—அதிகாரத்தை ஒரு யூனியன் ஆட்சிப் பரப்பிற்கு வியாபிக்கச் செய்தலும் அப் பரப்பி லிருந்து விலக்குதலும்.

80. ஓர் அரசிற்குரிய போலீஸ் படை ஒன்றைச் சேர்ந்தவர் களின் சக்திகளையும் விசாரணை அதிகாரத்தையும் அந்த அரசிற்கு வெளியேயுள்ள ஒரு பிரதேசத்திற்கு—ஆனால், ஓர் அரசின் போலீஸார் அந்த அரசிற்கு வெளியேயுள்ள ஒரு பிரதேசம் உள்ள அரசின் அரசாங்கத்தின் சம்மதமின்றி அப் பிரதேசத்தில் சக்திகளை யும் விசாரணை அதிகாரத்தையும் செலுத்த முடியாமலிருக்கும்படி யாக—வியாபிக்கச் செய்தல்; ஓர் அரசைச் சேர்ந்த போலீஸ் படைகளிலுள்ளவர்களின் சக்திகளையும் விசாரணை அதிகாரத்தை யும் அந்த அரசிற்கு வெளியேயுள்ள ரெயில்வே பிரதேசங்களுக்கு வியாபிக்கச் செய்தல்.

81. அரசுகளிடையே மக்களின் இடமாற்றம்; அரசுக ளிடையே குவாரன்டைன்.

(ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படுகையில் 'அரசுக ளிடையே குவாரான்டைன்' என்னும் சொற்களை விட்டுவிட வேண்டும்).

82. விவசாய வருமானமல்லாத மற்றைய வருமானத்தின் மீது வரிகள்.

83. ஏற்றுமதித் தீர்வைகள் உட்படச் சுங்கத் தீர்வைகள்.

84. (அ) மனிதர்கள் உட்கொள்ளும் மதுபானங்களும்.

(ஆ) அபினியும், இந்தியச் சணலும், போதை உண்டாக்கும் இதர மருந்துச் சரக்குகளும், போதைப் பொருள்களும் தவிரவும்—ஆனால், மதுசாரம் அல்லது இப் பதிவின் (ஆ) உபபாராவில் சேர்ந்துள்ள ஒரு வஸ்து அடங்கியுள்ள மருந்துப் பொருள்களும் வண்ண நறும் பொருள்களும் உட்படவும்—இந்தியாவில் தயார் செய்யப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் புகையிலை, மற்றப் பண்டங்கள் இவற்றின்மீது கலால் தீர்வைகள்.

85. கார்ப்பொரேஷன் வரி.

86. தனி மனிதர்களுடையவும் கம்பெனிகளுடையவுமான ஆஸ்திகளின், விவசாய நிலம் நீங்கலாக, மூலதன மதிப்பின்மீது வரிகள் ; கம்பெனிகளின் மூலதனத்தின்மீது வரிகள்.

87. விவசாய நிலமல்லாத மற்றைய சொத்துப் பற்றிய எஸ்டேட்டு தீர்வைகள்.

88. விவசாய நிலமல்லாத மற்றைய சொத்திற்கு வாரிசு பாத்தியம்பற்றிய தீர்வைகள்.

89. ரெயில், கடல், அல்லது ஆகாயமார்க்கமாக ஏற்றிக் கொண்டு போகப்படும் பண்டங்கள் அல்லது பிரயாணிகளின்மீது ஆதி—அந்த வரி ; ரெயில்வேக் கட்டணங்கள், கேவுகளின்மீது வரிகள்.

90. பங்கு மார்க்கெட்டுகளிலும் வாய்தா மார்க்கெட்டு களிலும் நடைபெறும் காரியங்கள்மீது ஸ்டாம்பு தீர்வை களல்லாத மற்றைய வரிகள்.

91. மாற்று உண்டியல்கள், செக்குகள், பிராமிசரி நோட்டு கள், வார்நாமாக்கள், பண அனுமதிச் சீட்டுகள், இன்சூரென்சு பாலிசிகள், பங்குகளின் மாற்றம், டிபெஞ்சர்கள், பிரதிநிதிச் சீட்டுகள், ரசீதுகள் இவைபற்றிய ஸ்டாம்பு தீர்வை விகிதங்கள்.

92. செய்தித்தாள்களின் விற்றல் அல்லது வாங்குதல்மீதும், அவைகளில் வெளியாகும் விளம்பரங்கள் மீதும் வரிகள்.

92. (அ) செய்தித்தாள்கள் நீங்கலாகப் பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதல் அரசுகளிடையே வியாபாரம் அல்லது வர்த்தகம் நடைபெறுகையில் நிகழ்ந்தால், அப்படி விற்றல் அல்லது வாங்குதல்பற்றிய வரிகள்.

93. இந்தப் பட்டியலில் உள்ள எவைபற்றியேனும் செய்த சட்டங்களுக்கு விரோதமான குற்றங்கள்.

94. இந்தப் பட்டியலில் உள்ளவைகளில் எதன்பொருட்டும் விசாரணைகளும், சர்வேக்களும், புள்ளிவிவரங்களும்.

95. இந்தப் பட்டியலில் உள்ளவைகளில் எதுபற்றியேனும் எல்லா நீதிமன்றங்களின்—தலைமை நீதிமன்றம் தவிர—விசாரணை அதிகாரமும் சக்திகளும்; அட்மிரால்ட்டி விசாரணை—அதிகாரம்.

96. இந்தப் பட்டியலில் உள்ளவைகளில் எதுபற்றியேனும் கட்டணங்கள், ஆனால், ஒரு நீதிமன்றத்திலே வாங்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

97. இரண்டாவது பட்டியலிலாவது மூன்றாவது பட்டியலிலாவது குறிப்பிடாத மற்றெதுவும்—இந்த இரண்டு பட்டியல்களில் எதிலும் கூறப்படாத எந்த வரியும் உட்பட.

## பட்டியல் இரண்டு

அரசு பட்டியல்

1. பொது அமைதி (ஆனால், சிவில் அதிகாரத்திற்கு உதவி புரியும் யூனியன் கடற்படைகளின் அல்லது இராணுவப் படைகளின், விமானப் படைகளின் அல்லது மற்றெந்த ஆயுதப் படைகளின் உபயோகம் இதில் அடங்காது).

2. போலீஸ்—ரயில்வே போலீஸும் கிராமப் போலீஸும்.

3. நீதிநிர்வாகம்; தலைமை நீதிமன்றத்தையும் உயர் நீதிமன்றத்தையும் தவிர மற்றெல்லா நீதிமன்றங்களின் அமைப்பும் ஒழுங்கும்; உயர் நீதிமன்றத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும்; வாடகை அல்லது குத்தகைக் கோர்ட்டுகள், ரெவின்யூ கோர்ட்டுகள் இவற்றின் நடைமுறையில் தலைமை நீதிமன்றம் தவிர மற்றெல்லா நீதிமன்றங்களிலும் வாங்கப்படும் ஃபீசுகள்.

4. சிறைச்சாலைகளும், பார்ஸ்டல் ஸ்தாபனங்களும், அவற்றைப் போன்ற இதர ஸ்தாபனங்களும், அவற்றில் வைக்கப்பட்டிருப்பவர்களும்; சிறைச்சாலைகளையும் இதர ஸ்தாபனங்களையும் உபயோகித்தலைப்பற்றிய மற்றைய அரசுகளுடன் ஏற்பாடுகள்.

5. ஸ்தல ஆட்சி, அதாவது, ஸ்தல சுய ஆட்சி அல்லது கிராம நிர்வாகக் காரியத்திற்காக நகராட்சி ஸ்தாபனங்கள், அபிவிருத்தி ஸ்தாபனங்கள், மாவட்ட போர்டுகள், சுரங்கக் குடியேற்ற அதிகாரிகள், மற்ற ஸ்தல அதிகாரிகள் இவற்றின் அமைப்பும் அதிகாரங்களும்.

6. பொது ஆரோக்கியமும் சுகாதாரமும்; வைத்தியசாலைகளும் டிஸ்பென்ஸரிகளும்.

7. இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங்களுக்குச் செய்யப்படும் யாத்திரைகளல்லாதனவான மற்ற யாத்திரைகள்.

8. போதை தரும் மதுசாரங்கள், அதாவது, போதை தரும் மதுசாரங்களை உற்பத்தி செய்தல், தயாரித்தல், வைத்திருத்தல், அனுப்புதல், வாங்குதல், விற்பனை செய்தல்.

9. ஊனமுற்றோருக்கும் வேலைக்குத் தகுதியற்றவருக்கும் வசதி அளித்தல்.

10. புதைத்தலும் இடுகாடுகளும்; தகனம் செய்தலும் சுடுகாடுகளும்.

11. 1ஆவது பட்டியலின் 63, 64, 65, 66ஆம் பதிவுகளிலும் 3ஆம் பட்டியலின் 25ஆம் பதிவுகளிலும் உள்ளவைகளுக்கு உட்பட்டு—பல்கலைக்கழகங்கள் உட்பட—கல்வி.

12. அரசின் மேலதிகாரத்திற்கு உட்பட்ட அல்லது அதன் செலவில் நடைபெறும் புத்தக நிலையங்களும் மியூசியங்களும் அவை போன்ற நிறுவனங்களும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று பாராளுமன்றத்தின் சட்டத்தால் (அல்லது அதன் கீழ்) அறிவிக்கப்படுபவை அல்லாத மற்றைய பூர்வீகமானவையும் வரலாற்றுச் சிறப்புப் பெற்றவையுமான ஞாபகச் சின்னங்களும் தஸ்தாவேஜுகளும்.

13. போக்குவரத்து மார்க்கங்கள், அதாவது, பாட்டைகள், பாலங்கள், ஓடத்துறைகள், 1ஆம் பட்டியலில் குறிப்பிட்டிராத

மற்றைய போக்குவரத்து மார்க்கங்கள்; முனிசிபல் டிராம் வேக்கள்; ரோட்வேக்கள்; உள்நாட்டு நீர்ப்பாதைகளும் அந்த நீர்ப்பாதைகள் சம்பந்தமாக 1ஆம் பட்டியலிலும் 3ஆம் பட்டியலிலும் உள்ள இனங்களுக்குட்பட்டு அவைகளில் நடைபெறும் போக்குவரத்தும்; யந்திர சக்தியினால் செலுத்தப்படும் வண்டிகளல்லாத மற்றைய வண்டிகள்.

14. விவசாயம்—விவசாயக் கல்வியும் ஆராய்ச்சியும் தாவரத் தொத்துநோய்ப் பாதுகாப்பு, தாவர நோய்த் தடை உட்பட.

15. கால்நடைகளைப் பேணுதலும், பாதுகாத்தலும், அபிவிருத்தி செய்தலும், விலங்கு நோய்களைத் தடுத்தலும்; மிருக வைத்தியப் பயிற்சியும் வைத்தியமும்.

17. தண்ணீர், அதாவது, 1ஆம் பட்டியலின் 56ஆம் பதிவிற்கு உட்பட்டு, தண்ணீர் சப்ளை, நீர்ப்பாசனமும் கால்வாய்களும், வடிகால்களும், கரைகளும்—தண்ணீர்த் தேக்கமும் நீர்ச் சக்தியும்.

18. நிலம், அதாவது, நிலத்திலோ, நிலத்தின்மீதோ உள்ள உரிமைகள்: நிலச்சுவான்தாருக்கும் குடியானவருக்கும் உள்ள உறவு உட்படக் காணியாட்சி முறைகளும் குத்தகை வசூலும்; விவசாய நிலத்தை மாற்றுதலும் பராதீனம் செய்தலும்; நில அபிவிருத்தியும் விவசாயக் கடன்களும்; குடியேற்றம்.

19. காடுகள்.

20. காட்டு மிருகங்களையும் பறவைகளையும் பாதுகாத்தல்.

21. மீன்பண்ணைகள்.

22. 1ஆம் பட்டியலின் 34ஆம் பதிவிற்குட்பட்டு கோர்ட் ஆஃப் வார்டுகள்; வில்லங்கத்திற்கு உட்பட்டவைகளும் ஜப்தி செய்யப்பட்டவைகளுமான எஸ்டேட்டுகள்.

23. யூனியனின் மேல்திகாரத்திற்குட்பட்டு முறைப்படுத்துதல் சம்பந்தமாகவும் அபிவிருத்தி செய்தல் சம்பந்தமாகவும் 1ஆம் பட்டியலின் இனங்களுக்குட்பட்டுச் சுரங்கங்களை முறைப்படுத்துதலும் கனிப்பொருளை அபிவிருத்தி செய்தலும்.

24. 1ஆம் பட்டியலின் 7ஆம், 52ஆம் பதிவுகளுக்குட்பட்டுத் தொழில்கள்.

25. எரிவாயு, எரிவாயு உற்பத்திச்சாலைகள்.

26. 3ஆம் பட்டியலின் 33ஆம் பதிவிற்குட்பட்டு அரசிற்குள் வியாபாரமும் வாணிபமும்.

27. 3ஆம் பட்டியலின் 33ஆம் பதிவிற்குட்பட்டுப் பண்டங்களின் உற்பத்தி, சப்ளை, வினியோகம்.

28. மார்க்கெட்டுகளும் சந்தைகளும்.

29. எடைகளும் அளவைகளும்—அலகுகளை ஏற்படுத்துதல் தவிர.

30. கடன் சொடுக்கும் தொழிலும் கடன் கொடுப்பவர்களும் ; விவசாயிகளின் கடன் நிவாரணம்.

31. விடுதிகளும் விடுதிக்காரர்களும்.

32. 1ஆம் பட்டியலில் குறிப்பிட்டிருப்பவையல்லாதனவான மற்றைய கார்ப்பொரேஷன்களையும் பல்கலைக்கழகங்களையும் சட்டப்படி இணைத்தலும் முறைப்படுத்தலும் கலைத்தலும் ; சட்டப்படி இணைக்கப்பட்டிராத வியாபார, இலக்கிய, விஞ்ஞான, சமயச் சங்கங்களும் கழகங்களும், மற்றைய சங்கங்களும் கழகங்களும் ; கூட்டுறவுச் சங்கங்கள்.

33. நாடகசாலைகளும் நாடக ஆட்டங்களும் ; 1ஆம் பட்டியலின் 60ஆம் பதிவிற்குட்பட்டுச் சினிமாக்கள், விளையாட்டுகள், வேடிக்கைகள், கேளிக்கைகள்.

34. பந்தயம் ஓட்டுதலும் சூதாடுதலும்.

35. அரசிடம் நிலைபெற்றிருக்கும் அல்லது அதன் சுவாதீனத்திலுள்ள பணிகளும், நிலங்களும், கட்டடங்களும்.

36. .................... (இப் பதிவு அரசியலமைப்பின் ஏழாவது திருத்தத்தால் நீக்கப்பட்டுள்ளது.)

37. பாராளுமன்றத்தால் செய்யப்படும் ஒரு சட்டத்திற்குட்பட்டு அரசின் சட்டசபைக்குத் தேர்தல்.

38. அரசின் சட்டசபையின் உறுப்பினர்கள், சபாநாயகர், உதவிச் சபாநாயகர், கவுன்சில் ஒன்றிருந்தால் அதன் தலைவர், உதவித் தலைவர் இவர்களின் சம்பளங்களும் படிகளும்.

39. அசெம்பிளி (கீழ்ச்சபை), அதன் உறுப்பினர்கள், கமிட்டிகள், கவுன்சில் (மேல்சபை) ஒன்றிருந்தால் அக் கவுன்சில், அதன் உறுப்பினர்கள், கமிட்டிகள் இவற்றின் அதிகாரங்களும், சிறப்புரிமைகளும், பாதுகாப்புகளும் ; அரசின் சட்டசபையின் கமிட்டிகளின் முன்னிலையில் சாட்சியம் கொடுப்பதற்கோ, தஸ்தாவேஜுகள் கொணர்வதற்கோ நபர்கள் வந்திருக்கும்படி செய்தல்.

40. அரசின் அமைச்சர்களின் சம்பளங்களும் படிகளும்.

41. அரசின் பொதுச் சேவை வர்க்கங்கள் ; அரசின் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்.

42. அரசு பென்ஷன்கள், அதாவது, அரசினால் அல்லது அரசின் திரண்ட நிதியிலிருந்து கொடுக்கலாகும் பென்ஷன்கள்.

43. அரசின் பொதுக் கடன்கள்.

44. புதையல்.

45. நில வருமானம்—வரி விதித்தலும் வசூலித்தலும், நில தஸ்தாவேஜுகளைப் பதித்துவைத்தல், அரசிறைக்கான சர்வே, நில உரிமை ரிக்கார்டுகள், அரசிறைகளைப் பராதீனம் செய்தல் இவை உட்பட.

46. விவசாய வருமானத்தின்மீது வரிகள்.

47. விவசாய நிலத்திற்கு வாரிசு பாத்தியம் பற்றிய தீர்வைகள்.

48. விவசாய நிலம்பற்றிய எஸ்டேட்டுத் தீர்வைகள்.

49. நிலங்கள், கட்டடங்கள் இவற்றின்மீது வரிகள்.

50. கனிப்பொருள்பற்றிய உரிமைகள்மீது வரிகள்—கனிப்பொருள் அபிவிருத்தி பற்றிப் பாராளுமன்றம் சட்டத்தினால் விதிக்கும் எந்த வரையறைகளுக்கேனும் உட்பட்டு.

51. அரசில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் பின்வரும் பண்டங்களின்மீது கலால் தீர்வைகளும், இந்தியாவில் வேறெங்கேனும் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் அதே மாதிரியான பண்டங்களின் மீது அந்த விகிதங்களின்படியோ அல்லது குறைந்த விகிதங்களின்படியோ எதிர்த் தீர்வைகள் :

(அ) மனிதர்கள் உட்கொள்ளும் மதுபானங்கள்.

(ஆ) அபினியும், இந்தியச் சணலும், போதை உண்டாக்கும் இதர மருந்துச் சரக்குகளும் போதைப் பொருள்களும் ;

ஆனால், மதுசாரம் அல்லது இப் பதிவின் (ஆ) உட்பிரிவில் சேர்த்துள்ள ஒரு பொருள் அடங்கியுள்ள மருந்தும் பொருள்களும் வண்ண நறும்பொருள்களும் நீங்கலாக.

52. ஸ்தலப் பிரதேசத்திற்குள் செலவழிப்பதற்கோ உபயோகிப்பதற்கோ, அல்லது விற்பனை செய்வதற்கோ கொண்டு வருகைமீது வரிகள்.

53. மின்சாரத்தின் உபயோகம் அல்லது விற்பனையின்மீது வரிகள்.

54. செய்தித்தாள்கள் அல்லாதனவான மற்றைய பண்டங்களின் விற்றல் அல்லது வாங்குதல்மீது 1ஆம் பட்டியலின் 92 (அ) பதிவிலுள்ளதற்குட்பட்டு வரிகள்.

55. செய்தித்தாள்களில் வெளியாகும் விளம்பரங்கள் அல்லாதனவான மற்றைய விளம்பரங்கள்மீது வரிகள்.

56. ரஸ்தா மார்க்கமாக அல்லது உள்நாட்டு நீர்ப்பாதைகள் மூலமாக ஏற்றிக்கொண்டு போகப்படும் பண்டங்களின்மீதும் பிரயாணிகளின்மீதும் வரிகள்.

57. ரஸ்தாக்களில் உபயோகிக்கப்படத்தக்க வாகனங்களின் மீது—டிராம் வண்டிகள் உட்பட—யந்திர சக்தியால் செலுத்தப் படாவிட்டாலும்—வரிகள் 3ஆம் பட்டியலின் 35ஆம் பதிவிற் குட்பட்டு.

58. பிரயாணிகளின்மீதும் படகுகளின்மீதும் வரிகள்.

59. சுங்கங்கள்.

60. தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள், வேலைகள் இவைகளின்மீது வரிகள்.

61. தலைக்கட்டு வரிகள்.

62. போக்கியப் பொருள்களுக்கு வரிகள்—வேடிக்கைகள், கேளிக்கைகள், பந்தயம் ஓட்டுதல், சூதாட்டம் இவைகளின்மீது விதிக்கப்படும் வரிகள்.

63. ஸ்டாம்பு தீர்வை விகிதங்கள் சம்பந்தமாய் 1ஆம் பட்டியலின் பதிவுகளில் குறிப்பிட்டிருப்பவை அல்லாதனவான மற்றைய தஸ்தாவேஜுகள்பற்றிய ஸ்டாம்பு தீர்வை விகிதங்கள்.

64. இப் பட்டியலில் உள்ளவை எதுபற்றியேனும் செய்த சட்டங்களுக்கு விரோதமான குற்றங்கள்.

65. இப் பட்டியலில் உள்ளவை எதுபற்றியேனும் எல்லா நீதி மன்றங்களின்—தலைமை நீதிமன்றம் தவிர—விசாரணை அதிகார மும் சக்திகளும்.

66. இப் பட்டியலில் உள்ளவைகளில் எதுபற்றியேனும் கட்டணங்கள், ஆனால், நீதிமன்றத்தில் வாங்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

## பட்டியல் மூன்று

### பொதுப் பட்டியல்

1. கிரிமினல் சட்டம்—இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் இந்தியப் பீனல் கோடில் சேர்க்கப்பட்டனவும், ஆனால், முதலாவது அல்லது இரண்டாவது பட்டியலில் குறிப்பிட்டவை களில் எதுபற்றியேனும் செய்த சட்டங்களுக்கு விரோதமான குற்றங்கள் நீங்கலாக, சிவில் அதிகாரத்திற்குத் துணையாக யூனியனின் கடற்படைகள், இராணுவப் படைகள், அல்லது விமானப் படைகளையாவது மற்றெந்த ஆயுதப்படைகளையாவது உபயோகித்தல் நீங்கலாகவும்.

2. கிரிமினல் வழக்கு முறை—இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தில் சேர்க்கப் பட்டிருந்தவைகள் உட்பட.

3. ஓர் அரசின் பாதுகாப்பு, பொது அமைதியைப் பாது காத்தல் அல்லது சமுதாயத்திற்கு அவசியமான சப்ளைகளையும் சேவைகளையும் பாதுகாத்தல் இவைபற்றியவற்றிற்காகத் தடைப் பாதுகாவல் அத்தகைய பாதுகாவலுக்கு உட்பட்டவர்கள்.

4. கைதிகளையும் குற்றம் சாட்டப்பட்டவர்களையும் இந்தப் பட்டியலில் 3ஆம் பதிவில் குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தடைப் பாதுகாவலுக்கு உட்படுத்தப்பட்டவர்களையும் ஓர் அரசிலிருந்து மற்றோர் அரசிற்கு அகற்றுதல்.

5. விவாகமும் விவாக ரத்தும், சிசுக்களும், மைனர்களும், சுவிகாரமும், உயில், உயிலற்ற வாரிசுரிமை, வாரிசுரிமை, அவிபக்த குடும்பமும் பாகப்பிரிவினையும்; இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக நீதிமன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் எவ்வெப்பொருள்களில் தம்மினச் சட்டத்திற்குட்பட்டிருந்தார்களோ அவையெல்லாம்.

6. விவசாய நிலமல்லாத மற்றைய சொத்தை மாற்றுதல், பத்திரங்களையும் தஸ்தாவேஜுகளையும் பதிவு செய்தல்.

7. ஒப்பந்தங்கள்—கூட்டுப் பங்கு ஏஜென்ஸி, பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தங்கள், மற்றைய வகைச் சிறப்பு ஒப்பந்தங்கள் உட்படவும்—விவசாய நிலம்பற்றிய ஒப்பந்தங்கள் நீங்கலாகவும்.

8. வழக்குத் தொடரலாகும் தவறுகள்.

9. வியாபார முறிவும் திவாலாவும்.

10. டிரஸ்டும் டிரஸ்டிகளும்.

11. அட்மினிஸ்ட்ரேட்டர் ஜெனரல்களும் அஃபிஷியல் டிரஸ்டிகளும்.

12. சாட்சியமும் பிரமாணங்களும்; சட்டங்களையும், பொதுக் காரியங்களையும், ரிக்கார்டுகளையும், நீதிமன்ற நடவடிக்கைகளையும் அங்கீகரித்தல்.

13. சிவில் வழக்கு முறை—இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் சேர்க்கப் பட்டவை உட்பட; காலாவதி; மத்தியஸ்தம்.

14. நீதிமன்ற அவமதிப்பு; ஆனால், தலைமை நீதிமன்ற அவமதிப்பு நீங்கலாக.

15. நாடோடிகளாகத் திரிதல்; நிலையற்றவராகவும் நாடு மாறியவராகவும் உள்ளவர்கள்.

16. பைத்தியமும் சித்தசுவாதீனமின்மையும்; பைத்தியக் காரர்களையும் சுவாதீனமற்றவர்களையும் ஏற்றுக்கொள்வதற்கோ, அவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கோ ஆன இடங்கள் உட்பட.

17. மிருகவதைத் தடுப்பு.

18. உணவுப் பொருள்கள், மற்றைய பண்டங்கள் இவற்றின் கலப்படம்.

19. மருந்துப் பொருள்களும் விஷங்களும்—அபினி சம்பந்தமாக 1ஆம் பட்டியலின் 59ஆம் பதிவிற்கு உட்பட்டு.

20. பொருளாதாரச் சமூகத் திட்டங்கள் அமைத்தல்.

21. வாணிபம், தொழில்பற்றிய ஏகபோக உரிமைகளும், கூட்டுஸ்தாபனங்களும், டிரஸ்டுகளும்.

22. தொழிற் சங்கங்கள்; தொழில்பற்றியும் தொழில் செய்தல்பற்றியும் ஏற்படும் தகராறுகள்.

23. சமூகப் பாதுகாப்பும் சமூகக் காப்புறுதியும்; வேலையில் இருத்தலும் வேலையில் இல்லாமையும்.

24. தொழிலாளர்களின் நலம்—சேவை முறைகள், பிராவிடண்டு ஃபண்டுகள், எஜமானர்களின் கடப்பாடு, வேலையாள்களுக்குக் கொடுக்கப்படும் இழப்பீடு, உடல் நலிவு காரணமாகவும் முதுமை காரணமாகவும் கொடுக்கப்படும் ஓய்வூதியங்கள், கருவுற்ருேருக்குச் சகாயம் இவை உட்பட.

25. தொழிலாளர்களுக்கு வேலைபற்றிய பயிற்சியும் தொழில் முறைப் பயிற்சியும்.

26. சட்டம், வைத்தியம், மற்றைய தொழில்கள்.

27. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய டொமினியன்களை நிலைநாட்டியதன் காரணமாகத் தங்களுடைய பழைய குடியிருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பவர்களுக்குப் பரிகாரமும் புனர்வாழ்விப்பும்.

28. தருமங்களும் தரும நிலையங்களும். தருமம், மதம் இவை பற்றிய நிதிகளும் அறநிலையங்களும்.

29. தொத்துவியாதிகள் அல்லது ஒட்டு வியாதிகளும், மனிதர்களையோ விலங்குகளையோ அல்லது தாவரங்களையோ பாதிக்கும் பரவு நோய்களும் ஓர் அரசிலிருந்து மற்ருேர் அரசிற்குப் பாவாமல் தடுத்தல்.

30. பிறப்பு இறப்புப்பற்றிய புள்ளி விவரங்கள்—பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்தல் உட்பட.

31. பாராளுமன்றச் சட்டத்தினால் அல்லது ஏற்கெனவேயுள்ள சட்டத்தினால் அல்லது அதன்கீழ்ப் பெருந்துறைமுகங்கள் என்று அறிவிக்கப்பட்டவை அல்லாத மற்றைய துறைமுகங்கள்.

32. யந்திர சக்தியினால் ஓட்டப்படும் மரக்கலங்கள் சம்பந்தமாகமட்டும் உள்நாட்டு நீர்ப்பாதைகளில் கப்பல்களும் அவற்றைச் செலுத்துதலும் ; அத்தகைய நீர்ப்பாதைகளின் வழியைப்பற்றிய விதிகள் ; தேசீய நீர்ப்பாதைகள்பற்றிய 1ஆம் பட்டியலுக்கு உட்பட்டு உள்நாட்டு நீர்ப்பாதைகளில் பிரயாணிகளையும் பண்டங்களையும் ஏற்றிச் செல்லுதல்.

33. (அ) பொதுநலனின்பொருட்டு ஒரு தொழிலை யூனியனின் மேல் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கும்படி செய்தல், உசிதமாய் இருக்குமெனப் பாராளுமன்றம் சட்டத்தினால் அறிவித்தால் அத் தொழிலின் உற்பத்திப் பொருள்கள், அப் பொருள்களைப்போலவே இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள்.

(ஆ) உட்கொள்ளலாகும் எண்ணெய் வித்துகள், எண்ணெய்கள் உட்பட உணவுப் பொருள்கள்.

(இ) பிண்ணாக்கு, இறுக்கப்பட்ட மற்றைய பொருள்கள் உட்படக் கால்நடைத் தீவனம்.

(ஈ) விதை எடுத்த அல்லது எடுக்காத கச்சாப் பருத்தி, பருத்தி விதை.

(உ) கச்சாச் சணல்.

இவற்றில் வியாபாரமும் வாணிபமும், அப் பொருள்களின் உற்பத்தியும், சப்ளையும், வினியோகமும்.

34. விலைக் கட்டுப்பாடு.

35. யந்திர சக்தியினால் செலுத்தப்படும் வண்டிகள்—அத்தகைய வண்டிகளின்மீது வரிகள் விதிப்பதற்கான கோட்பாடுகள் உட்பட.

36. தொழிற்சாலைகள்.

37. கொதிகலங்கள்.

38. மின்சாரம்.

39. செய்தித்தாள்களும், புத்தகங்களும், அச்சகங்களும்.

40. தேசீய முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பாராளு மன்றச் சட்டத்தினுல் (அல்லது அதன் கீழ்) அறிவிப்பவை அல்லாதனவான மற்றைய பழம்பொருள் இடங்களும் சிதைவு களும்.

41. அதிகச் சொத்து என்று சட்டத்தினுல் தெரிவிக்கப் பட்ட சொத்தை (விவசாய நிலம் உட்பட) பத்திரமாகப் பாது காத்தல், நிர்வகித்தல், பட்டுவாடா செய்தல்.

42. சொத்தினை நிரந்தரமாக அல்லது தாற்காலிகமாகக் கைப்பற்றுதல்.

43. வரிகள் மற்றைய, பொதுக் கோரிக்கைகள் இவற்றைப் பற்றிய தாவாழ் தொகைகளை ஓர் அரசில் வசூலித்தல்—அந்த அரசிற்கு வெளியே எழும் நிலவரிப் பாக்கிகளும், அத்தகைய பாக்கிகளைப்போல் வசூலிக்கலாகும் தொகைகளும் உட்பட.

44. நீதிமன்ற ஸ்டாம்புகள் ரூபமாக வசூலிக்கப்படும் தீர்வைகள் அல்லது (ஃபீசுகள்) கட்டணங்கள் அல்லாத மற்றைய ஸ்டாம்பு தீர்வைகள்; ஆனுல், ஸ்டாம்பு தீர்வை விகிதங்கள் நீங்கலாக.

45. 2ஆம் பட்டியலிலாவது அல்லது 3ஆம் பட்டிய லிலாவது குறிப்பிட்டவைகளில் எதன் பொருட்டும் விசாரணை களும் புள்ளிவிவரங்களும்.

46. இந்தப் பட்டியலிலுள்ளவைகளில் எதுபற்றியேனும் எல்லா நீதிமன்றங்களின்—தலைமை நீதிமன்றம் தவிர—அதிகார வரம்பும் அதிகாரங்களும்.

47. இந்தப் பட்டியலிலுள்ளவைகளில் எதுபற்றியேனும் கட்டணங்கள், ஆனுல், ஒரு நீதிமன்றத்தில் வாங்கப்படும் கட்ட ணங்கள் நீங்கலாக.

# பல்கலைக்கழக வினாத்தாள்கள்

## ஏப்ரல் 1959

1. உண்மையான கூட்டாட்சி யூனியனின் பண்புகள் யாவை? இந்திய அரசியலமைப்பு இவைகளை எந்த அளவு பெற்றிருக்கின்றது?

2. 'குறிப்பிட்ட சூழ்நிலைகளில், இந்திய அரசியலமைப்பு, ஜனாதிபதியை ஓர் சர்வாதிகாரியாக்கக் கூடும்'—இக் கூற்றினைத் திறனாய்வு செய்க.

3. ஆஸ்திரேலிய செனட், இந்திய ராஜ்யசபை, ஜப்பானிய கவுன்சிலரவை ஆகியவற்றின் அமைப்பினையும் பணிகளையும் விவரிக்க. இவற்றுள் ஜனநாயக அரசிற்குரிய மேல்சபையென எதனைக் கருதலாம்?

4. இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் அமைப்பையும் பணியையும் விளக்குக. அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தைவிட இது மிகையான அதிகாரத்தைப் பெற்றுள்ளதா அல்லது குறைவான அதிகாரம் கொண்டுள்ளதா?

5. அமெரிக்க, இந்திய, சுவிட்சர்லாந்து நாடுகளின் அரசியலமைப்புத் திருத்தமுறைபற்றிக் கருத்தாய்க.

## செப்டம்பர் 1959

1. இந்திய, அமெரிக்க, சோவியத் யூனியனாகிய நாடுகளின் மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே காணும் அதிகாரப் பங்கீட்டை ஒப்பிடுக.

2. ஜப்பானின் மக்கள் பிரதிநிதி சபையின் அமைப்பையும் அதிகாரங்களையும் விளக்கி அதனை இந்திய மக்கள் சபையுடன் ஒப்பிடுக.

3. ஜனநாயக அரசுகளுக்கு அரசியற் கட்சிகள் இன்றியமையாதனவா என்பதை ஆய்க. பிரிட்டன், ஃபிரான்சு, இந்தியா முதலிய நாடுகளில் உள்ள அரசியற் கட்சிகளை ஒப்பிட்டு நோக்குக.

4. கூட்டாட்சியின் செயற்பாட்டில் நீதித்துறை பெறும் பங்கினைக் குறிப்பாக அமெரிக்க, இந்திய நாடுகளை யொட்டி ஆய்க.

5. நவீன மக்களாட்சிகளில் சிவில் சர்வீசுகளின் முக்கியத்துவத்தை, பிரிட்டனையும் இந்தியாவையும் கருத்தில் கொண்டு மதிப்பீடு செய்க.

## ஏப்ரல் 1961

1. அமெரிக்க, இந்தியக் கூட்டாட்சி முறைகள் எவ்வகைகளில் ஒன்றுக்கொன்று ஒத்தும் மாறுபட்டும் காணப்படுகின்றன ?

2. இந்திய யூனியனின் ஜனாதிபதியுடன் அயர் ஜனாதிபதியையும் ஜப்பானியப் பேரரசரையும் அவர்களின் நிலை, அதிகாரம்பற்றி ஒப்பிடுக.

3. பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் சட்டசபைகளில் கமிட்டிகள் செயல்படும் திறனை விளக்குக.

4. இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் அமைப்பினையும் பணியையும் விவரிக்க. இது எவ்வாறு அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்துடன் ஒத்துக் காணப்படுகின்றது ?

5. மக்களாட்சி அரசாங்கங்கள் ஒழுங்காய்ச் செயல்பட எதிர்க்கட்சிகள் பெறும் பங்கென்ன ? பிரிட்டன், ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளின் அரசியல் முறைகளில் எதிர்கட்சிகளின் செயற்பாட்டை ஒப்புநோக்குக.

6. இந்திய, அமெரிக்க, ஆஸ்திரேலிய அரசியலமைப்புத் திருத்தம்பற்றிக் கருத்தாய்க.

## ஏப்ரல் 1962

1. சோவியத் யூனியன், இந்தியக் கூட்டாட்சி முறைகள் எவ்வகைகளில் ஒன்றுக்கொன்று ஒத்தும் மாறுபட்டும் காணப்படுகின்றன ?

2. 'இந்திய அரசியலமைப்பு முறையில் ஜனதிபதி உண்மையான அதிகாரம் பெறவில்லையெனினும், அவர் ஒரு பொம்மையுமில்லை பூஜ்யமுமில்லை'—இக் கூற்றினை ஆய்ந்து, இந்திய ஜனதிபதியின் அரசியலமைப்பு வழிநிலையை, பிரிட்டிஷ் அரசியாருடன் ஒப்புநோக்குக.

3. அமைச்சவைப் பொறுப்பின் உட்குறிப்புகளென்ன? இந்தியாவிலும் ஜப்பானிலும் இதன் செயற்பாட்டை ஆய்க.

4. இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா, கனடா நாடுகளின் மேல்சபைகள் செயல்படுவதையொட்டி, இவைகளை ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் கருத்து மாறுபாட்டை மறு ஆய்வு செய்க.

5. இந்தியாவிலும் சோவியத் யூனியனிலும் இயங்கும் நீதித் துறை அமைப்பினையும் செயற்பாட்டினையும் ஒப்பிட்டு எழுதுக.

## செப்டம்பர் 1962

1. பிற அரசுகளின் சட்டங்களிலிருந்தும், வழக்காற்றிலிருந்தும் இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள சிறப்பியல்புகளை விவரிக்க.

2. இந்திய, சோவியத் ரஷிய ஆஸ்திரேலியக் கூட்டாட்சிகளில் மத்திய அரசாங்கத்திற்கும் உறுப்பரசாங்கங்களுக்கும் இடையே காணும் அதிகாரப் பங்கீட்டை ஒப்பிடுக.

3. இந்திய, அமெரிக்க, ஆஸ்திரேலியச் சட்டசபைகளின் ஈரங்கங்களுக்கிடையே தோன்றும் முட்டுக்கட்டைகளைத் தீர்க்கக் கையாளப்படும் பல்வேறு முறைகளை விளக்குக.

4. நீதிப் புனராய்வு என்றால் என்ன? இது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் இந்தியாவிலும் எவ்வாறு செயல்படுகிறதெனக் காட்டுக. இதன் நிறைகுறைகளை ஆய்க.

# கலைச்சொல் அகராதி

| | | |
|---|---|---|
| All India Service | — | அனைத்திந்தியப் பணி |
| Allocation of seats | — | இட ஒதுக்கல் |
| Amendment | — | (அரசியலமைப்பு) திருத்தம் |
| Approval | — | ஒப்புதல் |
| Assent | — | இசைவு |
| Auditor-General | — | மாபெருங் கணக்கர் |
| Autonomy | — | தன்னாட்சி, சுய ஆட்சி |
| Bicameral Legislature | — | ஈரங்கச் சட்டசபை |
| Bye-Election | — | இடைத்தேர்தல் |
| Casting vote | — | முடிவுசெய் வாக்கு |
| Chairman | — | தலைவர் |
| Charter | — | சாசனம் |
| Chief Minister | — | முதலமைச்சர் |
| Collective responsibility | — | கூட்டுப் பொறுப்புடைமை |
| Comptroller | — | கணக்குப் பரிசோதகர் |
| Concurrent List | — | பொதுப் பட்டியல் |
| Consolidated Fund | — | திரண்ட நிதி |
| Constituent Assembly | — | அரசியல் நிர்ணய சபை |
| Constitution | — | அரசியலமைப்பு |
| Constitutional remarks | — | அரசியலமைப்பு வழிப் பரிகாரங்கள் |
| Contempt of Court | — | நீதிமன்ற அவமதிப்பு |
| Council of Ministers | — | அமைச்சரவை |
| Council of States | — | இராஜ்ய சபை |
| Court of Directors | — | இயக்குநர் குழு |
| Direct election | — | நேர்முகத் தேர்தல் |
| Directive principles | — | நெறிசெய் (நெறிமுறைக்) கோட்பாடுகள் |
| Directives | — | கட்டளைகள் |

Division of powers — அதிகாரப் பங்கீடு
Drafting Committee — வரைவுக் குழு
Dyarchy — இரட்டையாட்சி
Election Commission — தேர்தல் கமிஷன்
Electoral College — தேர்வாண்மைக் குழு
Emergency provisions — நெருக்கடிநிலை ஏற்பாடுகள்
Extent of executive power — நிர்வாக அதிகார நீட்சி
Federation — கூட்டாட்சி
Finance, Money Bills — நிதி, பண மசோதாக்கள்
Fundamental rights — அடிப்படை உரிமைகள்
High Court — உயர் நீதிமன்றம்
House of the People — மக்கள் சபை
Indirect — மறைமுக
Joint sitting — ஒருங்கிருப்பு
Judicial review — நீதிப் புனராய்வு
Jurisdiction — அதிகாரவரம்பு
Majority, absolute — பெரும்பான்மை, முழுமை
Non-Official — உத்தியோகப் பற்றற்ற
Ordinance — அவசரச் சட்டம்
Pardon — தண்டனை மன்னிப்பு
People's representation — மக்கள் பிரதிநிதித்துவம்
Prerogative — சிறப்புரிமை
Preventive detention — தடுப்புக் காவல்
Prime Minister — பிரதம அமைச்சர்
Preamble — அரசியலமைப்பின் முகப்பு
Proportional representation — விகிதாச்சார பிரதிநிதித்துவம்
Quorum — குறைவெண்
Regulating Act — ஒழுங்குமுறைச் சட்டம்
Remission — தவிர்த்தல்
Reprieve — தடுத்தல்
Reserved subjects — இருப்பதிகாரம்
Respite — நிறுத்திவைத்தல்
Residuary powers — எஞ்சிய அதிகாரம்
Right to equality — சமத்துவ உரிமை
Right to freedom — சுதந்திர உரிமை
Right to property — சொத்துரிமை
Rule of Law — சட்ட ஆட்சி
Secretary of State — அரசு (இராஜாங்கச்) செயலாளர்
Secretariat — செயலாண்மைத் துறை

| | | |
|---|---|---|
| Separation of powers | — | அதிகாரப் பிரிவினை |
| Services | — | சேவைவர்க்கம் |
| Sovereignty | — | இறைமை |
| Speaker | — | சபாநாயகர் |
| State List | — | அரசு பட்டியல் |
| Supreme Court | — | தலைமை நீதிமன்றம் |
| Term of office | — | பதவிக் காலம் |
| Transferred subject | — | மாற்றப்பட்ட அதிகாரம் |
| Transfer of power | — | அதிகார மாற்றம் |
| Ultra vires | — | (அரசியலமைப்பின்) வரம்பு மீறிய |
| Union | — | யூனியன், ஒன்றியம் |
| Union List | — | யூனியன் பட்டியல் |
| Union territory | — | யூனியன் ஆட்சிப் பரப்பு |
| Unitary State | — | ஒருமுக அரசு |
| Veto | — | மறுப்பு ஆணை |
| Welfare State | — | பொதுநல அரசு |
| Written Constitution | — | எழுதப்பட்ட அரசியலமைப்பு |

# தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

## 1966 வரை வெளியிட்டுள்ள நூல்கள்

**பொருளாதாரம்**

| எண் | நூல் | ஆசிரியர் | ரூ. | பை. |
|---|---|---|---|---|
| *1. | பொருளாதாரம்-II | சி. வேலாயுதம் | 9 | 00 |
| 2. | புதுமைப் பொருளாதாரக் கூறுகள் | திருமதி ஆர். தாமரஜாட்சி | 12 | 00 |
| 3. | பொருளாதாரம் ஓர் அறிமுகம்-I | தி. சி. மோகன் | 12 | 00 |
| 4. | ,, II | எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன் | 10 | 75 |
| 5. | பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு | க. முத்தையன் | 7 | 00 |
| *6. | பணவியலும் பாங்கியலும்-II | சி. வேலாயுதம் | 11 | 50 |
| 7. | நவீன பாங்கு இயல் | க. வெற்றிவேல் | 7 | 50 |
| *8. | இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும் | பி. வி. ஸ்ரீநிவாசன் | 5 | 50 |
| *9. | அரசாங்க நிதி இயல் | அர. சேஷாசலம் | 4 | 75 |
| 10. | இந்தியப் பொருளியல்-I | எம். பாலசுப்பிரமணியன் | 10 | 00 |
| 11. | ,, II | எம். லூர்துநாதன் | 4 | 25 |
| 12. | நமது பொருளாதாரப் பிரச்சினை-I | சி. சுந்தரராஜன் | 10 | 75 |
| 13. | ,, II | எஸ். குழந்தைநாதன் | 10 | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I | கி. சீ. இராமசாமி | 6 | 00 |
| 15. | ,, II | ,, | 6 | 00 |
| 16. | அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி | தி. சி. மோகன் | 5 | 00 |
| 17. | அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I | மு. க. சுப்பிரமணியம் | 11 | 00 |
| 18. | ,, II | பி. வி. சீனிவாசன் | 6 | 00 |
| 19. | ,, III | ,, | 6 | 50 |
| 20. | அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I | மா. குமாரசாமி | 10 | 00 |
| 21. | ,, II | அர. சேஷாசலம் | 9 | 50 |
| 22. | இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I | தே. வேலப்பன் | 10 | 00 |
| 23. | ,, II | ஜி. சிதம்பரம் | 8 | 00 |
| 24. | பணம்—சிறு விளக்கம் | கோ. இராதாகிருஷ்ணன் | 10 | 00 |
| *25. | வணிக இயலின் தத்துவங்கள் | கு. ஆளுடைய பிள்ளை | 9 | 50 |
| 26. | பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில், வாணிபப் புரட்சி | சூ. ரா. கருப்பண்ணன் | 11 | 00 |
| 27. | பென்ஹாம் பொருளாதாரம்-I | ஏ. குழந்தை | 11 | 00 |
| 28. | ,, II | எஸ். குழந்தைநாதன் | 7 | 00 |
| •29. | வரவு செலவுத் திட்டம் | ஆர். ரங்காச்சாரி | 6 | 00 |
| 30. | பன்னாட்டுப் பொருளாதாரம்-I | ஏ. குழந்தை | 7 | 50 |
| 31. | ,, II | கே. எஸ் இராமசாமி | 9 | 00 |
| 32. | பொருளாதார ஆய்வு நூல்-I | கோ. இராதாகிருஷ்ணன் | 7 | 75 |
| 33. | ,, II | ,, | | |
| 34. | வளர்ச்சியுறாத நாடுகளின் அரசாங்க நிதியியல் | க. வெற்றிவேல் | 4 | 25 |
| 35. | வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள் | மா. குமாரசுவாமி | 5 | 50 |
| 36. | 1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள் | சி. சுந்தரராஜன் | 7 | 50 |
| 37. | பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள் | எம். கே. சுப்பிரமணியம் | 7 | 75 |

## வரலாறு

| | | | | |
|---|---|---|---|---|
| *38. | பிரிட்டன் வரலாறு-I | கி. ர. அனுமந்தன் | 10 | 00 |
| *39. | ,, II | ,, | 9 | 75 |
| *40. | ஐரோப்பிய வரலாறு-I | டி. வி. சொக்கப்பா | 4 | 50 |
| 41. | ஐரோப்பா-கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம் | வை. விருத்தகிரீசன் | 15 | 00 |
| 42. | இங்கிலாந்து வரலாறு-I | இரா. அண்ணுமலே | 13 | 00 |
| 43. | ,, II | பா. மாணிக்கவேலு | 13 | 00 |
| 44. | ,, III | என். ஜே ராஜகோபால் | 8 | 00 |
| 45. | ,, IV | ,, | 8 | 00 |
| 46. | இங்கிலாந்தின் வரலாறு-I | க. த. திருநாவுக்கரசு | 15 | 00 |
| 47. | ,, II | எம். எக்ஸ். மிராண்டா | 8 | 00 |
| 48. | ,, III | ,, | 5 | 00 |
| 49. | இந்தியாவின் சிறப்பு வரலாறு-I | தி. வெ. குப்புசாமி | 7 | 50 |
| 50. | ,, II | ஏ. உஸ்மான் ஷெரீப் | 9 | 00 |
| 51. | ,, III | அ. பாண்டுரங்கன் | 11 | 00 |
| 52. | கிரேக்க நாட்டு வரலாறு-I | சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன் | 7 | 50 |
| 53. | ,, II | ,, | 7 | 00 |
| 54. | ,, III | பி. இராமானுஜம் தேவதாஸ் | 7 | 75 |
| 55. | ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு-I | தி. வெ. குப்புசாமி | 8 | 25 |
| 56. | ,, II | ஏ. உஸ்மான் ஷெரீப் | 7 | 50 |
| 57. | ,, III | க. த. திருநாவுக்கரசு | 10 | 50 |
| 58. | முகலாயப் பேரரசு-I | ஏ. உஸ்மான் ஷெரீப், எம். எக்ஸ். மிராண்டா | 7 | 50 |
| 59. | ,, II | எம். எக்ஸ். மிராண்டா, பா மாணிக்கவேலு | 7 | 75 |

*மூல நூல் (Original Book)

அரசியல்

| | | | | |
|---|---|---|---|---|
| *60. | இந்திய அரசியலமைப்பு | வீ. கண்ணையா | 4 | 75 |
| 61. | அரசியலுக்கு ஓர் அறிமுகம் | டி. செல்லப்பா | 8 | 50 |
| 62. | தற்கால அரசியல் அமைப்புகள் | மோ. வள்ளுவன் கிளாரன்சு | 8 | 50 |
| 63. | பன்னாட்டு அரசியல்-I | திருமதி நூர்ஜஹான் பாவா | 16 | 00 |
| 64. | ,, II | ,, | 13 | 25 |
| 65. | பொதுத்துறை ஆட்சி இயல்-I | வீ. கண்ணையா | 9 | 00 |
| 66. | ,, II | அ. ஜெகதீசன் | 7 | 25 |
| 67. | பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I | வீ. கண்ணையா | 7 | 50 |
| 68. | ,, II | டி. செல்லப்பா | 7 | 50 |
| 69. | இந்திய அரசியலமைப்புத் திட்டம் | தி. வெ. குப்புசாமி, எஸ். சுப்பிரமணியன் | 9 | 25 |
| 70. | இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி-I | வீ. கண்ணையா | 6 | 25 |
| *71. | மக்கள் ஆட்சி | க. சந்தானம் | 4 | 25 |
| 72. | 1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும் | என். ஜே. இராஜகோபால் | 7 | 75 |

உளவியல்

| | | | | |
|---|---|---|---|---|
| 73. | குழந்தை உளவியல்-I | கி. ர. அப்புள்ளாச்சாரி | 8 | 00 |
| 74. | ,, II | ,, | 7 | 00 |
| 75. | உட்கவர் மனம் | சி. ந. வைத்தீஸ்வரன் | 7 | 00 |
| 76. | இளையோர் உளவியல்-I | தி. இரா. அரங்கராசன் | 12 | 00 |
| 77. | ,, II | ,, | 9 | 00 |
| 78. | சமூக உளவியல் | என். வேதமணி மானுவேல் | 9 | 25 |
| 79. | பிறழ்நிலை உளவியல் | அ. சென்ட் கிரீப்பர்ராஜ் | 11 | 00 |
| 80. | பித்தரின் உள்ளம் | ,, | 3 | 00 |
| *81. | குமர உள்ளம் | டாக்டர் மு. அறம் | 6 | 25 |

**தத்துவம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 82. | இந்து சமயத் தத்துவம் | ஞா. ராஜாபகதூர் | 5 | 50 |
| *83. | அறிவு ஆராய்ச்சி இயல் | ஆர். இராமானுஜாச்சாரி | 3 | 50 |
| *84. | மேலைநாட்டுத் தத்துவம் | ஆர். எஸ். தேசிகன் | 3 | 50 |
| 85. | அத்துவித தத்துவம் | கோ. மோ. காந்தி | 6 | 50 |
| 86. | ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர் | மோ. வள்ளுவன் கிளாரன்சு | 5 | 50 |
| 87. | இந்தியத் தத்துவம் | வ. அ. தேவசேனுபதி, பா. நா. சண்முகசுந்தரம் | 3 | 50 |
| 88. | மெய்ப்பொருளியல்—ஓர் அறிமுகம்-I | சி. இராமலிங்கம் | 6 | 00 |

**அறவியல்**

| | | | | |
|---|---|---|---|---|
| 89. | அறவியல்—ஓர் அறிமுகம் | கோ. மோ. காந்தி | 8 | 50 |

**அளவையியல்**

| | | | | |
|---|---|---|---|---|
| 90. | அளவை இயல்—தொடக்க நூல்... | கி. ர. அப்புள்ளாச்சாரி | 2 | 50 |

**மானிடவியல்**

| | | | | |
|---|---|---|---|---|
| *91. | மானிடவியல் | ம. சு. கோபாலகிருஷ்ணன் | 4 | 75 |
| 92. | பண்பாட்டுக் கோலங்கள் | கி. பூ. சுப்பிரமணியன் | 5 | 50 |
| 93. | இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை | எஸ். இலட்சுமி | 3 | 50 |

**சமூகவியல்**

| | | | | |
|---|---|---|---|---|
| 94. | சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் | ஜே. நாராயணன் | 10 | 00 |

**புவியியல்**

| | | | | |
|---|---|---|---|---|
| 95. | ஆசியா-I | கொ. சேஷ. நரசிம்மன் | 9 | 50 |
| 96. | ,, -II | ,, | 8 | 75 |
| 97. | ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல் | ஏ. எஸ். நாராயணன் | 8 | 50 |
| *98. | தென்கிழக்கு ஆசியா | ஜி. கிருஷ்ணமூர்த்தி | 8 | 50 |

* மூல நூல் (Original Book)

## புவியியல் தொடர்ச்சி

| | | | | |
|---|---|---|---|---|
| *99. | வட அமெரிக்கா | குமாரி இரா. அலமேலு | 8 | 25 |
| *100. | தென் அமெரிக்கா | எம். என். பத்மநாபன் | 9 | 00 |
| *101. | தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா | திருமதி எச். நியூமன் | 4 | 00 |
| *102. | ,, —ஆஃபிரிக்கா | எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர் | 3 | 25 |
| *103. | புவிப்புறவியல்-II | நா. அனந்தபத்மநாபன் | 6 | 00 |
| *104. | செய்முறைப் புவியியல் | சு. ஜெயச்சந்திரன் | 9 | 00 |
| *105. | மக்கட் பரப்பியல் | வி. எஸ். அனந்தபத்மநாபன் | 6 | 25 |
| *106. | சமுத்திரவியல் | கோ. இராமசாமி | 6 | 50 |
| 107. | காலநிலே இயல்-I | கொ. சேஷ. நரசிம்மன் | 10 | 00 |
| 108. | ,, II | ,, | 5 | 00 |
| 109. | வளியியலுக்கு ஓர் அறிமுகம் | கோ. இராமசாமி | 11 | 00 |
| *110. | புவி அமைப்பு இயல் | சி. விசுவநாதன் | 4 | 75 |
| 111. | பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும் | கோ. இராமசாமி | 6 | 00 |

## புள்ளியியல்

| | | | | |
|---|---|---|---|---|
| *112. | புள்ளியியல்—அறிமுகம் | சு. வைத்தியநாதன் | 10 | 00 |
| 113. | புள்ளியியல் முறைகள்-I | கோ. சண்முகசுந்தரம் | 10 | 00 |
| 114. | ,, II | கே. ஆர். இராஜகோபாலன் | 14 | 00 |
| 115. | நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம் | தி. வி. லட்சுமிநரசிம்மன் | 6 | 50 |

## உயர்கணிதம்

| | | | | |
|---|---|---|---|---|
| *116. | ஆயத்தொலே வடிவகணிதம் | டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளே | 12 | 50 |
| *117. | வகை நுண்கணிதம் | ,, | 8 | 00 |
| *118. | தொகை நுண்கணிதம் | தி. கோவிந்தராசன் | 9 | 00 |

### விலங்கியல்

| | | | |
|---|---|---|---|
| *119. | விலங்கியல் | பெ. மா. அண்ணுமலை, இரா. முருகேசன் | 12 00 |

### பௌதிகவியல்

| | | | |
|---|---|---|---|
| 120. | ஒளி நூல் | ச. சம்பத்து | 10 00 |

### விஞ்ஞானம்

| | | | |
|---|---|---|---|
| *121. | வானவெளி வெற்றி | டாக்டர் எம். ஏ. தங்கராஜ் | 6 00 |
| *122. | ரேடியோ | ,, பி. திருஞானசம்பந்தம் | 4 75 |
| *123. | எக்ஸ்-கதிர்கள் | பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம் | 4 50 |
| *124. | பாம்புகள் | பெ. மா. அண்ணுமலை | 3 50 |
| *125. | தாவரம்—வாழ்வும் வரலாறும் | டாக்டர் கு. சீனிவாசன் | 8 00 |
| *126. | கரும்பு | கு. பெரியசாமி | 4 00 |
| *127. | தாவரங்களின் வாழ்வியல் | எஸ். சுந்தரம் | 6 50 |

### மருத்துவம்

| | | | |
|---|---|---|---|
| *128. | நீரிழிவு-க்ஷயரோகம் | டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. சுதிரேசன் | 2 50 |
| 129. | மகப்பேறும் மாதர் நோயும் | டாக்டர் (குமாரி) மணிமேகலை | 8 25 |
| *130. | பாக்டீரியா | சு. சுந்தரம் | 2 50 |
| 131. | புற்றுநோய் | அ. கதிரேசன் | 3 50 |

*மூல நூல் (Original Book)

### பொறியியல்

| | | | |
|---|---|---|---|
| 132. | நீங்களே வீட்டைக் கட்டலாம் ... | கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால் ... | 8 50 |

### சட்டம்

| | | | |
|---|---|---|---|
| *133. | குற்றவியல் சட்டம் ... ... | எம். சண்முகசுப்பிரமணியம் ... | 10 00 |

### பொது நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 134. | மகாத்மா காந்தி ... ... | சரஸ்வதி தங்கையன் ... | 3 25 |
| 135. | விவசாயப் புரட்சி ... ... | வி. கார்த்திகேயன் ... | 8 00 |
| 136. | சேமக் கை-நூல் ... ... | ஆ. சுப்பிரமணியம் ... | 2 50 |
| *137. | முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் ... | எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ... | 9 00 |
| *138. | உணவும் ஊட்டமும் ... ... | தி. வேங்கிடகிருஷ்ணய்யங்கார் ... | 4 50 |

### புதுமுக வகுப்புகளுக்குரியவை (P.U.C.)

| | | | |
|---|---|---|---|
| *139. | உலக வரலாறு ... ... | டி. ஆர். இராமச்சந்திரன் ... | 4 00 |
| *140, | பொருளாதாரம் ... ... | ஜி. சிதம்பரம் ... | 3 50 |
| *141. | வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்-I | கு. ஆளுடைய பிள்ளை ... | 4 00 |
| *142. | ,, -II ... | ,, ... | 3 50 |

*மூல நூல் (Original Book)